REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2023 ஒக்டோபர் 6 வெள்ளிக்கிழமை

# தினகரன்
THINAKARAN
தினகரன்

வரு. 91 இல. 237 | Friday 06, October, 2023 | 28பக்கங்கள் | 50/-

## ஆசிய போட்டியில் தங்கம் வென்ற தருஷிக்கு ஜனாதிபதி வாழ்த்து



ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கம் வென்ற மாணவி தருஷி கருணாரத்னவுக்கு, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

06

## உப ரயில் கட்டுப்பாட்டாளர்கள் பணிப்பகிஷ்கரிப்பு முடிவுக்கு

### இராஜாங்க அமைச்சருடனான பேச்சின் பின் தீர்மானம்



உப, ரயில் கட்டுப்பாட்டாளர்களால் ஆரம்பிக்கப்பட்ட பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் நேற்று மதியம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் உள்ளிட்ட ரயில்வே திணைக்களத்தின் அதிகாரிகளுடன் நேற்றுக் (05) காலை நடைபெற்ற கலந்துரையாடலின் பின்னர் பணிப்பகிஷ்கரிப்பு போராட்டம் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

நேற்று (05) பகல் 12 மணிக்கு முன்னதாக அனைத்து உப,

06

## மாத்தறையில் பாரியளவில் வெள்ள பாதிப்பு உடனடி நிவாரணத்துக்கு ஜனாதிபதி பணிப்புரை



கடும் மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் பாதிக்கப்பட்ட மாத்தறை மாவட்ட மக்களின் தேவைகளை கண்டறிந்து, உடனடியாக நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்குமாறு மாத்தறை மாவட்ட செயலாளர் உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

மக்களுக்கு அவசியமான சமைத்த உணவு மற்றும் மருந்து போன்ற அத்தியாவசிய வசதிகளை குறைவின்றி வழங்குமாறும் அதற்காக முப்படையினரின் ஒத்துழைப்பைப் பெறுமாறும் ஜனாதிபதி மேலும் பணிப்புரை விடுத்துள்ளார்.

மேலும், எதிர்காலத்தில் வெள்ளப்பெருக்கு அதிகரிக்கும்

06

விமான பயணங்களை தாமதப்படுத்தி

## சுற்றுலாத்துறையை வீழ்த்த சதித்திட்டம் இடம்பெறுகிறதா?

### உடன் கண்டறிய துறைசார் மேற்பார்வைக் குழு பணிப்பு



விமானப் பயணங்களை தாமதப்படுத்தி, மீண்டெழும் சுற்றுலாப்பொருளாதாரத்தை மீண்டும் வீழ்த்துவதற்கு திட்டமிட்ட வேலைத்திட்டம் மேற்கொள்ளப்படுகிறதா? என்பதைக் கண்டறிந்து தேவையான நடவடிக்கையை எடுக்குமாறு வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் நாலக்க பண்டார கோட்டேகொட, சிவில் விமான சேவை அதிகார சபையின் அதிகாரிகளுக்குப் பரிந்துரை செய்துள்ளார்.

வலுசக்தி மற்றும் போக்குவரத்து பற்றிய துறைசார்

06

இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள்

# மலையக மக்களுக்காக இந்திய அரசின் 10,000 வீட்டுத் திட்டம்

## சௌமியபூமி' திட்டத்தின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஊடாக பத்திரம்





இந்திய வீட்டுத் திட்டம் சம்பந்தமாக இவ்வாரத்துக்குள் ஒப்பந்தம் கைச்சாத்தாகுமென அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவிப்பு

### 'நாம் 200' நிகழ்வு நவம்பர் 02இல், கொழும்பில்

மலையக மக்களுக்கு அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள 'நாம் 200' நிகழ்வு எதிர்வரும் நவம்பர் 02 இல், கொழும்பு சுகததாச விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளதாக இ.தொ.காவின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் நேற்று தெரிவித்தார்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், தூதுவர்கள், வெளிநாட்டு பிரமுகர்கள் உட்பட பலரும் இந்நிகழ்வில் பங்கேற்கவுள்ளனர். இதனை ஆட்டம், பாட்டம், கொண்டாட்ட நிகழ்வாக அல்லாமல், மலையக மக்களுக்கான

06

## ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகார சபையின் 05 ஆவது அமர்வு



ஆசிய பசுபிக் பிராந்திய அமைச்சர்கள் மற்றும் சுற்றாடல் அதிகார சபையின் 05 ஆவது அமர்வு கொழும்பு ஷங்ரிலா ஹோட்டலில் நேற்று (05) ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையில் நடைபெற்றது. அமர்வில் கலந்து கொண்ட ஈரானின் துணை ஜனாதிபதியும் ஈரானின் சுற்றாடல் துறையின் தலைவருமான அலி சலாஜெகே (Ali Salajegheh), சுற்றாடல் அமைச்சர் நசீர் அஹமட், வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, நீதி அமைச்சர் கலாநிதி விஜேயதாச ராஜபக்ஷ, கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஆகியோர் சுற்றாடலுக்கு பாதிப்பற்ற மின்சாரத்தில் இயங்கும் படகுகளுக்கான அவுட் போட் என்ஜின் ஒன்றை பார்வையிட்ட போது பிடிக்கப்பட்ட படம்.

GCE A/L பரீட்சை ஜனவரி 04 இல் ஆரம்பமாவதால்

## பாடசாலை விடுமுறை தினங்களில் மாற்றம்

### தவணை விடுமுறை டிசம்பர் 22 ஆம் திகதி

–அமைச்சர் சுசில் பிரேம ஜயந்த



லோரன்ஸ் செல்வநாயகம்

க.பொ.த.உயர்தரப் பரீட்சையை ஜனவரி 04ஆம் திகதி நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதால், டிசம்பர் மாத பாடசாலை விடுமுறையில் மாற்றம் செய்யப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

06

## 2024 நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலம் பாராளுமன்றில் நேற்று சமர்ப்பிப்பு

### ரூ.3,86,084 கோடியே 67,88,000 அரசாங்கம் ஒதுக்கீடு; ஜனாதிபதி, பிரதமரின் அமைச்சுகளுக்கு அதிக நிதி

லோரன்ஸ் செல்வநாயகம்

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்துக்காக அரசினால் 03 இலட்சத்து 86,084 கோடியே 67,88,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம், சபை முதல்வரும் கல்வி அமைச்சருமான சுசில் பிரேமஜயந்தவினால் நேற்றைய தினம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டது.

சமர்ப்பிக்கப்பட்ட 2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் பாதுகாப்பு அமைச்சு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு

06



## அந்நியச் செலாவணியை சேமிக்க புதிய திட்டம்



தானிய இறக்குமதிக்காக அரசாங்கம் செலவழிக்கும் அந்நியச் செலாவணியைச் சேமிக்கும் நோக்கத்தில், கிராமியப் பிரதேசங்களில் பயிர்ச்செய்கையில் ஈடுபட்டுள்ள மக்களுக்கு, தானிய வகைகளைப் பயிரிடுவதற்கு அவசியமான விதைகளை

06

## தொடர் மழையால் சிறுவர்கள் மத்தியில் நோய்கள் பரவும் ஆபத்து

### பெற்றோருக்கு Dr.தீபால் எச்சரிக்கை

நாட்டில் தற்போது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை காரணமாக சிறுவர்கள் மத்தியில் பல்வேறு நோய்கள் பரவும் அபாயம் காணப்படுவதாக, சிறுவர் வைத்திய நிபுணர் டாக்டர் தீபால் பெரேரா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் " அண்மைக் காலமாகப் பெய்துவரும் கடும் மழை காரணமாக நாட்டின் பல பகுதிகளிலும் வெள்ளப்பெருக்குகள் ஏற்பட்டுள்ளன.

இதனால், பல்வேறு நோய்கள் பரவி வருகின்றன. குறிப்பாக சிறுவர்கள் மத்தியில் காய்ச்சல் வேகமாகப் பரவி வருவதோடு சுவாசம் சம்பந்தமான நோய்களும் ஏற்பட்டு வருகின்றன.

06

## KKS-நாகபட்டிணம் பயணிகள் கப்பல்சேவை ஜனவரி முதல்

### பரீட்சார்த்த முதலாவது கப்பல் இன்று வருகை

திருச்சி எம். கே. ஷாகுல் ஹமீது

நாகப்பட்டினத்திலிருந்து இலங்கைக்கு செல்வதற்கான பயணிகள் கப்பல் நேற்று வியாழக்கிழமை நாகை துறைமுகத்தை வந்தடைந்தது.

பரீட்சார்த்தமாக இன்று வெள்ளிக்கிழமை நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து காங்கேசன்துறை துறைமுகத்துக்கு பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்படுகிறது.

இதற்காக கடந்த மாதம் அமைச்சர் எ.வ.வேலு, நாகை துறைமுகத்தை ஆழப்படுத்தி தூர்வாரும் பணியை தொடக்கி வைத்தார்.

நாகப்பட்டினம் துறைமுகத்தை நவீனப்படுத்த

06

மேல், சப்ரகமுவ, தென், வடமேல் மாகாணங்களிலும்

## நாட்டின் பல பாகங்களிலும் மோசமான காலநிலை தொடரும்

### இடி, மின்னல் குறித்தும் எச்சரிக்கை



மேல், சப்ரகமுவ, தென் மற்றும் வடமேல் மாகாணங்களிலும் கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்களிலும் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் தென்படுவதாக வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது. கிழக்கு, ஊவா மாகாணங்களிலும் பொலன்னறுவை மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களிலும் பல இடங்களில் மாலையில் அல்லது இரவில் மழையோ அல்லது

06

### இன்றைய தினகரனில்

## தரம் 5 புலமைப்பரிசில் விசேட வினாத்தாள்கள்



மாணவச் செல்வங்களே! தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சைக்கான மாதிரி வினாக்கள் உங்கள் தினகரனில் இன்று விசேட இணைப்பாக வெளிவந்துள்ளது.

பகுதி-1 மற்றும் பகுதி-2 ஆகிய இரண்டு வினாத்தாள்களையும்

06





## சர்வதேச ஆசிரியர் தின நிகழ்வுகள் இன்று

03



## சீரற்ற காலநிலை; இதுவரை 48,821 பேர் பாதிப்பு

அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு

03

## வீதி அபிவிருத்திக்கு உலக வங்கி கடன் திட்டத்தின் கீழ் நிதியுதவி

### இராஜாங்க அமைச்சர் சந்திரகாந்தனிடம் WB பிரதிநிதி உறுதி



வீதிகளை அபிவிருத்தி செய்வது தொடர்பாக (Inclusive Connectivity & Development Project) உலக வங்கியின் கடன் திட்டத்தின் இலங்கை வதிவிட பிரதிநிதி DUNG ANH HOANG மற்றும் கிராமிய வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் ஆகியோருக்கிடையில் கலந்துரையாடலொன்று நேற்று (05) செத்சிரிபாய, இராஜாங்க அமைச்சின் அலுவலகத்தில் நடைபெற்றது.

06

எதிர்வரும் டிசம்பர் மாதத்துக்குள்

## 01 kg கோழி இறைச்சி ரூ. 850 க்கு விற்பனை

### அமைச்சர் நளீன் பெர்னாண்டோ உறுதி



நாட்டில் டிசம்பர் மாதத்துக்குள் 01 கிலோ கோழி இறைச்சியை 850 ரூபாவுக்கு விற்பதற்கு எதிர்பார்ப்பதாக வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார். கொழும்பில் நடைபெற்ற (04) ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட போதே அமைச்சர் இதனை தெரிவித்துள்ளார்.

கால்நடை தீவனத்துக்கு வரிச்சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதனால், கோழிப்பண்ணை

06

துணைநில் வைப்பு வசதி திட்டம்

## வட்டி வீதத்தை 10 வீதத்தால் குறைத்தது மத்திய வங்கி



கொள்கை வட்டி வீதங்களை இலங்கை மத்திய வங்கி குறைத்துள்ளது. இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை (04) மாலை கூடிய போதே, இத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதம் 10 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது. இதற்கான வட்டி வீதம் ஏற்கனவே 11 சதவீதமாக

06

## 'ஸ்கை' டைவிங் செய்து 104 வயது மூதாட்டி உலக சாதனை



அமெரிக்காவின் சிக்காகோ நகரில் 104 வயது மூதாட்டி ஒருவர், ஸ்கை டைவிங் செய்து சாதனை படைத்துள்ளார்.

சிக்காகோ மாகாணத்தை சேர்ந்த 104 வயதான டொரோத்தி ஹாஃப்னர் என்ற மூதாட்டியே, இச்சாதனையை நிகழ்த்தியுள்ளார். இவருக்கு 'ஸ்கை' டைவிங் செய்வதில் நீண்ட நாட்களாகவே ஆர்வம் இருந்து வந்ததால், இதற்காக முறையான பயிற்சியும் பெற்று

06

# வடமாகாண அபிவிருத்திக்கு முழு ஆதரவையும் வழங்குவேன்

## அமைச்சர் ஜீவன் தொண்டமான் உறுதி

யாழ். விசேட நிருபர்

வடமாகாணத்தில் எதிர்காலத்தில் முன்னெடுக்கப்படவுள்ள பல்வேறு அபிவிருத்தித் திட்ட வேலைகளுக்காக தன்னால் இயன்ற முழுமையான ஆதரவை வழங்கவுள்ளதாக, நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சரும் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளருமான ஜீவன் தொண்டமான் உறுதியளித்துள்ளார்.

வடமாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம்.சார்ள்ஸுக்கும் அமைச்சர் ஜீவன் தொண்டமானுக்கும் இடையிலான சந்திப்பொன்று கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை (03) நடைபெற்றது. இதன்போதே அமைச்சர் ஜீவன் தொண்டமான் இந்த உறுதிமொழியை வழங்கியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் போது, வடமாகாணத்தின் தற்போதைய நிலைமை உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் அவர்கள் இருவரும் விரிவாக கலந்துரையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# வடக்கின் உதயம்

## கண் நோய் பரவல்; அவதானமாக இருக்க யாழ். பொதுச் சுகாதாரப் பிரிவினர் ஆலோசனை

யாழ். விசேட நிருபர்



தற்போது யாழ்ப்பாண மாவட்டத்தில் கடும் காற்றுடனான காலநிலையைத் தொடர்ந்து கண் நோய் பரவி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளதாகவும் ஆகையினால் இந்த நோய்த் தொற்று தொடர்பாக அனைவரையும் அவதானத்துடன் நடந்துகொள்ளுமாறும், யாழ். மாவட்ட பொதுச் சுகாதாரப் பிரிவினர் நேற்று (05) அறிவித்துள்ளனர்.

குறிப்பாக, வடமராட்சியின் வலிகாமம் பிரதேசங்களைச் சேர்ந்த மாணவர்கள் மத்தியில் கண் நோய் பரவி வருகின்றமை அதிகளவில் அவதானிக்கப்பட்டுள்ளதாகவும், பொதுச் சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

கண்கள் கடுமையாக சிவந்து, கண்களிலிருந்து நீர் வழிவதுடன், கண்களில் சிறியளவில் வலியும் காணப்படுகின்றமை இதற்கான நோய் அறிகுறிகளாகுமெனச் சுட்டிக்காட்டிய பொதுச் சுகாதாரப் பிரிவினர், கண் நோயினால் பாதிக்கப்படுகின்றவர்கள் சுத்தமான கைக்குட்டையை பயன்படுத்த வேண்டுமெனவும் அறிவுறுத்தியுள்ளனர்.

அத்துடன், வெப்பமான காலநிலையில் வெளியில் செல்வதை தவிர்த்துக்கொள்ளுமாறும் கண்களில் தூசி படிய விடாமல் தவிர்த்துக் கொள்ளுமாறும், அவர்கள் மேலும் அறிவுறுத்தியுள்ளனர்.

கண் நோய்க்கான அறிகுறி தென்படும் பட்சத்தில் அருகிலுள்ள மருத்துவமனைகளை நாடி, உரிய சிகிச்சையை பெற்றுக்கொள்ளுமாறும் பொதுமக்களை பொதுச் சுகாதாரப் பிரிவினர் கேட்டுக்கொண்டுள்ளனர்.

## கோப்பாய் கலாசாலையில் ஆசிரியர் தின விழா

### இசைப்பேழையும் வெளியீடு

யாழ். கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டுகால ஆசிரியர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை (06) காலை 9.00 மணிக்கு ஆசிரிய மாணவர் மன்றத் தலைவர் சுப்பிரமணியம் தனசீலன் தலைமையில் நடைபெறும்.

இதன்போது, கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் பழைய மாணவரும் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரியின் ஆசிரியரும் இசையமைப்பாளருமான ஜேம்ஸ் அன்ரன் லூர்ஜினோவின் 'கலாசாலைத் தாயே' எனும் இசைப்பேழையும் வெளியிடப்படவுள்ளதாக, விழா ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர், வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம்பிள்ளை கலந்துகொள்கிறார்.

## மோட்டார் சைக்கிளில் பயணித்தவர் திறந்த கார் கதவுடன் மோதி மரணம்

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாணம், கோண்டாவில் உப்புமடம் சந்தி வீதியோரத்தில் நிறுத்தப்பட்டிருந்த கார் கதவுடன் மோதுண்டு இளம் குடும்பஸ்தர் ஒருவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவத்தை தொடர்ந்து கார் சாரதி, பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார்.

மேற்படி கார் கதவை அதன் சாரதி திடீரெனத் திறந்ததாகவும் இதன்போது வீதியால் மோட்டார் சைக்கிளில் பயணித்த இந்தக் குடும்பஸ்தர், கார் கதவுடன் மோதுண்டு உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முன்தினம் புதன்கிழமை (04) இரவு இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகவும் இதில் தாவடி பிரதேசத்தைச் சேர்ந்த கட்டடத் தொழிலாளியான லோகராசா தர்சன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தில் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் பொலிஸார் ஒப்படைத்துள்ளனர்.

இந்நிலையில், மேலதிக விசாரணைக்காக காரை பொலிஸ் நிலையத்துக்கு பொலிஸார் கொண்டு சென்றுள்ளனர்.

## யாழ். பல்கலை மாணவி காணாமல் போனதாக பொலிஸில் முறைப்பாடு

யாழ். விசேட நிருபர்

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் மருத்துவபீட இறுதியாண்டு மாணவியொருவர் காணாமல் போயுள்ளதாகக் கூறி அம்மாணவியின் பெற்றோர், யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அநுராதபுரத்தைச் சேர்ந்த இம்மாணவி, யாழ். போதனா வைத்தியசாலைக்கு அருகிலுள்ள மருத்துவபீட மாணவர் விடுதியில் தங்கியிருந்து தனது கற்றலை மேற்கொண்டு வந்தார்.

இந்நிலையில் கடந்த செவ்வாய்க்கிழமை முதல் அவரது கையடக்கத் தொலைபேசி இயங்காத நிலையில், அவரை தேடி நேற்று முன்தினம் புதன்கிழமை அநுராதபுரத்திலிருந்து பெற்றோர் யாழ்ப்பாணத்துக்கு வந்ததாகவும் விடுதியில் பெற்றோர் விசாரித்த போது, மாணவி செவ்வாய்க்கிழமை விடுதியிலிருந்து வெளியேறியதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் பின்னர், தம்மிடம் அம்மாணவியின் பெற்றோர் முறைப்பாடு செய்துள்ளதாக, யாழ். பொலிஸார் தெரிவித்தனர்.

---

# மலைச்சாரல்



சர்வதேச மனித உரிமைகள் பாதுகாப்புக்கான மையத்தின் கண்டி மாவட்ட பணிப்பாளராக எம்.தீபன் நியமிக்கப்பட்டதை தொடர்ந்து, அவருக்கான நியமனக் கடிதத்தை பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும வழங்கி வைத்தார்.

கொழும்பிலுள்ள ஹோட்டலொன்றில் நடைபெற்ற இந்நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உட்பட பலர் கலந்துகொண்டனர்.

உமா அறக்கட்டளையின் நிறுவுனரான எம்.தீபன், க/கலைமகள் தமிழ் வித்தியாலயத்தின் பழைய மாணவர் சங்க உறுப்பினராவார்.

## மலையக மக்களின் 200 வருட பூர்த்தி

## 'நாம் -200' நிகழ்வின் அறிமுக விழாவும் சின்னம் வெளியீடும்



மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் பூர்த்தியாகியதைத் தொடர்ந்து, அம்மக்கள் இந்நாட்டுக்கு ஆற்றிய சேவைகளை பாராட்டியும் அவர்களை கௌரவித்தும் 'நாம் 200' நிகழ்வின் அறிமுக விழாவும் சின்னம் வெளியீடும் பத்தரமுல்லையிலுள்ள நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சில் நேற்று வியாழக்கிழமை (05) நடைபெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச் செயலாளரும் நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டிலும் பிரதமர் தினேஷ் குணவர்தனவின் தலைமையிலும் இந்நிகழ்வு நடைபெற்றது.

இந்நிகழ்வில் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவரும் கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான எம். ராமேஷ்வரன், இலங்கை தேசிய தோட்ட தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளரும் பதுளை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான வடிவேல் சுரேஷ், இந்திய உயர்ஸ்தானிகராலயத்தின் விசேட பிரதிநிதி எல்டோஸ் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

இதேவேளை, மலையக மக்களின் 200 வருட பூர்த்தியையிட்டு நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சினால் பல்வேறு வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஓரங்கமாக முன்னெடுக்கப்பட்டுள்ள 'நாம் 200' திட்டமானது, மலையக மக்களின் கலை, கலாசார, பண்பாட்டு விழுமியங்களை பிரதிபலிக்கும் வகையில் அமையவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சட்டவிரோத மதுபானத்துடன் கண்டியில் இருவர் கைது

கண்டியில் அனுமதிப்பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் முச்சக்கரவண்டியொன்றில் மதுபானம் கொண்டு சென்ற குற்றச்சாட்டின் பேரில் இருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மதுபானமும் பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொலிஸ் விசேட அதிரடிப்படையினரின் கண்டி முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து தெல்தெனிய பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மகாவலி விக்டோரியா வீட்டுத்தொகுதிக்கு அருகில் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்ட போது, சட்டவிரோத மதுபானத்துடன் இச்சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர். மதுபானம் அடைக்கப்பட்ட 164 போத்தல்களை இச்சந்தேக நபர் கொண்டு சென்றதாகவும், பொலிஸார் தெரிவித்தனர். கென்கல்ல மற்றும் ரஜவெல்ல பிரதேசங்களைச் சேர்ந்த 43, 51 வயதுடைய சந்தேக நபர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இச்சந்தேகநபர்கள் தெல்தெனிய பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

## கனடாவில் தமிழ் அழகிகள் போட்டி

## மலையக பூர்வீகத்தை கொண்ட மலிஷா சிறந்த அழகியாக மகுடம் சூட்டினார்

கனடா டொராண்டோ நகரில் நடைபெற்ற தமிழ் அழகிகள் போட்டியில் மலையக பூர்வீகத்தை கொண்ட மலிஷா மாணிக்கம் சிறந்த அழகியாக மகுடம் சூட்டிக்கொண்டார்.

கனடாவில் இயங்கும் மிஸ் தமிழ் யுனிவர்ஸ் அமைப்பினால் இந்த வருடத்துக்கான (2023) தமிழ் அழகிகள் போட்டி டொராண்டோவிலுள்ள ஸ்காபுரோ மாநாட்டு மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்டது.

இந்த அமைப்பின் ஸ்தாபகத் தலைவர் சசிகலா நரேந்திராவின் ஏற்பாட்டில் மிகச் சிறப்பாக நடைபெற்ற இப்போட்டியில் பிரதம அதிதியாக கல்வி இராஜாங்க அமைச்சர் அருணாச்சலம் அரவிந்தகுமார் கலந்துகொண்டு சிறப்பித்தார்.



## மொனராகலை விவசாயிகளுக்காக பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள்



ஊவா சுழற்சி நிருபர்

மொனராகலை மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகளின் நன்மை கருதி 258 மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், ஊவா மாகாண பிரதேச அபிவிருத்தி உதவித் திட்டத்தின் கீழ் மொனராகலை மாவட்டத்தில் 177 மில்லியன் ரூபா செலவில் வெல்லவாய வாராந்த சந்தை, வாகனத் தரிப்பிடம் ஆகியன அமைக்கப்பட்டுள்ளன.

அத்துடன், இம்மாவட்டத்தில் சியம்பலாண்டுவ தொம்மகஹவல வாராந்த சந்தை 45 மில்லியன் ரூபா செலவிலும் மடுல்ல மாரி அராவ வாராந்த சந்தை 40 மில்லியன் ரூபா செலவிலும் அமைக்கப்பட்டுள்ளன.

இந்த அபிவிருத்தித் திட்டங்களை மக்கள் பாவனைக்காக விவசாய இராஜாங்க அமைச்சர் சசீந்திர ராஜபக்ஷ கையளித்து வைத்துள்ளார்.

## போலி ஆவணங்களைத் தயாரித்து சிசுவின் சிகிச்சைக்கு பணம் திரட்டிய மூவர் கினிகத்தேனையில் கைது

மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்

போலி ஆவணங்களைத் தயாரித்து மூன்று மாத சிசுவொன்றினது தீராத நோயைக் குணப்படுத்துவதற்கான சிகிச்சைக்கு பணம் திரட்டிய குற்றச்சாட்டின் பேரில் பெண் ஒருவர் உட்பட மூன்று பேர் கினிகத்தேனை நகரில் நேற்று முன்தினம் புதன்கிழமை (04) பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சந்தேக நபர்களான இப்பெண், இப்பெண்ணின் சகோதரர் மற்றும் வாடகைக்கு நியமிக்கப்பட்ட மற்றுமொருவர், முச்சக்கரவண்டியொன்றில் கினிகத்தேனை நகரில் ஒலிபெருக்கி மூலமாக விடயத்தை அறிவித்து பணம் திரட்டிய போது சந்தேகமடைந்த கினிகத்தேனை பொலிஸார், இவர்களை அழைத்து விசாரணை செய்தனர்.

இப்பெண்ணின் கணவர், இப்பெண்ணிடமிருந்து விவகாரத்து பெற்றதைத் தொடர்ந்து, இவ்வாறு பணம் திரட்டி வருவதாக பொலிஸாரின் விசாரணையில் தெரிவித்துள்ளார்.

சந்தேகநபரான பெண்ணினுடைய பெண் பிள்ளையொன்று சிறுவயதில் நோய்வாய்ப்பட்டிருந்த போது எடுக்கப்பட்ட புகைப்படத்தைக் காட்டி இப்பெண் பணம் திரட்டியதாகவும் எனினும், படத்திலிருந்த அச்சிசு வளர்ந்து தற்போது 8 வயதாகி பாடசாலைக்கு செல்வதாகவும் தனது விவாகரத்து பெற்ற கணவரின் பொறுப்பில் சிறுமி இருப்பதாகவும் விசாரணையில் தெரியவந்துள்ளதாக, பொலிஸார் தெரிவித்தனர்.

பிரதான நகரங்களுக்குச் சென்று, நாளொன்றுக்கு 5,000 ரூபாவுக்கு முச்சக்கரவண்டியை வாடகைக்கு அமர்த்தி, அதில் சிசுவின் புகைப்படத்தை ஒட்டி, பணம் திரட்டியமை விசாரணையில் தெரியவந்துள்ளதாகவும், பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட 29 வயதுப் பெண், வாழைச்சேனையைச் சேர்ந்தவரென்பதுடன், அப்பெண்ணின் சகோதரர் 28 வயதுடையவராவர். மற்றையவர், தோப்பூரைச் சேர்ந்த 28 வயதுடையவராவர்.

மேலும், இப்பெண்ணின் வங்கிக் கணக்கில் 130,000 ரூபா வைப்பிலிடப்பட்டுள்ளதாகவும், அதுவும் யாழ்ப்பாணத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் வைப்பிலிடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளதாகவும், பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

தினகரன் விளம்பரம்
0112429367
விற்பனை பிரிவு
0112429444,
0112429378
ஆசிரியபீடம்
editor.tkn@lakehouse.lk

2023 ஒக்டோபர் 6 வெள்ளிக்கிழமை
தினகரன்
THINAKARAN
තිනකරන්

தொழுகை நேரம்
சுபஹ் - 04.43
ளுஹர் - 12.01
அஸர் - 03.16
மஃரிப் - 06.01
இஷா - 07.11

இன்றைய சுபதினம்
சோபகிருது வருடம் புரட்டாதி 20
ராகுகாலம் : பகல் : 1.30 - 3.00வரை
சுபநேரம் : காலை : 10.30 - 12.00வரை
யோகம்: சித்தயோகம்
திதி: சஷ்டி



# விமான எரிபொருள் களஞ்சிய வசதிகளை மேம்படுத்த திட்டம்

## சர்வதேச விமான சேவைகளை கவருவதே நோக்கம்



(லோரன்ஸ் செல்வநாயகம்)

விமானங்களுக்கான எரிபொருளை களஞ்சியப்படுத்தும் வசதிகளை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் இதன் மூலம் உலகில் ஏனைய நாடுகளில் காணப்படும் விமானங்களையும் கவர முடியும் என்றும் அமைச்சர் கஞ்சன விஜேசேக்கர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

தற்போது காணப்படும் 40 ஆயிரம் மெற்றிக் தொன் களஞ்சியப்படுத்தும் தாங்கிகள், எந்த வகையிலும் போதாது என்றும் இதற்கான வசதிகளை அதிகரிக்கும் வேலைத் திட்டம் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

சிவில் விமான சேவை சட்ட மூலம் இரண்டாம் வாசிப்பு மீதான விவாதத்தில் உரையாற்றும்போதே அமைச்சர் இவ்வாறு

தெரிவித்தார்.

அதேவேளை மறுசீரமைப்பு நடவடிக்கைகளின் போது ஸ்ரீலங்கன் விமான சேவையுடன் இணைந்த ஸ்ரீலங்கன் கேட்டரிங் கிரவுண்ட் ஹெண்ட்லின் உள்ளிட்ட அனைத்து நிறுவனங்களும் இணைக்கப்பட்டு இந்த மறு சீரமைப்பு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் அமைச்சர் தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர், இந்தியாவின் எயார் இந்தியா விமான நிறுவனம் டாட்டா நிறுவனத்துடன் இணைந்ததாக மறுசீரமைப்பு வேலைத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அந்நிறுவனங்களுக்கு விமானங்கள் மட்டுமன்றி

06

# சர்வதேசஆசிரியர் தின நிகழ்வுகள் இன்று

உலக ஆசிரியர் தினம் ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 05 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. 1966 ஆம் ஆண்டு யுனெஸ்கோ சாசனத்தின்படி, உலக ஆசிரியர் தினம் உருவாக்கப்பட்டது.

எனினும், ஆசிரியர் தினத்தின் அதிகாரபூர்வமான கொண்டாட்டம் அக்டோபர் 05, 1994 இல் ஆரம்பிக்கப்பட்டது. உலக ஆசிரியர் தினத்துடன் இணைந்து இலங்கையில் இன்று ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது. ஏந்தவொரு மனிதனும் தனது வாழ்நாளில் அனைத்து வெற்றிகளையும் தன்வசப்படுத்தி உயர் நிலைக்கு செல்ல, ஒரு காரணமாக இருப்பவர் ஆசிரியர் மட்டுமே . குருவை மிஞ்சிய சீடன் இருந்தாலும் அவனுக்கு அகரம் சொல்லி கொடுக்க மானசீக குரு ஒருவராவது இருந்திருக்க வேண்டும்.

மாதா , பிதா , குரு , தெய்வம் என தெய்வத்துக்கும் முன்னால் குரு போற்றப்படுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.

# சீரற்ற காலநிலை காரணமாக இதுவரை 48,821 பேர் பாதிப்பு

## அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவிப்பு

நாட்டில் நிலவும் சீரற்ற காலநிலையால், 12,120 குடும்பங்களைச் சேர்ந்த 48,821 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேல் மாகாணத்தில் மட்டும் 09,489 குடும்பங்களைச் சேர்ந்த 38,208 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். தென்மாகாணத்தில் 02,117 குடும்பங்களைச் சேர்ந்த 8,605 பேர் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

## சீனாவுக்கு குரங்குகள் ஏற்றுவது தடைப்பட்டாலும்

# வருடாந்தம் பில்லியன் கணக்கான உணவு அழிவடைவது தொடர்கிறது

(லோரன்ஸ் செல்வநாயகம்)



நீதிமன்ற உத்தரவால் குரங்குகளை வெளிநாடுகளுக்கு அனுப்பும் தீர்மானம் தற்காலிகமாக நிறுத்தப்பட்டாலும், வருடந்தோறும் பில்லியன் கணக்கான உணவுப் பொருட்கள் அழிவடைது தொடர்வதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டு மக்களின் எதிர்ப்புகள் இல்லையென்றாலும் சுற்றாடல் தொடர்பான அமைப்புகள் இதனை பலமாக எதிர்த்தன. இதனாலே, நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்ததாக அவர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று வாய் மூல விடைக்கான வினாக்கள் வேளையில் நிரோஷன் பெரேரா எம்பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், சீன நிறுவனம் ஒன்று இலங்கையிலிருந்து ஒரு இலட்சம் குரங்குகளை பெற்றுக் கொள்வதற்கு இணக்கம் தெரிவித்திருந்தது.

06

# சீதா, யானை சுடப்பட்ட சம்பவம் கவலையளிக்கிறது



நமது நாட்டில் கௌரவப்படுத்தப்பட்டு புனிதப்படுத்தப்படும் யானைகளை கொடூரமாக கொலை செய்வது கவலைக்கும் ஆச்சரியத்துக்கும் உரியதென பாராளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

அண்மையில் மஹியங்கனையில் யானையொன்று சுடப்பட்ட சம்பவம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிகையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

மஹியங்கனையில் சீதா யானை சுடப்பட்டதன் பின்னர் யானைகள் கொலை தொடர்பான விவாதம் வேறு தோற்றம் பெற்றது. ஊடக அறிக்கைகளின் படி பழக்கப்படுத்தப்பட்ட சீதா யானையை சுட்டவர், காடுகளை பாதுகாக்கும் பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரியாவார்.

சீதா யானையின் கொலைக்குப் பின்னரும் யானைகள் கொலை தொடர்பான உலக அறிக்கையிலும் இலங்கையின் மனிதாபிமானம் மற்றும் சூழல் தொடர்பான கலாசாரத்தை யானை வெடியான 'ஹக்க பட்டாசு'க்குக் சமப்படுத்தியுள்ளது.

அதன்படி செப்டம்பர் 27 புதன்கிழமை முதல் 29 வெள்ளிக்கிழமை வரையிலான 48 மணி நேரத்திற்குள் 13 யானைகள் பலியாகிள்ளன. 2022 ஆம் ஆண்டு உலகில் அதிக யானைகளைக் கொன்ற நாடாக இலங்கை உலக சாதனை

06

# ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலையின் பட்டமளிப்பு விழா இன்று ஆரம்பம்

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் 49ஆவது பட்டமளிப்பு விழா இன்று வௌ்ளிக்கிழமை (06) முதல் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை (08) வரை பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும்.

பல்கலைக்கழக துணைவேந்தர் கோட்டே ஸ்ரீ கல்யாணி சாமாகி தம்ம மகா சங்க சபா ஷாமோபாலி மகாநாயக, அதிவணக்கத்துக்குரிய கலாநிதி இத்தேபான தம்மாலங்காராபிதான மகாநாயக தேரர் மற்றும் உபவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் எம்.எம். பத்மலால் தலைமையில் இப்பட்டமளிப்பு விழா நடைபெறும்.

மனித உரிமைகள் மற்றும் சமூக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 879 பேரும், வணிகபீடத்தைச் சேர்ந்த 695 பேரும் முகாமைத்துவ கல்வி மற்றும் வர்த்தக விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த

06

# அரசின் ஒய்வூதியம் பெறாத உங்களுக்கு ஓய்வூதியத்துடன் சமூகப் பாதுகாப்பு



சமூகப் பாதுகாப்பை உறுதி செய்த தேசம் ஒன்றை உருவாக்கும் தேவையை தற்போது இலங்கை மக்கள் அதிகம் உணர்ந்துள்ளனர். இலங்கையில் 08 மில்லியனுக்கும் அதிகமான தொழில் புரியும் தொழில் படையில் அதிகப் பெரும்பான்மையினர் ஓய்வூதிய அல்லது சமூக பாதுகாப்பு திட்டத்தை பெற்றவர்களாக இல்லை. அவ்வாறான வேலை புரிவோருக்காக சமூக பாதுகாப்பு கட்டமைப்பை உருவாக்கும் பணிக்கு 1996ஆம் ஆண்டு தொடக்கம் இலங்கை சமூகப் பாதுகாப்பு சபை தோள் கொடுத்துள்ளது. குறிப்பாக சுய தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் தொழில் முயற்சியாளர்கள் உட்பட அரசாங்கத்தில் ஓய்வூதியம் ஒன்றை பெறாத குடிமக்களுக்காக ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்பு திட்டம் இதன் கீழ் செயற்படுத்தப்படுகிறது.

1999 இன் 33ஆம் இலக்கம் கொண்ட திருத்தப்பட்ட பாராளுமன்ற சட்டத்தின் திருத்தப்பட்ட, 1996இன் 17ஆம் இலக்கம் கொண்ட பாராளுமன்ற சட்டத்தினால் நிறுவப்பட்டுள்ள இலங்கை சமூகப் பாதுகாப்பு சபை ஆரம்பத்தில் நிதி அமைச்சின் கீழ் செயற்பட்டதோடு, தற்போது மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சில் செயற்படுகிறது.

தற்போது இலங்கையில் 60 வயதைத் தாண்டிய மக்கள் தொகை ஒட்டுமொத்த மக்கள் தொகையில் 12.2% ஆகும். அந்த வயதானோரின் எண்ணிக்கை 2,468,329 ஆகும். இந்த விகிதம் 2040ஆம் ஆண்டாகும்போது 25.7% வரையும், 2050ஆம் ஆண்டாகும்போது 29% ஆகவும் அதிகரிக்கும் என எதிர்வுகூறப்பட்டுள்ளது. மக்கள் தொகையில் அதிக வீதமானவர்கள் வயதானவர்களாவது அந்த சிரேஷ்ட பிரஜைகளுக்கு மற்றும் அவர்களின் பிள்ளைகளுக்கு, அரசுக்கு அதேபோன்று பொதுவாக ஒட்டுமொத்த சமூகத்திற்கும் சவாலாகும். இந்த சவாலுக்கு முகம்கொடுத்து சிரேஷ்ட பிரஜைகளை மிகவும் பாதுகாப்பான, பெருமைக்குரிய இலங்கை பிரஜைகளாக மாற்றுவது எமது சபையின் எதிர்பார்ப்பாகும்.

இந்தப் பணியை சமூக மயப்படுத்துவதற்காக இலங்கை சமூக பாதுகாப்பு சபை மூலம் செயற்படுத்தப்படுகின்ற ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு திட்டங்கள் பல உள்ளன. 18-59 வயது வரையானவர்களுக்கு பாதுகாப்பு ஓய்வூதிய திட்டம் செயற்படுவதோடு, 18 வயதுக்குக் குறைவான சிறுமிகளுக்காக முன் பாதுகாப்புத் திட்ட ஓய்வூதிய முறை செயற்படுகிறது.

தற்போது இருக்கும் திட்டங்களை அதிகம் ஈர்க்கச் செய்யும் வகையில் விசேட திட்டங்களாக மிகவும் பரந்த அளவில் நன்மைகளைக் கொண்ட "மனுசவி" திட்டம் வெளிநாட்டில் பணிபுரிபவர்களுக்காகவும் "நாவிகயா" திட்டம் வர்த்தக மாலுமிகளுக்காகவும், "கலைஞர்" ஓய்வூதிய திட்டம் கலைஞர்களுக்காகவும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் தொழில் முயற்சியாளர்கள் மற்றும் வலுவூட்டப்பட்ட சமுர்த்தி பயனாளிகளுக்காக வலுவூட்டும் அளவுகோல்களாக இந்தத் திட்டத்தை செயற்படுத்துவது மற்றொரு வேலைத்திட்டமாகும்.

எமது ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு திட்டத்தில் இணைந்துள்ள ஒரு மில்லியனை நெருங்கும் பெரும் எண்ணிக்கையான அங்கத்தவர்கள் இருக்கின்றபோதும் அவர்களை தொடர்ந்து இயங்கும் வகையில் செயற்படுத்தி ஓய்வூதிய மற்றும் சமூக பாதுகாப்பு பயனாளிகளாக மாற்றுவதற்கு அங்கத்தவர்களை தொடர்ந்தும் இயங்குபவர்களாக வைத்திருப்பது எமக்கு இருக்கின்ற சவாலாகும்.

எதிர்காலத்தில் முதுமையடைந்த மக்கள்தொகை அதிகரிப்பதன் மூலம் சமூகம் ஒன்றாக முகம்கொடுக்க வேண்டி இருக்கும் சவால்களுக்கு வெற்றிகரமான தீர்வொன்றாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் ஓய்வூதியத் திட்டத்தில் அங்கம் வகிப்பதன் மூலம் வாழ்வின் இறுதிக் காலத்தை கௌரவத்துடன் செலவிடுவதற்கு தற்போதே இலங்கை சமூக பாதுகாப்பு சபையுடன் இணைந்து உங்களது ஓய்வு வாழ்க்கையை பாதுகாத்துக் கொள்ளும்படி அரசின் ஓய்வூதியம் பெறாத இலங்கை பிரஜைகளுக்கு இந்த சந்தர்ப்பத்தில் அழைப்பு விடுக்க விரும்புகிறேன். எமது திட்டம் தொடர்பில் தற்போது ஒலிபரப்பாகும் வானொலி நிகழ்ச்சிகள் மற்றும் பேஸ்புக் சமூக ஊடக நிகழ்ச்சிகளுடன் இணைந்து அறிவை பெறும்படி மேலும் அழைப்பு விடுக்கிறேன்.

**கே.ஏ.எஸ். பிரசன்ன களுவாரச்சி**
**MBA, B.Sc.(Spl.)(B.Ad), ACMA, CPFA (CASL), CPFA(UK), ACIPM**
**பொதுமுகாமையாளர்**
**இலங்கை சமூக பாதுகாப்பு சபை**



தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10

தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

சோபகிருது வருடம் புரட்டாதி மாதம் 20ஆம் நாள் வெள்ளிக்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1445 ரபீஉனில் அவ்வல் பிறை 20

## குறள் தரும் சிந்தனை



கொடுப்பதூஉம் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடிஉண் டாயினும் இல்

கொடுத்து உதவும் பண்பினால் இன்பமுறும் இயல்பு இல்லாதவரிடம், கோடி கோடியாகச் செல்வம் குவிந்தாலும் அதனால் பயன் எதுவுமில்லை.

# ரயில் பயணிகளை அசௌகரியங்களுக்கு உள்ளாக்கிய தொழிற்சங்க நடவடிக்கை

ரயில்வே திணைக்கத்தைச் சேர்ந்த இரு பிரிவு ஊழியர்கள் நேற்றுமுன்தினம் திடீரென வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுத்தனர். நேற்றுமுன்தினம் ஆரம்பிக்கப் பட்ட இத்தொழிற்சங்க நடவடிக்கை நேற்று நண்பகலுடன் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது.

இத்தொழிற்சங்க நடவடிக்கையால் ரயில் பயணிகள் நேற்றுமுன்தினம் பிற்பகல் முதல் பலத்த அசௌகரியங்களுக்கு உள்ளாகினர். ரயில்வே திணைக்களத்தைச் சேர்ந்த ஒரிரு பிரிவு ஊழியர்கள் வேலைநிறுத்தத் தொழிங்சங்க நடவடிக்கையை ஆரம்பித்ததை அறிந்ததும் அரச, தனியார் நிறுவனங்கள் தம் ஊழியர்கள் வழமைக்கு மாறாக நேர காலத்தோடு வீடு திரும்ப அனுமதி வழங்கின.

இந்த நிலையில் கொழும்பு புறக்கோட்டை, மருதானை ரயில் நிலையங்களில் வீடு திரும்புவதற்காக ரயில் பயணிகள் முண்டியடித்தனர். அத்தோடு தலைநகரிலுள்ள ஏனைய ரயில் நிலையங்களிலும் ரயில் பயணிகள் நிரம்பி வழிந்தனர்.

இந்த வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையினால் திடீரென நூற்றுக்கும் மேற்பட்ட ரயில் போக்குவரத்து ரயில் சேவைகள் மறுஅறிவித்தல் வரையும் இடைநிறுத்தப்பட்டதன் விளைவாகவே ரயில் பயணிகள் இவ்வாறான நெருக்கடிக்கு உள்ளாகினர். அத்தோடு நாட்டின் பல பிரதேசங்களுக்கான தபால் சேவை ரயில் சேவைகளும் இடைநிறுத்தப்பட்டன.

ரயில் பயணிகளை கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாக்கி வழமையான ரயில் சேவையைப் பாதிக்கும் வகையிலான இவ்வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையை ரயில்வே திணைக்களத்தின் ரயில் கட்டுப்பாட்டாளர்கள் சங்கத்தினரே திடீரென்று முன்னெடுத்தனர்.

மாளிகாவத்தை ரயில் தளத்தில் ரயில் துணைக் கட்டுப்பாட்டாளர் ஒருவருக்கும் ரயில் பாதுகாப்பு உத்தியோகத்தர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட கைகலப்பைக் காரணம் காட்டியே ரயில் கட்டுப்பாட்டாளர்கள் சங்கம் இவ்வேலைநிறுத்தத்தை முன்னெடுத்தது.

ரயில்வே திணைக்களத்தின் துணைக் கட்டுப்பாட்டாளரைத் தாக்கியதாகக் கூறப்படும் பாதுகாப்பு உத்தியோகத்தரை சேவையில் இருந்து நீக்குமாறு கோரி இவ்வேலைநிறுத்தத்தை ரயில் கட்டுபாட்டாளர்கள் ஆரம்பித்தனர். இந்நிலையில் துணைக் கட்டுப்பாட்டாளர்கள் நேற்று மாலையானதும் சுகவீன விடுமுறையை விண்ணப்பித்து விட்டு சேவையில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இவ்வாறான நிலையில் ரயில்வே பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் சங்கத்தினர், குற்றஞ்சாட்டப்படும் குறித்த பாதுகாப்பு உத்தியோகத்தர் சேவையில் இருந்து நீக்கப்படுவாராயின் தாமும் வேலைநிறுத்தத்தில் குதிக்கப் போவதாக ரயில்வே திணைக்களத் தலைமையகத்திற்கு அறிவித்தனர்.

இந்த நிலையில் நேற்று நண்பகல் வரையும் இத்தொழிற்சங்க நடவடிக்கை நீடித்தது. இந்நிலையில் போக்குவரத்து இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவன்ன சம்பந்தப்பட்ட தரப்பினருடன் பேச்சுவார்த்தையை முன்னெடுத்ததைத் தொடர்ந்து வேலைநிறுத்தத் தொழிற்சங்க நடவடிக்கை கைவிடப்பட்டது.

ரயில்வே திணைக்களத்தின் இரண்டு பிரிவைச் சேர்ந்த இரு ஊழியர்களுக்கு இடையில் ஏற்பட்ட கைகலப்பை காரணம் காட்டி ரயில் பயணிகள் சேவையை பெரிதும் பாதிக்கச் செய்வது எவ்விதத்திலும் நியாயப்படுத்த முடியாத விடயமாகும், இது ஏற்றுக் கொள்ளக்கூடிய விடயமும் அல்ல. அதே நேரம் இரண்டு ஊழியர்களுக்கு இடையில் ஏற்பட்ட பிரச்சினையைக் காரணம் காட்டி ஒரு பொதுசேவையை வேலைநிறுத்தத்தின் மூலம் ஸ்தம்பிக்கச் செய்வதும் சட்ட ரீதியில் அங்கீகரிக்கப்படக்கூடிய விடயமாகவும் இருக்காது.

ரயில் திணைக்களம் உட்பட எந்தவொரு பொதுநிறுவனத்திலும் நினைத்த மாத்திரத்தில், எடுத்த எடுப்பில் வேலைநிறுத்த தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்க முடியாது. வேலைநிறுத்தமொன்றை முன்னெடுப்பதற்கு பின்பற்ற வேண்டிய ஒழுங்குமுறைகள், விதிகள் காணப்படவே செய்கின்றன. அந்த விதிமுறைகளுக்கு முரணான வகையில் தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவே முடியாது. தொழிற்சங்க விதிமுறைகளைப் பின்பற்றியே எந்தவொரு வேலைநிறுத்தத்தையும் முன்னெடுக்க வேண்டும். ஆனால் இந்த வேலைநிறுத்தத்தல் அந்த விதிமுறைகள் பின்பற்றப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

ரயில்வே திணைக்களத்தின் இரண்டு ஊழியர்களது பிரச்சினைக்காகவும் ரயில் பயணிகள்தான் பலிக்கடாவாக்கப்பட்டனர். இது தொழிற்சங்க விதிமுறைகளுக்கு முரணமான செயற்பாடே அன்றி வேறில்லை. இவ்வாறான செயற்பாடுகள் தொழிற்சங்க உரிமைகளை மலினப்படுத்தவே வழிவகுக்கும். அதற்கு இடமளிக்காத வகையில் தொழிற்சங்க உரிமைகளைப் பிழையாகவும் தவறாகவும் பயன்படுத்த எவருக்கும் இடமளிக்கக்கூடாது என்பதே மக்களது கருத்தாகும். அதனால் தொழிற்சங்க ஒழுங்கு விதிகளை அதற்கேற்ப பேணிப்பாதுகாப்பதில் கூடுதல் கவனம் செலுத்தப்பட வேண்டும்.

editor.tkn@lakehouse.lk

# இலவசக் கல்விக்கு புத்துயிரூட்டி வறிய மாணவர் மீது இரக்கம் கொள்ள ஆசிரியர்கள் முன்வருவது அவசியம்!

மனிதனாய்ப் பிறந்த ஒவ்வொருவராலும் போற்றப்படுபவர்கள் ஆசிரியர்கள் ஆவர். சமுதாய வழிகாட்டி,உளவியலாளர், கணிதமேதை, மருத்துவர், ஆய்வாளர், எழுத்தாளர்கள் எனப் பல்வேறு தளங்களில் நின்று உலகை இயக்கும் இயக்க சக்திகளுக்கு எரிபொருளாக திகழ்பவர்கள் ஆசிரியர்களேயாவர்.

எழுத்தறிவித்தவன் இறைவனாவான் என்ற ஆத்தி சூடி வாக்கியம், அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்கே உலகு எனும் திருக்குறளின் முதலாவது பதிவு, ஓதுவீராக! படிப்பீராக! என்கின்ற அல்குர்ஆனின் முதல் கட்டளை என்பவற்றை வைத்துப் பார்க்கும் போது, ஆசிரியம் அல்லது கற்பித்தல் என்பது புனிதமானதென்பது தெளிவாகின்றது. இவ்வாறான பண்புகளை உண்மையாகவே கொண்டுள்ள ஆசிரியர்களைக் கௌரவிக்கும் ஓர் தினமே ஆசிரியர் தினமாகும்.

இலங்கை உள்ளிட்ட சில நாடுகளில் ஒக்டோபர் 06 ஆம் திகதி சர்வதேச ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகின்ற போதும், செப்டம்பர் 5 இல் இந்தியாவிலும், ஒக்டோபர் 5 இல் ரஷ்யாவிலும், மே 2இல் ஈராக்கிலும், ஜனவரி 16 இல் தாய்லாந்திலும், நவம்பர் 24இல் துருக்கியிலும் என வெவ்வேறு நாடுகளில் வெவ்வேறு தினங்களில் இத்தினம் கொண்டாடப்படுகின்றது.

தன்னிடம் ஒப்படைக்கப்படுகின்ற மாணவப் பயிர்களை எதிர்கால நற்பிரஜைகளாக வளர்த்தெடுக்க வேண்டியவர்கள் ஆசிரியர்களாவர். இன்றைய தினத்தில் நாம் நடத்துகின்ற வழமையான கொண்டாட்டங்கள், கௌரவிப்புக்கள் என்பவற்றுக்குப் புறம்பாக ஆசிரியர்கள் அனைவரையும் அர்ப்பணிப்பாளர்களாக மாற்றியமைக்க வேண்டிய பொறுப்பு முதன்மையானதாகும். வெறுமனே ஆசிரியர்தின வழிபாடாக மட்டுமன்றி, ஆசிரிய இலட்சியத்தை விதைக்கின்ற தினமாக இத்தினம் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

கிஷ்ஷ்ணரின் குருவாக ஸ்ரீ சாந்தீபனி மகரிஷியும், அகத்தியரின் குருவாக சிவனும், நபித்தோழர்களின் கற்பிப்பாளராக முஹம்மது(ஸல்) அவர்களும் இருந்ததை வேதநூல்கள் வாயிலாக அறிய முடிகிறது. இவ்வாறான உயர் நிலையில் வைத்து மதிக்கப்படும் ஆசிரியர்கள் தமது பொறுப்புகளைப் பற்றி இன்றைய தினத்தில் சிந்திப்பது பொருத்தமாகும்.

மாணவர்களுக்குத் தண்டனை வழங்காமை, குருகுலவாசகக் கல்வி முறையின் மாற்றம், கட்டாய வகுப்பேற்றம் ஆகிய கல்விக் கொள்கையின் முன்னெடுப்புகளால் ஆசிரியத்துவம் வலுவிழந்து வருகின்றது என்ற சிந்தனை பல்வேறு நாடுகளில் இன்று வேரூன்றியுள்ளது. வரலாற்றுக் காலங்களில் வலம் வந்த அவைக்கள புலவர்கள் முதல் அல்பேட் ஐன்ஸ்டின், மரியா மொன்ட சூரி, ஸ்டிபன் காகின்ஸ் போன்ற விஞ்ஞானத்துறை அறிஞர்கள் மற்றும் இந்திய ஆசிரியர்தின மூலகர்த்தவான இந்தியாவின் குடியரசு தலைவராக இருந்த டொக்டர் சர்வாப்பள்ளி ராதாகிருஷ்ணன் அடங்கலாக பலர் ஆசிரியர்களாகத் தம்பணி தொடர்ந்திருக்கின்றனர்.



## அர்ப்பணிப்புடன் கருமமாற்றும் ஆசிரியப் பெருந்தகைகளை போற்றுவோம்!

ஆசிரியர்களைக் எதிர்கொண்டால் சபைகளிலும் வீதிகளிலும் எழுந்து நின்று மரியாதை செய்வதும், அவர்களது கண்டிப்புகளை மனமுவந்து ஏற்றுக் கொள்வதும் என மேன்மைப்பட்டிருந்த ஆசிரியர் சமூகம் இக்காலத்தில் அதிகம் விமர்சிக்கப்பட்டு வருகின்றது. ஏனைய அரச தொழிற்துறையினரை விடவும் அதிக சம்பளம், எதிர்பாராத விடுமுறைகள் போன்றவற்றால் ஆசிரியர்கள் மீதான மனக்கிலேசம் மக்கள் மத்தியில் தவிர்க்க முடியாததாகின்றது.

அதுமாத்திரமன்றி ஆசிரியர் சமூகத்திலுள்ள பலரின் நடத்தைக் கோலங்களும் அவர்கள் மீது சமூகத்தில் நிலவும் அதிருப்திக்குக் காரணமாகின்றன.

பாடசாலைக் கற்பித்தலைப் பார்க்கிலும், ரியூஷன் கல்வியானது எமது மாணவர்களை ஆக்கிரமித்துக் கொண்டதால் இலவசக் கல்வி என்பது கேள்விக்குறியாகிப் போயுள்ளது. இலவசக் கல்வியினூடாக மாத்திரம் பல்கலைக்கழகம் நுழையலாம் என்ற எதிர்பார்ப்பு எட்டாக்கனியாகி வருகின்றது. குறிப்பாக பல்கலைக்கழகங்களில் வைத்தியத்துறை, பொறியியல்துறை போன்றவற்றுக்குள் நுழைவதற்கு ஏழை மாணவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லை என்பது நிரூபணமாகியுள்ளது.

பாடசாலைகளில் கற்பித்து விட்டு ரியூஷன் வகுப்புகளை நடத்துவதில் தவறில்லை. ஆனால் பாடசாலையில் கற்பிக்காமல் ரியூஷன் வகுப்பில் கற்பிக்கின்ற ஆசிரியர்களைப் பார்க்கின்ற போது வறிய மாணவர்கள் மீது கவலையே வருகின்றது.

சில பாடசாலைகளில் அதிபராலும் மாணவர்களாலும் 'இயங்குநிலையற்றவர்' என்ற பெயரினைக் தக்கவைத்துக் கொண்ட ஆசிரியர்கள் சிலர் ரியூஷன் வகுப்புக்களில் திறமையாகத் தொழிற்படுகின்ற நிலைமையும் காணப்படுகின்றது.

சில பாடசாலைகளில் குறித்த எண்ணிக்கையிலான ஆசிரியர்கள் எவ்வித நேரசூசிகளும் இன்றி அதிபர்களின் கைப்பொம்மைகளாக இருந்து வருகின்றனர். இவ்வாறான ஆசிரியர்கள் காலத்தை வீணடிக்கின்றனர். தேடல் மிகுந்த இக்காலத்தில் வெளித்தொடர்பாடல் மூலம் கனதியான அறிவுடன் வருகின்ற மாணவர்களை அலைக்கழிக்கின்றவர்களாக இத்தகையோர் உள்ளனர்.

பாடசாலை நேரங்களில் தங்களது சொந்த வேலைகளுக்காக வெளியேறிச் செல்வது, ஒப்பத்தினை இட்டு விட்டு வீடுகளில் ஓய்வெடுப்பது, தொழிற்சங்கச் செயற்பாட்டின் அங்கத்துவத்தைப் பெற்று கற்பித்தல் பணியில் இருந்து விலகியிருத்தல் என்றெல்லாம் ஆசிரியர் பலர் மீதான விமர்சனங்கள் அதிகம் உள்ளன.

ஆசிரியர்களில் பலர் உணவு உள்ளிட்ட தேவைகளுக்காக வெளியே சென்றால் உரிய நேரத்திற்கு திரும்பி வருவதில்லை. ஆசிரியர்கள் மீது பெற்றோரின் விமர்சனங்களும் பார்வையும் எந்நேரமும் இருந்து கொண்டேயிருக்கின்றன.

அதேசமயம் ஆசிரியர்களை ஒரு சமூகத்தின் முன்மாதிரியாக, சமூக வழிகாட்டிகளாக, மாணவர்களின் ஏணியாக, அவர்களின் உருவாக்கியாக பல்வேறு கோணங்களில் கௌரவிக்கின்ற பெற்றோரும் உள்ளனரென்பதை மறுப்பதற்கில்லை.

எல்லாவற்றிலும் விமர்சனங்களும் எதிர்வினைகளும் இருப்பது உண்மை. ஆசிரியர்கள் மீதும் விமர்சனங்கள் தவிர்க்க முடியாதவையாகும். இதனை ஒரு தொழிலாக அன்றி பணியாகக் கொண்டு அர்ப்பணிப்புடன் செயற்படுகின்ற ஆசிரியர்கள் நம் மத்தியில் அநேகம் உள்ளனரென்பதை நாம் காண்கின்றோம். மாணவர்களின் நலன்கள் மீது அக்கறை கொண்டு, தியாக சிந்தையுடன் பணியாற்றும் ஆசிரியர்கள் கல்விக்கு உயிர்கொடுக்கும் மகான்கள் என்பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை. அவர்கள் என்றும் மாணவர்களின் உள்ளங்களில் நிறைவோடு வாழ்கின்றனர். அவ்வாறானவர்களை இச்சந்தர்ப்பத்தல் நினைவு கூருவோம், அவர்களுக்கு மகுடம் சூட்டுவோம்.

**ஜெஸ்மி எம்.மூஸா...**
(பெரியநீலாவணை தினகரன் நிருபர்)

# தத்ராத்ரேய அவதாரி ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபரின் பாதுகை பூசை சாயி நாதனின் சரணாலயத்தில்

குருபிரம்மா, குருவிஷ்ணு, குருமஹேஷ்வரர் ஆகியோரின் இணைந்தவடிவமான குரு ஸ்ரீ தத்தாத்ரேயரின் முதல் மானுட அவதாரமான ஸ்ரீபாத ஸ்ரீ வல்லபர் அவர்கள் பாதுகை ரூபத்தில் இலங்கை விஜயம் செய்ய இருக்கிறார். நிகழும் ஒக்டோபர் மாதம், 14 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாயி நாதனின் சரணாலயத்தில் ஸ்ரீ ருத்ர தத்த பாதுகா அபிசேகமும் பூசையும் நடைபெற்று, அன்பர்கள் பாதுகை தரிசனமும் ஆசிகளும் கிடைக்கப் பெறுவார்கள்.

இந்தியாவில் ஆந்திர பிரதேசத்தில் காக்கி நாடாவில் அமைந்துள்ள 18 சத்திபீடங்களில் ஒன்றான பீடாபுரம் என்ற திருத்தலத்தில் திரு அப்பல ராஜ சர்மாவுக்கும் அகண்ட சௌபாக்கியவதி மாதா சுமதிக்கும்குழந்தையாக 13 ஆம் நூற்றாண்டில் அவதரித்த ஸ்ரீபாத ஸ்ரீவல்லபர் பல அதிசயங்களை அடியார்களுக்கு நிகழ்த்தினார், இன்னும் நிகழ்த்திக் கொண்டிருக்கிறார்.

தனது 32 ஆவது வயதில் குருவபுரம் என்னும் தலத்திற்கு அருகில் ஓடும் புனித கிருஷ்ணநதியில் ஜலசமாதியில் மறைந்தார். இன்றுவரை சூட்சும உருவில் தன்னை மனதார நினைப்பவருக்கு நொடியில் பிரத்யட்சமாக தனது அருளை வழங்கி அவர்களது கஷ்டங்களை நீக்குகிறார். இவரது திருமூர்த்தி அண்மையில் தமிழ்நாட்டின் காஞ்சிபுரம் அருகில் உள்ள மேல்சிறுணை மற்றும் மாருதிபுரம் எனும் கிராமங்களில் பிரதிஷ்டை செய்யப்பட்டு கோவில்கள் அமைக்கப்பட்டன.

ஸ்ரீ சக்ர தத்ராத்ரேயர், அக்கல்கோட் மஹராஜ் மற்றும் சீரடி சாயிபாபா ஆகியோரும் இங்கு வீற்றிருப்பது இத்தலங்களின் விசேடமாகும். மேல்சிருணையிலே 16 அடி உயர பஞ்சலோக ஸ்ரீ பாத வல்லபரும் ஒரு கோடி ஸ்ரீ சக்கரங்களும் பிரதிஷ்டை செய்ய தெய்வ அருள் கூடியுள்ளது. இப்பிரமாண்டமான நிகழ்வுக்கு பக்தர்களை தயார் செய்யும் முகமாக ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபரின் பாதுகை பூசை தமிழ்நாட்டின் பல இடங்களில் சிறப்பாக நடைபெற்று வருகிறது. ஸ்ரீபாதரின் பாதுகைகள் சென்ற இடங்களிலெல்லாம் அவரது சைதன்யத்தை பக்தர்கள் பிரத்யட்சமாக அனுபவித்து ஆனந்தமடைகிறார்கள்.



முதன்முதலாக, கடல் கடந்து இலங்கைத் திருநாட்டிற்கு வந்து கொழும்பு மாநகரில் உள்ள சாயிநாதனின் சரணாலயத்தில், தமது பாதுகை தரிசனம் மற்றும் பூசையை அடியவர்களுக்கு அருள ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் திருவுளம் கொண்டுள்ளார். சாயி சரணாலய அடியார்கள் தத்ராத்ரேய அவதாரியான சீரடி சாயி பாபாவையும் ஏனைய தத்த பரம்பரை சத்குருக்களான ஸ்ரீ பாதர், ஸ்ரீ நரசிம்ம சரஸ்வதி சுவாமிகள், அக்கல் கோட் மஹராஜ் சுவாமி சமர்த்தர், ஸ்ரீ மாணிக்க பிரபு மஹராஜ், ஸ்ரீ கஜானன் மஹராஜ் மற்றும் ஸ்ரீ வாசுதேவானந்த சரஸ்வதி சுவாமி ஆகியோரையும் பக்தியுடன் வணங்கி அவர்கள் சரித்திரங்களைப் பாராயணம் செய்து தமது அல்லல்கள் நீங்கி நலமாக வாழ்கிறார்கள் என்பது மெய். இவர்களின் மாசற்ற அன்பிற்கும் பக்திக்கும் மனம் நெகிழ்ந்தோ என்னவோ ஸ்ரீ பாத ஸ்ரீ வல்லபர் தமது பொன்னான பாதுகைகளை இலங்கைக்கு அனுப்ப திருவுளம் கொண்டுள்ளார்.

சென்னை திருவாளர் சுந்தர் சாய், ஆத்மார்த்த சாய் சேவகர், காஞ்சிபுரம் ஸ்ரீ சக்ர தத்த க்ஷேத்ர பீடத்தின் அறங்காவலர் மற்றும் மாருதிபுரம் (உத்திரமேரூர்) ஸ்ரீ சுவாமி சமர்த்த சேவா சமஸ்தானம், ஸ்ரீ குருதத்த பாதுகா ஷேத்ர அறங்காவலராக விளங்குபவர். சென்னை அன்பர் ஸ்ரீ நாராயணன் ஆன்மீக பணியில் 'யூ டியூப் நாராயணன்' என்று அறியப்படுபவர், ஸ்ரீ குரு தத்த அவதாரங்களின் சரித்ராம்ருதம் பற்றிய சொற்பொழிவாளர், தினசரி பூஜைகள் மற்றும் தத்த பாதுகை ருத்ராபிஷேகம் செய்பவர். இவ்வன்பர்கள் இருவரும் அத்தி மரத்தாலான சுவாமி ஸ்ரீ பாதரின் பாதுகைகளுடன் ஒக்டோபர் 13 ஆம் திகதி இலங்கை வருகிறார்கள். சனிக்கிழமை காலை 9 மணிக்கு, சாயி சரணாலயத்தில் பாதுகை பூசையும், தொடர்ந்து மகா பிரசாதமும் வழங்கும் நிகழ்வும் நடைபெறும். இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்தி தத்த குருவின் அருளாசிகளைப் பெற்றுக்கொள்ளுமாறு அன்பர்களை பணிவுடன் அழைக்கிறோம்.

# ஆசிரியர்கள் மனசாட்சியின் வழியில் பணியாற்றி மாணவர்களை நற்பிரஜைகளாக மாற்ற வேண்டும்

பணிகளில் மிக மேலானது ஆசிரியர் பணியாகும். உலகில் எத்தனை தான் தொழில்கள் இருப்பினும் அவை அனைத்துக்கும் மேலாக ஓர் உயர்ந்த இடத்தை வகிப்பது ஆசிரியர் பணியாகும். ஆசிரியர்களை கௌரவிக்கும் வகையில் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 06ஆம் திகதி இலங்கையில் உலக ஆசிரியர் தினம் கொண்டாடப்பட்டு வருகிறது.

ஒரு பிள்ளையின் மறைந்து கிடக்கும் ஆற்றல்களையும் திறமைகளையும் வெளிக்கொணர்வதற்கு ஆசிரியர் பணி வழிகாட்டுகிறது. இன்றைய உலகம் கல்விச் சுடரினால் பிரகாசிப்பதற்கு ஆசிரியர்களே காரணம். சிறந்ததொரு மாணவர் சமூகம் உருவாகுவதற்கு ஆசிரியர்கள் வழிகாட்டுகின்றனர்.

இன்றைய சிறுவர்கள்தான் நாளை எமது வீட்டுக்கும் நாட்டுக்கும் நற்பிரஜைகளாக வர இருப்பவர்கள். இதனால் ஆசிரியர்கள் தமது பணியை திருப்பணியாகக் கொண்டு ஆற்றுவது அவசியம். கல்வியிலும் நல்லொழுக்கத்திலும் மாணவர்கள் முன்னோக்கிச் செல்ல ஆசிரியர்கள் வழிகாட்ட வேண்டும் .

பெற்றோர் தங்களது பிள்ளைகள் எதிர்காலத்தில் நல்லவர்களாக வரவேண்டும் என்ற மேலான நோக்கத்துடன் அவர்களை ஆசிரியர்களிடம் ஒப்படைக்கிறார்கள். இதே நோக்கத்தை ஆசிரியர்கள் மறந்து விடலாகாது.

ஆசிரியர்கள் எப்போதும் கற்பித்தலில் திறமை கொண்டவர்களாக விளங்கவேண்டும். மாணவர்களிடத்தே கற்கும் திறமைகளையும் கற்பதற்கான ஆர்வத்தையும் ஆசிரியர்கள் ஏற்படுத்த வேண்டும். ஆசிரியர்கள் தங்களது பணியை திருப்தியாக நடத்துவதற்கான வழிமுறைகளை அறிய வேண்டும்.

ஆசிரியர்கள் மாணவர்களுக்கு கற்பிக்கும் விஷயத்தில் மிகுந்த பொறுப்புடன் நடந்துகொள்ள வேண்டும். மாணவர்களின் மனம் அறிந்து, குணம் அறிந்து கற்பிக்க வேண்டும். தாங்கள் செய்யும் பணி மகத்தானது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். தாங்கள் எப்போதும் ஆசிரியர்கள் என்ற கௌரவத்துடன் செயல்பட வேண்டும். ஆசிரியர்களிடம் நல்ல பழக்கவழக்கங்கள் காணப்பட வேண்டும், ஆசிரியர்கள் நிறைந்த அறிவுள்ளவர்களாக இருக்க வேண்டும்.

ஆசிரியர்களின் அறிவுமட்ட வளர்ச்சியிலேயே மாணவர்களின் அறிவு வளர்ச்சியும் தங்கியுள்ளது. ஆசியர்கள் எப்போதும் கற்பிப்பவர்களாக மட்டுமல்லாது கற்பவர்களாகவும் இருக்க வேண்டும். பத்திரிகைகள், புத்தகங்கள், சஞ்சிகைகள் இவற்றையெல்லாம் நிறைய வாசிக்க வேண்டும். இவற்றோடு தொலைக்காட்சி, வானொலி நிகழ்ச்சிகளையும் தொடர்ந்து அவதானிக்க வேண்டும். தாங்கள் அறிவு நிறைந்தவர்களாக இருந்தால் மட்டுமே அது மாணவர்களுக்கும் மிகுந்த பயனளிக்கக் கூடியதாக இருக்கும். அறிவுத்தேடலில் ஈடுபாடு வைத்திருக்கும் ஆசிரியர்கள் இன்று மிகவும் குறைவு என்றே சொல்ல வேண்டும்.




தாங்கள் கற்பிக்கப் போகும் பாடங்கள் தொடர்பாக தெரியாத பகுதிகள், சந்தேகமான இடங்கள் இருப்பின் அவற்றை தெரிந்தவர்களிடம் கேட்டறிந்து கற்பிக்க வேண்டும். அது மாணவர்களின் கற்றலுக்கு நல்லது. இது சிறந்த ஓர் ஆசிரியருக்கு இருக்க வேண்டிய நற்பண்பாகும்.

தங்களிடம் கற்கும் மாணவர்கள் எதிர்காலத்தில் நற்பிரஜைகளாக வரவேண்டும் என்ற உயர்ந்த நோக்கம் ஆசிரியர்களிடம் இருக்க வேண்டும். வகுப்பறையிலே மாணவர்கள் பலவித குணம் கொண்டவர்களாக இருப்பார்கள். அதனால் மாணவர்களை அறிந்தவர்களாக ஆசிரியர்கள் இருக்க வேண்டும். சில மாணவர்கள் வகுப்பறையிலே குறும்புகள் செய்யக் கூடியவர்களாக இருப்பார்கள். இதற்காக ஆசிரியர்கள் பொறுமை இழந்துவிடாமல் அவர்களுக்கு அன்பு காட்டி, ஆதரவு கொடுத்து வழிகாட்ட வேண்டும். தேவையற்ற வார்த்தைகளால் மாணவர்களை நோகடிக்கக் கூடாது. தண்டனைகள் வழங்கக் கூடாது. மனஅழுத்தங்களை ஏற்படுத்துவதும் கூடாது. ஆசிரியர்கள் மீது மாணவர்களுக்கு நம்பிக்கை ஏற்பட வேண்டும். மாணவர்களுக்கு நல்லநல்ல வழிமுறைகளை பின்பற்றி கற்பிக்க வேண்டும். இதுவெல்லாம் நல்ல ஆசிரியர்களுக்குரிய பண்பாகும்.

பெற்றார்கள் தங்களது பிள்ளைகளின் கல்வி விஷயமாக ஆசிரியர்களுடன் தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். மாணவர்களிடம் காணப்படும் குறைகள் நடத்தைகள் பற்றியெல்லாம் ஆசிரியர்கள் பெற்றார்களுக்கு அறிவிக்க வேண்டும்.

மாணவர்களை கல்விமான்களாக உருவாக்கிவிடும் ஆசிரியர்களே அன்புக்கும் வாழ்த்துக்கும் உரியவர்கள். உயர்ந்த அந்தஸ்திலே வைத்து மதிக்கக் கூடிய எமது ஆசிரியர்களில் ஒருசிலர் ஆசிரியர்பணிக்கே சேறுபூசும் மோசமான செயல்களில் ஈடுபட்டு வருவதைக் காண முடிகின்றது. சில ஆசிரியர்கள் குடிபோதையிலும் சூதாட்டத்திலும் ஈடுபட்டு வருகிறார்கள். சிலர் தங்களிடம் பாடம் படிக்க வரும் சிறுவர் சிறுமியரை பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தியுள்ளனர்.

புனிதமான ஆசிரியர் பணியை மாசுபடுத்தும் இவ்வாறானோரின் செயல்கள் குறித்து நாகரிக உலகம் வெட்கப்பட வேண்டியுள்ளது. மாணவர்களுக்கு முன்மாதிரியாக நடந்து கொள்ள வேண்டிய இவர்கள் இவ்வாறாக கீழ்த்தரமாக நடந்துகொள்வது கவலைக்குரியதாகும். ஆகையால் ஆசிரியர்கள் எப்போதும் தங்களது கௌரவத்தையும் மதிப்பையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும்.

**எம்.ஏ.அத்தாஸ்...**
மாத்தறை

# மனித வாழ்வுக்கு பொறுமையின் தேவை



மனிதனின் தன்மைகள், பண்புகள், போக்குகள், இயக்கங்கள் குறித்து இஸ்லாம் தெளிவாக எடுத்தியம்பியுள்ளது. குறிப்பாக மனிதன் அவசரக்காரனாவும் பதற்றக்காரனாகவும் மாத்திரமல்லாமல் பலவீனனாகவும் படைக்கப்பட்டிருப்பதாக அல்லாஹ்தஆலா தன் அருள்மறையாம் அல் குர்ஆனில் குறிப்பிட்டிருக்கிறான்.

'மெய்யாகவே மனிதன் பதற்றக்காரனாகவே படைக்கப்பட்டுள்ளான்' **(70:19)** என்றும் 'மனிதன் பலவீனமானவனாகவே படைக்கப்பட்டுள்ளான்' **(4:28)** என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதேநேரம் 'ஜின்களையும் மனிதர்களையும் (அவர்கள் என்னை அறிந்து) என்னை வணங்குவதற்கே தவிர (வேறெதற்காகவும்) நான் படைக்கவில்லை' **(51:56)** என்று குறிப்பிட்டுள்ள அல் குர்ஆன், 'பூமிக்கான அல்லாஹ்வின் பிரதிநிதி மனிதன்' எனவும் தெரிவித்திருக்கின்றது.

இந்த வசனங்கள் மனிதனுக்கு வழங்கும் செய்தி ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாக உள்ளது. அதுவும் ஆழ அகலமான செய்தியாக விளங்குகிறது. அதனால் அச்செய்தியை உரிய ஒழுங்கில் புரிந்து செயற்படுவது மனிதனின் பொறுப்பாகும்.

பூமிக்கான அல்லாஹ்வின் பிரதிநிதி என்பது மாபெரும் அந்தஸ்து, கௌரவம், உயரிய பதவி. இதற்கு ஈடாக உலகில் எதுவும் இல்லை. இந்த உயரிய கௌரவத்தை மனிதனைத் தவிர வேறு எந்தப் படைப்புக்கும் அல்லாஹ் வழங்கவுமில்லை.

இப்பதவி தனிக் கௌரவத்திற்காக வழங்கப்பட்ட ஒன்றுமல்ல. மாறாக அப்பதவிக்கு ஏற்ப செயற்பட்டு அதற்குரிய பொறுப்புக்களை நிறைவேற்ற வேண்டிய கடமை மனிதனுக்குரியது. அவற்றை நிறைவேற்றுவதும் மிகவும் அவசியமானது. அதன் ஊடாகத்தான் எதிர்வரும் கப்ரு, மஹ்ஷர் மற்றும் இறுதித் தீர்ப்பு நாள் வாழ்வுக்கட்டங்களை விமோசனம் மிக்கதாகவும் சுபீட்சமானதாகவும் அமைத்துக் கொள்ள முடியும்.

அதனால் இவ் உலக வாழ்வின் பெறுமதியையும் சிறப்பையும் உணர்ந்து செயற்பட வேண்டிய பொறுப்பு மனிதனுக்கு முன்பாக உள்ளது. மனிதன் பெற்றுக்கொண்டுள்ள வாழ்வானது பல கட்டங்களைக் கொண்டது. அவற்றில் இவ் உலக வாழ்வு கட்டமும் ஒன்றாகும்.

உலக வாழ்வு கட்டத்தில் மனிதன் பெற்றுக்கொண்டுள்ள வரையறுக்கப்பட்ட தெரிவுச் சுதந்திரம் உள்ளிட்ட சிறப்புக்களும் தனித்துவங்களும் இதற்கு முன்னரான ஆழமுல் அர்வாஹ், கருப்பை ஆகிய வாழ்வு கட்டங்களில் கிடைக்கப்பெறவும் இல்லை. எதிர்வரும் கப்ரு, மஹ்ஷர் மைதானம், இறுதித் தீர்ப்புநாள் வாழ்வு கட்டங்களிலும் கிடைக்கப் பெறப்போவதுமில்லை.

அதனால் இவ் உலக வாழ்வுக் கட்டத்தில் அளிக்கப்பட்டுள்ள பொறுப்பை உரிய ஒழுங்கில் நிறைவேற்றுவதில் அதிக கவனம் செலுத்த வேண்டும். அப்போது தான் எதிர்வரும் வாழ்வுக் கட்டங்களை விமோசனம் கொண்டதாகவும் சுபீட்சம் மிக்கதாகவும் அமையும். அதனை இலக்காகக் கொண்டு வாழ்வொழுங்கை அமைத்திடுவது இன்றியமையாததாகும்.

ஆனால் அவசரக்காரனாவும் பதற்றக்காரனாகவும் மாத்திரல்லாமல் பலவீனனாகவும் விளங்கும் மனிதனால் விமோசனம் மிக்கதும் சுபீட்சமானதுமான வாழ்வை இலக்காகக் கொண்டு பயணிப்பது என்பது இலகுவானதல்ல. அது பாரிய சவால் மிக்க காரியம். உலக வாழ்வுக்கட்டம் சவால்கள் நிறைந்தது. உலக கவர்ச்சிகளும் இன்பங்களும் மாயைகளும் அவனை வழி தவறச் செய்யக் கூடியன. அவனில் இயல்பாகவே காணப்படும் இச்சைகள், ஆசைகள், பலவீனம், அறியாமை, தீய எண்ணம், அவனது வழிதவறும் இயல்பு, சுயநலம், கர்வம், விரைவாகப் பலன்களை எதிர்பார்க்கும் அவசரத்தனம் என்பன அவனை வழிபிறழ துணைபுரியக்கூடியன. அவற்றுக்கு ஷைத்தானின் ஊசலாட்டங்கள், மிகைத்துவிட்ட அசத்தியம், இச்சையின் ஆதிக்கம் என்பன பாரிய பங்களிப்பை நல்கும்.

அதேநேரம் உலக வாழ்வுக்கட்டத்தில் முகம் கொடுக்கும் கஷ்டங்கள், நெருக்கடிகளின் போது உள்ளத்தில் ஏற்படும் வேதனைகள், கவலைகள், கசப்புணர்வுகள், பலவீன உணர்வு, களைப்பு, சோர்வு, நெருக்கடிகள், பாதிப்புக்கள், நிராசைகள், நம்பிக்கை இன்மை என்பனவும் கூட மனிதனை நஷ்டவாளியாக்குவதோடு கைசேதத்தையுமே அவனுக்கு தேடிக்கொடுக்கும்.

என்றாலும் இவ் உலக வாழ்வில் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்து நிலைகுலைந்து விடவோ, வாழ்வை நிராகரித்து விடவோ முடியாது.

மனித வாழ்வே அழுத்தங்களாலும் நெருக்குதல்களாலும் சூழப்பட்டுள்ளது. அந்த நெருக்குதல்களும் அழுத்தங்களும் பெரும்பாலும் மனிதனை வழிதவறச் செய்யலாம். உலகக் கவர்ச்சியின் பக்கம் கவர்ந்திழுக்கக் கூடியவையாகவும் ஆசாபாசங்களில் மதிமயங்கி மனிதன் இலக்கை மறந்து விடக்கூடியனவாகவும் உலக மாயைகளில் மூழ்கி விடக் கூடியனவாகவும் அவை உள்ளன. ஆனால் அவை அற்ப இன்பங்களே. அதனை அல் குர்ஆனே, 'இவ்வுலக வாழ்க்கை மயக்கக்கூடிய(அற்ப) இன்பத்தைத் தவிர வேறில்லை' **(3:185)** என்று குறிப்பிட்டிருக்கிறது.

இவ்வாறு சவால்கள் நிறைந்துள்ள வாழ்வுக் கட்டத்தில் அவசரக்காரனாகவும், பதற்றக்காரனாகவும் பலவீனனாகவும் விளங்கும் மனிதனால் இலக்கு நோக்கிய பயணத்தை வெற்றிகரமாக மேற்கொள்வது என்பது இலகுவான விடயமல்ல. இருப்பினும் அந்த சவால்களையும் நெருக்குதல்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு இலக்கு நோக்கிய பாதையில் வெற்றிகரமாகப் பயணிக்க வேண்டும். அதுவே அல்லாஹ்வின் விருப்பமாகும். அதற்குத் தேவையான இறைவழிகாட்டல்களை அவன் வழங்கியே இருக்கின்றான். அதுவே அவனிடம் அங்கீகரிக்கப்பட்ட வழிகாட்டலாகவும் உள்ளது. அந்த வழிகாட்டல்களின் அடிப்படையில் பயணிக்கும் போது ஈருலகிலும் நிச்சயம் வெற்றிபெற்றிடலாம்.

அதனால் ஒவ்வொருவரும் தமது இலக்கு நோக்கிய பயணத்தின் நிமித்தம் மன இச்சைகளையும் உலக ஆசைகளையும் இன்பங்களையும் நெறிப்படுத்தி பக்குவப்படுத்திக்கொள்ள வேண்டும். அதற்கு பொறுமை இன்றியமையாததாகும். பொறுமை என்பது மனித வாழ்வுக்கு மிகவும் அவசியமான வழித்துணை சாதனம்.

அதனால்தான் அல் குர்ஆன் மனித வாழ்வுக்கு பொறுமையின் தேவையையும் முக்கியத்துவத்தையும் பல இடங்களில் சுட்டிக்காட்டியுள்ளது. அந்த வகையில், 'மேலும் அவர்கள் இம்மையில் (சிரமங்களைச்) சகித்து கொண்டிருந்ததன் காரணமாக சுவர்க்கத்தையும் (அணிவதற்குப்) பட்டாடைகளையும் அவர்களுக்குக் கூலியாகக் கொடுத்தான் (என்று கூறப்படும்). **(76:12)** என்றும் 'ஆகிய இத்தகையவர்களுக்கு அவர்கள் (பல நல்ல காரியங்களைச் செய்திருப்பதுடன் அவற்றைச் செய்யும் போது ஏற்பட்ட) சிரமங்களைச் சகித்துக் கொண்டதன் காரணமாக உயர்ந்த மாளிகைகள் (மறுமையில்) கொடுக்கப்படும். 'ஸலாம்' (உண்டாவதாக) என்று போற்றி அதில் அவர்கள் வரவேற்கப்படுவார்கள். **(25:75)** என்றும் அல் குர்ஆனில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதனால் இவ் உலக வாழ்வில் எதிர்கொள்ளக்கூடிய அனைத்து சவால்களையும் வெற்றிகரமாக எதிர்கொண்டு இலக்கு நோக்கி பயணிப்பதற்காக மகிழ்ச்சியிலும் இன்பத்திலும் துன்பத்திலும் அல்லாஹ்வின் தொடர்பில் நிலைத்திருப்பதற்கும் அவனுடைய விதியை ஏற்றுக்கொள்வதற்கும் உறுதியான நம்பிக்கையுடனும் திருப்தியுடனும் பணிவுடனும் விவகாரங்கள் அனைத்தையும் அவன் பக்கம் இட்டுச் செல்லவும் பொறுமை மிகவும் அவசியமானது. அதுவே உண்மையானதும் நிரந்தரமானதுமான வெற்றியைத் தேடித்தரக்கூடியதுமாகும்.

அதனால் தான், 'நம்பிக்கையாளர்களே..... நீங்கள் பொறுமையைக் கடைபிடியுங்கள். எதிரிகளை விட நீங்கள் அதிகம் சகித்துக் கொள்ளுங்கள் **(3:200)** என்றும் 'நம்பிக்கையாளர்களே.... (நீங்கள் உங்கள் முயற்சிகளில் வெற்றி அடைவதற்காக) பொறுமையைக் கொண்டும் தொழுகையைக் கொண்டும் (அல்லாஹ்விடம்) உதவி தேடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பொறுமையாளர்களுடன் இருக்கிறான் **(2:153)** என்றும் அல்லாஹ்வே குறிப்பிட்டிருக்கின்றான்.

ஆகவே வரையறுக்கப்பட்ட உலக வாழ்க்கையை அர்த்தபூர்வமாகவும் வெற்றிகரமாகவும் அமைத்துக் கொள்வதற்கு அல்லாஹ்வின் கட்டளைகள் நபி (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு அமைய பொறுமை, சகிப்பு தன்மையைக் கைகொள்வோம். அதுவே நிரந்தர இன்பத்தையும் விமோசனத்தையும் பெற்றுக்கொள்வதற்கான வழியாகும்.

மர்லின் மரிக்கார்...

ஆலமுல் இஸ்லாம்

மர்லின் மரிக்கார் aalamulislam.tkn@lakehouse.lk

# இறுதித்தூதர் முஹம்மத் (ஸல்) அவர்களின் வழிமுறைகளை கடைப்பிடிப்பதன் முக்கியத்துவம்

நபி (ஸல்) அவர்களைப் பின்பற்றுதல் என்பது மிக முக்கிய கடமைகளில் ஒன்றாகும். ஏனெனில் நபி (ஸல்) அவர்கள் காட்டித்தந்த பிரகாரம் எமது வாழ்வை அமைத்துக்கொள்ளுமாறு அல்லாஹ் கட்டளையிட்டுள்ளான். அதனால் நபியவர்கள் மீதான எமது கடமையை அறிந்து செயல்படுவது அவசியம்.

பின்பற்றல் என்பது 'அல்லாஹ்வும், நபியவர்களும், அவரது தோழர்களும் கொண்டு வந்தவற்றை பின்பற்றுவதை குறிக்கும்' என்று இமாம் அஹ்மத் இப்னு ஹன்பல் (ரஹ்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

அல்லாஹ்வின் தூதருக்கு கட்டுப்படுவது அல்லாஹ்வுக்கு கட்டுப்படுவதாகும் என்று அல்லாஹ் குறிப்பிட்டுள்ளான். 'நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பதாக இருந்தால் என்னை பின்பற்றுங்கள். அல்லாஹ் உங்களை நேசிப்பான் அத்தோடு உங்களது பாவங்களையும் மன்னிப்பான் என்று கூறுங்கள்'

**(ஆதாரம்: ஆல இம்ரான் 31)**

நபியை வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் பின்பற்றி, அவர் பற்றிய செய்திகளை உண்மைப்படுத்தி, அவரது கட்டளைகளுக்கு கட்டுப்பட்டு அவரது அழைப்புகளுக்கு பதிலளித்து மிக விருப்பத்தோடு அவரை மேலாக கருதினால்தான் அல்லாஹ்வின் நேசத்தை பெற்றுக்கொள்ள முடியும்' என்று இமாம் இப்னுல் கையிம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

'யார் அல்லாஹ்வின் தூதருக்கு கட்டுப்பட்டாரோ அவர் அல்லாஹ்வுக்கு கட்டுப்பட்டவராவார். யார் அல்லாஹ்வின் தூதருக்கு கட்டுப்படவில்லையோ (அதற்காக நீர் வருந்த வேண்டியதில்லை) உம்மை நாம் அவர்களை கண்காணிப்பவராக அனுப்பவில்லை

**(ஆதாரம்: நிஸா 180)**

ஒருவர் இறைநேசத்தை பெற வேண்டுமானால் நபியை பின்பற்ற வேண்டும் என்பது இறை வழிகாட்டலாகும். 'அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுங்கள். நீங்கள் அன்பு காட்டப்படுவீர்கள்' **(ஆதாரம் ஆல இம்ரான் 132)**

அல்லாஹ்வின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் காட்டித்தந்த முறைப்படி வணக்க வழிபாடுகளையும் நற்செயல்களையும் செய்யாதபோது அவை அல்லாஹ்விடம் அங்கீகாரம் பெறுவதில்லை. வணக்க வழிபாடுகள், செயல்பாடுகளின்போது அல்லாஹ்வின் திருப்தியை நாடி நிற்பதும் நபி(ஸல்) அவர்கள் காட்டித்தந்த வழிமுறையை பின்பற்றுவதும் அவை அல்லாஹ்விடத்தில் அங்கீகரிக்கப்படுவதற்கான நிபந்தனைகளாகும்.

நபி (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவது ஈமானின் தூண்களில் ஒன்றாகும். நபிமார்கள் உலகிற்கு அனுப்பப்பட்டதன் நோக்கமே அவர்களுக்கு கட்டுப்படுவது தான். நபிமார்கள் சொன்ன தீர்ப்பை உள்ளத்தில் எவ்வித சங்கடங்களுமின்றி பின்பற்ற வேண்டும்.

'மக்கள் கீழ்ப்படிந்து நடக்க வேண்டும் என்பதற்காகவே நாம் தூதர்களை அனுப்பினோம்', 'அவர்கள் தங்களிடையே எழுந்த சர்ச்சைகளில் உம்மை (நபியை) நீதிபதியாக ஏற்று பின்னர் நீர் (நபி) தீர்ப்பு செய்தது பற்றி எத்தகைய அதிருப்தியையும் தம் உள்ளங்களில் ஏற்படுத்திக்கொள்ளாமல் முற்றாக தீர்ப்பை ஏற்றுக்கொள்ளும் வரையில் அவர்கள் நம்பிக்கை கொண்டவர்கள் ஆகமாட்டார்கள்' என்றும் **(ஆதாரம்: தவ்பா 64, 65)** அல் குர்ஆன் குறிப்பிட்டுள்ளது.



அல்லாஹ்வின் தூதருக்கு கட்டுப்பட்டு நடப்பதன் மூலமே சுவனத்துக்கான பாதையான நேர்வழியில் பயணிக்கலாம். எனவே ஒருவன் சரியான பாதையில் பயணிக்க வேண்டுமானால் நபியவர்கள் சொன்ன பிரகாரம் அவருக்கு பூரணமாக கட்டுப்படுவதன் மூலம் மாத்திரமே அது சாத்தியமாகும். 'அல்லாஹ்வுக்கு நீங்கள் கட்டுப்படுங்கள். தூதருக்கும் நீங்கள் கட்டுப்படுங்கள்.... நீங்கள் அவருக்கு கட்டுப்பட்டால் நேர்வழி பெறுவீர்கள்

**(ஆதாரம்: நூர் 54)**

நபி (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படுவது உயர்ந்த அந்தஸ்துகளை பெறுவதற்கான ஒரு வழியாகும். 'யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்படுகின்றாரோ அவர்கள் இறையருளைப் பெற்ற நபிமார்கள், சத்தியவான்கள், ஷுஹதாக்கள், ஸாலிஹீன்கள் ஆகியோர்களுடன் இருப்பார்கள். இவர்கள்தான் சிறந்த தோழர்கள். இந்த அருட்கொடை அல்லாஹ்விடமிருந்து கிடைத்ததாகும். **(ஆதாரம்: நிஸா 69, 70)**

ஒரு முஸ்லிமை பொருத்தவரையில் சுவனத்தை அடைவதுதான் அவனது வாழ்வில் அடையும் மகத்தான வெற்றியாகும். நபியை பின்பற்றுவதன் மூலம் சுவனம் என்ற மகத்தான வெற்றியை அடைந்துகொள்ள முடியும். 'யார் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடக்கிறார்களோ அவர்களை அல்லாஹ் சுவனத்தில் நுழையச் செய்வான். அதன்கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். அவர்கள் அங்கு நிலையாக தங்கியிருப்பார்கள். இதுவே மகத்தான வெற்றியாகும். (ஆதாரம்: நிஸா 13)

'எவர்கள் அல்லாஹ்வுக்கும் அவனது தூதருக்கும் கட்டுப்பட்டு நடந்துகொள்வதோடு அல்லாஹ்வுக்கு அஞ்சி அவனுக்கு மாறு செய்வதைத் தவிர்ந்து நடந்து கொள்கிறார்களோ அவர்கள்தான் வெற்றியாளர்கள்'

**(ஆதாரம்: நூர் 52)**

இவ்வாறு பல ஹதீஸ்களும் நபியவர்களுக்கு கட்டுப்பட வேண்டும் என்பதை எடுத்தியம்பிக் கொண்டிருக்கிறது. 'மறுத்தவர்கள் தவிர எனது சமூகத்திலுள்ள அனைவரும் சுவனம் நுழைவார்கள்' என்று நபியவர்கள் கூறியபோது, மறுத்தவர்கள் என்பது யாரை குறிக்கும் என்று ஸஹாபாக்கள் வினாத் தொடுத்தார்கள். அதற்கவர்கள் 'யார் எனக்கு கட்டுப்பட்டாரோ அவர் சுவனம் நுழைவார். யார் எனக்கு மாறு செய்கிறாரோ அவர்தான் மாறு செய்தவர் ஆவார்' என்று குறிப்பிட்டார்கள். **(ஆதாரம்: புஹாரி)**

அதனால் நபி (ஸல்) அவர்களை பின்பற்றும் விடயத்தில் ஸஹாபாக்கள் மிக கரிசனையோடு நடந்துகொண்டார்கள். அனைத்து விடயங்களிலும் நபியை முன்மாதிரியாகக் கொண்டார்கள். அதேபோன்று நாமும் நபி(ஸல்) அவர்களைப் பூரணமாக பின்பற்றி இறையருளைப் பெற்றுக்கொள்வோம்.

அஷ் ஷெய்க் யூ.கே றமீஸ்...
எம்.ஏ. (சமூகவியல்)



# பிறர் குறைகளை தேடாதிருப்போம்!

இஸ்லாம் மனித சமுதாயத்தை நேர்வழியில் இட்டுச் செல்வதுடன் மனித வாழ்வின் கண்ணியத்தையும், கௌரவத்தையும் காத்திடும் உயர்ந்த மார்க்கமாகவும் விளங்குகிறது. ஒவ்வொரு முஸ்லிமினதும் உரிமைகளையும், கௌரவத்தையும், கண்ணியத்தையும் பாதுகாப்பதற்கான வழிமுறைகளை அல் குர்ஆனும் நபியின் வழிமுறைகளும் எமக்குக் காட்டி நிற்கின்றன.

முஸ்லிமின் நற்பண்புகளில் ஒன்று, தன் சகோதர முஸ்லிமுடைய கண்ணியத்தைப் பாதுகாப்பதாகும். பிறர் குறைகளை மறைப்பதும் அவரது கடமையே. திருமறையும், நபி மொழியும் முஸ்லிம்களின் குற்றம் குறைகளைத் துருவி ஆராய்ந்து அவர்களது கௌரவத்துக்கு பங்கம் விளைவிக்கும் பண்புடையோரை வன்மையாகக் கண்டித்திருக்கிறது.

'எவர்கள் (இதற்குப் பின்னரும்) விசுவாசிகளுக்கிடையில் இத்தகைய மானக்கேடான வார்த்தைகளைப் பரப்ப விரும்புகின்றார்களோ, அவர்களுக்கு நிச்சயமாக இம்மையிலும், மறுமையிலும் மிக்க துன்புறுத்தும் வேதனையுண்டு'. **(24:19)**

என்றும்

'எவருடைய குற்றத்தையும் துருவித்துருவி விசாரித்துக் கொண்டிருக்க வேண்டாம்'. *(49:12)*

என்றும் அல் குர்ஆன் வலியுறுத்தியுள்ளது.

இந்த இறை வசனங்கள் இஸ்லாமிய சமூகத்தில் வாழ்பவர்கள் இழிவான, கீழ்த்தரமான செயல்களில் ஈடுபடுவதிலிருந்து விலகியிருப்பதன் அவசியத்தை எடுத்தியம்புகின்றன. குறிப்பாக பிறரது அந்தரங்கங்களைத் தேடாமலும், பிறர் குறைகளைப் பகிரங்கப்படுத்தாமலும் வாழ வேண்டும் என்பதே இங்கு எடுத்துரைக்கப்படுகிறது. இதே கருத்தை நபி (ஸல்) அவர்களின் வாக்கும் வலியுறுத்துகிறது.

'ஓர் அடியானின் குறையை மற்றொரு அடியான் மறைத்தால் அவனது குறையை அல்லாஹ் மறுமை நாளில் மறைத்து விடுவான்.

**(ஆதாரம் ஸஹீஹ் முஸ்லிம்)**

மற்றொரு சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்கள், 'என்னுடைய தோழர்களில் யாரும் யாரைப் பற்றியும் எந்தக் குறையையும் என்னிடம் கொண்டுவந்து விட வேண்டாம். என்னுடைய உள்ளம் உங்கள் அனைவரைப் பற்றியும் நல்லெண்ணம் கொண்ட நிலையில் நான் உங்களிடம் வருவதையே விரும்புகிறேன்' என்றும் குறிப்பிட்டார்கள்.

**(நபிமொழி)**

அப்படியிருந்தும் எவர் மீதும் குறைகூறி பிறரது உள்ளத்தை இலகுவாக வேதனைப்படுத்தி விடுகின்றோம். இது இஸ்லாம் முற்றிலும் வெறுக்கும் செயலாகும்.

ஒரு தடவை ஸஹாபாக்கள் நபி (ஸல்) அவர்களிடம் 'யாரசூலல்லாஹ்' எந்த முஸ்லிமுடைய ஸலாம் சிறந்தது? எனக் கேட்க, 'எந்த முஸ்லிமுடைய நாவை விட்டும், கரத்தை விட்டும் பிற முஸ்லிம்கள் பாதுகாப்புப் பெற்றுள்ளனரோ அவருடைய ஸலாம் தான் சிறந்தது' என்று கூறியதோடு. 'நாவால் ஈமான் கொண்டு இதயத்தில் ஈமான் நுழையாதவர்களே! விசுவாசிகளை நோவினை செய்யாதீர்கள். பிறர் குறைகளைத் துருவி ஆராயாதீர்கள்.

எவன் தனது சகோதர முஸ்லிமின் குறையை துருவி ஆராய்கிறானோ அவனது கௌரவத்தை அல்லாஹ் அழித்து விடுவான். எவன் தனது சகோதரனின் குறையை ஆராய்கிறானோ அவன் தனது வீட்டுக்கு மத்தியில் இருந்தபோதும் அல்லாஹ் அவனைக் கேவலப்படுத்துவான் எனவும் எச்சரித்தார்கள்.

**(நபிமொழி)**

ஆகவே எவர் மீதும் குறைகூறி அவர்களை நோவினைப்படுத்துவதில் நின்றும் நாமும் தவிர்ந்து கொள்வோம். இஸ்லாம் வெறுத்துள்ள அந்த இழி குணத்திலிருந்து அல்லாஹ் எம்மை பாதுகாத்திடட்டும்.

யாழ் அஸீம்...

# பொருளாதார சவால்களுக்கு தீர்வு நாட்டை விட்டு வெளியேறுவதா?

## 2024 பொருளாதாரத்தை மீள ஆரம்பிப்பதற்கான வருடம்

நாட்டை, பொருளாதார சவால்களிலிருந்து மீட்டெடுத்து போட்டித் தன்மைமிக்க பொருளாதாரத்தை நோக்கி நகர்த்துவதற்காக மனித வளத்தை ஒன்றுதிரட்ட வேண்டுமெனவும், சவால்களுக்கு மத்தியில் நாட்டை விட்டுச் செல்வதா? இல்லையா? என்பதை அறிவார்ந்த சமூகம் சிந்திக்க வேண்டியது அவசியமெனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அடுத்த ஐந்து வருடங்களில் உலகம் பெரும் மாற்றங்களை சந்திக்கப் போவதாக கண்காணிப்புக்களில் தெரியவந்துள்ளது. அபிவிருத்தி அடைந்த நாடுகளும் பொருளாதார சவால்களை எதிர்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்படலாமெனவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (04) நடைபெற்ற சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது, சேர். ஜோன் கொத்தலாவல பாதுகாப்பு பல்கலைக்கழக்கதினால் 246 பேருக்கு பட்டமளிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் மேலும் கருத்து தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க,

"முப்படைகளினதும் ஆட்சேர்ப்பு பிரிவு அல்லது சிவில் பிரிவைப் பிரதிநித்துவப்படுத்தும் அதிகாரிகள் என்ற வகையில் பட்டத்தை பெற்றுக்கொண்டு நாட்டிலிருந்து இந்தச் சந்தர்ப்பத்தை கடந்து செல்வதா? அல்லது நாட்டை விட்டு வெளியேறுவதா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

நாட்டின் பொருளதார சவால்களை வெற்றிகொள்வதற்கு நாட்டுக்கு அறிவார்ந்த மனித வளத்தின் அவசியம் தேவை. இதனால் உரிய தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

கடந்த காலங்களில் ஒரு தேசமாக பல்வேறு சவால்களுக்கும் நிலையற்ற தன்மைகளுக்கும் முகம்கொடுத்தோம். அதன் விளைவாக தங்களது இலக்குகளை அடைய பலர் வெளிநாடுகளுக்குச் செல்லும் எண்ணத்துடன் இருக்கின்றனர். எவ்வாறாயினும் இலங்கை, இலகுவானதாக இல்லாவிட்டாலும் நிலையான ஒரு பொருளாதார கொள்கையை தற்போது பின்பற்றுகிறது. அதனால், பணவீக்கத்தை குறைத்தவுடன் வருமான வழிமுறைகளை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. 2024, எமது நாட்டின் பொருளார வளர்ச்சியை மீள ஆரம்பிப்பதற்கான ஆண்டாகும். நாடு பொருளாதார சவால்களை எதிர்கொண்ட சகல தருணங்களிலும் நாட்டின் வளர்ச்சிக்கு பட்டதாரிகள் சமூகம் தங்களது பணியை சிறப்பாக செய்துள்ளனர்.

அடுத்த 10 வருடங்களுக்குள் பல்வேறு பொருளாதார மாற்றங்களை உலகம் சந்திக்கப் போவதாக கூறப்படுகிறது. கனடா மற்றும் ஐரோப்பா போன்ற அபிவிருத்தி அடைந்த நாடுகளும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றன. எதிர்காலம் தொடர்பில் உங்கள் அவதானம் செலுத்தும் போது மேற்படி சவால்களைக் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியமாகும்.



நீங்கள் உள்நாட்டில் தொழில் செய்து நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்யும் போது, சிறந்த பொருளாதார நிலையை நாட்டிற்குள் உருவாக்க முடியும்.

நீங்கள் அந்த பொறுப்புக்களை ஏற்றுக் கொண்டு அபிவிருத்தியின் பங்குதாரர்கள் ஆவதா? இல்லையா? என்பதை தீர்மானிக்க வேண்டும்.

தேவையேற்படுமாயின் இந்த பட்டத்துடன் வெளிநாடுகளுக்குச் செல்லும் இயலுமையும் உங்களுக்கு உள்ளது. எவ்வாறாயினும் இலங்கை எதிர்கொண்டுள்ள பொருளாதார நெருக்கடிகளிலிருந்து மீண்டு, போட்டித் தன்மை மிக்க பொருளாதாரத்தை நோக்கி நாட்டை நகர்த்த வேண்டும். அதற்காக நாட்டின் மனித வளத்தையும் ஒன்றுதிரட்ட வேண்டும்.

இலங்கையில் 450இற்கும் மேற்பட்ட தொழிற்பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவற்றை பல்கலைக்கழகங்கள் அல்லது கல்வியற் கல்லூரிகளாக மாற்ற வேண்டும். அதனால் தொழில்வாண்மை மிக்க சமூகத்தை கட்டியெழுப்ப முடியும். தொழில் திறன் கொண்ட பிரஜைகளுடன் இலங்கையின் கதவுகளை உலகிற்கு திறக்கும் வாய்ப்பு உள்ளது.

அதேபோல் செயற்கை நுண்ணறிவு உள்ளிட்ட தொழினுட்ப தெரிவுடன் கூடிய சமூகத்தை கட்டியெழுப்புவது தொடர்பில் சிந்திக்க வேண்டும்.

இராணுவத்தினரும் சிவில் சமூகமும் ஏற்றுக்கொள்ளக்கூடிய பொதுவான கட்டமைப்பாக பல்கலைக்கழகங்களை மாற்றியமைக்க வேண்டியது அவசியமாகும்." என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சுட்டிக்காட்டினார்.

### 'ஸ்கை' டைவிங் செய்து...

வந்ததாகவும் கூறியுள்ளார். அதிகபட்ச உயரத்திலிருந்து ஸ்கை டைவிங் செய்து சாதனை படைக்க வேண்டும் என்பது தனது நீண்ட நாள் கனவென, டொரோத்தி ஹாஃப்னர் தெரிவித்துள்ளார். கடந்த 2022 மே மாதம் சுவீடனைச் சேர்ந்த 103 வயது லினியா இங்கேகார்ட் லாசன் என்பவர் ஸ்கை டைவிங் செய்து, உலகின் மிகவும் வயதான ஸ்கை டைவர் என்று கின்னஸ் உலக சாதனை புத்தகத்தில் இடம்பெற்றிருந்தார். இதனை முறியடிக்க விரும்பிய டொரோத்தி, சிகாகோவில் சுமார் 13 ஆயிரத்து 500 அடி உயரத்திலிருந்து ஸ்கை டைவிங் செய்துள்ளார். இதன் மூலமாக மிக அதிக வயதில் ஸ்கை டைவிங் செய்தவர் என்ற சாதனையை இவர் படைத்துள்ளார்.

### வீதி அபிவிருத்திக்கு உலக வங்கி...

இக்கலந்துரையாடலில் உலக வங்கியின் கடன் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படவுள்ள வீதி வேலைகளின் முன்னேற்றங்கள் பற்றி ஆராயப்பட்டது. குறிப்பாக மட்டக்களப்பு மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட 90.98 கிலோமீட்டர் நீளமான வீதி வேலைகளின் முன்னேற்றம் பற்றி தெளிவுபடுத்தப்பட்டது. திட்டத்தின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி DUNG ANH HOANG இது குறித்து அமைச்சருக்கு தெளிவுபடுத்தினார்.

மேற்படி வீதி வேலைகளுக்கான கேள்வி நடைமுறைகள் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தெரிவித்த வதிவிட பிரதிநிதி DUNG ANH HOANG மிக விரைவில் வீதி வேலைகளை ஆரம்பிப்பதற்க்கான துரித நடவடிக்கை எடுக்கப்படுவதாக கூறினார்.

### தொடர் மழையால் சிறுவர்கள் ...

சிறுவர்களின் உடல் பருமன் மேலும் அதிகரித்து வருகின்றமையும் கண்டறியப்பட்டுள்ளது. எனவே, வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் வசிப்பவர்கள் சுத்தமான நீர் மற்றும் உணவை எடுத்துக்கொள்வது அவசியம். இதன்மூலம் வாந்தி, வயிற்றுப்போக்கு உள்ளிட்ட பல்வேறு பிரச்சினைகள் ஏற்படுவதைத் தவிர்த்துக்கொள்ள முடியுமென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### KKSநாகபட்டிணம் பயணிகள் ...

மத்திய அரசு வழங்கிய 03 கோடி ரூபா நிதியில், நாகப்பட்டினம் துறைமுகத்தை ஆழப்படுத்தி நவீனப்படுத்தும் முயற்சியில் தமிழ்நாடு அரசு இறங்கியது. இதை தொடர்ந்து நாகப்பட்டினம் துறைமுகத்தில் குடியுரிமை பெறுவது, மருத்துவ பரிசோதனை செய்வது, பயணிகள் கொண்டு வரும் உடமைகளை பாதுகாப்பாக வைப்பது மற்றும் ஆய்வு செய்வதெற்கென தனித்தனியாக அறைகள் கட்டப்பட்டுள்ளன. பயணிகள் கப்பல் போக்குவரத்து ஆரம்பிக்கப்பட்டதும் நாகப்பட்டினம் துறைமுகத்திலிருந்து 02 கப்பல்கள் இலங்கைக்கு சென்று வரும். இதில் ஒரு கப்பல், நாகப்பட்டினத்திலிருந்து காலை 10 மணிக்கு காங்கேசன் துறைமுகம் நோக்கி செல்லும். எதிர்த் திசையில் இலங்கையிலிருந்து மாலை 05 மணிக்கு நாகப்பட்டினம் நோக்கி கப்பல் புறப்படும்.

### நாட்டின் பல பாகங்களிலும்...

இடியுடன் கூடிய மழையோ பெய்யும் சாத்தியம் காணப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில், அப் பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள். புத்தளத்திலிருந்து கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடாக பொத்துவில் வரையான கரையோரத்திற்கு அப்பாற்பட்ட கடற்பரப்புகளில், அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

நாட்டைச் சூழவுள்ள கடற்பரப்புகளில் காற்றானது தென்மேற்கு திசையிலிருந்து வீசக்கூடுவதுடன் காற்றின் வேகமானது மணித்தியாலத்துக்கு 3040 கிலோ மீற்றர் வரை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

### தரம் 5 புலமைப்பரிசில்...

தாங்கியதாக இன்றைய தினகரன் வெளிவந்துள்ளது. தரம்_5 புலமைப்பரிசில் பரீட்சை எதிர்வரும் 15 ஆம் திகதி நடைபெறவிருப்பதை முன்னிட்டு, மாணவர்களின் தயார்படுத்தலுக்கு உதவும் வகையில் பகுதி_1, பகுதி_2 வினாத்தாள்கள் ஒரேநாளில் இன்று வெளியாகியுள்ளது.

### 01 kg கோழி இறைச்சி ...

உற்பத்தியாளர்களும் மக்களுக்கு சலுகைகளை வழங்க வேண்டுமென்று கூறினர்.

தேவைப்பட்டால் தொடர்ந்தும் முட்டைகளை இறக்குமதி செய்ய வேண்டுமெனவும் வர்த்தக அமைச்சர் நளீன் பெர்னாண்டோ மேலும் குறிப்பிட்டார்.

### வட்டி வீதத்தை 10 வீதத்தால்...

நிர்ணயிக்கப்பட்டிருந்தது. இதனையடுத்தே, துணைநில் கடன் வசதி வீதத்தை இலங்கை மத்திய வங்கி 11 சதவீதமாக குறைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

### விமான எரிபொருள்... (03ஆம் பக்கத் தொடர்)

விமான நிலையங்களும் உரித்தாகியது. உலகில் பல்வேறு நாடுகளிலும் இவ்வாறான செயற்பாடுகளே இடம்பெறுகின்றன. அந்த வகையில் இந்தியாவில் டாட்டா நிறுவனத்திற்கும் அதானி நிறுவனத்திற்கும் விமான நிலையங்களிலும் பங்குகள் உள்ளன. எமிரேட் நிறுவனம் ஸ்ரீலங்கன் விமான சேவை நிறுவனத்தோடு மாத்திரம் முதலீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்ளும் என்று நாம் நினைத்தால் அது தவறு. நாம் யதார்த்தத்தை உணர வேண்டும்.

அந்த வகையில் நாம் ஸ்ரீலங்கன் விமான சேவையை பலமானதாக கட்டியெழுப்புவதா அல்லது வீழ்ச்சியுறச் செய்வதா என்பது தொடர்பில் நாமே சிந்திக்க வேண்டும்.

கடந்த காலங்களில் விமானங்களுக்கான எரிபொருள் தொடர்பில் பாரிய அளவில் பேசப்பட்டது.

ஸ்ரீலங்கன் விமானங்கள் கூட இந்தியாவின் சென்னை விமான நிலையத்திற்கு சென்றே எரிபொருளை பெற்றுக்கொள்ள நேர்ந்தது. இதற்கு காரணம் இங்கு எரிபொருள் இருக்கவில்லை. அவ்வாறு இங்கு காணப்பட்ட எரிபொருளும் அதிக விலைக்கே விற்கப்பட்டன என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### ஸ்ரீ ஜயவர்தனபுர... (03ஆம் பக்கத் தொடர்)

1,170 பேரும் மருத்துவ விஞ்ஞான பீடத்தைச் சேர்ந்த 231 பேரும் முதுகலைப் பீடத்தைச் சேர்ந்த 600 பேரும் தொழினுட்ப பீடத்தைச் சேர்ந்த 279 பேரும் பொறியியல் பீடத்தைச் சேர்ந்த 108 பேருமாக மொத்தம் 3,962 பேருக்கு பட்டமளிப்பு விழா நடைபெறுவதாக, ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக நிர்வாகத்தினர் தெரிவித்தனர்.

### சீதா, யானை... (03ஆம் பக்கத் தொடர்)

படைத்துள்ளது என்ற செய்திகளை விட இந்த இரண்டு நாட்களின் அறிக்கை தொடர்பில் அதிக கவனம் செலுத்தப்பட வேண்டும்.

அதன்படி அந்த எண்ணிக்கை 420 ஐ தாண்டியுள்ளது. அதைவிட மிகவும் பாரதூரமான செய்தி என்னவெனில் 2023 செப்டம்பர் 30 வரை இவ்வெண்ணிக்கை 400 தாண்டியமையாகும்.

### உப ரயில் கட்டுப்பாட்டாளர்கள்...

ரயில் கட்டுப்பாட்டாளர்களும் உடனடியாக தமக்குரிய பணியிடங்களுக்கு சமுகமளிக்க வேண்டுமென ரயில்வே பொது முகாமையாளரினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

உரிய பணியிடங்களுக்கு சேவைக்கு சமுகமளிக்க முடியாதோர், அருகிலுள்ள ரயில் நிலையங்களுக்கு செல்ல வேண்டுமென ரயில்வே பொதுமுகாமையாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது. ரயில்வே பாதுகாப்பு அதிகாரியொருவரால் உப, ரயில் கட்டுப்பாட்டாளர் ஒருவர் தாக்கப்பட்டதாலேயே, ரயில்வே உப கட்டுப்பாட்டாளர்கள் திடீர் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதன் காரணமாக நேற்று முன்தினம் (04) பல ரயில் சேவைகள் இரத்து செய்யப்பட்டன. இதனால், பயணிகள் பெரும் சிக்கலை எதிர்நோக்கினர்.

### மாத்தறையில் பாரியளவில்...

பட்சத்தில் மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கான முன்னாயத்தங்களை மேற்கொள்ளுமாறும் ஜனாதிபதி சம்பந்தப்பட்ட துறையினர்களுக்கு அறிவித்துள்ளார். வெள்ளம், பலத்த காற்று, மண் மேடுகள் இடிந்து விழுதல், கடும் மழை, பாறைகள் சரிதல் மற்றும் மரங்கள் முறிந்து வீழ்தல் காரணமாக மாத்தறை மாவட்டத்தின் 16 பிரதேச செயலகப் பிரிவுகளில் இதுவரை 2,350 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 9,448 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். மாலிம்பட, அகுரெஸ்ஸ, கம்புருபிட்டிய, திஹகொட ஆகிய பிரதேசங்களில் நிறுவப்பட்டுள்ள உணவு தயார்படுத்தல் நிலையங்களில், இவர்களுக்காக சமைத்த உணவு வழங்கப்படுகிறது. 6,967 குடும்பங்களைச் சேந்த 25,553 பேர் வெள்ளத்தில் சிக்கியுள்ளதோடு அவர்களுக்கு இராணுவம் சமைத்த உணவை வழங்கி வருகிறது. மாத்தறை மாவட்டத்தில் அவசர அனர்த்த நிலைமைகள் தொடர்பிலான தகவல்களை மேஜர் ஜெனரல் ஜனக ரணசிங்க (0766907042) கேர்ணல் ரொஷான் கண்ணங்கர (0766907146) ஆகியோருக்கு தெரியப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. அதேவேளை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாத்தறை மாவட்டத்தில் அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணங்களை வழங்குவது தொடர்பிலான அவசர சந்திப்பொன்று மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேக்கரவின் தலைமையில் மாத்தறை மாவட்டச் செயலகத்தில் (04) நடைபெற்றது.

### சுற்றுலாத்துறையை வீழ்த்த...

மேற்பார்வைக் குழு, அதன் தலைவர் பாராளுமன்ற நாலக்க பண்டார கோட்டேகொட தலைமையில் (04) பாராளுமன்றத்தில் கூடிய போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

பல்வேறு சவால்களை தாண்டி, பொருளாதார நெருக்கடிக்கு மத்தியிலும் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகின்றனர். இக்காலப்பகுதியில் விமானங்கள் தாமதமடைவது சிக்கலுக்குரியதெனவும் இந்தக் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

இது தொடர்பில் இலங்கை சிவில் விமான சேவை அதிகார சபையின் அதிகாரிகள் குறிப்பிடுகையில், ஸ்ரீ லங்கன் விமான நிறுவனத்தில் பல தொழிற்சங்கங்கள் உள்ளன. பல்வேறு தொழிற்சங்கங்கள் பல்வேறு கோரிக்கைகளை காரணமாக கொண்டு பணிகளை உரிய காலத்தில் மேற்கொள்வதில்லை. இதனாலே, இந்நிலைமை ஏற்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தக் கலந்துரையாடலில் விசேடமாக விமானங்கள் தாமதமடைதல் மற்றும் எதிர்பாராத வகையில் விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்படுவது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டது.

இதற்கமைய, தற்போதுள்ள பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சகல தரப்பினரும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என துறைசார் மேற்பார்வைக் குழுவின் தலைவர் நாலக்க பண்டார கோட்டேகொட சுட்டிக்காட்டினார்.

### ஆசிய போட்டியில்...

ஜனாதிபதி நேற்று (05) காலை மாணவியை தொலைபேசியில் தொடர்பு கொண்டு, அவரது திறமைக்குப் பாராட்டுக்களைத் தெரிவித்தார். சர்வதேச மட்டத்தில் இலங்கைக்காக அவர் பெற்றுக்கொடுத்த தனித்துவமான வெற்றியினால், நாடு மிகவும் பெருமையடைவதாக தெரிவித்த ஜனாதிபதி, அவரது எதிர்கால விளையாட்டு நடவடிக்கைகளுக்கு தனது ஆசீர்வாதத்தையும் தெரிவித்தார். மேலும், மாணவி தருஷி கருணாரத்ன நாட்டுக்கு வந்ததன் பின்னர், அவரைச் சந்திக்க எதிர்பார்ப்பதாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்தார்.

### மலையக மக்களுக்காக...

அங்கீகாரத்தை பெறுவதற்கான ஒரு நிகழ்வாகவே நடத்த திட்டமிட்டுள்ளதாகவும் அமைச்சர் கூறினார்.

மலையக மக்கள் இலங்கைக்கு வருகை தந்து 200 வருடங்கள் கடந்துள்ளது.இதையடுத்து, அம்மக்கள் நாட்டுக்கு ஆற்றிய சேவையை பாராட்டியும், அவர்களை கௌரவிக்கும் வகையிலும் 'நாம் 200' நிகழ்வின் அறிமுகவிழாவும், சின்னம் வெளியீடும் நேற்று (05) நடைபெற்றது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமானின் ஏற்பாட்டில், பிரதமர் தினேஷ் குணவர்த்தன தலைமையில் இந்நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு கூறினார். அமைச்சர் மேலும் கூறியவை வருமாறு, "நவம்பர் 02 ஆம் திகதிக்கு முன்னதாக காணி உரிமை தொடர்பிலும் சாதகமான பதில் கிடைக்குமென நம்புகிறேன். மலையக பெருந்தோட்ட மக்களுக்கு காணி உரிமை வழங்குவது தொடர்பான அமைச்சரவைப் பத்திரம் தற்போது பெருந்தோட்ட அமைச்சின் கண்காணிப்புக்கு சென்றுள்ளது. அதன்பின்னர் காணி இது, அமைச்சுக்கு செல்லும், கடைசியாக எனது அமைச்சுக்கு வந்த பின்னர், அமைச்சரவையில் முன்வைக்கப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும். மலையக பெருந்தோட்ட பகுதிகளில் 02 இலட்சத்து 31 ஆயிரம் குடும்பங்களுக்கு வீட்டு பிரச்சினை உள்ளன. இதில் 66 ஆயிரம் குடும்பங்கள் அரச வீடு, இந்திய அரசின் வீடு அல்லது சுயமாக வீடுகளை அமைத்துக் கொண்டுள்ளன. எனவே, மீதமுள்ள சுமார் ஒரு இலட்சத்து 76 ஆயிரம் குடும்பங்களுக்கு வீடுகள் அவசியமாகின்றன. அக்குடும்பங்களுக்கு காணியை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுத்து வருகின்றோம். 'சௌமியபூமி' எனும் திட்டத்தின் கீழ் காணி சீர்திருத்த ஆணைக்குழு ஊடாக பத்திரம் வழங்க திட்டமிட்டுள்ளோம்.

### பாடசாலை விடுமுறை...

இம்முறை பாடசாலை தவணை விடுமுறையை டிசம்பர் 22 முதல் வழங்குவதற்கு தீர்மானித்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்றத்தில் நேற்று கல்வி பொது தராதர உயர்தரப் பரீட்சை தொடர்பில் விசேட கூற்றொன்றை முன்வைத்து உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் சபையில் மேலும் தெரிவித்த அமைச்சர், உயர்தரப் பரீட்சைக்கான திகதி தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது. ஜனவரி 04 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை இப்பரீட்சை நடைபெறவுள்ளது. பரீட்சைக்கு விண்ணப்பிப்பதானால் அவர்களுக்கு 03 தினங்கள் மேலதிகமாக வழங்கப்பட்டுள்ளது. பரீட்சை தொடர்பான கால அட்டவணை அடுத்த வாரமாளவில் வெளியிடப்படும்.

அதேவேளை, பாடசாலை விடுமுறை இம்முறை டிசம்பர் 22ஆம் திகதியளவில் வழங்கப்படலாம். ஆரம்ப பிரிவுகள் ஜனவரி 02ஆம் திகதி ஆரம்பிக்கப்படுவதுடன் பரீட்சை முடிவடைந்த பின்னர் ஏனைய பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படலாம். இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

### 2024 நிதி ஒதுக்கீட்டு சட்ட மூலம்...

அமைச்சு ஆகியவற்றுக்காக மொத்தமாக 56,445 கோடியே 85,00,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடுகளில் ஜனாதிபதிக்கான செலவினம் மற்றும் அவரின் கீழ் வரும் அமைச்சுக்களுக்கான ஒதுக்கீடுகளுக்கென மொத்தமாக 1,23,711 கோடியே 61,15,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அதேவேளை பிரதமரின் செலவினம் மற்றும் அவரின் கீழுள்ள அமைச்சுக்களுக்கென 88,726 கோடியே 50,00,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.இதில் ஜனாதிபதிக்கான செலவினமாக 660 கோடியே 11,50,000 ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் பிரதமரின் செலவினத்துக்காக 115 கோடியே 50,00,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இதேபோன்று பொதுநிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சுக்கு 88,611 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் இதில் வடக்கு மாகாணத்துக்கு 451 கோடியே 50,00,000 ரூபாவும் கிழக்கு மாகாணத்துக்கு 522 கோடியே 50,00,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்துக்கான 03 இலட்சத்து 86,084 கோடியே 67,88,000 ரூபா ஒதுக்கீட்டில் அமைச்சுக்களுக்கான நிதி ஒதுக்கீடுகளாக புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சுக்காக 1,060 கோடி ரூபாவும் இதில் பௌத்தமதத்துக்காக 166 கோடி ரூபாவும் இந்து மதத்துக்காக 28 கோடியே 30 இலட்சம் ரூபாவும் கிறிஸ்தவ மதத்துக்காக 21 கோடி ரூபாவும் இஸ்லாம் மதத்திற்காக 18 கோடி ரூபாவும் மிகுதி ஏனைய திணைக்களங்களுக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

நிதி, பொருளாதார உறுதிப்பாடு, மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சுக்காக 72,343 கோடியே 14,95,000 ரூபாவும் பாதுகாப்பு அமைச்சுக்காக 42,372 கோடியே 50,00,000ரூபாவும் வெகுசன ஊடக அமைச்சுக்காக 255 கோடி ரூபாவும் நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சுக்காக 412 கோடியே 5,10,00,000 ரூபாவும் சுகாதார அமைச்சுக்காக 41,028 கோடியே 99,98,000 ரூபாவும் வெளிநாட்டலுவல்கள் அமைச்சுக்காக 1,961 கோடியே 20,25,000 ரூபாவும் வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சுக்காக 231 கோடியே 90,00,000 ரூபாவும் போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சுக்காக 4,036 கோடியே 8,40,00,000 ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன் கமத்தொழில் அமைச்சுக்காக 10,042 கோடியே 32,80,000 ரூபாவும் மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சுக்காக 4,298 கோடியே 30,00,000 ரூபாவும் சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சுக்காக 1,917 கோடியே 47,30,000 ரூபாவும் நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சுக்காக 4,245 கோடி ரூபாவும் கல்வி அமைச்சுக்காக 23,705 கோடி ரூபாவும் பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சுக்காக 1,000 கோடி ரூபாவும் கைத்தொழில் அமைச்சுக்காக 910 கோடியே 83,00,000 ரூபாவும் கடற்றொழில் அமைச்சுக்காக 7,00 கோடி ரூபாவும் சுற்றாடல் அமைச்சுக்காக 213 கோடி ரூபாவும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சுக்காக 871 கோடியே 30,00,000 ரூபாவும் நீர்வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சுக்காக 726 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுப்படுத்துகை அமைச்சுக்காக 7,453 கோடியே 4,00,000 ரூபாவும் துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமானச்சேவைகள் அமைச்சுக்காக 707 கோடியே 50,00,000 ரூபாவும் தொழில் நுட்பம் மற்றும் முதலீட்டு அமைச்சுக்காக 542 கோடியே 68,00,000 ரூபாவும் முதலீட்டு மேம்பாடு அமைச்சுக்காக 339 கோடியே 76,70,000 ரூபாவும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுக்காக 14,073 கோடியே 35,00,000 ரூபாவும் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுக்காக 689 கோடியே 80,00,000 ரூபாவும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சுக்காக 1,050 கோடி ரூபாவும் நீர்ப்பாசன அமைச்சுக்காக 8,395 கோடி ரூபாவும் வரவு செலவு திட்டத்தில் ஒதுக்கப்பட்டுள்ளது.

### அந்நியச் செலாவணியை ...

வழங்குவதுடன் அவற்றுக்கான சந்தை வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுக்கவும் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்தார். மன்னார் மாவட்டத்தை மையமாக வைத்து வெற்றிகரமாக ஆரம்பிக்கப்பட்டுள்ள இவ் வேலைத்திட்டத்தை, எதிர்காலத்தில் நாடு பூராகவும் பரவலாக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார். ஜனாதிபதி ஊடக மையத்தில் இன்று (05) நடைபெற்ற ஊடக சந்திப்பில் கருத்துத் தெரிவிக்கும்போதே, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் இவ்வாறு தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்துத் தெரிவித்த இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான், “பாரிய சிக்கலில் இருந்த நாட்டைப் பொறுப்பேற்க எவரும் முன்வராத நேரத்தில் , ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அந்த சவால்மிக்க பொறுப்பை ஏற்றுக்கொண்டார். அத்துடன் கடந்த காலங்களில் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்பதற்காக பல்வேறு வேலைத் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றார்.

அந்த வேலைத்திட்டங்களால் தற்போது இந்நாடு படிப்படியாக முன்னேறி வருகின்றது. இதற்காக நாம் அனைவரும் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவிக்க வேண்டும். மேலும் அவர் முன்னெடுக்கும் வேலைத்திட்டங்களுக்கு எமது ஒத்துழைப்பையும் வழங்க வேண்டும். அந்த வகையில் எமது அமைச்சு, கிராமிய பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக பல்வேறு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றது. குறிப்பாக கிராமிய மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான பணிகள் முன்னெடுக்கப்படுகின்றன. முக்கியமாக விவசாயத்தை ஊக்குவிப்பதன் மூலம் நாட்டின் பொருளாதார மேம்பாட்டுக்கு கிராமிய மக்களின் பங்களிப்பையும் பெற்றுக் கொள்ளும் நோக்கில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றோம் என்றார்.

### வருடாந்தம் பில்லியன்... (03ஆம் பக்கத் தொடர்)

அங்கு தனியார் துறைக்குச் சொந்தமான மிருகக்காட்சி சாலைகள் ஆயிரக்கணத்தில் உள்ளன. இதற்காகவே குரங்குகளை கொண்டு செல்வதற்கு அவர்கள் தீர்மானித்திருந்தனர். இதில் 2000 குரங்குகளை ஒரு மாதத்திற்குள் கொண்டு செல்வதற்கே உத்தேசித்திருந்தனர். இது தொடர்பில் நாம், பல மட்ட பேச்சுவார்த்தைகளை நடத்தினோம்.

வன ஜீவராசிகள் திணைக்களம் உள்ளிட்ட சகல நிறுவனங்களும் இணைந்ததாக இப்பேச்சு வார்த்தைகள் நடைபெற்றன. இதன்போது நாம், சீன தூதுவராலயத்தின் மூலம் அந்த வேண்டுகோளை விடுக்குமாறு சீன அரசாங்க பிரதிநிதிகளுக்கு தெரிவித்தோம்.

அந்த வகையில் எமக்கு உத்தியோகபூர்வமாக அந்த வேண்டுகோள் கிடைத்தது. அதேபோன்று சீனாவில் உள்ள எமது தூதுவருடன் கலந்துரையாடி அந்தளவு மிருகக் காட்சி சாலைகள் அந்நாட்டில் உள்ளதா என்பது தொடர்பில் ஆராயுமாறும் கேட்டுக் கொண்டோம்.

சீனாவில், பாரிய அளவில் மிருகக் காட்சி சாலைகள் உள்ளதாகவும் இதற்காகவே குரங்குகள் பெருமளவு தேவைப்படுவதாகவும் எமக்கு தெரிவித்திருந்தார்.

இச்சந்தர்ப்பத்திலே, வனவிலங்குகள் தொடர்பான அமைப்புக்களின் எதிர்ப்புக்கள் வெளிகிளம்பின. சில அமைப்புக்கள் சீன அரசாங்கம் மற்றும் அந்த நாட்டை விமர்சிக்கும் வகையில் பெரும் பிரசாரங்களை முன்னெடுத்தன. இறைச்சிக்காக குரங்குகளை கொண்டு செல்கின்றார்கள். குரங்குகளின் மூளைக்கு அந்நாட்டில் பெரும் கிராக்கி என்றெல்லாம் வதந்திகள் பரவத் தொடங்கின. சில அரசியல் தரப்பினரும் அதையே செய்தனர்.

மீண்டும் அதற்கான பேச்சு வார்த்தைகள் முன்னெடுக்கப்பட்ட போது, சுற்றாடல் தொடர்பான அமைப்புக்கள் நீதிமன்றத்திற்கு சென்றன. அவ்வழக்கில் வன ஜீவராசிகள் திணைக்களம் சார்பில் சட்டமா அதிபர் நீதிமன்றத்தில் ஆஜராகியதுடன், நீதிமன்றத்தின் மூலம் தற்காலிகமாக அந்த நடவடிக்கைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

எவ்வாறாயினும் உண்மையிலேயே குரங்குகளுக்கான பெரும் கேள்வி உள்ளது. மக்கள் மத்தியில் இருந்தும் இதற்கு பெரும் எதிர்ப்புகள் வரவில்லை.

# தலைநகர் கொழும்பில் நடைபெற்ற 'நளீம் ஹாஜியார் நினைவுச் சொற்பொழிவு'



படங்கள் ருசைக் பாரூக், அஷ்ரப் ஏ. சமத்

**(அஜ்வாத் பாஸி)**

பேருவளை ஜாமிஆ நளீமிய்யா கலாபீட பொன் விழாவின் பிரதான நிகழ்வுகளிலொன்றான 'நளீம் ஹாஜியார் நினைவுச் சொற்பொழிவு' கடந்த (03) செவ்வாய்க்கிழமை மாலை கொழும்பு 07, இலங்கை மன்றக் கல்லூரி மண்டபத்தில் வெகு விமர்சையாக நடைபெற்றது.

நளீம் ஹாஜியார் நினைவுப் பேருரை மன்றத்தின் தலைவர் சட்டத்தரணி ரிப்கி காஸிம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் 'கலாநிதி எம்.ஏ.எம். சுக்ரி வாழ்வும் பணியும்' என்ற தலைப்பில் ஜாமிஆ நளீமிய்யா கலாபீட முதல்வர் அஷ்ஷெய்க் ஏ.சி. அகார் முஹம்மத் (நளீமி) பிரதான உரையையும் 'கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி – அறிவுப் பங்களிப்பு' எனும் தலைப்பில் ஜாமிஆ நளீமிய்யாவின் அரபு மொழி கற்கைத் துறைத் தலைவர் கலாநிதி அஷ்ஷெய்க் ஏ.பீ.எம் அப்பாஸ் (நளீமி) விசேட உரையையும் நிகழ்த்தினர்.

இதன்பின் 'கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி; அறிவுத்துறைப் பங்களிப்பும் ஆய்வுப் பணிகளும்' எனும் தலைப்பில் ஆய்வு நூல் ஒன்றும் இந்நிகழ்வில் வெளியிட்டு வைக்கப்பட்டது. முதல் நூலினை கலாநிதி சுக்ரியின் புதல்வரான ஆஸிப் சுக்ரி பெற்றுக்கொண்டார். அதன்பின், விழாவின் விசேட அதிதியாக கலந்து கொண்ட நளீமிய்யா பரிபாலன சபைத் தலைவர் அல்ஹாஜ் யாகூத் நளீம் பிரதியை பெற்றுக் கொண்டார். நிகழ்வில் கௌரவ அதிதியாக ராபிதாவின் தலைவர் அஷ்ஷெய்க் எம்.ரீ.எம். லாபிர் மதனி கலந்து சிறப்பித்தார்.

இந்நிகழ்வில், உலமாக்கள், கல்விமான்கள், முன்னாள் மேல் மாகாண ஆளுநர் அஸாத் சாலி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம், ஜனாதிபதி சட்டத்தரணிகளான பாயிஸ் முஸ்தபா, எம்.எம். சுஹைர் உட்பட சட்டத்தரணிகள், வைத்தியர்கள், ஊடகவியலாளர்கள், தொழிலதிபர்கள், நளீமிய்யாவின் விரிவுரையாளர்கள், நளீமிய்யாவின் பழைய மாணவர்கள் மற்றும் சமூகத்தின் பல்துறைசார் ஆளுமைகள் உட்பட மர்ஹூம் நளீம் ஹாஜியார் மற்றும் மர்ஹூம் கலாநிதி சுக்ரி ஆகியோரின் குடும்பஸ்தவர்களும் கலந்து சிறப்பித்தமை விசேட அம்சமாகும்..

# மாதம்பை அல்மிஸ்பாஹ்வில் விஷேட பிரியாவிடை நிகழ்வு





மாதம்பை அல்மிஸ்பாஹ் பாடசாலையில் நீண்ட காலமாக சேவையாற்றிய அதிபர் மற்றும் ஆசிரியர்களுக்கான பிரியாவிடை வைபவம் அண்மையில் பாடசாலையின் அதிபர் ஏ.ஏ.எம். சாஹிர் தலைமையில் வெகு விமர்சையாக இடம் பெற்றது.

இந்நிகழ்வில் இடமாற்றம் பெற்றுச்சென்ற அதிபர், ஆசிரியர்கள் மற்றும் இவ்வாண்டு ஓய்வு பெற்ற ஆசிரியர்களும் கலந்து கொண்டனர். அந்த வகையில் இவ்வாண்டு இடமாற்றம் பெற்றுச் சென்ற முன்னாள் அதிபர் எஸ். சப்ராஸ் முஹம்மட் மற்றும் இவ்வாண்டு ஓய்வு பெற்ற பி.எஸ் நாசிம் மௌலானா ஆசிரியர் அவர்களும் மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற ஏனைய ஆசிரியர்களான எச்.எப் பஸ்லா ஆசிரியை, எம்.யூ.எப்.ரோஜன் ஆசிரியை, எப். ரஷீதா ஆசிரியை, எம்.ஆர்.டி விக்ரமசிங்க ஆசிரியை ஆகியோரு கலந்து கொண்டனர். இந்நிகழ்வில் அதிபர் தலைமை உரை ஆற்றியதோடு இந் நிகழ்வில் சிறப்பினராக கலந்து கொண்ட ஆசிரிய, ஆசிரியைகள் தனது அனுபவ பகிர்வுகளை மற்றும் ஏனைய வழிகாட்டல்களை பகிர்ந்ததோடு மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் அரங்கேறின.

இந் நிகழ்வில் சிறப்பினராக கலந்து கொண்டவர்களுக்கு பாடசாலையின் ஆசிரியர் குழாம் மற்றும் பாடசாலை சமூகத்தினரான பாடசாலை அபிவிருத்திச் சங்க நிறைவேற்று குழு உறுப்பினர்கள், பாடசாலை பழைய மாணவர் அமைப்பினர் மற்றும் மெஸ்டா அமைப்பினர் சார்பாக பல அன்பளிப்புகள் வழங்கி வைக்கப்பட்டன.





கொழும்பு கணபதி இந்து மகளிர் மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற சிறுவர் தின நிகழ்வில் அதிபர் திருமதி சாந்தினி, மக்கள் வங்கி முகாமையாளர், பிரதிஅதிபர் வரவேற்கப்படுவதையும் வாத்தியக்குழு மற்றும் நிகழ்ச்சிகளையும் படங்களில் காணலாம்.

**2015 ஆம் ஆண்டு இல 05 தேசிய மருந்துகள் ஒழுங்குமுறை ஆணையச் சட்டத்தின் பிரிவு 131 இன் கீழ் மற்றும் மாண்புமிகு நீதிமன்றத்தின் உத்தரவின்படி.**

**இலங்கை மக்களிடம் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்**

கிரிவவுல, தோராயாய, சேர்ந்த டயஸ் கஹவிட்ட சிறிசேன என்ற நான், குருநாகல் நீதவான் நீதிமன்றில் அனுமதிப்பத்திரம் இன்றி

மருந்துகள் வைத்திருந்தமைக்காக தேசிய மருந்து ஒழுங்குமுறை அதிகாரசபையின் அங்கிகரீக்கப்பட்ட அதிகாரிகளினால் இலக்கம்: 85113/23 இன் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டேன்.

நான் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் கௌரவ நீதிமன்றம் தொன்னூறு ஆயிரம் ரூபாய் (ரூ. 90,000/=) அபராதம் விதித்ததாக அறிவிக்கிறேன்.

இந்த தவறை மீண்டும் செய்யமாட்டேன் என்று தெரிவித்து ஒட்டுமொத்த இலங்கை மக்களிடமும் மன்னிப்பு கேட்டுக்கொள்கிறேன்.

**டயஸ் கஹவிட்ட சிறிசேன,**
**தோராயாய,**
**கிரிவவுல.**

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
புதன் 2023.10.04
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5257
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 30,953,896.00
ஆங்கில எழுத்து Z
வெற்றி இலக்கங்கள் 9 6 6 2 8 2

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3499
சீட்டிழுப்பு திகதி 2023.10.04
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 62,941,100.80
ஆங்கில எழுத்து G
வெற்றி இலக்கங்கள் 11 16 29 53
விசேட எழுத்து G
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 30411

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1605
2023.10.04
35503
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 409,505,264.00
ஆங்கில எழுத்து U
சுப்பர் இலக்கம் 07
வெற்றி இலக்கங்கள் 67 68 72 80
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

லக்கி 7 Lucky
திகதி 2023.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 0083
வெற்றி இலக்கினம் மீனம்
வெற்றி இலக்கங்கள் 0 2 6 8 5 3
L7 இலக்கம் 1 6
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 11,434,791.68

ராசி சுப பலன்
திகதி 2023.10.04
சீட்டிழுப்பு இலக்கம் 566
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ. 3,195,632.80
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 15 29 45 56
விசேட இலக்கினம் கன்னி

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1287
2023.10.04
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 113,573,816.00
ஆங்கில எழுத்து N
வெற்றி இலக்கங்கள் 17 59 67 71
விசேட எழுத்து N
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 08549

# வடக்கில் நிலவும் கடும் வரட்சியினால் கால்நடை வளர்ப்பாளர்கள் அசௌகரியம்

இக்பால் அலி

**கிளிநொச்சிப் பிரதேசங்களில் கால்நடை வளர்ப்புத் தொழில்களில் ஈடுபடுகின்ற பொதுமக்கள் இன்றைய கடுமையான வறட்சியான சூழலில் பல்வேறு பிரச்சினைகளை எதிர்நோக்கி வருவதாக கால்நடை வளர்ப்பாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.**

இது தொடர்பில் கருத்துத் தெரிவித்த கிளிநொச்சி கால்நடை வளர்ப்பாளர் நடேசன் நாகேந்திரன்; இன்றைக்கு என்னிடம் 70 கோழிகள் அளவில் இருக்கின்றன. நான் கடந்த எட்டு வருடங்களாக இந்த கோழிகளை வளர்த்து வருகிறேன். இப்போது அதன் தீன் வகைகளின் விலைகளும் அதிகரித்துள்ளன. ஆதலால் அதற்குரிய உணவு வகைகளை நாங்களே தயாரித்து வருகின்றோம்.

வாழைத்தண்டுகள், மரவள்ளிக் கிழங்கு போன்றவற்றை கரட் சீவுகின்ற உபகரணத்தால் சீவி எடுத்தல் வேண்டும். அதனுடன் இலைகள், தவிடுகள் போன்றவற்றைக் கலந்து தீவனம் ஒன்றை தயாரித்து வருகின்றேன்.

வாழைத்தண்டு, வாழையின் அடியிலுள்ள கிழங்கு ஆகிய இரண்டையும் வைத்து தீவனம் ஒன்றைத் தயாரித்து நான் கோழிகளுக்கு உணவு செய்து வருகிறேன்.

கோழி வளர்ப்பிற்காக வேண்டி மரவள்ளி மரங்கள் நட்டு வந்தேன். தற்போதைய சூழலில் மூன்று நான்கு மாதங்களாக இந்த மரவள்ளிகளை வைக்க முடியா நிலைமை ஏற்பட்டுள்ளது. மரவள்ளியின் விலையேற்றமும் அதிகரித்துள்ளதுடன் காலநிலை சூழலின் காரணமாக அவை சரிவரவில்லை. ஆனால் தொடர்ந்து வாழைகள் நட்டு வருகின்றேன். அதில் எந்தப் பாதிப்புகளும் இல்லை. அவற்றின் தண்டுகளையும் கிழங்குகளையும் இன்னும் பயன்படுத்தி வருகின்றேன்.

என்னிடம் அரை ஏக்கர் காணி உள்ளது. காணி முழுவதும் தென்னை மரத்தோப்புகள். அதற்கிடையில் கறையாண்களை உற்பத்தி செய்து வருகின்றேன். அதற்கு மேலால் கந்தல்களைப் போடுவேன். கோழிகளுக்கு கறையாண்களும் ஜீவனமாக உண்பதற்கு இப்படி கோழித் தீனியின் விலையேற்றத்தைச் சமாளிக்கும் வகையில் கோழி வளர்ப்பினை தொடர்ந்து செய்து வருகின்றேன்.



30, 40 முட்டைகள் குஞ்சி பொறிக்கச் செய்யலாம் கோழிக்கு அடை வைக்கலாம் என்று இருந்தாலும் தற்போது கடுமையான வெயில் வரட்சி நிலைமை தோன்றுகிறது. தற்போது கோழிகள் முட்டையிடும் தன்மையும் குறைவாகக் காணப்படுகின்றது. ஏனென்றால் வெயில் காலத்தில் எல்லாக் கோழிகளும் அடைகாத்து விடும். எல்லா கோழிகள் அடை காப்பதும் குஞ்சிகள் இறப்பதுமான காலமாக இருக்கும். இக்கால கட்டத்தில் எல்லா கோழிகளும் அடைகாத்து விடும். அடைகாக்கின்ற கோழிக்கு 15 முட்டை வைத்தால் குறைந்தது 13 குஞ்சுகளாவது பொறிக்கும். அதில் இரண்டு முட்டைதான் பலவீனமாக இருக்கும். கூடுதலாக வெளியே வாங்கி முட்டைகள் வைக்க மாட்டேன். எனது வீட்டிலுள்ள கோழிகளின் முட்டைகளையே கோழி அடைகாக்க வைப்பேன்.

எல்லாவற்றையும் விட இன்றைய பொருளாதார நெருக்கடியான கால கட்டத்தில் நாங்கள் எந்தளவு கோழிகளுக்கான தீன் வகைகளை தயாரிக்கலாம் என்ற நோக்கத்துடனே நான் கோழிகளை வளர்த்து வருகின்றேன். கோழித் தீனை கடைகளில் வாங்கி வளர்த்தால் நாங்கள் பெரும் நஷ்டத்தை எதிர் நோக்க வேண்டி வரும். இப்போது ஒரு கிலோ குஞ்சுக் கோழிக்குரிய தீனியின் விலை ரூ. 300 வரை செல்கின்றன. முதலில் நான் 100 கோழிகளுக்கு மேல் நாட்டுக்கோழிகள் வைத்திருந்தேன். இந்த தீனியின் விலையேற்றத்தால் குறைக்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

நாட்டுக் கோழி என்று சொல்லும் போது நிறைய இனங்கள் இருக்கின்றன. வெள்ளையடின் என்று சொல்லப்படும் சண்டை கோழி, சிலுக்கு என்று சொல்லப்படும் பெண்டன் கட்டைக் கோழி, கொண்டை கோழி, காலில் நிறைய முடியுள்ள கோழிகள், கினிக் கோழி என்று பல வகையிலான கோழிகள் வளர்த்து வருகின்றேன். இதற்காக பெரிய கூடுகள் உள்ளன. இந்தக் கோழி வளர்ப்பின் மூலம்தான் எனது வீட்டின் பொருளாதாரச் சுமையை நிறைவு செய்து வருகின்றேன். அத்துடன் நான் முட்டை வியாபாரத்துறையிலும் ஈடுபட்டு வந்தேன். ஊரில் உள்ள அனைவரும் நாட்டுக் கோழிகள், குஞ்சுகள், முட்டைகள் வாங்குவதாக இருந்தால் என்னையே நாடி வருவார்கள். அக்கால கட்டத்தில் மாதாந்தம் ரூபா 12,000 அல்லது 13,000 இலாபம் வரும். குஞ்சுகள் அடை வைத்து விற்பனையும் செய்வேன். அதன் மூலம் மூன்று மாதத்திற்கு அல்லது இரு மாதத்திற்கு ஒரு முறை ரூபா 25,000 அல்லது ரூபா 30,000 அளவில் இலாபம் வரும். இப்போது வெயில் காலம் என்பதால் வருமானம் குறைவு. கோழி வளர்க்க வேண்டும் என்பதற்காக வளர்த்துக் கொண்டு இருக்கின்றேன். வீட்டில் மனைவி தான் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். நான் வெளி வேலைக்கும் சென்று வருவேன்.

நான் இயற்கையின் ஊடாகவே எல்லாம் செய்கின்றேன். கோழிக்கு சளி வருத்தம் வந்தால் கற்பூர வள்ளி இலையினைக் கொடுக்கின்றேன். இம் மரமும் வளர்க்கின்றேன். கோழி வந்து கட்டாயம் புல் திண்ண வேண்டும். ஆனால் சிலர் முழு நேரமும் அடைத்து வைத்திருப்பார்கள். நான் கோழிக்கு அழகுக்காய் வளர்க்கக் கூடிய புல்லுகள் வளர்க்கின்றேன். இந்த நேரத்தில் புல்லே இருக்காது. மழை இல்லை. கடுமையான வெயில். இப்பொழுது புல்லே இல்லை. எல்லாம் பெரிய பெரிய செடிகள் மரங்கள் தான் இருக்கிறது. எனினும் புற்கள் ஓரளவு உள்ளன. கோழிகள் தீனாக புல்லை உண்ணுகின்றன. கறையானையும் உண்ணுகின்றன. இப்படி கோழிக்கு தீவனம் வழங்கி கால நிலை மாற்றத்திற்கு ஏற்ப வரும் சவால்களை சமாளித்துக் கொண்டு செல்கின்றேன்.



டிசம்பர் காலத்தில் மழை பெய்தால் குஞ்சுக் கோழிகளுக்கு வெப்பம் தேவைப்படும். அவைகளுக்கு கோழிக்கூட்டுக்குள் சிறிய மின் குமிழ் ஒன்றைப் போட்டு வெளிச்சம் வழங்குவேன். அதில் சூடு இருக்கும். நோய்கள் வராமல் தடுப்பதற்கு கற்பூர வள்ளி, துளசி இலை, நாயுருவி போன்ற இலைகள் எல்லாவற்றையும் ஒன்றாகப் போட்டு அதன் சாரை எடுத்து தண்ணீருக்குள் போட்டுக் கொடுப்பேன். இது ஒரு வாரத்திற்கு ஒரு தடவை கொடுப்பேன். சளி வராது, தூங்குகிற தன்மை வராது. நல்ல ஆரோக்கியத்துடன் கோழிகள் வளரும். மிருக வைத்தியசாலையில் பெற்றுக் கொள்ளுகின்ற பாணி மருந்துகளை நான் கோழிகளுக்கு வழங்குவதில்லை. காயமடைந்தால்கூட நாட்டு மருந்துகளையே பாவிக்கின்றேன். வெளியே மருந்துகள் எடுக்கச் செல்வதில்லை.



சுயதொழில் முயற்சியாண்மையை ஊக்குவிப்பதற்கான காவேரிக் கலா மன்றத்தின் பங்களிப்பு அளப்பரியது. கோழி வளர்ப்பு கோழிக் கூடுகள் நிர்மாணிப்பதற்கான உதவிகள் வழங்கியுள்ளார். கோழிக் கூட்டினை செங்கல்லால் கட்ட வேண்டும் என்று அவர்களிடம் கோரிக்கை விடுத்திருந்தேன். அவர்கள் எனது கோரிக்கைக்கு மனமுவந்து உதவி செய்தார்கள். கோழிக் கூட்டை செங்கல்லால் கட்டியிருக்கின்றேன். அவை கொஞ்சம் குளிர்மையாக இருக்க வேண்டும்.

இப்படியாக சுயதொழில் வாய்ப்பினை ஊக்குவிப்பதற்காக காவேரிக் கலா மன்றம் ஊற்றுக்குளம, கோணாவில், முருகண்டி, போன்ற இன்னும் எத்தனையோ இடங்களில் கோழி வளர்ப்புக்காக கலா மன்றம் உதவிகளை வழங்குவது மட்டுமல்ல மிருக வைத்திய சாலையுடன் தொடர்பினையும் ஏற்படுத்திக் கொடுத்து வருகின்றார்கள். அவர்கள் கோழி வளர்ப்பாளர்களை ஊக்குவித்து வருகிறார்கள். நான் ஆரம்பத்தில் தூக்கி வைக்கின்ற மரக் கூடுகள் தான் வைத்திருந்தேன். அவர்கள் இங்கு வந்து பார்வையிட்ட பின்பு நிலக் கூடுகள் அமைத்து தருவதற்கு ஆதரவு நல்கினார்கள் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# மலையாளபுரம் வடக்கு; ராஜரட்ணம் தீபமணி கருத்து தெரிவிக்கையில்;

நான் 2010 ஆம் ஆண்டு முதல் மாடுகள் வளர்க்கத் தொடங்கி விட்டேன். ஆரம்பத்தில் ஒரு மாடுதான் வளர்த்தேன். யுத்தம் காரணமாக அங்குமிங்கும் ஏழு எட்டு வருடங்களாக இடம்பெயர்ந்து வாழ்ந்து விட்டு மீண்டும் சொந்த இடத்திற்கு வந்தோம். அப்போது நான் முன்னர் வளர்த்த எல்லா மாடுகளும் காணாமற் போய் விட்டன. இடம்பெயர்ந்து செல்லும் போது நான்கு மாடுகளும் நான்கு கன்றுக் குட்டிகளும் இருந்தன. சிலருடைய மாடுகள் கிடைத்து விட்டன. வட்டக்கச்சி, தர்மபுரம் போன்ற இடங்களில் தேடிப் பார்த்தோம். எங்கேயும் கிடைக்கவில்லை. சிலர் வேறு மாடுகளை பிடித்து வைத்துக் கொண்டு தங்களுடைய மாடுகள் தான் என்று குறிகள் வைத்துக் கொண்டார். நான் விலைக்கு ஒன்று வாங்கினேன்.

முதன் முதலில் ரூபா 6000 கொடுத்து ஒரு மாடு வாங்கினேன். ஏற்கனவே மாடு வளர்த்த ஆசையின் காரணமாக மீண்டும் மாடு வளர்க்க வேண்டும் என்ற ஆவல் இருந்தது. அதில் நாங்கள் பலன் கண்டோம். அப்பொழுது பால் கறந்து ஊர்களுக்குள் தான் விநியோகம் செய்து வந்தோம். அப்பொழுது ஒரு லீட்டர் 25 ரூபாவுக்கு விற்பனை செய்ய வேண்டும். அப்பொழுது விலை வாசிகள் ரொம்பக் குறைவு தானே. இப்படி செய்து கொண்டும் போகும் பொழுது எங்கள் பகுதியில் 55 ஆம் கட்டையில் பால் சபை இருக்கிறது எனக் கேள்வியுற்றேன். பெயர்ந்து ஒவ்வொரு நாளும் பாலைக் கொண்டு செல்லும் நேரத்தில் ஒருவர் நீங்கள் எங்கு இருக்கின்றீர்கள் என வினவினார்கள். அப்பொழுது ஐந்து ஆறு பேர்களுக்கு விற்பனை செய்த பின்பு மிகுதிப் பாலை நாங்களும் குடித்து விட்டு ஏனைய பாலை என்ன செய்வது என்று தெரியாமல் இருக்கின்றோம் என்று அவரிடம் கூறினேன். அப்பொழுது அவர் எத்தனை பேர் இருக்கின்றீர்கள் என வினவினார். அதற்கு நான் ஏழு எட்டுப் பேர் மாடு வளர்க்கின்றோம் என்று தெரிவித்தேன்.

அதன் பின்பு எங்கள் வீட்டுக் கருவில் ஒரு இடத்தைத் தெரிவு செய்தனர். அதற்கான கட்டிடம் ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளது. அதில் 15 பேர் அளவில் பாலைக் கொண்டு கொடுக்கின்றனர். அதனை மில்கோ பவுசர் வந்து எடுத்துச் சென்று விடும். எட்டு ஒன்பது லீட்டர் பால் கறக்குமாயின் மாதம் ஒன்றுக்கு 15000 மட்டில் வருமானத்தைப் பெற்றுக் கொள்ளலாம். மாட்டினுடைய உணவுச் செலவுகள் போக எங்களுடைய குடும்பச் செலவுகளுக்கும் போதுமானளவு இருக்கிறது.



மாடுகளுக்காக புல்லுகள் வளர்த்தோம். தற்போதைய கடுமையான வெயிலின் காரணமாக எல்லாம் கருகிப் போயிற்று. கடந்த மூன்று மாதத்திற்கு முன்னர் வைக்கோல் இறக்கினேன். அதற்கு ரூபாய் 18000 செலவானது. பலாப் பழம், புல்லுகள் போன்ற உணவுகள் உண்ணக் கூடிய மாடுகள்தான் வளர்க்கப்படுகின்றன. மாடுகளை கட்டிவைத்து வளர்க்கின்றேன். அவிழ்து விட இயலாது, அப்படி அவிழ்த்து விட்டாலும் பக்கத்து வளவுகளுக்குள் செல்வதால் அந்த மாடுகளைத் தாக்கி அதன் உறுப்புக்களில் காயத்தை உண்டு பண்ணி விடுகிறார்கள். ஆதலால் மாடுகளை அவிழ்த்து விடுவதில்லை. கட்டிப் போட்டே வளர்க்கின்றேன்.

காவேரிக் கலா மன்றம் ஆடு வளர்ப்பதற்கும் எனக்கு உதவி செய்தார்கள். கடந்த வருடம் கொப்பளிப்பான் என்ற நோயினால் நன்றாக இருந்த கிடா ஒன்று கடந்த வாரம் செத்து விட்டது. அது ரொம்ப நன்றாக இருந்தது. ஆட்டினால் நிறையப் பயனைப் பெற்றேன். ஆடுகள் குட்டிகள் போட்டால் அதனை நன்றாக வளர்த்த பின்னர் நல்ல விலைக்கு விற்கலாம். இப்படி பல ஆடுகள் விற்பனை செய்துள்ளேன்.

# கிளிநொச்சி மலையாள புறம் பத்மநாதன் ஈழமதி கருத்து தெரிவிக்கையில்;

நான் 12 வருடங்களாக ஆடு வளர்த்து வருகின்றேன். ஆடு வளர்ப்பது என்றால் ஆசைதான். மற்றவர்கள் ஆடு வைத்திருந்தார்கள். அதைப் பார்க்கின்ற போது ஆசையாக இருந்தது. நாமும் வளர்க்க வேண்டும் என்ற ஆசையில் காவேரிக் கலா மன்றத்திடம் கோரிக்கை விடுத்தோம். மரியும் கிடாவும் அவர்கள் வாங்கித் தந்தார்கள். சின்ன இடத்தில்தான் வளர்க்கின்றேன் குட்டி போட்டு பெரிதாக வளர்ந்து செல்லும் போது விற்று விடுவேன். இப்போது மூன்று இருக்கிறது. இதனைத தொடர்ந்து செய்து வருகிறேன்.

ஆடுகள் ஒரு வருடத்திற்கு இரண்டு முறை குட்டிகள் போடும். எங்களுடைய ஆடுகள் ஒரே தடவை மூன்று குட்டிகளும் போட்டன. அவை மரி ஆட்டு குட்டிகள். இந்த முறையும் அதே தாய்தான் இரண்டு குட்டிகள் போட்டவை. மரியும் கிடாவும் போட்டது.

தூர மேய விட மாட்டேன். பக்கத்திலேயே கட்டி வைப்பேன். திருடன் பிரச்சினையும் இருக்கிறது. மழைக்கு கொட்டில் ஒன்று கட்டியிருக்கின்றேன். அது காவேரிக் கலா மன்றத்தினால் கட்டித் தந்தது. இப்போது ஆடுகளுக்கு உணவுத் தட்டுப்பாடு நிலவுகிறது. காரணம் கடுமையான வெயில் புல்லுகள் இல்லை. உணவு தட்டுப்பாடாக இருந்த போதிலும் எப்படியாயினும் குலையொன்றை எங்கேயாவது தேடிக் கொண்டு வந்து கட்டி விடுவேன். மழையில்லாமையினால் இங்கு மக்கள் சரியான கஷ்டத்தை எதிர் நோக்கி வருகிறார்கள்.







# கழுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன மீலாத் விழா - 2023

## பிரதம அதிதியாக வெளிநாட்டு அமைச்சர் அலிசப்ரி பங்கேற்பு; நாளை அம்பலந்துவையில்


களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளன நிர்வாகிகள்

**★ களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனத்தின் உதயம்**

களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனம் பேருவளை, சீனன்கோட்டை அல்ஹுமைஸரா தேசிய பாடசாலையில் 2001ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

எமது மாவட்ட சம்மேளனத்தின் ஆரம்ப போசகராக அல்ஹாஜ் ஷிப்லி அஸீஸ் அவர்களும் அமைப்பாளராக அல்ஹாஜ் ஏ.எல்.எம். அஸ்வர் அவர்களும் தலைவராக அல்ஹாஜ் உவைஸ் அவர்களும், பிரதித் தலைவராக ஹனீபா ஆசிரியருடன் அல்ஹாஜ் பளீல் மாஸ்டர் அவர்களும், செயலாளராக ஆசிரியர் சல்மான் அவர்களுடன் பிரதிச் செயலாளராக மர்ஹூம் ஆசிரியர் நழ்ரி அவர்களும் பொருளாளராக ஆசிரியர் ரவ்ஸான் அவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

2015ஆம் ஆண்டு முதல் தற்போதைய நிருவாகம் மாவட்டச் சம்மேளனத் தலைவராகிய அல்ஹாஜ் உவைஸ் அவர்களுடன் செயலாளராக ஹிஷாம் ஸுஹைல் அவர்களையும் கொண்டு அல்லாஹ்வின் அருளால் கடந்த 8 ஆண்டுகளாக மிகச்சிறப்பாக இயங்கி வருகின்றது.

**அல்ஹம்துலில்லாஹ்!**

இவ்வாறு ஆரம்பமான களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனமானது இன்றுவரை மிகச்சிறப்பான முறையில், பல்வேறு முன்னெடுப்புகளோடு தவறாது மாதாந்த கூட்டங்கள், ஆசிரியர்களுக்கான வருடாந்த செயலமர்வுகள், மாணவர்களுக்கான வருடாந்த போட்டி நிகழ்ச்சிகள், பரிசளிப்பு விழாக்கள், சுற்றுலாக்கள் போன்ற சிறப்பான விடயங்களை உள்ளடக்கி மாணவர்கள், ஆசிரியர்கள், பெற்றோர்களின் ஆன்மீக, தார்மீக வழிகாட்டல்களுக்கு அத்திவாரமிடப்படுகின்றது.


அம்பலந்துவை ஜாமிஉல் ஹைராத் ஜும்ஆபள்ளிவாசல் அழகிய தோற்றம்

உண்மையில் போட்டி நிகழ்ச்சிகள், பரிசளிப்பு விழாக்களை நடாத்துவதன் நோக்கம் என்னவென்றால், அன்றாடம் நாம் ஓத வேண்டிய முக்கியமான திக்ருகள், அவ்ராதுகள், துஆக்கள் போன்றவற்றை போட்டித் தன்மையுடன் மனனமிட்டு அவற்றை அன்றாட வாழ்வில் அமுல்படுத்தும் சிறந்த இளம் தலைமுறையினரை உருவாக்குவதாகும். இதன் மூலம் இஸ்லாம் வலியுறுத்தும் பலவிடயங்களை (சுத்தம், தொழுகை, ஹலால் ஹராம் பற்றிய தெளிவு, ஒற்றுமை, சமத்துவம், நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை, ஸஹாபாக்களின் வாழ்க்கை முறைகளை) நமது வாழ்வில் கடைப்பிடித்தல், பிறருக்கு எத்திவைத்தல் போன்ற செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தி சிறந்த சமூகமொன்றை உருவாக்க முயற்சிக்கப்படுகின்றது.

அன்றுமுதல் இன்றுவரை எமது களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனமானது ஒற்றுமையோடும் தியாகங்களோடும் இயங்கி வருவதினாலேயே இன்று அகில இலங்கையிலும் சிறப்பித்துக் கூறப்படும் ஒரு சம்மேளனமாக மிளிர்கிறது.

களுத்துறை மாவட்ட அஹதிய்யா சம்மேளனம் மாவட்டத்திலுள்ள அஹதிய்யா மாணவர்களின் நலன்கருதி அவர்களின் திறமைகளை வெளிக்காட்டி தைரியத்தை வரவழைத்து திறமையுள்ளவர்களாக உருவாக்கும் நன்நோக்கத்தோடு போட்டி நிகழ்ச்சிகளை நடாத்தி வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பரிசில்களை வழங்கி வைப்பதோடு மீலாத் விழாவையும் கொண்டாட தீர்மானித்ததற்கமைய நாளை (7) கொண்டாட ஏற்பாடுகளை செய்து அதனை பாணந்துறை அம்பலந்துவையில் இல்மா முஸ்லிம் வித்தியாலயத்தில் நடாத்தவும் தீர்மானித்துள்ளோம்.

சம்மேளனத்தின் தலைவர் எம்.எச்.எம். உவைஸ் ஹாஜி தலைமையில் நடைபெறவுள்ள இப்பெருவிழாவில் பிரதம அதிதியாக ஜனாதிபதி சட்டத்தரணியும் வெளிவிவகார அமைச்சருமான அல்ஹாஜ் அலி சப்ரி கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

பாணந்துறை அம்பலந்துவை ஜாமிஉல் ஹைராத் அஹதிய்யா பாடசாலையின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இவ்விழாவில் கௌரவ அதிதிகளாக புத்தசாசன சமய மத மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்ரமநாயக, பாராளுமன்ற உறுப்பினர்களான இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், மர்ஜான் பளீல், மலேசிய நாட்டு உயர் ஸ்தானிகர் பத்லி ஹிஷாம் ஆதம் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

**★ சமய அறிவை புகட்டும் ஜாமிஉல் ஹைராத் அஹதிய்யா பாடசாலை**

சமுதாய எழுச்சிக்குரிய தார்மீக, ஆன்மீக பக்குவத்தை வளப்படுத்த பல்வேறு நிறுவனங்கள் செயலாற்றுகின்றன. அந்தவகையில் அஹதிய்யாவின் பங்களிப்பு மிகவும் பரந்துபட்டது. ஆரம்ப காலகட்டத்தில் அம்பலந்துவையின் அஹதிய்யா கொழும்பைச் சேர்ந்த பஹாவுத்தீன் ஆசிரியரின் தலைமையில் நடாத்தப்பட்டது. இதில் அஹதிய்யா கீதம் அவரால் பாடப்பட்டு ஆரம்பித்ததும் குறிப்பிடத்தக்கது.

பிற்காலத்தில், அஹதிய்யாவோ மத்ரஸாவோ என்றில்லாமல் ஒரு சன்மார்க்க பீடமாக காலியைச் சேர்ந்த பள்ளிவாசல் முஅத்தின் மற்றும் ஊர் மக்களால் 'அஷ்ரப் மாமா' என்று அழைக்கப்பட்ட ஆசிரியரினால் குறிப்பிட்ட சிலஆண்டுகள் வழி நடாத்தப்பட்டு வந்தது. அதனைத் தொடர்ந்து கொழும்பு, புதுக்கடையைச் சேர்ந்த மஸ்ஜிதின் பேஷ் இமாமாக கடமையாற்றிய தமீம் மௌலவி என்பவரால் பல வருட காலமாக வழிநடத்தப்பட்டு வந்தது. ஒரு ஊரின் இரண்டு கண்கள் போன்றதுதான் அவ்வூரிலுள்ள பாடசாலையும் பள்ளிவாசலும். இக்கிராமத்திலுள்ள ஒரே பாடசாலை இல்மா முஸ்லிம் வித்தியாலயம். எமது கிராமத்தின் ஆரம்ப கல்வி முறையானது மத்ரஸாக்களாகவும் திண்ணைப்பள்ளிக்கூடங்களாகவுமே இயங்கி வந்தன. பின்னர் 1941ஆம் ஆண்டு மஸ்ஜித் பாடசாலையாக மாற்றம் பெற்றது. எனினும் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினர் சுசந்த டி சில்வா பொன்சேகாவின் சிபாரிசின் பிரகாரம் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 05ம் திகதி அரச தமிழ் கலவன் பாடசாலையாக அரசினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

1952.01.03ஆம் திகதி தென்னோலை, களிமண் கொண்டு நிர்மாணிக்கப்பட்ட கட்டடத்தில் மர்ஹூம் எஸ்.எல். ஹாஸீம் அவர்களை தலைமை ஆசிரியராகவும் எஸ். வல்லிபுரம் மற்றும் கே. சதாசிவம் ஆகியோரை உதவி ஆசிரியராகவும் கொண்டு ஆரம்பிக்கப்பட்டதோடு, முதல் மாணவராக ஏ.ஏ.மஹ்ரூப் (மர்ஹும் ஓய்வுபெற்ற ஆசிரியர் மற்றும் முன்னாள் பிரதேச சபை உறுப்பினர்) அவர்களும் 2ஆம், 3ஆம் மாணவர்களாக ஏ.எம் யஹ்யா, எஸ்.ஏ ஹனீபா ஆகியோர் ஆரம்ப மாணவர்களாக பதிவு செய்து கொண்ட அம்பலந்துவை முஸ்லிம் வித்தியாலயம் என்றபெயரில் இயங்கிவந்த இப்பாடசாலை அப்போதைய அதிபர் எம்.டி.எம். இல்யாஸ் அவர்களின் முயற்சியால் பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆசிரியர்களின் ஆலோசனைக்கமைய 'இல்மா' முஸ்லிம் வித்தியாலயம் என 2014ஆம் ஆண்டு பெயர் மாற்றம் செய்யப்பட்டது.

பாடசாலையின் வளர்ச்சிக்கு பாடசாலை அபிவிருத்திச் சங்கம், பழைய மாணவ, மாணவியர் சங்கம், மஸ்ஜித் நிருவாகம் போன்றன பங்களிப்பு நல்குவதோடு, தற்போதைய அதிபராக எம். றிஸ்மி மஹ்ரூப் மற்றும் உப அதிபராக திருமதி மு. தமிழரசி உட்பட 26 ஆசிரியர்கள் பணியாற்றுவதுடன் 549 மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். அத்துடன் பாடசாலை அபிவிருத்திச் சங்க செயலாளராக எம்.எப்.எம். றம்ஸான், பாடசாலை பழையமாணவர் சங்க செயலாளராக எம்.டீ.எம். கௌஸ் மற்றும் பழைய மாணவிகள் சங்க செயலாளராக எம்.எப்.எப். பைரூஸியா ஆகியோர் பாடசாலை வளர்ச்சிக்காக மிகச் சிறப்பாக செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்.

எமது பாடசாலை மாணவர்கள் வலய மட்ட, மாகாண மட்ட, தேசிய மட்ட போட்டிகளில் கலந்து கொண்டு பாடசாலையின் பெயரை நிலைநாட்டியுள்ளனர். தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த சாதாரண தர பரீட்சையில் சிறந்த பெபேறுகளுடன் இப்பாடசாலையில் கல்வி கற்ற மாணவர்கள் அதிகமாக பல்கலைக்கழக அனுமதியை பெற்று வருவதும் அதிகரித்து வருகின்றன.

எதிர்காலத்தில் உயர்தர வகுப்புக்கள் ஆரம்பிப்பதற்கான அனுமதியை பெறுவதற்கு பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்முயற்சி வெற்றியளிப்பதற்கு ஏக வல்லோனை நாம் பிரார்த்திப்போமாக!


இல்மா முஸ்லிம் வித்தியாலய கட்டடங்கள்

**★ கிராமத்தின் பிரதான பள்ளிவாசல்**

ஜாமிஉல் ஹைறாத் ஜும்ஆ பள்ளிவாசல்

அம்பலந்துவை கிராமத்தில் மஸ்ஜித் இல்லாதது பெரும் குறையாகவே இருந்தது. இது நீண்டகாலத்திற்கு முந்திய வரலாறு ஆகும். தொழுகைக்காகவும் ஏனைய தேவைகளுக்காகவும் இவர்கள் பள்ளிமுல்லை ஜும்ஆப் பள்ளிவாசலையே நாடினர். பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கால்நடையாக செல்லவேண்டிய நிலமையே காணப்பட்டது. பின்னர் பள்ளிவாசலின் தேவையை உணர்ந்து 1882ஆம் ஆண்டளவில் ஊர் மக்கள் அனைவரும் இணைந்து பள்ளிவாசல் ஒன்றை நிர்மாணிக்க ஆலோசனை செய்தனர். இதன் அடிப்படையில் 1883ஆம் ஆண்டு தற்போது அம்பலந்துவை ஜும்ஆப் பள்ளிவாசல் அமைந்துள்ள இடத்தில் தென்னங் குற்றிகளையும் தென்னம் ஓலைகளையும் கொண்டு குடிசை வடிவில் ஒரு மஸ்ஜித் அமைக்கப்பட்டது. இப்பள்ளிவாசலின் முதலாவது நம்பிக்கைப் பொறுப்பாளர் சபையின் தலைவராக ஈ.சி லெப்பை என்பவர் நியமிக்கப்பட்டார். முதலாவது இமாமாக ஹேனமுல்லையைச் சேர்ந்த மர்ஹூம் செய்னுலாப்தீன் லெப்பையின் தந்தை அப்துர்ரஹீம் என்பவரும் முஅத்தினாக சம்சுதீன் லெப்பை என்பவரும் கடமையாற்றினார்கள். எமது பள்ளிவாசலில் ஜும்ஆப் பிரசங்கம் அப்துர்ரஹீம் என்பவராலேயே நடத்தப்பட்டது, நடத்தப்பட்டு வந்ததாக சரித்திரம் இன்றும் கூறுகிறது.


இல்மா முஸ்லிம் வித்தியாலய அதிபர் ரிஸ்மி மஹ்ரூப்

1895ஆம் ஆண்டில் இலங்கைக்கு வருகைதந்த மார்க்க பெரியார் அஷ்ஷெய்க் மௌலானா முஹம்மத் பின் குல் ரசீத் அல் குராசானி அவர்களால் 1896ம் ஆண்டு பள்ளிவாசல் அமைந்துள்ள காணிப்பகுதி விலைக்கு வாங்கப்பெற்றது. பின்னர் பள்ளிவாசலை அண்மித்த நிலப்பரப்பும் சில தனவந்தர்கள் மூலம் பள்ளிவாயலுக்கு வக்பு செய்யப்பட்டவையாகும். தற்போது அவ்விடங்களில் கடைகள், வீடுகள், மத்ரஸாக்கள் அமையப்பெற்று அதன் மூலம் பள்ளிவாசலுக்கு வருமானத்தை ஈட்டித் தரக்கூடியதாக உருவாகியுள்ளன.

முக்கியமாக பள்ளித்தோட்டம் என்று அழைக்கப்படும் பகுதி பேருவளையைச் சேர்ந்த கொடைவள்ளல் மர்ஹூம் அல்ஹாஜ் எம்.ஐ.எம். நளீம் அவர்களால் வாங்கப்பெற்று அன்பளிப்பு செய்யப்பட்டது. இன்று எமது தக்வா மஸ்ஜித் மூன்று மாடிக் கட்டடமாக காணப்படுகின்றபோதிலும் இன்னும் சிறுசிறு புனரமைப்புக்கள் நடந்தவண்ணமேயுள்ளன.


அஹதிய்யா கமிட்டி தலைவர் எம்.டி.எம் கௌஸ்


அஹதிய்யா அதிபர் ஜனாபா எம். ஜே.எப்.ஷாமிலா

படமும் தகவலும்:
மொறட்டுவை மத்திய விசேட நிருபர்
எம்.கே.எம். அஸ்வர்




அஹதிய்யா மாவட்ட மீலாத் போட்டிகளில் வெற்றிபெற்றோர்


அம்பலந்துவை அஹதிய்யா ஆசிரியர் குழாம்


அம்பலந்துவை அஹதிய்யா கமிட்டி உறுப்பினர்கள்



# புலமைக் கதிர்

தரம்-5 வகுப்பு மாணவர்களுக்கான





திருமதி.பத்மா சந்திரமோகன்
புனித அந்தோனியார் கல்லூரி
கொழும்பு - 13

## புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - I

1 மணித்தியாலம் 15 நிமிடம்

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக. சரியான விடையின் கீழ் கோடிடுக.**

01. சமச்சீர் அச்சு ஒன்றை மட்டும் கொண்டுள்ள உருவின் கீழ் கோடிடுக.

i.  ii.  iii. 

02. 

வெற்றிடத்துக்கு வரவேண்டிய உருவானது?

i.  ii.  iii. 

03. புத்தளம் எனும் சொல் எழுதப்பட்டுள்ள இரகசியக் குறியீட்டு முறையாக இருக்கக் கூடியது?

i.  ii.  iii. 

04. 


இங்கு அதிகமாகக் காணப்படுவை
i. ஒற்றை எண்கள்
ii. இரட்டை எண்கள்
iii. சரியாகக் கூறமுடியாது

05. மீற்றர்கோல் ஒன்றின் நீளமானது
i. 100 m ii. 100 cm iii. 10 m

06. மஞ்சள், சிவப்பு, பச்சை என மூன்று நிறங்களுடைய பூக்களை கார்த்திகா ஒரு கூடையில், மேலே கொடுக்கப்பட்ட ஒழுங்கில் போட்டாள். அவள் 29 ஆவதாக போட்ட பூவின் நிறம் யாது?
i. சிவப்பு ii. மஞ்சள் iii. பச்சை

07. 1996ஆம் வருடம் டிசம்பர் 31ஆம் திகதி புதன்கிழமை எனில் 1994ஆம் வருடம் ஜனவரி 01ஆம் திகதி என்ன கிழமை?
i. சனிக்கிழமை ii. ஞாயிற்றுக் கிழமை iii. திங்கட் கிழமை

08. நிவேகரன் பாடசாலை முடிந்து வீடு திரும்பும் போது அவனது நிழல் அவனுக்கு பின்னால் காணப்பட்டது. எனில் அவன் பிரயாணம் செய்யும் திசை யாது?
i. தெற்கு ii. கிழக்கு iii. மேற்கு

09. ஜனினா ஒரு வாரம் முழுவதும் தினமும் அவளது தந்தையிடம் ரூபாய் 50.00 ஐ பெற்றுக்கொண்டு அதில் ரூபாய் 30.00 ஐ செலவு செய்வாள். ஒரு வார இறுதியில் அவளிடம் மிகுதியாக இருந்த பணம் எவ்வளவு?
i. ரூபாய் 140.00 ii. ரூபாய் 350.00 iii. ரூபாய் 280.00

10. ஒரு இலக்கத்தை அதே இலக்கத்தால் பெருக்கினால் வரும் விடை 49 எனில் அவ்விலக்கத்தை 9 ஆல் பெருக்கினால் வரும் விடை யாது?
i. 81 ii. 63 iii. 54

11. ஒரு பெட்டியில் 5 சிவப்பு நிற முத்துக்களும் 7 பச்சை நிற முத்துக்களும் 4 நீல நிற முத்துக்களும் இருந்தன. அவற்றை கண்களால் பார்க்காமல் பச்சை நிற முத்து ஒன்றினை பெற வேண்டுமாயின் ஆகக் கூடுதலாக எத்தனை முறை முத்துக்களை எடுக்க வேண்டும்?
i. 9 தடவை ii. 10 தடவை iii. 11 தடவை

12. பின்வருவனவற்றுள் கடிகார முகத்தில் செங்கோணத்தை உருவாக்காத நேரமெது?
i. 9 மணி ii. 3 மணி iii. 2.30 மணி

13. 5க்கு அடுத்துள்ள இரட்டை எண்ணை 6க்கு அடுத்துள்ள ஒற்றை எண்ணுடன் கூட்டினால் பெறப்படும் விடையை உரோமன் இலக்கத்தில் எழுதுக.
i. XIII ii. XV iii. XVI

14. 3495 ஐ 5555 உடன் கூட்டி வருகின்ற விடையை எண் பெயராக எழுதினால்?
i. தொள்ளாயிரத்து ஐம்பது ii. தொள்ளாயிரத்து ஐந்து
iii. ஒன்பதாயிரத்து ஐம்பது

15. ஒரு கூடையில் 250 பழங்கள் இருந்தன. 23 பழங்கள் வீதம் மூன்று முறை அப்பழங்கள் எடுக்கப்பட்டன. மிகுதியாக அக் கூடையிலுள்ள பழங்கள் எத்தனை?
i. 175 ii. 181 iii. 227

16. நானும் எனது நண்பனும் நண்பனின் தங்கையும் அவர்களின் பெற்றோரும் கடற்கரைக்குச் சென்றோம். கடற்கரைக்குச் சென்றவர்கள் மொத்தம் எத்தனை பேர்?
i. 7 ii. 6 iii. 5

17. ஒரு புத்தகத்தின் விலை ரூபாய் 175.00 ஒரு பென்சிலின் விலை ரூபாய் 25.00 மூன்று புத்தகங்கள் வாங்கும் பணத்துக்கு எத்தனை பென்சில்கள் வாங்கலாம்?
i. 21 புத்தகங்கள் ii. 20 புத்தகங்கள் iii. 19 புத்தகங்கள்

18.

| | | |
|---|---|---|
| 8 | 4 | 7 |
| 2 | 9 | 8 |
| ? | 6 | 4 |

வெற்றுக் கூண்டில் வர வேண்டிய இலக்கம் யாது?
i. 6
ii. 7
iii. 9

19. ஒரு வட்டம் ஒன்றினுள் ஆகக் கூடுதலாக எத்தனை செங்கோணங்கள் வரையலாம்?
i. 2 ii. 4 iii. பல

20. 

இவ்வுருவிலுள்ள முக்கோணங்களின் எண்ணிக்கை யாது?
i. 4
ii. 5
iii. 10

21. கோகுலின் வயதின் காற்பங்கு சுதனின் வயது ஆகும். சுதனின் வயது 4 எனில் இருவரினதும் வயதுகளின் கூட்டுத்தொகை யாது?
i. 20 ii. 24 iii. 26

22. மோட்டார் சைக்கிளில் பயணிப்பவர்கள் யாவரும் கட்டாயமாக தலைக்கவசம் அணிய வேண்டும் என்பதற்கான காரணமாக அமைவது,
i. தலைக்கவசம் அழகானது என்பதனால்
ii. தலைக்கவசம் அணியாவிட்டால் காவற்துறையினர் தண்டிப்பார்கள் என்பதனால்
iii. தலைக்கவசம் அணிவதனால் பாதுகாப்பு கிடைக்கும் என்பதனால்

23. 5 மனிதர்கள் ஒரு வேலையை 4 நாட்களில் செய்து முடிப்பார்கள் எனில் 2 மனிதர்கள் அவ்வேலையை எத்தனை நாட்களில் செய்து முடிப்பார்கள்
i. 8 நாட்களில் ii. 10 நாட்களில் iii. 12 நாட்களில்

24. கீழுள்ள இலக்கங்களில் எவ்விரண்டு இலக்கங்களைக் கூட்டும் போது பெறப்படும் விடையானது அவ்விரண்டு இலக்கங்களைப் பெருக்கும் போது கிடைக்கும் விடையை விடக் கூடுதலாகும்.
i. 3, 4 ii. 2, 2 iii. 2, 1

25. ஹரனிசிடம் 10 ரூபாய் 5 ரூபாய் என மொத்தம் 16 நாணயங்கள் உள்ளன. இந்த நாணயங்களின் மொத்த பெறுமதி ரூபாய் 95.00 எனில் அவனிடம் உள்ள 10 ரூபாய் நாணயங்களின் எண்ணிக்கை யாது?
i. 6 ii. 5 iii. 3

26. உச்சி, விளிம்பு, முகம் இவை மூன்றும் சமனாக உள்ள உருவானது

i.  ii.  iii. 

27. ஒலிம்பிக் போட்டி 4 வருடங்களுக்கு ஒருமுறை நடைபெறும். 10 ஆவது ஒலிம்பிக் போட்டி 1996 ஆம் ஆண்டு நடைபெற்றதெனின் 16ஆவது ஒலிம்பிக் போட்டி எந்த வருடம் நடைபெறும்?
i. 2020 ii. 2036 iii. 2044

28. ஆறாவது சதுர எண் யாது?
i. 25 ii. 36 iii. 49

29. 5 m நீளமுள்ள ஒரு கயிறு துண்டினை சரி அரைவாசியாக மடித்து மீண்டும் அதனை சரி அரைவாசியாக மடித்து ஒருமுறை வெட்டினால் கிடைக்கும் கயிறு துண்டுகளின் எண்ணிக்கை யாது?
i. 3 துண்டுகள் ii. 4 துண்டுகள் iii. 5 துண்டுகள்

30. "பெண் மயில் அழகிய தோகை விரித்தாடியது" இக்கூற்று
i. சரி ii. பிழை iii. கூறமுடியாது

31. 






i. 23 ii. 30 iii. 32

32. அடம்பன் கொடியும் திரண்டால் மிடுக்கு - என்பதன் பொருள்
i. சுத்தம் சுகம் தரும் ii. ஒற்றுமையே பலம்
iii. விடாமுயற்சி வெற்றி தரும்

33 10 தொடக்கம் 25 வரை உள்ள எண்களில் 4 ஆல் வகுபடக்கூடிய எண்களின் கூட்டுத்தொகை யாது?
i. 72 ii. 76 iii. 78

34. "இன்று மாலை இடியுடன் கூடிய மழை பொழியும்" இக்கூற்று
i. நிச்சயமாக நிகழும் ii. நிச்சயமாக நிகழாது
iii. கூறமுடியாது

35. முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கின்ற போது எவ்வித மாற்றத்தையும் காட்டாத தமிழ் எழுத்துக்கள்
i. டப ii. பய iii. யவ

36. ஒரு சதுர வடிவமான கடதாசியை செவ்வக வடிவமாக மாற்ற அக்கடதாசியை குறைந்தது எத்தனை தடவை மடிக்க வேண்டும்.
i. 1 தடவை ii. 2 தடவைகள் iii. 3 தடவைகள்

37. பச்சை, மஞ்சள், சிவப்பு, நீளம், ஊதா இவற்றுள் வேறுபட்ட சொல்
i. மஞ்சள் ii. ஊதா iii. நீளம்

38. சஸ்வின் தனுக்ஷனை விட உயரமானவன். தனுக்ஷன் மிதுர்ஷனியை விட உயரமானவன். மிதுர்ஷனி சஸ்வினை விட,
i. உயரமானவள் ii. உயரம் குறைந்தவள் iii. கூறமுடியாது

39. 6  7 = 50  8 இரு பக்கம் சமனான எண்ணிக்கை வர வேண்டுமாயின்  ,  ஆகியவற்றின் குறியீடுகள் முறையே
i. X, − ii. +, − iii. X, ÷

40. அநேகமான மிருகங்களில் இயல்பாக அமைவது
i. வேகமாக ஓடுதல் ii. குட்டி ஈன்று பால் கொடுத்தல்
iii. மாமிச உணவை மட்டும் உண்ணுதல்

(11ஆம் பக்கம் பார்க்க)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

1 மணித்தியாலம் 15 நிமிடம்

எல்லா வினாக்களுக்கும் விடை தருக.

**I.** **கீழே கொடுக்கப்பட்டுள்ள பாடலை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.**

துள்ளித்துள்ளி ஓடுது பார்
வெள்ளை முயல் அம்மா – அதை
மெல்ல ஓடிப் பிடித்திடவே
மிகவும் ஆசை அம்மா

பஞ்சு போன்ற உடலைத் தடவிப்
பார்க்க ஆசை அம்மா – நான்
கொஞ்சிப் பேசிக் கூடி ஆடிக்
குதிக்க வேண்டும் அம்மா

01. பாடலிலுள்ள அடுக்குத் தொடரை தெரிந்து எழுதுக.

…………………………………………………………………………………

02. இதிலுள்ள பண்புப்பெயர் எது?

…………………………………………………………………………………

03. முயலின் உடல் எதனைப் போன்றது என பாடலில் கூறப்பட்டுள்ளது?

…………………………………………………………………………………

04. ‘அதை’ எனும் சொல்லின் பன்மை சொல் யாது?

…………………………………………………………………………………

05. ஒத்த கருத்துச் சொற்களை எழுதுக.

i. அம்மா - ………………………… ii. ஆசை - ……………………………..

iii. உடல் - …………………………

06. பாடலிலுள்ள உயர்திணை ஒருமை படர்க்கை பெயர்ச்சொல் எது?

…………………………………………………………………………………

**II.**

07. சரியாக எழுதப்பட்ட சொல்லின் கீழ் கோடிடுக.
i. வெட்கம், வெக்கம், ii. தீபாவளி, தீவாளி iii. இங்கனம், இங்கணம்

08. கீழே கொடுக்கப்பட்டுள்ள ஆண்பால் சொற்களுக்குரிய பெண்பால் சொற்களை எழுதுக.

i. மணவாளன் - ……………………… ii. காவற்காரன் - ………………………

09. எதிர்கருத்துக்களை எழுதுக.

i. இன்சொல் - ………………………... ii. இம்மை - ………………………

iii. ஐக்கியம் - ……………………… iv. புதுமை - ………………………

10. பின்வரும் தன்மை வாக்கியத்தினை முன்னிலை வாக்கியமாக மாற்றுக.

i. நான் நேற்று கோயிலுக்கு போனேன். ……………………………………………

ii. நாங்கள் சுற்றுலா செல்வோமா? ……………………………………………

11. சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியமாக மாற்றி எழுதுக.

i. அரசன் / செய்தான் / ஆட்சி / தவறாது / நாட்டை / நீதி

…………………………………………………………………………………

ii. மருந்து / போதும் / பொன் / என்ற / மனமே / செய்யும்

…………………………………………………………………………………

**III.**

12. இணைமொழிகளை பூரணப்படுத்துக.

i. குன்றும் - ………………………… ii. எலும்பும் - ………………………

13. உவமைத் தொடருக்கு பொருத்தமான கருத்தை எழுதுக.

i. காட்டுத் தீ போல - ……………………………………………………

ii. கலங்கரை விளக்கு போல - ……………………………………………

14. பழமொழிகளை பூரணப்படுத்துக.

i. குப்பையிற் …………………… குன்றிமணி …………………………

ii. காற்றுள்ள …………………… தூற்றிக் …………………………

15. தொனி மரபுகளை எழுதுக.

i. புறா - ………………………… ii. யானை - …………………………

iii. மயில் - ……………………… iv. எருமை - ……………………………

16. வித்து மரபுப் பெயரை எழுதுக.

i. மாதுளை - ………………………… ii. நெல் - ……………………………

iii. அவரை - ……………………… iv. மா - ………………………………

17. எழுவாய் அடைமொழியின் கீழ் கோடிடுக.

i. கிழக்கு வானில் பிரகாசமான சூரியன் மெல்ல உதித்தது.

ii. காட்டில் பெரிய மிருகங்கள் அங்குமிங்கும் அலைந்தன.

18. பறவைகள் வானில் சிறகு விரித்து பறந்தன. இதிலுள்ள சினைப்பெயரை தெரிந்து எழுதுக.

…………………………………………………………………………………

**IV.**

19. படத்துக்கு பொருத்தமான ஆங்கில சொற்களை எழுதுக.





i. ………………………………… ii. …………………………………

20. கீழே கொடுக்கப்பட்ட மனித உருவில் ஆங்கில எழுத்துகளால் குறித்துக் காட்டப்பட்ட பாகங்களின் பெயர்களை சிங்கள மொழியில் கூறும் விதத்தை தமிழ் எழுத்துக்களில் எழுதுக.




A - ………………………………

B - ………………………………

C - ………………………………

D - ………………………………

E - ………………………………

F - ………………………………

**V.**

21. இந்த எண் சட்டம் காட்டும் எண்ணுடன் 25 ஐக் கூட்டி வருகின்ற விடையை எண் பெயராக எழுதுக.




…………………………………………………………

22. 7083 இதனை விரித்தெழுதுக. ……………………………………………

23. 

இக்கடிகார முகத்தில் அடுத்து வரும் செங்கோணத்தை உருவாக்க பெரியமுள் எத்தனை தடவை கடிகார முகத்தை சுற்றி வர வேண்டும்?

…………………………………………………………

24. 

i. இவ்வுருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசமத்தில் தருக.

…………………………………………………………

ii. நிழற்றப்படாத பகுதியை பின்னமாக தருக

…………………………………………………………

25. இக்கூட்டினுள் உள்ள எண்களில் 3 ஆல் வகுபடாத எண்களின் கூட்டுத்தொகை யாது?




…………………………………………………

26. 

இங்குள்ள நட்சத்திரங்களை 5 ஆல் பெருக்கி அதனுடன் 140 ஐக் கூட்டி வருகின்ற விடையிலிருந்து 200 ஐக் கழித்தால் வரும் விடை என்ன?

…………………………………………………………

27. 

இவ்வுருவிலுள்ள செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?

…………………………………………………………

28. 1 kg அரிசியின் விலை ரூபாய் 240.00 எனில் 3kg 750 g அரிசியின் விலை என்ன?

…………………………………………………………………………………

29. 7630 + 4025 + 8069 = ? ……………………………………………………

**VI.** **சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

30. நாம் பொது இடங்களில் பின்பற்ற வேண்டிய பண்புகளில் ஒன்றானது
i. உரத்து பேசுதல் ii. தேவையற்ற உபகரணங்களை கையாளுதல்
iii. அமைதியாகவும் இடையூறின்றியும் நடந்து கொள்ளல்

31. எமது தேசிய கீதத்தை இயற்றியவர்
i. ஆனந்த சமரகோன் ii. அமரதேவா iii. கன்னங்கர

32. இன, மத, பேதமற்று சகலரும் வழிபடச் செல்லுமிடம்
i. சீகிரியா ii. அம்பக்க தேவாலயம் iii. சிவனொளிபாதமலை

33. வெடித்து பரவும் வித்து வகையானது
i. எருக்கலை ii. பருத்தி iii. எண்ணெய் வித்து

34. முலையூட்டி பிராணியிடம் காணப்படாத பண்பு
i. பாலூட்டுதல் ii. குட்டியீனுதல் iii. முட்டையிடுதல்

(12ஆம் பக்கம் பார்க்க)

(00 ஆம் பக்கத் தொடர்)

# புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் - II

35. முறையான வாழ்க்கை வட்டத்தை கொண்டுள்ள பிராணி
i. தவளை ii. கரப்பான் iii. பாம்பு

36. மல்புளுட்டா எமது நாட்டுக்குரிய
i. மீனினம் ii. வண்ணத்துப்பூச்சி iii. ஊர்வன

37. 
இங்கு காணப்படும் தையல் வகையானது
i. கம்பளித் தையல்
ii. மீன் முள்ளுத் தையல்
iii. சங்கிலித் தையல்

38. விற்பனை செய்யப்படும் குளிர்பான வகைகளில் அதிக சீனியுள்ளதைக் குறித்துக் காட்டும் நிறமானது
i. பச்சை ii. மஞ்சள் iii. சிவப்பு

39. நாய் கடித்தவுடன் செய்யக்கூடாத செயல்
i. கடித்த இடத்தை துணியினால் சுற்றிக் கட்டுதல்
ii. கடிவாயை நன்கு கழுவுதல்
iii. மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லல்

40. ஏலேலோ ஐலசா... என பாடப்படும் பாடல்கள்
i. மீனவப் பாடல் ii. அரிவி வெட்டும் பாடல் iii. தாலாட்டுப் பாடல்

41. பொது வாகனமாக அமையாதது
i. பேருந்து ii. புகையிரதம் iii. மகிழூர்ந்து

42. பெரும் தெருக்களில் ஒளிச் சமிக்ஞை விளக்கில் மஞ்சள் நிற விளக்கு ஒளிர்வதன் கருத்து
i. வாகனங்கள் பயணிக்கலாம்
ii. வாகனங்கள் பயணிக்க ஆயத்தமாகலாம்
iii. வாகனத்தை வலப்பக்கம் திருப்புக.

43. கிராமிய விளையாட்டுக்களில் ஒன்றாக அமையாதது
i. கிட்டிப்புள் ii. கிளித்தட்டு iii. கிரிக்கெட்

44. பாடசாலை ஒன்றில் அதன் வரலாறு பற்றிய தகவல்களை அறிய உதவும் நூல்
i. பாட நூல்கள் ii. சுவரொட்டிகள்
iii. சம்பவத் திரட்டு புத்தகம்

45. ஆழமான நீர்நிலையில் ஒருவர் மூழ்கிய போது உடனடியாக செய்யக் கூடாதது
i. அவரைக் காப்பாற்றுவதற்காக நீரில் குதித்தல்
ii. உதவி கேட்டு கூக்குரலிடுதல்
iii. பலகை அல்லது டயர் டியூப்பை நீரிலிடல்

46. கிணற்றிலிருந்து நீர் அள்ளப் பயன்படுவது
i. செக்கு ii. கப்பி iii. பூவாளி

47. எமது நாட்டில் இலவசமாக கிடைக்கும் சேவைகளில் ஒன்றானது
i. பாதுகாப்பு ii. மின் iii. நீர்

48. நன்னீரை விட கடல் நீரானது அடர்த்தி
i. அதிகம் ii. குறைவு iii. கூறமுடியாது

49. 
படத்தில் காணப்படும் உருவானது
i. கோபுரம்
ii. மின்னற் கடத்தி
iii. தொலைக்காட்சி என்டனா

50. வீட்டுத் தோட்ட பயிர்களுக்கு இடுவதற்கு உகந்த மண்ணானது
i. இருவாட்டி மண் ii. களிமண் iii. வண்டல் மண்

51. திசையறி கருவியில் காணப்படும் காந்த வகையானது
i. சட்டக் காந்தம் ii. பரியிலடக் காந்தம் iii. ஊசிக் காந்தம்

52. நீண்ட நாட்களாக சூரியஒளி படாத தாவரமொன்றின் இலைகளின் நிறம் காணப்படுவது
i. சிவப்பாக ii. மஞ்சளாக iii. பச்சையாக

53. இலங்கையின் முதலாவது தாது கோபம்
i. தூபராம ii. ஜேதவனராமய iii. சிகிரியா

54. புனித வெள்ளரசு மரம் காணப்படும் இடமானது
i. கண்டி ii. பொலன்னறுவை iii. அனுராதபுரம்

55. தேசப்படத்தில் நீர்நிலைகளை குறித்துக் காட்டப் பயன்படும் நிறமானது
i. பச்சை ii. சிவப்பு iii. நீலம்

56. 
படத்திலுள்ள உரு காட்டும் உருக்கோல உரு எது?
i. கன்னி
ii. தென் சிலுவை
iii. மிதுனம்

57. போமலின் இடப்பட்ட மீனை உண்பதனால் ஏற்படும் விளைவு
i. உதடுகள் வீங்குதல் ii. வாந்தி ஏற்படுதல்
iii. உயிரிழப்பு உண்டாகுதல்

58. வேடுவர்களின் நடனமாக அமைவது
i. பரதம் ii. கிரிகொரங்கா iii. கண்டியன் நடனம்

59. யால தேசிய பூங்கா அமைந்துள்ள மாவட்டம்
i. மொனராகல ii. அம்பாறை iii. யாழ்ப்பாணம்

VII.

60. 'இரவு வானின் அழகிய காட்சி' என்ற தலைப்பில் கருத்துள்ள மூன்று வாக்கியங்கள் அமைக்குக. ஒவ்வொரு வாக்கியத்திலும் ஐந்து சொற்களுக்கு குறையாமல் இருப்பதோடு எழுவாய், பயனிலை தொடர்பு முறையாக பேணப்பட வேண்டும்.

.............................................................................................................

இன்று வெளியாகியுள்ள புலமைப்பரிசில் I மற்றும் II இற்கான விடைகள் எதிர்வரும் 10ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தினகரனில் வெளியாகும்.

## கடந்த வார (22.09.2023) வினாத்தாள் II இற்கான விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1. 3 | 11. 1 | 21. 1 | 31. 3 |
| 2. 2 | 12. 2 | 22. 2 | 32. 1 |
| 3. 1 | 13. 3 | 23. 3 | 33. 1 |
| 4. 2 | 14. 1 | 24. 3 | 34. 2 |
| 5. 1 | 15. 2 | 25. 2 | 35. 2 |
| 6. 3 | 16. 3 | 26. 1 | 36. 3 |
| 7. 2 | 17. 1 | 27. 2 | 37. 2 |
| 8. 2 | 18. 3 | 28. 1 | 38. 1 |
| 9. 1 | 19. 1 | 29. 3 | 39. 2 |
| 10. 2 | 20. 3 | 30. 3 | 40. 1 |



வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரியவை இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானி நேற்று சந்தித்து கலந்துரையாடியுள்ளார். வெளிவிவகார அமைச்சில் இடம்பெற்ற இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையேயான இருதரப்பு நட்புறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.



சீனன்கோட்டை நவ்பல் ஜாபிர் மாவத்தையிலுள்ள இப்ராஹீமிய்யா ஸாவியாவில் நடைபெற்ற மீலாத் விழாவில் விசேட பேச்சாளராக கண்டி மஸ்ஜிதுர் ரஹ்மான் பள்ளிவாசல் இமாம் மௌலவி அமீர் ஹம்ஸா கலந்துகொண்டார். மௌலவி ஹம்ஸாவுடன் விழா ஏற்பாட்டுக் குழுத் தலைவர் முப்தாஸ் முன்தாஸ் உட்பட உறுப்பினர்களான ஸாவியா இமாம் மௌலவி முஹம்மத் முத்தலிப் (பாரி), முகத்தமீன்கள், இஹ்வான்களை படத்தில் காணலாம். (படங்கள் பேருவளை விசேட நிருபர்)

### புகையிரத பணியாளர்களுடன் மோதல்;

## தகப்பனும் மகனும் 11 வரை விளக்கமறியல்

(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)

பாணந்துறை புகையிரத பணியாளர்களுடன் ஏற்பட்ட மோதலில் சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களான தகப்பனும் மகனும் விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறை புகையிரத நிலையத்தில் வார முற்பகுதியில் பயணச் சீட்டு விநியோகம் தொடர்பில் கடமையிலிருந்த புகையிரத நிலைய ஊழியர்களுடன் ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பாக மாறியதில் புகையிரத நிலைய அதிபர் (இயக்கம்), மற்றும் ஒரு பணியாளர் உள்ளிட்ட இன்னுமொருவர் காயமடைந்து ஆதார வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்த மோதல் சம்பவம் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள சந்தேக நபர்களான தகப்பனும் மகனும் பாணந்துறை மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டு எதிர்வரும் பதினொறாம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறை தெற்கு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

## நாத்தாண்டிய பிரதேச பகுதிகளில் வெள்ளம்

(நீர்கொழும்பு தினகரன் நிருபர்)

நாத்தாண்டிய பிரதேசத்தில் தொடரும் மழையுடன் கூடிய சீரற்ற காலநிலை காரணமாக தும்மோதர கிராமத்தில் வெள்ளம் ஏற்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்தின் மிகவும் தாழ்வான பிரதேசமாக தும்மோதர கிராமம் கணிக்கப்பட்டுள்ளது. தும்மோதர கிராமத்துக்கு மிகவும் அருகிலேயே ஒல்லாந்தர் கால்வாய் உள்ளது. அதன் நீர் மட்டம் தற்போது நிரம்பிய நிலையிலேயே காணப்படுகிறது.

இதனால் கிராம மக்கள் தமது கிராமத்துக்கு அருகிலுள்ள மேட்டு நிலங்களில் வசிக்கும் உறவினர்களின் வீடுகளுக்குச் சென்றுள்ளனர். தும்மோதர முஸ்லிம் வித்தியாலயத்தின் விளையாட்டு மைதானம் தற்போது வெள்ள நீரினால் நிரம்பியுள்ளது.

தொடர்ச்சியாக மழை பொழிந்து வருவதால் நீர்கொழும்பு குளியாப்பிட்டிய பிரதான வீதியின் போக்குவரத்து நடவடிக்கைகள் பாதிக்கப்படும் அபாயமும் உள்ளதாகவும் பிரதேசவாசிகள் தெரிவிக்கின்றனர் .

## ஈஸ்டர் பயங்கரவாத குண்டுத் தாக்குதல்: அபுஹிந்தின் தகவல்களை வெளியிட நாம் தயார்

### சபையில் எச். எம்.எம் ஹரீஸ் தெரிவிப்பு

(லோரன்ஸ் செல்வநாயகம்)

ஈஸ்டர் ஞாயிறு பயங்கரவாத குண்டுத் தாக்குதலின் சூத்திரதாரி அபுஹிந் தொடர்பான தகவல்களை வெளியிட, தாம் தயாரென்றும் எனினும் நம்பிக்கை தரக்கூடிய விசாரணை நடத்தப்பட வேண்டியது அவசியம் என்றும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று நடைபெற்ற துறைமுக அதிகார சபை மற்றும் சிவில் விமான சேவைகள் தொடர்பான ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

விவாதத்தில் தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

கடந்த ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல் தொடர்பான விவாதத்தில் சாய்ந்தமருது தொடர்பில் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன.

அந்த பிரதேசம் தொடர்பில் பிரதீப் சாப் என்ற நபர் சீஐடியில் முறைப்பாடொன்றை முன்வைத்துள்ளார்.

சாய்ந்தமருது மக்கள் சஹ்ரானுக்கு உதவினர். சஹ்ரானின் பயங்கரவாதிகளுக்கு அடைக்கலம் கொடுத்தனர் என்றும் அதற்காக அரசாங்கம் கல்முனையில் நகரசபையொன்றை ஏற்படுத்திக்கொடுத்துள்ளதாகவும் முறைப்பாடு செய்துள்ளனர்.

ஆனால், சாய்ந்தமருது மக்கள் தேசிய பாதுகாப்புக்கு பெரும் பங்களிப்பு செய்தவர்கள். சஹ்ரானின் குழுவினர் அங்கே இருந்த போது அவர்களை அம்மக்கள் காட்டிக்கொடுத்து அவர்களை அந்த இடத்திலேயே அழிக்க உதவினர். இதனை, நகர சபையுடன் தொடர்புபடுத்துவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அதேவேளை இராஜாங்க அமைச்சர் சிவ நேசத்துரை சந்திரகாந்தன் சபையில் உரையாற்றிய போது, இஸ்லாமிய கொள்கை மற்றும் இஸ்லாமிய கோட்பாடு தொடர்பில் தவறான கருத்துக்களை முன்வைத்துள்ளார்.

அசாத் மௌலான, அவர் மீது குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ள நிலையில், இதற்கு பதிலளிக்காது அவர் இஸ்லாமிய கொள்கைகள் தொடர்பில் தவறாக கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

இந்த தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் எவ்வாறு புலனாய்வு பிரிவினரால் பாதுகாக்கப்பட்டுள்ளார் என்பதனையும் கூற வேண்டும்.

# கிழக்கின் குரல்



## அம்பாறை மாவட்டத்தில் அனர்த்த அபாய குறைப்பு வேலைத்திட்டம்

(ஒலுவில் விசேட நிருபர்)

அம்பாறை மாவட்டத்தில் அனர்த்த அபாய குறைப்பு வேலைத்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீஸன் தெரிவித்தார்.

இதுதொடர்பாக மாவட்டத்திலுள்ள சகல பிரதேச செயலாளர்களுக்கும் அவசர நடவடிக்கை எடுக்குமாறும் அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தற்போது இரண்டாம் நிலை பருவ மழை வீழ்ச்சி ஆரம்பித்துள்ள நிலையில் பல்வேறு இடங்களில் வெள்ள நீர் சீராக வடிந்தோட முடியாமல் தேங்கி நிற்பதால் பொது மக்கள் பாரிய அசௌகரியங்களை எதிர்கொள்வதாகவும், இது தொடர்பில் பொது மக்கள் முறைப்பாடு செய்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

வெள்ள நீர் வடிந்தோட முடியாமைக்கான பிரதான காரணம் கால்வாய்கள் சீர் செய்யப்படாமை, மதகுகள் மற்றும் கால்வாய்களில் தடைகளை ஏற்படுத்துதல் மற்றும் சட்டவிரோத அத்துமீறல்கள் என்பனவாகும். இதனை கண்டறிந்து தடைகளை அகற்றுவதற்கான உரிய நடவடிக்கைகளை துரிதப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.



எதிர்வருகின்ற வடகீழ் பருவ பெயர்ச்சி மழை தொடங்குவதற்கு முன்னர் தடைகள் உள்ள பகுதிகளை அடையாளம் கண்டு துறைசார் நிறுவனங்களை கொண்ட குழுவினை அமைத்து உரிய தீர்வினை பொதுமக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

மேலும் அவசர நிலைமைகளின் போது பாதிக்கப்படும் மக்களுக்கு பதில் நடவடிக்கைகளை நடைமுறைப்படுத்தல், அனர்ந்த அபாய குறைப்பு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகள் கிராமிய மற்றும் பாடசாலை மட்டத்தில் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

கிழக்கு மாகாண பாடகர் போட்டி

## அட்டாளைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மூவர் தெரிவு

(திராய்க்கேணி தினகரன் நிருபர்)



கிழக்கு மாகாண பாடகர் போட்டியில் அட்டாளைச்சேனை பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மூவர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர். அட்டாளைச்சேனை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த பதவி நிலை உத்தியோகத்தரான பிரதேச செயலாளர்

எம். ஏ.சி. அகமது ஷாபீர், பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கே எம். கபீர் மற்றும் திட்டமிடல் பிரிவின் பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் எம்.பியாஸ் ஆகியோரே இவ்வாறு தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கடந்த ஆகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி கிழக்கு கல்முனை வடக்கு பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கிடையே மாவட்ட மட்ட பாடல் போட்டி நடைபெற்றது.

இதில் நூற்றுக்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர். அதனடிப்படையில் வெற்றி பெற்றவர்களின் பெயர்ப் பட்டியல் இறுதியில் மாகாண மட்டத்திற்கு தெரிவு செய்யப்பட்டது. அதனைத் தொடர்ந்து மாகாண மட்ட போட்டியானது கடந்த செப்டெம்பர் மாதம் 7 ஆம் திகதி திருகோணமலை கலாசார பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தில் நடைபெற்றது.

அந்த போட்டி முடிவுகளின் அடிப்படையில் வெற்றியீட்டிய 10 பேரில் அம்பாறை மாவட்டத்திலிருந்து மூன்று பேர் மாத்திரமே தெரிவு செய்யப்பட்டனர்.

## மூதூர் பிரதேச சபையால் வடிகான்கள் துப்புரவு

(மூதூர் தினகரன் நிருபர்)

மூதூர் பிரதேச சபையால் டெங்கு நுளம்பு பரவக்கூடிய வடிகான்கள் துப்புரவு செய்யும் பணிகள் நடைபெற்றுவருகின்றன.

டெங்கு நுளம்புகள் பெருகக் கூடிய வடிகான்களில் தேங்கியிருக்கும் மண்அடைப்புகள், அழுக்குகள் அகற்றப்பட்டு துப்புரவு பணிகள் இடம்பெற்றன.

பருவ கால மழை பெய்து வருவதால் நுளம்புகள் பெருமளவில் பெருகக்கூடிய வாய்ப்புகள் காணப்படுவதால் மழை நீர் தேங்காமல் ஓடக்கூடிய வகையில் தூய்மைப்படுத்தப்பட்டு கழிவுகளும் அகற்றப்பட்டு வருகின்றன.

## அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்குழுவுக்கு புதிய நியமனங்கள்

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)



அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்களாக ஓய்வு பெற்ற அதிபர் எம்.பி. அப்துல் ஹமீட் மற்றும் அம்பாறை மாவட்ட கலாசார உத்தியோகத்தர் ஏ.எல். தௌபீக் ஆகியோர் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவினால் நியமிக்கப்பட்டுள்ளனர்.

நியமனக்கடிதம் பாராளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.அதாஉல்லாவால் நேற்றுமுன்தினம் வழங்கிவைக்கப்பட்டது.

## சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவன சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கு

(புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்)

கிழக்குப் பல்கலைக்கழக சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் 6வது சர்வதேச ஆய்வுக் கருத்தரங்கும் ஆய்வுரைகள் சமர்ப்பிப்பும் அதன் பணிப்பாளர் பேராசிரியர் புளோரன்ஸ் பாரதி கென்னடி தலைமையில் கல்லடியில் நடைபெற்றது.

ஆய்வு மாநாட்டிற்கு பிரதம விருந்தினராக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் வசந்தி அரசரெட்ணமும், சிறப்பு விருந்தினராக கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழகப் பீடாதிபதி பேராசிரியர் கோவித பானு திஸாநாயக்கவும், தலைமை பேச்சாளராக கட்புல அரங்கேற்ற கலைகள் பல்கலைக்கழக இயக்குநர் பேராசிரியர் ரோஹான் நேத்சிங்கவும், கௌரவ விருந்தினராக கிழக்கு பல்கலைக்கழக துணை வேந்தர் வ.கனகசிங்கம் மற்றும் பேராசிரியர்கள், கலாநிதிகள், விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



சுவாமி விபுலானந்தா அழகியற் கற்கைகள் நிறுவனத்தின் நுண்கலை கற்கைகளிலே உயர் கைத்தொழில் பொருளாதார வளர்ச்சியில் எவ்வாறு செல்வாக்கு செலுத்துகின்றது என்ற தலைப்பில் இந்த ஆய்வு மாநாடு நடைபெற்றது.

அதனைத் தொடர்ந்து ஆய்வாளர்களின் ஆய்வுக்கட்டுரைகள் சமர்ப்பிப்பும், ஆய்வு மன்ற கருத்துரைகளும் நடைபெற்றன.

மொத்தமாக 58 ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டதுடன் 11 ஆய்வு அரங்குகளில் இந்த ஆய்வுக் கட்டுரைகள் சமர்ப்பிக்கப்பட்டதாக ஆய்வு மாநாட்டின் செயலாளர் கலாநிதி நிலங்கா லியனகே தெரிவித்தார்.

## சம்மாந்துறை பத்திரகாளியம்மன் ஆலய வருடாந்த மகோற்சவம் இன்று ஆரம்பம்!

(காரைதீவு குறூப் நிருபர்)

வரலாற்று பிரசித்தி பெற்ற சம்மாந்துறை தமிழ் குறிச்சி ஸ்ரீ பத்திரகாளி அம்பாள் ஆலய தீ மிதிப்பு மற்றும் வருடாந்த அலங்கார உற்சவம் இன்று (6) வெள்ளிக்கிழமை கதவு திறத்தலுடன் ஆரம்பமாகியது.

தொடர்ச்சியாக 10 நாட்கள் திருவிழாக்கள் நடைபெற்று எதிர்வரும் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தீ மிதிப்பு வைபவத்துடன் நிறைவடையும் என ஆலய பரிபாலன சபை தலைவர் சீனித்தம்பி சுப்பிரமணியம் தெரிவித்தார். ஆலய பிரதம குரு கு. லோகேஷ் கிரியைகளை பகல் 12 மணிக்கும் மாலை 6:00 மணிக்கும் தினமும் நடத்தவிருக்கின்றார்.

8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பாற்குடபவனி நடைபெறவிருக்கின்றது.

15ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணியளவில் ஆலயத்துக்கு சொந்தமான மாவடி வளவில் மஞ்சள் குளித்து பின்னர் ஊர்வலமாக ஆலயத்துக்கு வந்து தீ மிதிப்பு வைபவம் நடைபெறும்.

## காணி உறுதிப்பத்திரம் வழங்கிவைப்பு

(அக்கரைப்பற்று வடக்கு தினகரன் நிருபர்)

சம்மாந்துறை மல்வத்தை ஆயுள்வேத மத்திய மருந்தகம் அமைந்துள்ள வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரம் வழங்கி வைக்கும் நிகழ்வு புதன்கிழமை (04) சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.



சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.எம்.ஹனிபா தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், குறித்த வைத்தியசாலைக்கான காணி உறுதிப்பத்திரத்தை கிழக்கு மாகாண சுதேச மருத்துவ திணைக்கள மாகாண ஆணையாளர் வைத்திய கலாநிதி திருமதி இ.ஸ்ரீதரிடம் வழங்கி வைத்தார்.

## பாம்பு தீண்டி பாடசாலை மாணவன் உயிரிழப்பு

(மட்டக்களப்பு குறூப் நிருபர்)

வந்தாறுமூலை விஷ்னு வித்தியாலயத்தில் தரம் 8 கல்வி பயிலும் பாடசாலை மாணவனொருவன் பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளதாக தெரியவருகின்றது.

கந்தசாமி டிலக்ஷன் என்ற மாணவனே இவ்வாறு பாம்பு தீண்டி உயிரிழந்துள்ளார்.

பாடசாலை விடுமுறை நாட்களில் உறவினர் வீடொன்றுக்கு சென்றிருந்த போதே மாணவனை பாம்பு தீண்டியுள்ளது. மாணவன் சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டு அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட போது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மாணவனின் வலது காலின் மேல் பாகத்தில் பாம்பு தீண்டியதால் குருதியோட்டத்தில் நஞ்சு கலந்து இதயம் செயலிழந்து மரணம் நிகழ்ந்துள்ளதாக கண்டறியப்பட்டது.



ஆயிஷா முன்பள்ளி பாடசாலையின் சிறுவர் தின நிகழ்வுகள் அக்கரைப்பற்று நீர் பூங்காவில் அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கெஸ்டோ அமைப்பின் தலைவரும், அதிபருமான ஜெ.எம்.அன்வர் நௌசாட் கலந்து கொண்டார்.

(படம் பாலமுனை தினகரன் நிருபர்)

## கிழக்கு பல்கலையின் 26ஆவது பட்டமளிப்பு விழா

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)

மட்டக்களப்பு வந்தாறுமூலை கிழக்கு பல்கலைக்கழகத்தின் 2022ஆம் ஆண்டுக்கான பொதுப்பட்டமளிப்பு விழா இன்று ஆரம்பமாகவுள்ளது. கிழக்கு பல்கலைக்கழகத்தின் வேந்தர் ஓய்வு பெற்ற பேராசிரியர் மா.செல்வராசா தலைமையில் நல்லையா ஞாபகார்த்த மண்டபத்தில் மூன்று அமர்வுகளாக இந்நிகழ்வு நடைபெறவுள்ளது.

இப்பட்டமளிப்பு விழாவில் 1649 உள்வாரி மாணவர்களும் 56 வெளிவாரி மாணவர்களும் பட்டங்களைப் பெற்றுக் கொள்வதோடு; 55 பட்ட பின்படிப்பு மாணவர்களும் உள்ளடங்கலாக 1760 மாணவர்கள் பட்டம் பெற்று வெளியாகவுள்ளனர்.

## திருகோணமலையில் கேரளா கஞ்சாவுடன் ஒருவர் கைது

(தம்பலகாமம் குறூப் நிருபர்)

திருகோணமலை துறைமுகப் பொலிஸ்பிரிவுக்குட்பட்ட மகமாயப்புரம் பிரதேசத்தில் கேரளா கஞ்சாவுடன் நேற்றுமுன்தினம் மாலை (04) ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக துறைமுகப் பொலிஸார் தெரிவித்தனர்

சந்தேகநபர் 34 வயதுடைய ,போதைப்பொருள் பழக்கமுடையவர் என தெரியவருகின்றது. கேரளா கஞ்சாவை உடமையில் மறைத்து வைத்திருந்த குற்றச்சாட்டிலேயே இவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரிடமிருந்து 420 மில்லிகிராம் கேரளா கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபரை திருகோணமலை நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்படுத்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக துறைமுகப்பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

## ஊடகவியலாளர் நாஸரின் தந்தை காலமானார்

(ஏறாவூர் சுழற்சி நிருபர்)



தினகரன் பத்திரிகையின் ஏறாவூர் நிருபர் எம்.ஜே.ஏ. நாஸரின் தந்தை சேக் அலிமுகம்மது கௌஸ் தனது 91வது வயதில் நேற்று வியாழக்கிழமை (05) ஏறாவூர் மக்காமடி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் காலமானார்.

## அட்டாளைச்சேனையில் நுகர்வோர் பாதுகாப்பு விழிப்புணர்வு கருத்தரங்கு

(பாலமுனை தினகரன் நிருபர்)

அம்பாறை மாவட்ட செயலகத்தின் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையினால் மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரி மாணவர்களுக்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி பீடாதிபதி சட்டத்தரணி கே.புண்ணியமூர்த்தி தலைமையில் நடைபெற்றது.

இதன்போது பாவனையாளர் உரிமைகள்,பொறுப்புகள், சட்டங்கள், பாதுகாப்பு மற்றும் பொருட்கள் சேவைகளின் போது கவனிக்க வேண்டிய முக்கியமான விடயங்கள் மற்றும் தற்போதைய சந்தையில் பொருட்களின் கட்டுப்பாட்டு விலை மற்றும் அதிகார சபையின் சட்டதிட்டங்கள் சம்பந்தமாக மாணவர்களுக்கு தெளிவுபடுத்தப்பட்டது.

இவ்விழிப்புணர்வு நிகழ்ச்சிக்கு பிரதான வளவாளராக அம்பாறை மாவட்ட நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் புலன் விசாரணை அதிகாரி இஷட்.எம் ஸாஜீத் மற்றும் புலன் விசாரணை அதிகாரி ஏ.ஏ.ஏ ஸர்பான், என்.எம் றிப்கான், ஏ.பீ.எம் றிப்சாத் ஆகியோருடன் கல்லூரி விரிவுரையாளர்களும் கலந்துகொண்டனர்.



# அம்பாறை மாவட்டத்தில் அதிகரிக்கும் மோட்டார் சைக்கிள் திருட்டு

அம்பாறை மாவட்டத்தில் நிந்தவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பல பகுதிகளில் அண்மைக்காலமாக மோட்டார் சைக்கிள் திருட்டு சம்பவங்கள் அதிகரித்துவருவது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

அதன்படி நிந்தவூர் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஏ. எம். நஜீம் தலைமையிலான குழுவினர் விசாரணைகளை மேற்கொண்டிருந்தனர். இதன்போது சந்தேகத்தின்பேரில் நால்வர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

இந்த நிலையில் நிந்தவூர் பொலிஸ் விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கப் பெற்ற தகவலின் அடிப்படையில் அவர்கள் வசமிருந்த திருடப்பட்ட நான்கு மோட்டார் சைக்கிள்களும் நேற்றுமுன்தினம் கைப்பற்றப்பட்டுள்ளன. சந்தேக நபர்கள் 23, 25 ,26, 46, வயதுகளையுடையவர்கள் என தெரியவருகின்றது.

சந்தேக நபர்களில் ஒருவர் திருடப்பட்ட மோட்டார் சைக்கிளை பிரித்து உதிரிப்பாகங்களை விற்பனை செய்துள்ளமையும் பொலிஸ் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

அத்துடன் திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு போலி இலக்க தகடு பொருத்தப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளமையும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தலைமன்னார் – இராமேஸ்வரம் கப்பல் சேவை விரைவில் தொடங்கும்

## இந்தியா சென்று அதிகாரிகளுடன் பேச்சு நடத்த முடிவு

(லோரன்ஸ் செல்வநாயகம்)



தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவையை நடத்துவதற்கான முன்னோடி நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளதாக துறைமுகங்கள் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

எதிர்வரும் 16ஆம் திகதி இந்தியாவுக்கான விஜயத்தை மேற்கொள்ளவுள்ளதாகவும் அங்கு கப்பல் துறை அதிகார சபை உள்ளிட்ட அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அமைச்சர் சபையில் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று ரிசாட் பதியுதீன் எம்.பி எழுப்பிய கேள்விக்குப் பதிலளிக்கும் போதே, அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

ரிஷாட் பதியுதீன் எம்.பி தமது கேள்வியின் போது,

தலைமன்னார் இராமேஸ்வரத்துக்கு இடையிலான கப்பல் சேவைகளை ஆரம்பிப்பது தொடர்பில் அரசாங்கம் நடவடிக்கைகளை மேற்கொண்டது.

அண்மையில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா மன்னார் பகுதிக்கு சென்று நேரடியாக நிலைமைகளை பார்வையிட்டார்.

அந்த வகையில் இது தொடர்பில் மேற்கொண்டுள்ள முன்னோடி நடவடிக்கைகள் என்ன? என்று ரிசாட் பதியுதீன் எம்.பி கேள்வியெழுப்பினார்.

இதற்குப் பதிலளிக்கும் போதே அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா இவ்வாறு தெரிவித்தார்.

அது தொடர்பில் மேலும் தெரிவித்த அமைச்சர்,

தற்போது தலைமன்னார் இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் ஏற்கனவே காணப்பட்ட உபகரணங்கள் மற்றும் பகுதிகள் அழிவடைந்துள்ளன. அவை திருத்தப்பட வேண்டும். தேவையான உபகரணங்கள் தற்போது அங்கு கொண்டு செல்லப்படுகின்றன. சுமார் ஆறு மாதங்களில் அந்த நடவடிக்கைகளை நிவர்த்தி செய்ய முடியும்.

இத்திட்டத்திற்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தில் 600 மில்லியன் ரூபாவை பெற்றுக் கொள்வதற்கான யோசனையை முன்வைத்துள்ளேன்.

எதிர்வரும் 16 இல், இந்தியாவுக்கு விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளேன். அங்கு சம்பந்தப்பட்ட துறையினருடன் இது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவேன். இக்கப்பல் சேவையை நடத்துவதில் அங்குள்ள தரப்பினரும் தயாராக வேண்டியுள்ளது. அந்நடவடிக்கைகள் முடிவுற்றதும் இந்த கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.


## பிரசித்த ஏல விற்பனை

03ம், 04ம் ஏப்ரல் 2023, 03ம், 04ம் மே 2023, 01ம், 02ம் ஜுன் 2023, 4ம், 5ம் ஜுலை 2023, 03ம், 04ம் ஆகஸ்ட் 2023, 01ம், 04ம் செப்டமபர் 2023 இல் "மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பிஎல்சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரண, பண்டாரகம, மத்துகம, பதுரலிய, பலாங்கொடை, ரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவ, கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான, நகர அலுவலகம், அளுத்கம, பேருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை, பதுளை நகர கிளை, அம்பலாந்தோட்டை, பண்டாரவளை. | 24 அக்டோபர் 2023 |
| நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, தெஹியத்தகண்டி, குருநாகல், குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், குளியாபிட்டிய, நாரம்மல, கலேவேல, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகரம் கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டிய, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, ஹட்டன், மஸ்கெலிய, திகனா, தம்புள்ளை. | 25 அக்டோபர் 2023 |
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம, மஹரகம நகர கிளை, கொட்டாவ, அதுருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை-கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொகுவல, ஜம்பெட்டா, டாம் வீதி, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொறளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிராண்ட்பாஸ், கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, பிறீமியர் கொழும்பு 07, அடிமை தீவு, கார்ப்பரேட் அலுவலகம், தலைமை அலுவலகம் கொழும்பு 07 | 26 அக்டோபர் 2023 |
| புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளிய, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு14, கணேமுல்ல, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிட்டிய, சிலாபம், கொச்சிக்கடை-நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில,மினுவங்கொட, கட்டுநாயக்க-அவிரிவத்த, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல, எலகந்த, மாவனல்ல, கல்பிட்டிய, கெக்கிரவா, அனுராதபுர நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சிய, தம்புத்தேகம, நொச்சியகம, பொலன்னறுவை, மெதிரிகிரிய, கந்தலை. | 27 அக்டோபர் 2023 |
| செங்கலடி, வாழைச்சேனை, கிண்ணியா, திருகோணமலை, கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, அட்டாளைச்சேனை, அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, சாய்ந்தமருது, சம்மாந்துறை, கல்முனை, ஏறாவூர், வஹாரை, மத்திய முகாம், சேருநுவர, கிரன், திருக்கோவில், திருகோணமலை நகரம், வவுணதிவு | 04 நவம்பர் 2023 |
| யாழ்ப்பாணம், யாழ்ப்பாண நகரம, யாழ்ப்பாணம் பிறீமியர், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மல்லாவி, வட்டுக்கோட்டை, கோப்பாய், கொடிகாமம், பருத்தித்துறை, சாவகச்சேரி, பேசாலை, தெல்லிப்பளை, வவுனியா, சங்கான், மன்னார், மருதங்கேணி. | 08 நவம்பர் 2023 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ஃபினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE

உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.


# நெய்னார் சமூக நலக் காப்பக ஏற்பாட்டில் 'வெய்யில் மனிதர்கள்' நூல் அறிமுக விழா

## தெமட்டகொடை வை.எம்.எம்.ஏ மண்டபத்தில் நாளை

சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளரும் எழுத்தாளருமான அஷ்ரஃப் சிஹாப்தீன் மொழி பெயர்த்த 'வெய்யில் மனிதர்கள்' எனும் நூலின் அறிமுக விழா நாளை 07ஆம் திகதி மாலை 4.00 மணிக்கு கொழும்பு 09, தெமட்டகொடை வீதியில் அமைந்துள்ள வை.எம்எம்.எம்.ஏ கேட்போர்கூடத்தில் நடைபெறவுள்ளது.

இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத்தின் ஏற்பாட்டிலும் மூத்த எழுத்தாளரும் மொழிபெயர்ப்பாளருமான கவிஞர் அல் அஸூமத் தலைமையிலும் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், பிரதம அதிதியாக இலங்கைக்கான பலஸ்தீனத் தூதுவர் கலாநிதி ஸூஹைர் எச்.எம்.தார் ஸெய்த் கலந்து கொள்ளவுள்ளார்.

விசேட அதிதிகளாக பலஸ்தீனத் தூதரகத்தின் முதலாவது செயலாளர் ஹிஷாம் அபூ தாஹா, முன்னாள் அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலி, சிரேஷ்ட நிர்வாக அதிகாரி ஏ.பி.எம்.அஷ்ரஃப் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். கௌரவ அதிதிகளாக அரச, தனியார்துறை முக்கியஸ்தர்கள், சிரேஷ்ட இலக்கியவாதிகள் கலந்து கொள்ளவுள்ளனர்.

நூல் தொடர்பான திறனாய்வை சிரேஷ்ட ஒலி, ஒளிபரப்பாளர் இளையதம்பி தயானந்தா, எழுத்தாளர் ஷாகிறா இஸ்ஸதீன், கவிஞர் நாச்சியாதீவு பர்வீன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

நூல் முதல் பிரதியை பத்திரிகையாளரும் எழுத்தாளருமான பஷீர் அலி பெற்றுக்கொள்ளவுள்ளார். விசேட பிரதியை இலங்கை நெய்னார் சமூக நலக் காப்பகத்தின் தலைவர் இம்ரான் நெய்னார் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

பிரபல பலஸ்தீன எழுத்தாளர் கஸ்ஸான் கனஃபானி எழுதிய 'அர்ரிஜாலு ஃபிஷ்ஷம்ஸ்' எனும் அரபுமொழி நாவலின் ஆங்கில மொழிபெயர்ப்பை கொண்டு இந்த நூல் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. 2020ஆம் ஆண்டு சிறந்த மொழிபெயர்ப்பு நாவலுக்கான அரச சாஹித்திய விருதையும் இந்த நூல் பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# மருதானையில் 'சப்த ஸ்வர லய இசை விழா –2023'

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் ஒலிபரப்பாளர், சங்கீத கலை வித்தகர் மற்றும் கலைச்சுடர் ஸ்ரீமதி அனுஷா மொரயஸின் ஏற்பாட்டில் 'சப்த ஸ்வர லய இசை விழா 2023' இன்று 6ஆம் திகதி 4.00 மணிக்கு கொழும்பு10, மருதானை டவர் மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதன்போது கர்நாடக இசை, வீணை வாத்தியம், வயலின் இசை, பரத கலாசார நிகழ்வு ஆகியவை நடைபெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக மேல் மாகாண சபையின் முன்னாள் உறுப்பினரும் நவாலியூர் சோமசுந்தரம் புலவரின் பேரனும் பொறியியலாளருமான லயன் ஷண் குகவரதன் கலந்துகொள்ளவுள்ளார். விசேட விருந்தினர்களாக முன்னாள் ஜனாதிபதியின் இந்துசமய ஒருங்கிணைப்பாளர், சிவநெறிக் காவலர் கலாநிதி சிவ ஸ்ரீ ராமச்சந்திர குருக்கள் பாபு சர்மா, கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின் அதிபர் அருட்சகோதரி மேரி ரெஜினா கவிதா, ஸ்ரீசத்தியசாய் மற்றும் இலங்கைக்கான சீரடிசாய் நம்பிக்கை நிதியத்தின் தலைவர் எஸ்.என்.உதயநாயகம்,

தினகரன் மற்றும் வாரமஞ்சரி பத்திரிகையின் பிரதம ஆசிரியர் தே.செந்தில்வேலவர், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் தமிழ்சேவை மற்றும் தென்றல் அலைவரிசையின் முன்னாள் கட்டுப்பாட்டாளர் ராஜபுத்திரன் யோகராஜன், பிரிஜ் அக்கடமியின் பணிப்பாளர் துரைரட்ணம் ஸ்ரீசுந்தரன், கொழும்பு புனித அன்னம்மாள் மகளிர் மகா வித்தியாலயத்தின் உப அதிபர் திருமதி மைதிலி உதயசெல்வம், கொழும்பு ஸ்ரீசத்ய சாய் நிலையத்தின் மகளிர் அணித் தலைவி திருமதி சர்வகுணதேவி சண்முகானந்தன், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சிரேஷ்ட அமைப்பாளர் திருமதி கலைமகள் மகேந்திரன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர்.




புத்தசாசன, கலாசார மற்றும் மத அலுவல்கள் அமைச்சு

**விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாளை நீடித்தல்**

**கொழும்பு தேசிய நூதனசாலையில் நூதனசாலை நூலகத்திற்கு தீ கட்டுப்பாட்டு முறைமையை வழங்குதல் மற்றும் நிறுவுதல் (எஞ்சிய வேலைக்கான புதிய ஒப்பந்தம்)**

**ஒப்பந்த இல.: DNM/DEV/2023/1**

1. மேற்கூறிய ஒப்பந்தத்திற்கு 2023 செப்டெம்பர் 15ஆம் திகதிய தினகரன் பத்திரிகையில் பிரசுரமான விலைமனுக்களுக்கான அழைப்பு தொடர்பானது.
2. மேற்கூறிய ஒப்பந்தத்தின் விலைக்கோரல் அழைப்பில் பின்வரும் திருத்தங்கள் செய்யப்பட்டுள்ளது.
   - விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் 2023 ஒக்டோபர் 16ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
   - விலைமனுக்கள் வழங்கப்படும் திகதி மற்றும் நேரம் 2023 ஒக்டோபர் 11ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை நீடிக்கப்பட்டுள்ளது.
   - விலைமனுக்கள் 2024 ஜனவரி 15ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்கள் வரையில்)
   - விலைக்கோரல் பிணை முறி 2024 பெப்ரவரி 12ஆம் திகதி வரையில் செல்லுபடியாதல் வேண்டும். (விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 119 நாட்கள் வரையில்)
3. ஏனைய அனைத்து விதிகள் மற்றும் நிபந்தனைகள் மாறாமல் அவ்வாறேயிருக்கும்.
4. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் தேசிய நூதனசாலைகள் திணைக்களம், மே/பா; பணிப்பாளர் நாயகம், அமைச்சு பெறுகைக் குழு (MPC), தலைவரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு 2023 ஒக்டோபர் 11ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 10.00 தொடக்கம் பி.ப. 2.00 வரை கொழும்பு 07, சேர் மார்கஸ் பெர்னாண்டோ மாவத்தை, இல. 53, தேசிய நூதனசாலைகள் திணைக்கள, பணிப்பாளர் நாயகத்தின் அலுவலகத்தில் இலவசமாக விலைமனு ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

**தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு (MPC),**
**புத்தசாசனம், கலாசாரம் மற்றும் மத அலுவல்கள் அமைச்சு**


# மாபெரும் 'மீலாத் கீத்ராத் 59' விசேட இஸ்லாமிய கீத இசை நிகழ்ச்சி

## ஒரே மேடையில் ஜனரஞ்சக பாடகர் கலைக்கமல், சிங்கப்பூர் பாடகர் ஹாஜி பரீஹுல்லாஹ்; மாணவ – மாணவிகளுக்கு பாட புத்தகங்கள் பரிசு



தினகரன், தினகரன் வாரமஞ்சரி ஊடக அனுசரணையில் நாளை 07ஆம் திகதி சனிக்கிழமை மாலை 07 மணிக்கு கொழும்பு 07 ஜே.ஆர்.ஜெயவர்த்தன மண்டபத்தில் ஜனரஞ்சகப் பாடகர் கலைஞர் கலைக்கமலின் 'மீலாத் கீத்ராத் 59' சிறப்பு இஸ்லாமிய கீத நிகழ்ச்சி நடைபெறவுள்ளது. முதன் முதலாக சிங்கப்பூர் பிரபல பாடகர் ஹாஜி பரீஹுல்லாஹ் கலந்துகொண்டு இசைமுரசு பாடல்களை பாடவிருப்பது விசேட அம்சமாகும். முன்னாள் தூதுவரும் இந்நாள் நிதி அமைச்சின் நிதி திட்டமிடல் பிரிவின் இயக்குநருமான ஓ.எல்.அமீர் அஜ்வாட் பிரதம அதிதியாக கலந்துகொள்ளும் இந்நிகழ்வுக்கு கலைப்புரவலர் ஸைட் சிவாஜி மௌலானா தலைமை தாங்கவுள்ளார். பிரபல தொழிலதிபர் ஹாஜி இப்திகார் அஹ்மட் முன்னிலை வகிக்கவுள்ளார். முன்னணி தமிழிசைக் குழுவான சுப்பர் டியூனர்ஸ் கல்முனை எஸ். சிவா குழுவினரோடு பிரபல தாள வாத்தியக் கலைஞர் ஹரிதாஸ் கண்ணாவும் இணைந்துகொள்கின்றனர். மாணவமாணவிகளுக்கு மீலாதுந்நபியை முன்னிட்டு மீலாத் பரிசாக பாடப் புத்தகங்கள் வழங்கப்படவுள்ளன. நிகழ்ச்சியை முன்னாள் இலங்கை வானொலிமுஸ்லிம் சேவைப் பணிப்பாளர் ஹாஜி அஹ்மத் முனவ்வர், பாடகர், அறிவிப்பாளர் கவிக்மல் நிகழ்ச்சியை தொகுத்து வழங்கவுள்ளனர்.

# மாணவர்களுக்கு கற்றல் ஊக்குவிப்பு செயலமர்வு

(காரைதீவு குறூப் நிருபர்)

அவுஸ்திரேலிய காரைதீவு மக்கள் ஒன்றியத்தின்(AUSKAR) அனுசரணையில் காரைதீவு மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் எதிர்வரும் க.பொ.த உயர்தர பரீட்சையை வெற்றிகரமாக எதிர்கொள்வதற்கு ஊக்குவிக்கும் நோக்கோடு கற்றல் தேர்வு ஊக்குவிப்பு நுட்பங்கள் செயலமர்வு நடாத்தப்பட்டது. பிரபல தொழில்சார் ஊக்குவிப்பு பயிற்சியாளர் கலாநிதி. கே.ரி. பிரசாந்தன் இச்செயலமர்வை நடாத்தினார். காரைதீவு விபுலானந்தா மத்திய கல்லூரியில் அதிபர் ம.சுந்தரராஜன் தலைமையில் நடைபெற்ற அங்குரார்ப்பண நிகழ்வில் பிரதம அதிதியாக காரைதீவு பிரதேச செயலாளர் சிவ. ஜெகராஜன் கலந்து சிறப்பித்தார். கௌரவ அதிதிகளாக காரைதீவு கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஜே.டேவிட் , உதவிக்கல்விப் பணிப்பாளரும் பாடசாலையின் பழைய மாணவர் சங்க ஆலோசகருமான வி.ரி.சகாதேவராஜா ,ஒஸ்கார் செயற்குழு உறுப்பினர் இ.பிரதீபராஜ் கே.டி. பி.எஸ் தலைவர் மு.ரமணீதரன், சண்முகா அதிபர் செ.மணிமாறன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர்.

## பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு

### இலங்கை அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனம்
### பச்சை தேயிலை/ இறப்பர் பால் விற்பனை
### நவம்பர் - டிசம்பர் 2023

**கேள்வி இலக்கம் - SLSP C / PL / Green Leaf-Latex/T-218-228/November-December/2023**

இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமான கண்டி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் அமைந்துள்ள கீழ் குறிப்பிடப்பட்ட தோட்டங்களில் பச்சை தேயிலை மற்றும் காலி மாவட்டத்தில் வலஹன்தூவ தோட்டத்தில் பச்சை தேயிலை மற்றும் இறப்பர் பாலை இரண்டு மாத காலத்திற்காக விற்பதற்கு விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தோட்டத்தின் பெயர் | கேள்வி இலக்கம் | மீளளிக்கப்படும் வைப்புத் தொகை (ரூபா) |
|---|---|---|
| அலகொல | SLSPC/PL/G. Leaf/T-218/November December/2023 | 100,000.00 |
| கொட்டகங்க | SLSPC/PL/G. Leaf/T-219/November December/2023 | 100,000.00 |
| கல்பிஹில்ல | SLSPC/PL/G. Leaf/T-220/November December/2023 | 100,000.00 |
| ஹெயாபார்க் | SLSPC/PL/G. Leaf/T-221/November December/2023 | 50,000.00 |
| ஹுன்னஸ்கிரிய | SLSPC/PL/G. Leaf/T-222/November December/2023 | 100,000.00 |
| ரங்கல | SLSPC/PL/G. Leaf/T-223/November December/2023 | 100,000.00 |
| வைதலாவ | SLSPC/PL/G. Leaf/T-224/November December/2023 | 100,000.00 |
| வுட்சைட் | SLSPC/PL/G. Leaf/T-225/November December/2023 | 50,000.00 |
| விஹாரகல | SLSPC/PL/G. Leaf/T-226/November December/2023 | 10,000.00 |
| வலஹன்தூவ | SLSPC/PL/G. Leaf/T-227/November December/2023 | 10,000.00 |
| **இறப்பர் பால் (LATEX)** | | |
| வலஹந்தூவ | SLSPC/PL/G. Leaf/T-228/November December/2023 | 25,000.00 |

மேலுள்ள கேள்விக்காக நிபந்தனைகள் மற்றும் விலைமனுக்கள் சமர்ப்பிப்பதற்குரிய படிவம் உட்பட ஆவணங்களை 5000 ரூபா பணத்தை செலுத்தி 2023.10.10 ஆம் திகதி தொடக்கம் 2023.10.19 ஆம் திகதி வரை பி.ப. 3.00 வரை பன்விலவில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபன பிராந்திய அலுவலகம் அல்லது 2023.10.10 ஆம் திகதி தொடக்கம் 2023.10.20 ஆம் திகதி வரை மு.ப. 12.30 வரை இல. 257, ஸ்ரீதம்ம மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள அ.பெ.கூ தலைமை அலுவலகத்தில் இருந்து வாங்க முடியும்.

மீளளிக்கப்படும் வைப்புத் தொகையை ஒவ்வொரு தோட்டத்திற்காகவும் வெவ்வேறாக சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் மக்கள் வங்கி முதலாவது நகரக் கிளையின் 046 1002 40000 933 என்ற கணக்கு இலக்கத்திற்கு வைப்புச் செய்தல் அல்லது காசாளருக்கு செலுத்தி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்துடன் பற்றுச்சீட்டின் பிரதி ஒன்றை இணைத்தல் வேண்டும்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி படிவத்தை வைப்பு பற்றுச்சீட்டுடன் கொழும்பு 10, இல. 257, சிறிதம்ம மாவத்தையில் அமைந்துள்ள இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனத்தின் தலைமை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு 2023.10.20 ஆம் திகதி பி.ப. 10.00க்கு முன்னர் இட வேண்டும். தேர்வு செய்யப்படும் கேள்விமனுதாரர் மூலம் கேள்விமனுவை வழங்கும் திகதி தொடக்கம் மூன்று நாட்களுக்குள் இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வங்கி ஒன்றின் மூலம் வழங்கப்பட்ட குறித்த மாதத்திற்கான கணக்கிடப்படுகின்ற சூத்திரத்திற்கு அமைய நிர்ணயிக்கப்பட்ட பெறுமதியைக் கொண்ட 03 மாதங்கள் செல்லுபடியான காலத்திற்காக வங்கி பிணை ஒன்றை ஒப்பந்தம் கைச்சாத்திடும் முன்னர் பெற்றுக்கொடுப்பது அவசியமாகும். அவ்வாறு பெற்றுத்தர தவறுகின்ற கேள்விமனுதாரர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு பிணைத் தொகை கூட்டுத்தாபனத்திற்கு உரித்தாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

2023.10.20 ஆம் திகதி பி.ப. 01.00க்கு கேள்விமனு படிவம் ஏற்கும் காலம் நிறைவடைந்த உடன் கேள்விமனுவை திறக்கும் குழு முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படுவதோடு அந்த சந்தர்ப்பத்திற்கு கொள்வனவாளர் அல்லது அவரின் பிரதிநிதி ஒருவருக்கு பங்கேற்க முடியும். குறித்த திகதியில் குறித்த நேரத்திற்கு கிடைக்கப்பெறாத விலைமனுக்கள் தொடர்பில் கூட்டுத்தாபனம் பொறுப்பேற்காது என்பதோடு பெறுகைக் குழுவின் தலைவரின் முடிவு இறுதி முடிவாகும்.

**தலைவர்**
**பெறுகை குழு**
**இலங்கை அரச பெருந்தோட்ட கூட்டுத்தாபனம்**
**இல. 257, ஸ்ரீதம்ம மாவத்தை**
**கொழும்பு 10**
2023-10-05

The Housewives' companion
Classifieds on
Daily News

Marriage Proposals
Decades of Trusted Service

Sunday Observer For 15 Words - Rs. 1,500/-
For each additional word Rs. 25/-
For 15 Words - Rs. 1,200/-
For each additional word Rs. 25/-
வாரமஞ்சரி For 15 Words - Rs. 600/-
For each additional word Rs. 25/-

COLOMBO DISTRICT

AVISSAWELLA 036-2230446
Famous Bake House, No. 31, Seethawakapura

ANGODA 011 3069404
Kotikawatte Junction, Kudabuthgamuwa,

ATHURUGIRIYA 011 2760479, 011 4876968
267, Godagama Road,

BATHTHARAMULLA 011 2866705, 077 0736770
West Town, Bake House, Sweet House,

BORALESGAMUWA 071 6505533, 011 2519954
No. 17, Wewa Rd,

HANWELLA 011 4967962, 011 4967960
Sithumina Newspaper Agency, 144, High Level Rd, Pahathgama,

HOKANDARA 071 8685437
No. 501, North Hokandara,

HOMAGAMA 011 2892262, 077 7304046
"Aradanas", Senanayake Shopping Complex, Station Road,

KADUWELA 011 2579609
Nayana Bake House

KADUWELA 011 2412291, 011 4443566
375/1, Pahala Bomiriya, Yakkala,

KALUBOWILA 077 3551145, 011 2767259
No 195, Hospital Road,

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

## பெறுகை அறிவித்தல்

### பிரதேச சபை, மடுள்ள, தம்பகல்ல

மடுள்ள பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள கீழ்க் காணும் அட்டவணையில் குறிப்பிடப்படும் சபைக்குச் சொந்தமான சொத்துக்களை விற்பனை செய்யும் உரிமையை 2024.01.01 முதல் 2024.12.31 வரை ஒரு வருட காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக மொனராகலை மாவட்டத்திற்குள் பதிவு செய்த தொண்டர் சங்கங்கள் அல்லது நிரந்தர வதிவு உள்ள தனியார் பதிவாளர்களிடமிருந்து பொறியிடப்பட்ட பெறுகை விண்ணப்பங்கள் 2023.11.03 மு.ப 10.00 வரை என்னால் ஏற்கப்படும். (பெறுகை விண்ணப்பங்களை விநியோகித்தல் 2023.10.09ம் திகதி முதல் இடம்பெறும்)

அன்றே மு.ப 10.05 இற்கு பெறுகைச் சபையின் முன்னிலையில் பெறுகை விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்துமூல அனுமதி பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம். கீழே அட்டவணையில் குறிப்பிடப்படுமாறு குறித்த படிவக் கட்டணம் மற்றும் பெறுகை பிணை வைப்பு தொகையைச் செலுத்தி 2023.11.02 முதல் பி.ப 2.00 வரை மட்டும் மடுள்ள பிரதேச சபையில் பெறுகை விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்ளலாம். பெறுகைப் படிவங்களைப் பெற்றுக் கொள்ளும் போது விண்ணப்பதாரியினால் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும்.

| தொடர் இலக்கம் | விபரம் | குறைந்த பட்ச கேள்வி (வெட் இன்றி) ரூ: | கேள்விப் பிணை வைப்பு (மீளளிக்கப்படும்) | கேள்வி படிவக் கட்டணம் (மீளளிக்கப்படாத) ரூ: |
|---|---|---|---|---|
| 1 | மடுள்ள வார சந்தை (மீன் விற்பனை நிலையம் 08/ வார சந்தை கடை அறை 04 மற்றும் வார சந்தை உணவகம் இரண்டுடன்) | 11,220,000.00 | 100,000.00 | 10,000.00 |
| 2 | மாரி அராவ வார சந்தை | 880,000.00 | 50,000.00 | 10,000.00 |
| 3 | மாரி அராவ கடை அறை இலக்கம் 02 | 38,000.00 | 7,500.00 | 2,500.00 |

பெறுகை நிபந்தனை பற்றிய மேலதிக விபரங்களை, படிவங்களை பெற்றுக் கொள்ளும் போது மடுள்ள பிரதேச சபையின் பெறுகை பொறுப்பதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

**எச்.பீ.எம்.சந்திமா மல்காந்தி**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**மடுள்ள.**

**2023.10.06**
**மடுள்ள பிரதேச சபை**
**தொடர்புகள் : 055-2275186**
**055-2275187 - 0553141311**

## கேள்வி அழைப்பு

### 2024ஆம் ஆண்டிற்காக சமைத்த உணவு வழங்குதல் மற்றும் அழுக்கடைந்த ஆடைகளை சலவை செய்தல்மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை - புத்தளம்

2024 ஜனவரி 01 முதல் டிசம்பர் 31 வரையான காலத்திற்கு புத்தளம் மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனையின் கீழ் உள்ள வைத்தியசாலைகளில் சமைத்த உணவு வழங்குதல் மற்றும் அழுக்கடைந்த ஆடைகளை கழுவி சுத்தம் செய்தல் போன்ற சேவைகளை வழங்குவதற்காக தகைமையுடையவர்களிடம் இருந்து கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன.

1. கேள்விப் பத்திரங்கள் மற்றும் ஏனைய விபரங்களை 2023.10.16 முதல் 2023.11.03 வரையான அலுவலக நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.30 வரை இவ் அலுவலகத்தின் கணக்குப் பிரிவிற்கு வருகை தந்து ரூ 1000/- தொகையைச் செலுத்தி பெற்றுக் கொள்ளலாம்.
2. கேள்வி ஆவணங்களைப் பெற்றுக் கொள்வதற்காக வேண்டுதல் கடிதத்துடன் தேசிய அடையாள அட்டை மற்றும் அதன் புகைப்படப் பிரதியை சமர்ப்பித்தல் வேண்டும்.
3. 02 பிரதிகளுடன் பூர்த்தி செய்யப்பட்ட உங்களது கேள்வி விண்ணப்பங்கள் மற்றும் ஏனைய குறித்த ஆவணங்களை கடித உறைகளில் இட்டு பொறியிட்டு இடதுபக்க மேல் மூலையில் "சமைத்த உணவு வழங்குதல் 2024/ அழுக்குத் துணிகளை சலவை செய்தல் 2024" என்று குறிப்பிட்டு 2023.11.06 பி.ப 2.00 இற்கு முன்பு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது கையோடு கொண்டுவந்து இவ் அலுவலகத்தின் கணக்காளர் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். (மேலதிக விபரங்களுக்கு **மின்னஞ்சல் -rdhs.puttalam.acc@gmail.com/ தொ.பே 032-2248855)**
4. 2023.11.06 பி.ப 2.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படுவதுடன், அவ்வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.
5. இவ்வேளை சம்பந்தமான இறுதித்தீர்மானம் எடுத்தல் பெறுகைக் குழுவிற்கு உரியது.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**மாவட்ட சுகாதார சேவைப் பணிப்பாளர் பணிமனை,**
**புத்தளம்.**

## கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்

### விலைமனுக்கோரல் (IFB)

**கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்** சார்பாக **பிரதான பெறுகைக் குழுவின் தலைவரினால்** கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்கு தகுதியான முத்திரையிடப்பட்ட மனுதாரர்கள் கோரப்படுகின்றனர்.

| ஒப்பந்த இலக்கம் | ஒப்பந்ததின் பெயர் | தேவைப்படும் மனுப் பாதுகாப்புத் தொகை (ரூ). | மனுக்கள் மூடப்படும் திகதி | முன்மனுக் கூட்டத்திற்கான திகதி |
|---|---|---|---|---|
| CLT/SER/016/2023 | கொழும்பு தாமரைக் கோபுர நலன்புரி உணவகத்திற்காக | 50,000.00 | 2023.10.19 மு.ப.10.00 | 2023.10.12 மு.ப.10.00 |
| CLT/GOODS/012/2023 | கொழும்பு தாமரை கோபுரத்தின் டிஜிட்டல் கலை அருங்காட்சியகத்திற்காக மீடியா சர்வர் அமைப்பினை வழங்குதல் | 80,000.00 | 2023.10.19 மு.ப.10.00 | 2023.10.12 மு.ப.11.00 |
| CLT/GOODS/013/2023 | கொழும்பு தாமரை கோபுரத்தின் டிஜிட்டல் கலை அருங்காட்சியகத்திற்காக ஆடியோ ஸ்பீக்கர் மற்றும் உபக் கருவிகளை வழங்குதல் | 50,000.00 | 2023.10.19 மு.ப.11.00 | 2023.10.12 பகல்12.00 |
| CLT/SER/017/2023 | இரண்டு வாகனங்கள் குத்தகை அல்லது வாடகைக்கு (Buggy) | 30,000.00 | 2023.10.20 மு.ப.10.00 | 2023.10.13 மு.ப.10.00 |
| CLT/SER/018/2023 | கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்திற்கான சுகாதார காப்புறுதி | 30,000.00 | 2023.10.20 மு.ப.10.30 | 2023.10.13 மு.ப.11.00 |

1. ஆர்வமுள்ள மனுதாரர்கள் கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் நிதிப் பிரிவில் மீளச்செலுத்தப்படாத கட்டணத்தை செலுத்தி **2023.10.06** ஆம் திகதி முதல் **2023.10.18** ஆம் திகதி வரை கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்தில் **ரூ.2,000.00** மீள்ச்செலுத்தப்படாத கட்டணத்தைச் செலுத்தி ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட மனு ஆவணங்களை பெற்றுக்கொள்ளலாம்.
2. மேலதிக விபரங்களை இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல் அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளரிடம் (பெறுகை) பெற்றுக்கொள்ளலாம்.

   **(தொ.பே: 074 2012366 / 077 133 7635 மின்னஞ்சல் – tender@colombolotustower.lk).**
3. மனுக்கள் செல்லபடியாகும் காலம் **2023.11.30**
4. முத்திரையிடப்பட்ட மனுக்கள் **இல.320, டி.ஆர்.விஜேவர்தன மாவத்தை, கொழும்பு 10 இல்** அமைந்துள்ள கொழும்பு தாமரைக்கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் (பெறுகை) அலுவலகத்திற்கு கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.
5. அனைத்து மனுக்களும் கட்டாயமாக மேலே குறிப்பிட்டுள்ள மனுப் பாதுகாப்புத் தொகையுடன் இணைத்து சமர்ப்பிக்கப்பட வேண்டும். மனுப்பாதுகாப்புத் தொகை செல்லுபடியாகும் காலம் **2023.12.31** ஆம் திகதி வரையாகும்.
6. மேலே குறிப்பிடப்பட்டுள்ள திகதி முடிவடைந்த பின்னர் உடனடியாக மனுக்கள் திறக்கப்படும். மனுக்கள் திறக்கப்படும் வேளையில் மனுதாரர் அல்லது அவரது பிரதிநிதி அவ்வேளையில் பிரசன்னமாயிருக்க முடியும்.

**பணிப்பாளர் / தலைமை நிர்வாக அதிகாரி,**
**கொழும்பு தாமரைக் கோபுர முகாமைத்துவ தனியார் நிறுவனம்,**
**இல. 320, டி. ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு 10,**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபை
### கைத்தொழில்கள் அமைச்சு
### விலைமனுக்களுக்கான அழைப்பு

### இரத்தினபுரி தெமுவாவன "இரத்தினக்கல் கோபுரத்தில்" அமைந்துள்ள உணவகத்தை 10 வருட காலத்திற்கு குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக கேள்வி அழைப்பு

**விலைக்கோரல் இல. NGJA/18/63/2023/vol -III**

தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபைக்குரித்தான இரத்தினபுரி - தெமுவாவன இரத்தினக்கல் கோபுரத்தில் அமைந்துள்ள உணவகத்தை குத்தகை அடிப்படையில் வழங்குவதற்காக தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் சார்பாக கேள்விக் குழுவின் தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| விபரங்கள் | பணம் / திகதி |
|---|---|
| மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் | ரூபா 10,000.00 + 2.5% SSCL + 15% VAT |
| விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் /நேரம் | 2023-10-27ஆம் திகதி பி.ப. 2.00 மணி |
| விலைமனுக்கள் திறக்கப்படுதல் | 2023-10-27ஆம் திகதி பி.ப. 2.05 மணி |

| தொ. இல. | மாடி | கடையின் பரப்பளவு (சதுர அடிகள்) | உத்தேச பாவனை | மாதாந்த வாடகைத் தொகை (ரூபா) (வரி இன்றி) | அடிப்படை குத்தகை பெறுமதி (ரூபா) (வரி இன்றி) | பிணை முறி (ரூபா) (வரி இன்றி) |
|---|---|---|---|---|---|---|
| 01 | 5ஆம் மாடி | 2045 | உணவகம் | 1,125,000.00 | 18,700,000.00 | 200,000.00 |

**நிபந்தனைகள்:**

(I) தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் பெறுகைகள் மேற்கொள்ளப்படும் (NCB)

(II) மீளளிக்கப்படாத ரூபா 10,000.00 + 2.5% (ரூபா 250.00) SSCL + 15% VAT (ரூபா 1,537.50) தொகையை (ரூபா 11,787.50) தொகையை 2023-10-06ஆம் திகதி முதல் 2023-10-26ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் செலுத்தியதன் பின் கொழும்பு-03, அல்பிரட் ஹவுஸ் கார்டன், ''மெக்சன்ஸ் டவர்'', 12ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் உதவிப் பணிப்பாளர் (பெறுகை) அவர்களுக்கு எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பித்து முழுமையான விலைக்கோரல் ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணமாகச் செலுத்துதல் வேண்டும்.

(III) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2023-10-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் தலைவர், கேள்விக் குழு, தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை, இல. 12, மெக்சன்ஸ் டவர், அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03 எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது வழங்கல் பிரிவில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடுதல் வேண்டும். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''இரத்தினக்கல் கோபுரத்தின் உணவகத்தை குத்தகை அடிப்படையில் வழங்குதல் - 2023" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

(iv) பூர்த்தி செய்யப்பட்ட விலைக்கோரல் ஆவணங்களுடன் விலைமனுப் படிவத்தின் குறிப்பிடப்பட்டுள்ள பிணை முறியின் பெறுமதியை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் காசாளரிடம் வைப்புச் செய்து அந்தப் பற்றுச்சீட்டின் மூலப் பிரதியைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(V) தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபையின் 7ஆம் மாடியிலுள்ள கேட்போர்கூடத்தில் 2023-10-27ஆம் திகதி பி.ப. 02.05 மணிக்கு விலைமனுக்கள் திறக்கப்படும் என்பதுடன் பி.ப. 2.00 மணிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே நிராகரிக்கப்பட்டு திருப்பியனுப்பப்படும். இந்த விலைமனுக்கள் திறக்கும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

**மேலதிக விபரங்களுக்கு: உதவிப் பணிப்பாளர் (பெறுகைகள்) - 071 536 2 536 / 0112 332 197**
**தலைவர், திணைக்கள பெறுகைக் குழு,**
**தேசிய இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகார சபை,**
**இல. 12, ''மெக்சன்ஸ் டவர்", அல்பிரட் ஹவுஸ் கார்டன், கொழும்பு 03, இலங்கை.**
**தொலைபேசி: 0112-329295, 2325364, 2390645-8 தொலைநகல்: 0112320758, 011-2332197**
**இணையதளம்: www.ngja.gov.lk**



### ஆசிய விளையாட்டுப் போட்டி:

# மெய்வல்லுனர் போட்டிகளில் இலங்கைக்கு 4 பதக்கங்கள்: தருஷி ஒலிம்பிக் எதிர்பார்ப்பு

***சீனாவிலிருந்து நிரோஷான் பிரியங்கர***

சீனாவின் ஹான்சோ நகரை மையமாகக் கொண்டு நடைபெற்று வரும் ஆசிய விளையாட்டுப் போட்டியின் மெய்வல்லுனர் போட்டிகள் நேற்று (05) நிறைவடைந்ததோடு, இலங்கையின் போட்டிகள் நேற்று முன்தினம் வென்ற தங்கம் மற்றும் இரு வெண்கல பதக்கங்களுடன் நிறைவடைந்தது.

மெய்வல்லுனர் போட்டி தவிர இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியும் வெள்ளிப் பதக்கம் ஒன்றை வென்றதோடு, அதன்படி இம்முறை ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை இதுவரை மொத்தம் 5 பதக்கங்களை வென்றுள்ளது. ஆசிய விளையாட்டுப் போட்டி வரலாற்றில் இலங்கை 5 பதக்கம் அல்லது அதற்கு மேல் வெற்றியீட்டி இருப்பது 21 ஆண்டுகளின் பின்னர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இலங்கை கடைசியாக 2002 ஆம் ஆண்டு 2 தங்கம், 1 வெள்ளி மற்றும் 3 வெண்கலப் பதக்கம் என 6 பதக்கங்களை வென்றது.

இம்முறை போட்டியில் அதிக அவதானத்தை பெற்ற வீராங்கனையாக தருஷி கருணாரத்ன மாறினார். அவர் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்று ஒரு மணி நேரத்திற்குள் பெண்கள் மற்றும் ஆண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகளில் இலங்கையால் வெண்கலப் பதக்கங்களை வெல்ல முடிந்தது.

இலங்கை இவ்வாறு மெய்வல்லுனர் போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றது 21 ஆண்டுகளில் பின்னர் என்பது குறிப்பிடத்தக்கதாகும். இதற்கு முன்னர் கடைசியாக ஆசிய விளையாட்டுப் போட்டியில் இலங்கை தங்கப் பதக்கம் வென்றது 2002 ஆம் ஆண்டு நடைபெற்ற விளையாட்டு விழாவிலாகும். அதில் சுசந்திகா ஜயசிங்க மற்றும் தமயந்தி தர்ஷா தங்கம் வென்றனர். இது ஆசிய விளையாட்டு விழாவில் இலங்கை வென்ற 12ஆவது தங்கப் பதக்கமாகும்.

நேற்று முன்தினம் ஆண்கள் மற்றும் பெண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டிகளில் இலங்கை வெண்கலம் பதக்கங்களை வென்றதோடு ஈட்டி எறிதலில் நதீஷா தில்ஹானி லேகம்கேவுடன் இலங்கை மகளிர் கிரிக்கெட் அணியும் வெள்ளிப் பதக்கத்தை வென்றது. இந்த பதக்கங்களுடன் நேற்றைய தினத்தில் பதக்கப் பட்டியலில் இலங்கை 25 ஆவது இடத்தை பிடித்தது.



மூன்று பதக்கங்களை வென்றதைத் தொடர்ந்து 'தினகரனுக்கு' கருத்துத் தெரிவித்த தருஷி, போட்டியில் வெற்றி பெற முடியும் என்ற நம்பிக்கையுடனேயே களமிறங்கியதாகவும் அதன்படி வெற்றியீட்டியதாகவும் குறிப்பிட்டார்.

"இந்த ஓட்டத்திற்கு செல்வதற்கு முன்னர் வெற்றி பெற முடியும் என்று அதிக நம்பிக்கை இருந்தது. எனது பயிற்சிகளுடன் இதனைச் செய்ய முடியும் என்று இருந்த நம்பிக்கை காரணமாகவே இந்த வெற்றியை பெற முடிந்தது. இந்த வெற்றியை இட்டு அதிகம் மகிழ்ச்சி அடைகிறேன். இது அதிக அர்ப்பணிப்பின் மூலம் பெற்ற வெற்றியாகும்" என்று தருஷி மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

இந்த போட்டி இரண்டு சுற்றுகளைக் கொண்டிருந்ததோடு முதல் சுற்றில் ஓட்ட வேகம் சற்று குறைந்ததாகவும் அப்படி இல்லாவிட்டால் சாதனை ஒன்றை படைக்க முடியுமாக இருந்திருக்கும் என்றும் தருஷி குறிப்பிட்டார். எவ்வாறாயினும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி பயிற்சியாளருடன் இணைந்து முன்கூட்டியே திட்டமிட்டதாகவும் தமது எதிர்பார்ப்பு தங்கப் பதக்கத்தை வெல்வது மாத்திரமாக இருந்தது என்றும் அவர் தெரிவித்தார்.

"நான் போட்டியின் காலத்தை பற்றி நினைக்கவில்லை. நான் எதிர்பார்த்தது தங்கப் பதக்கத்தை. எனவே நான் அதனைச் செய்தேன்" என்று குறிப்பிட்ட தருஷி "இந்த வெற்றியின் பின்னால் இருந்த அனைவருக்கும் எனது நன்றிகளைக் கூறிக்கொள்வதற்கு இதனை சந்தர்ப்பமாக பயன்படுத்திக் கொள்கிறேன்.

எனது தாய், தந்தை, அண்ணன், தங்கை, எனது பெற்றோருக்குப் பின்னர் பெரும் உதவியாக இருந்த சுசந்த சேருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். எனது பாடசாலையின் அதிபர் உட்பட ஆசிரியர்களுக்கும், எனது பயிற்சிகளுக்கு பெரும் உதவி புரிந்த சமிந்த ஜயரத்ன அண்ணன், பேராசிரியர் ரணில் ஜயவர்தன, தேசிய ஒலிம்பிக் குழு, மெய்வல்லுனர் சங்கம் மற்றும் எனக்கு ஆதரவு அளித்த அனைவருக்கு நன்றியை கூறிக்கொள்கிறேன்" என்று தருஷி குறிப்பிட்டார்.

"அடுத்து ஆண்டு நடைபெறவுள்ள ஒலிம்பிக் போட்டியே எனது அடுத்த எதிர்பார்ப்பாகும். முதலில் அதற்கு தகுதி பெற வேண்டும். அது முதல் எதிர்பார்ப்பு. பின்னர் அடுத்த கட்டம் பற்றி சிந்திப்பேன்" என்றார் தருஷி.

இந்த பதக்கத்தை வென்று ஒரு மணி நேரத்திற்குள் பெண்களுக்கான 400 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் பங்கேற்க வேண்டிய நிலை தருஷிக்கு ஏற்பட்டது. அதிலும் அவர் இலங்கைக்கு வெண்கலப் பதப்பத்தை வென்று கொடுக்க உதவினார்.

"ஒரு மணி நேரத்திற்குள் இரண்டு போட்டிகளில் பங்கேற்க ஏற்பட்டது பெரும் சவாலாகும். என்றாலும் என்னை விரைவாக ரிகவர் செய்ய எமது மருத்துவ குழுவினரிடம் இருந்து பெரும் உதவி கிடைத்தது. என்றாலும் இவ்வாறான இரண்டு போட்டிகளில் ஓட வேண்டி ஏற்பட்டாலும் எனது மன தைரியம் காரணமாகவே நான் ஓடினேன்" என்றும் தருஷி கூறினார்.

இந்த வெற்றியுடன் ஆசிய தரப்படுத்தலில் 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் முதலாம் இடத்தை பிடித்த தருஷி சர்வதேச மட்டத்தில் மேலும் முன்னேறிச் செல்வதற்கு தேசிய ஒலிம்பிக் குழுவின் தலையீட்டுடன் வெளிநாட்டு புலமைப்பரிசில் ஒன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பதாக தேசிய ஒலிம்பிக் குழு பொதுச் செயலாளர் மெக்ஸ்வெல் டி சில்வா தெரிவித்தார். அந்த பயிற்சி அமெரிக்காவில் இடம்பெறும் என்றும், என்றபோதும் அதற்காக தருஷியின் கல்வி செயற்பாடுகள் நிறைவடைய வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். தருஷி இம்முறை உயர்தரப் பரீட்சையில் தோற்றவுள்ளார்.

**கராட்டே**

இதனிடையே இலங்கையை பிரதிநிதித்துவம் செய்து பெண்களுக்கான கராட்டே காத்தா ஒற்றையர் போட்டியின் முதல் சுற்றில் போட்டியிட்ட ஹோஷானி ஹெட்டியாரச்சிக்கு முதல் சுற்றுடனேயே வெளியேற வேண்டி ஏற்பட்டது. அந்தப் போட்டிக்கு 8 வீராங்கனைகள் பங்கேற்ற நிலையில், 34.30 புள்ளிகளை பெற்ற கேஷானி கடைசி இடத்தையே பெற்றார்.

இந்த விளையாட்டு விழாவில் இலங்கைக்கு மேலும் ஒரு போட்டியே எஞ்சியுள்ளது. கராட்டே குமிதே போட்டியில் 67 கிலோகிராம் எடைப் பிரிவில் தினெத் அவிஹின்சய களமிறங்குகிறார். அவர் நாளை (7) போட்டியிடவுள்ளார்.

**மல்யுத்தம்**

நேற்று மல்யுத்தப் போட்டியின் 53 கிலோகிராம் எடைப் பிரிவில் களமிறங்கிய நெத்மி அஹின்சாவுக்கு கசகஸ்தான் வீராங்கனை செட்னேவா மரீனாவிடம் தோல்வியை சந்திக்க வேண்டி ஏற்பட்டது. இதன்போது கசகஸ்தான் வீராங்கனை 5 புள்ளிகளை பெற்ற நிலையில் நெத்மி 4 புள்ளிகளை பெற்றார்.

**பதக்கங்கள்**

நேற்று மெய்வல்லுனர் போட்டிகள் நிறைவடையும்போது பதக்கப் பட்டியலில் சீனா 175 தங்கப் பதக்கங்களுடன் முதலிடத்தை வென்றதோடு, 39 தங்கப் பதக்கங்களை பெற்ற ஜப்பான் இரண்டாவது இடத்தை பெற்றது. தென் கொரியா 33 தங்கப் பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தை வென்றதோடு இந்தியா 21 தங்கப் பதக்கங்களை வென்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. 5 பதக்கங்களை வென்ற இலங்கை 25 ஆவது இடத்தை பெற்றிருந்தது.

# சம்பியனானது றஹ்மிய்யா அணி

***ஒலுவில் கிழக்கு தினகரன் நிருபர்***



பாலமுனை டைட்டன் விளையாட்டுக்கழகத்தினால் நடத்தப்பட்ட மென்பந்து மின்னொளி கிரிக்கெட் சுற்று போட்டியில் அக்கரைப்பற்று பள்ளிக்குடியிருப்பு றஹ்மிய்யா விளையாட்டுக் கழக அணி கிண்ணத்தை வென்றது. பாலமுனை பொது விளையாட்டு மைதானத்தில் கடந்த புதன்கிழமை (04) கழகத்தின் தலைவர் எம்.ஐ. ஹம்சா தலைமையில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் உயர்பீட உறுப்பினரும், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினருமான றிப்கான் பதியுதீன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

இறுதிப் போட்டியில் றஹ்மிய்யா அணி 62 ஓட்டங்களை நிர்ணயித்த நிலையில் பள்ளிக்குடியிருப்பு யங்மேன் விளையாட்டுக் கழக அணியினர் 50 ஓட்டங்களை மாத்திரம் பெற்று 12 ஓட்டங்களால் தோல்வி அடைந்தமை குறிப்பிடத்தக்கது.

# உலகக் கிண்ணம் ஆரம்பம்



உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டியை ஆரம்பித்து முதல் ஆட்டத்தில் பங்கேற்ற நடப்புச் சம்பியன் இங்கிலாந்து அணி நியூசிலாந்துக்கு எதிராக முதலில் துடுப்பெடுத்தாடி 282 ஓட்டங்களை பெற்றது.

அஹமதாபாத்தில் நேற்று நடைபெற்ற இந்தப் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி முக்கிய தருணங்களில் விக்கெட்டுகளை பறிகொடுத்தது.

ஜோ ரூட் 77 ஓட்டங்களை பெற்றபோதும் மற்ற வீரர்கள் தமது ஓட்டங்களை அரைச்சதம் வரையில் அதிகரிக்கத் தவறினர். எனினும் இங்கிலாந்து அணி 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட்டுகளை இழந்து 282 ஓட்டங்களை பெற்றது.

இதன்போது நியூசிலாந்து அணி சார்பில் மட் ஹென்ரி 3 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு மிச்சல் சான்ட்னர் மற்றும் கிளன் பிலிப்ஸ் தலா இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

உலகக் கிண்ணத்தில் இரண்டாவது போட்டியில் இன்று (06) நெதர்லாந்து மற்றும் பாகிஸ்தான் அணிகள் மோதவுள்ளன. பகலிரவு போட்டியாக நடைபெறும் இந்த ஆட்டம் ஹைதராபாத்தில் நடைபெறும்.

# மூன்று கண்டங்களில் 2030 பி.ஃபா உலகக் கிண்ணம்




2030 உலகக் கிண்ண கால்பந்து போட்டி மூன்று கண்டங்களில் மொத்தம் ஆறு நாடுகளில் நடைபெறும் என்பதை சர்வதேச கால்பந்து சம்மேளனம் (பிஃபா) உறுதி செய்துள்ளது.

போட்டியை நடத்தும் நாடுகளான ஸ்பெயின், போர்த்துக்கல் மற்றும் மொரோக்கோ அறிவிக்கப்பட்டிருப்பதோடு உருகுவே, ஆர்ஜன்டீனா மற்றும் பரகுவேவில் ஆரம்ப மூன்று போட்டிகளும் நடைபெறவுள்ளன.

உருகுவே தலைநகர் மொன்டவீடியோவில் முதலாவது உலகக் கிண்ணப் போட்டி நடைபெற்று 100 ஆண்டுகளை கொண்டாடும் வகையிலேயே தென் அமெரிக்காவில் ஆரம்ப மூன்று போட்டிகளும் நடைபெறவுள்ளன. கடந்த ஆண்டு நடைபெற்ற பிஃபா மாநாட்டில் எடுத்த தீர்மானத்தை உறுதி செய்வதாகவே இந்த முடிவு உள்ளது. தொடர்ந்து எஞ்சிய 48 போட்டிகளும் வட ஆபிரிக்கா மற்றும் ஐரோப்பிய கண்டங்களில் நடத்தப்படவுள்ளன.

இதேவேளை 2034 இல் பிஃபா உலகக் கிண்ணத்தை நடத்துவதற்கு சவூதி அரேபியா முதல் முறை விண்ணப்பித்துள்ளது.

### 1.1 மில்லியன் துப்பாக்கி குண்டுகள்:

# ஈரானிடமிருந்து பறிமுதல் செய்து உக்ரைனுக்கு வழங்கியது USA



அமெரிக்கா ஈரானிடம் இருந்து கடந்த ஆண்டு கைப்பற்றிய 1.1 மில்லியன் துப்பாக்கி குண்டுகளை உக்ரைனுக்கு வழங்கியுள்ளது.

கடந்த டிசம்பரில் யெமனை நோக்கி பயணித்த கப்பல் ஒன்றில் இருந்து இந்த துப்பாக்கி குண்டுகளை மத்திய கிழக்கில் செயற்படும் அமெரிக்க மத்திய கட்டளையகம் பறிமுதல் செய்திருந்தது.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைன் பயன்படுத்தும் வெடிபொருட்களின் வேகத்தை கையாள உற்பத்திகள் சிரமத்தை எதிர்கொண்டிருப்பதாக அதன் மேற்கத்தேய கூட்டணிகள் அண்மையில் எச்சரிக்கை விடுத்திருந்தது. இந்நிலையில் இந்த துப்பாக்கி குண்டுகள் கடந்த திங்கட்கிழமை உக்ரைனுக்கு அனுப்பப்பட்டதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது. யெமன் சிவில் யுத்தத்தில் ஈரான் ஹூத்தி கிளர்ச்சியாளர்களுக்கு ஆதரவு வழங்குகின்றபோதும் 2015 ஆம் ஆண்டின் ஐ.நா பாகாப்புச் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஒன்றில் அந்தக் குழுவுக்கு அயுதம் வழங்குவது தடுக்கப்பட்டுள்ளது.

# வெள்ளை மாளிகையிலிருந்து பைடனின் நாய் வெளியேற்றம்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனின் நாய் பல ஊழியர்களைக் கடித்ததால் அது வெள்ளை மாளிகையிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளது.

வெள்ளை மாளிகையின் பேச்சாளர் அந்த விபரத்தை வெளியிட்டார். கமாண்டர் என்ற 2 வயதான அந்த நாய் ஜெர்மன் ஷெபர்ட் வகையைச் சேர்ந்ததாகும். அது இப்போது எங்கே உள்ளது என்று தெரியவில்லை.

2021ஆம் ஆண்டில் வெள்ளை மாளிகைக்கு வந்த அது, அமெரிக்க உளவுச் சேவைப் பிரிவில் பணியாற்றும் 11 அதிகாரிகளைக் கடித்துள்ளது. அதனிடம் கடி வாங்கிய ஊழியர்களின் எண்ணிக்கை இன்னும் அதிகம் என்று சி.என்.என் செய்தி நிறுவனம் கூறுகிறது.

ஏனெனில் நாய் வெள்ளை மாளிகையின் மற்ற ஊழியர்களையும் கடித்துள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியும் அவரது மனைவியும் ஊழியர்களின் நலனில் ஆழ்ந்த அக்கறை கொண்டவர்கள் என்று அவர்களின் பேச்சாளர் எலிசபெத் அலெக்சாண்டர் தெரிவித்தார்.

கமாண்டர் கடைசியாக கடந்த மாதம் 30ஆம் திகதி வெள்ளை மாளிகையில் காணப்பட்டது.

## சர்வதேச செய்திகள்

# நோர்வே எழுத்தாளருக்கு இலக்கியத்திற்கு நோபல்




நடப்பாண்டில், இலக்கியத்துக்கான நோபல் பரிசுக்கு நோர்வே நாட்டைச் சேர்ந்த எழுத்தாளர் யோன் ஃபோஸ்ஸே தேர்வு செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்டொக்ஹோமில் உள்ள ரோயல் சுவீடன் அறிவியல் அகடமி, நடப்பாண்டுக்கான நோபல் பரிசுகளை அறிவித்து வருகிறது.

ஏற்கனவே, மருத்துவம், பௌதீகவியல், இரசாயனவியல் துறையில் சாதித்தவர்களுக்கான நோபல் பரிசுகள் அறிவிக்கப்பட்டிருக்கும் நிலையில், நேற்று (05) இலக்கியத்துக்கான நோபல் பரிசு நோர்வே நாட்டைச் சேர்ந்த யோன் ஃபோஸ்ஸேவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

நோர்வே எழுத்தாளர் யோன் ஃபோஸ்ஸே எழுதிய புதிய நாடகம் மற்றும் உரைநடைக்காக, நோபல் பரிசு பெற தேர்வு செய்யப்பட்டுள்ளார். இலக்கியத்துக்கான நோபல் பரிசில் ஒரு மில்லியன் அமெரிக்க டொலர், சான்றிதழ் மற்றும் தங்கப் பதக்கம் வழங்கப்படுகிறது.

ஃபோஸ்ஸேவின் பிரதான படைப்புகளில் ஒன்றாக 1989 ஆம் ஆண்டு அவர் எழுதிய "போதவுஸ்" என்ற நாவல் மற்றும் 1995–1996 ஆண்டில் வெளியான "மலன்சொலி" நவலின் இரு பாகங்களும் அடங்கும்.

1959 ஆம் ஆண்டு பிறந்த ஃபோஸ்ஸே 40க்கும் அதிகமான நாவல்கள், கட்டுரைகள், சிறுவர் புத்தகங்கள் மற்றும் மொழிபெயர்ப்புகளை வெளியிட்டுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

அவரது படைப்புகள் உலகில் பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. இலக்கியத்திற்காக நோபல் பரிசை வழங்குவதில் தேர்வு செய்யப்படுவதற்கான பட்டியல்கள் இடம்பெறாதபோதும் சல்பான் ருஷ்டி, கான் ஷு, மார்க்ரேட் ஆட்வூட் மற்றும் ஹருகி முரகாமி ஆகியோரின் பெயர்கள் முன்னணியில் இருந்தமை குறிப்படத்தக்கது.

கடந்த ஆண்டு இலக்கியத்திற்கான நோபல் பரிசை பிரான்ஸ் எழுத்தாளர் அன்னி ஏர்னொக் வென்றிருந்தார்.

இந்நிலையில் அமைதிக்கான நோபல் பரிசு இன்று அறிவிக்கப்படவுள்ளது.

இதேவேளை நேற்று முன்தினம் இரசாயனவிலுக்கான நோபல் பரிசு பெறுவோர் பெயர்களை ரோயல் சுவீடன் அறிவியல் அகடமி அறிவிக்கும் முன்னரே, அந்நாட்டு ஊடகங்களில் அப்பெயர்கள் வெளியாகின.

பெயர் அறிவிப்பில் கடைசி நேரம் வரை இரகசியம் காக்கப்படும் நிலையில், ஊடகங்களுக்கு தகவல் கசிந்தது துரதிருஷ்டவசமானது என்று அகடமி தரப்பில் தெரிவிக்கப்பட்டது. இந்த விடயத்தில் என்ன நடந்தது என்பது குறித்து ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 6ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.

தினகரன் THINAKARAN

# கேள்வி மற்றும் ஏனைய விளம்பரங்கள்

## பெறுகை அறிவித்தல்

### மாவட்ட பொது வைத்தியசாலை – நீர்கொழும்பு

01. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிர்மாண வேலைகளுக்காக தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மாவட்ட பொது வைத்தியசாலையின் பெறுகைக் குழுத் தலைவரினால் ஏற்றுக்கொள்ளப்படும். நிர்மாண வேலைகளுக்காக மதிப்பீடு செய்யப்பட்ட தொகை மற்றும் நிர்மாணக் காலம் என்பன அட்டவணையில் தரப்பட்டுள்ளன.

02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறை செயற்படுத்தப்படும்.

03. ஒப்பந்தத்தைக் கையளிக்கப் பெறுவதற்காக தெரிவு செய்யப்படும் விலைமனுதாரர் நிர்மாணப் பயிற்சி அபிவிருத்தி நிறுவனத்தில் (ICTAD) பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள தரம் அல்லது அதற்கு மேற்பட்ட தரத்தில் பதிவு செய்திருத்தல் வேண்டும்.

04. விலைமனு ஆவணங்களை சாதாரண வேலை நேரங்களில் மாவட்டப் பொது வைத்தியசாலையில் பரீட்சித்துப் பார்க்கலாம்.

05. 2023-10-06ஆம் திகதி முதல் 2023-10-26ஆம் திகதி வரையான எந்தவொரு வேலை நாளிலும் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் மீளளிக்கப்படாத கட்டணத்தைச் செலுத்திய பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்ததன் பின் விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்கான ஆவணங்களை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

06. பூர்த்தி செய்யப்பட்ட விலைமனு ஆவணங்களை பணிப்பாளர், மாவட்ட பொது வைத்தியசாலை, நீர்கொழும்பு எனும் முகவரிக்கு 2023-10-27ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் கிடைக்கச்செய்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

07. விலைமனுக்கள் ஏற்றுக்கொள்வது நிறைவடைந்த உடனடுத்து அச்சந்தர்ப்பத்தில் சமுகம் தந்துள்ள விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரபூர்வ பிரதிநிதிகளின் முன்னிலையில் அவை திறக்கப்படும். பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

| உருப்படி | நிர்மாணத்திற்கு மதிப்பீடு செய்யப்பட்ட தொகை (ரூ. மில்லியன்) | விலைக் கோரல் பிணை முறி (ரூபா) | ஒப்பந்தக் காலம் | ஆகக் குறைந்த பதிவு | மீளளிக்கப்படாத தொகை |
|---|---|---|---|---|---|
| மனநல ஆரோக்கிய வார்ட்டை புனரமைத்தல் | 6.2 | 60000.00 | 90 நாட்கள் | C7, C8, C9 | 5000.00 |

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**மாவட்ட பொது வைத்தியசாலை,**
**நீர்கொழும்பு.**

## பெறுகை அறிவித்தல்

### ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்குத் தேவையான கைத்தறி நூல், சாயம், இரசாயனப் பொருட்கள், தச்சு / தும்பு நிலையத்திற்குப் பாவிக்கப்படும் மூலப்பொருட்களைக் கொள்வனவு செய்தல் - 2023/2024 முதல் காலாண்டு

ஊவா மாகாணத்தின் கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்தின் பெறுகைக் குழுத் தலைவராகிய என்னால் ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு 2023/2024 முதலாம் காலாண்டுக்குத் தேவையான பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள பொருட்கள் மற்றும் உபகரணங்களைக் கொள்வனவு செய்வதற்காக உள்நாட்டு உற்பத்தியாளர்கள், வழங்குநர்கள் மற்றும் இறக்குமதியாளர்களிடமிருந்து இத்தால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல. | வகை | கொள்வனவு செய்ய உத்தேசிக்கும் அளவு | மீளளிக்கப் படும் விலைக் கோரல் வைப்பு (ரூபா) | மீளளிக்கப் படாத விலைக் கோரல் வைப்பு |
|---|---|---|---|---|
| 01 | கைத்தறி இயந்திரங்களுக்கு பயன்படுத்தும் கிறே நூல் | 3500 kg | 50,000.00 | 5,000.00 |
| 02 | ரெயொன் நூல் | 1000 (கோன்) | 10,000.00 | 1,000.00 |
| 03 | கைத்தறி உபகரணம் | | 30,000.00 | 3,000.00 |
| 04 | கைத்தறி நூல்களுக்கு பயன்படுத்தப்படும் சாயம் | 50 kg | - | - |
| 05 | கைத்தறி நூல்களுக்கு பயன்படுத்தப்படும் இரசாயனப் பொருட்கள் | 3,330 kg | 30,000.00 | 3,000.00 |
| 06 | தச்சு நிலையத்திற்குத் தேவையான மூலப்பொருட்கள் | - | 30,000.00 | 3,000.00 |
| 07 | தும்பு நிலையத்திற்குத் தேவையான மூலப்பொருட்கள் | - | 5,000.00 | 500.00 |

02. விலைமனுக்களைச் சமர்ப்பிப்பதற்குத் தேவையான மாதிரிப் படிவங்களை மேற்படி அட்டவணையில் தரப்பட்டுள்ள கட்டணங்களை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளருக்குச் செலுத்திப் பெற்றுக்கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின் பெற்றுக்கொள்ளலாம்.

03. விலைமனுக்களை வழங்குதல், ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறக்கப்படுதல் என்பன பின்வரும் திகதி மற்றும் நேரங்களில் இடம்பெறும்.

விலைமனுக்கள் வழங்குதல் - 2023-10-09ஆம் திகதி முதல் 2023-11-03ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 வரை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள அலுவலகத்தில்

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் - 2023-11-06ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணி வரை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில்

விலைமனுக்கள் திறக்கப்படுதல் - 2023-11-06ஆம் திகதி வரை மு.ப. 10.00 மணிக்கு ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்கள மாகாண கைத்தொழில் பணிப்பாளரின் உத்தியோகபூர்வ அறையில்

04. இது தொடர்பிலான மேலதிக விபரங்களை ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வருகை தந்து அல்லது 055-2222607 எனும் எமது தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**2023-10-06ஆம் திகதி**
**ஊவா மாகாண கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம்,**
**ஊவா மாகாண சபை,**
**பதுளை.**

**என்.எம்.எஸ்.பீ.கே. நிஷங்க,**
**மாகாண கைத்தொழில் பணிப்பாளர் ஊவா**
**பெறுகைக் குழுவின் தலைவர்.**

## இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை

### விமைனுக்களுக்கான அழைப்பு

1. கீழே வழங்கப்பட்டுள்ள அம்சங்களுக்காக தகுதியுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையின் சார்பாக திணைக்கள பெறுகைக் குழுத்தலைவர் கோருகின்றார்.

| கேள்வி இலக்கம் | கேள்வியின் பெயர் | விலைமனுப்பிணைத் தொகை (ரூபாவில்) | பெசேவ அடங்கலான ஆவணக் கட்டணம் | மூடும் திகதி மற்றும் நேரம் |
|---|---|---|---|---|
| CES/FP/03/ PT/6520(MAR) | 01 No. of complete Cylinder Head for Wartsila 8L.26 Engines of M/T Suranimala | 180,000.00 | 3,500.00 | 2023.11.02 ஆம் திகதியன்று மு.ப. 10 மணிக்கு |
| CMS/LP/23/PT/23/007 | Electrical spares required for electrical installation of CEB Metering Substation (for ECT) | 23,000.00 | 1,000.00 | 2023.10.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/05/055 | 10080L HC 32 Lanka | 34,500.00 | 1,000.00 | 2023.10.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CES/LP/23/PT/07/057 | Engine oil for Caterpillar C -15 engine 3E -9840 | 250,000.00 | 3,500.00 | 2023.10.26 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/05/056 | 22680L HC 46 Lanka | 348,500.00 | 3,500.00 | 2023.10.27 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/04/063 | Spares for Terex 40 T Top Lift Trucks | 90,000.00 | 1,000.00 | 2023.10.27 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/05/059 | 12600L Caltex Delo 1000 Marine SAE 40 | 235,500.00 | 3,500.00 | 2023.10.27 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/02/053 | 12600 Liter Taro 30 DP SAE 40 | 266,000.00 | 3,500.00 | 2023.10.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |
| CMS/LP/23/PT/07/055 | Spares for Grove AMZ 131XT Areal work Platform at JCT 1 & 2 | 30,000.00 | 1,000.00 | 2023.10.30 ஆம் திகதியன்று பி.ப. 1.30 மணிக்கு |

2. 5 மில்லியன் ரூபாவிற்கு மேலதிகமான ஆகுசெலவிலுள்ள கேள்விகளுக்கு 1987 ஆம் ஆண்டின் 3 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் ஏற்பாடுகள் பிரயோகப்படுத்தப்படுமென இத்தால் விலைமனுதாரர்கள் அறிவிக்கப்படுகின்றனர். இதற்கமைவாக மேலே குறிப்பிட்டுள்ள ஒவ்வொரு கேள்வியிலும் ஈடுபட்டுள்ள அனைத்து சாரார்களும் ஒப்பந்தக் காலம் முழுவதும் மேற்கூறப்பட்டுள்ள சட்டத்திற்கு தீவிரமாக அமைந்தொழுகல் வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். மேலும், எந்தவொரு வெளிநாட்டு உற்பத்தியாளர் அல்லது வழங்குனரொருவருக்கு மற்றும் அவர் சார்பாகவும் முகவரொருவராக, உபமுகவரொருவராக, பிரதிநிதியொருவராக அல்லது பெயர் குறிப்பிட்டரொருவராக செயற்பட விரும்பினால், பொது ஒப்பந்தங்கள் பதிவாளருடன் அவரை பதிவு செய்து உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பதிவு சான்றிதழை அவரது விலைமனு ஆவணங்களுடன் (பிசிஏ 03 படிவம்) சமர்ப்பித்தல் வேண்டும்.

3. விலைமனுதாரர்கள் நிகரான சேவையை வழங்குவதில் ஆகக் குறைந்தது கடந்த ஐந்து (5) வருடங்களுக்கு ஈடுபட்டிருத்தல் வேண்டும்.

4. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை வழங்கல்களுக்கான பிரதான பொறியியலாளரிடமிருந்து பெற்று அலுவலக நேரங்களில் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

5. 2023 ஒக்ரோபர் 06 ஆம் திகதியிலிருந்து 4 ஆம் நிரலில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள மீளளிக்கப்படாத கட்டணத்தை வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும், மூடும் திகதிக்கு முன்னரான திகதி வரையும் ரொக்கப் பணத்தில் செலுத்திய பின்னர், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று கீழேயுள்ள முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்.

6. விலைமனுக்கள், அவைகளை மூடும் நேரத்திற்கு அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் உரித்தான திகதியன்று ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது. விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் மூடும் நேரத்தில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் மேலே குறிப்பிட்டுள்ள உரித்தான விலைமனுப்பிணைத் தொகையுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்

**பிரதான பொறியியலாளர் (வழங்கல்கள் மற்றும் பண்டங்கள் முகாமைத்துவம்),**
**வழங்கல்கள் பிரிவு,**
**இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை,**
**இல. 45, லெய்டன் பஸ்தியன் வீதி, கொழும்பு-01.**

**தொலைபேசி இலக்கங்கள்: 011-2482231, 2483338, 2482499, 2482832, 2482409, 2482652, 2483024, 2482638**
**தொலைநகல் இலக்கங்கள்: 2381652, 2470443**

## அஞ்சல் திணைக்களம்

### விலைமனுக்களுக்கான அழைத்தல்

POST

**அஞ்சல் திணைக்களத்திற்காக வழங்கல் அலுவலகத்திற்காக அஞ்சல் பைகளை தயாரித்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கல்**

1. பின்வரும் வகுதிகளில் வழங்கல் அலுவலகத்திற்கு அஞ்சல் பைகளை தயாரித்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கல் ஆகியவற்றிற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து தபால் திணைக்களத்தின் சார்பாக திணைக்கள கொள்வனவுக் குழுத் தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை இப்போது அழைக்கின்றார்.

| கொள்வனவு இல. | கொள்வனவுப் பெயர் | உருப்படி | நிறம் | பொருள் வகை | அளவு (நீளம் x அகலம்) | | எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|---|
| POST/ PMD/01/ 13/2023 | அஞ்சல் திணைக்கள வழங்கல் அலுவலகத்திற்காக அஞ்சல் பைகளை தயாரித்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கல் | இலங்கை அஞ்சல் தூ தஞ்சல் சேவைக்கான பைகள் | Bee Yellow | Nylon | சிறியது | 52.5செமீ x50 செமீ (21 ”x20”) | 20,000 |
| | | | | | பெரியது | 85செமீ x 52.5 செ.மீ 34”x21”) | 20,000 |
| | | ரொக்கப் பணத்தை விநியோகம் செய்வதற்கான சேவை | Orange or Yellow | Poly propylene | சிறியது | 60செமீx50 செமீ (24”x20”) | 50,000 |
| | | | | | பெரியது | 85செமீ x 52.5 செமீ 30” x 18”) | 25,000 |
| | | காசுக் கட்டளை பிரிவிற்கான கென்வஸ் பைகள் | Dark Grey | Canvas | ---------- | 82.5செமீ x 50செமீ (33” x 20”) | 100 |

2. விலைமனு ஆவணங்களுக்கான கோரிக்கையில் மேலும் வரையறுக்கப்பட்டவாறு விலைமனுதாரர் ஒரு தொகுதிக்கு அல்லது பல எண்ணிக்கையான தொகுதிகளுக்கு விலைமனுவை சமர்ப்பிக்கலாம்.

3. விலைமனுக்கோரல் தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் மூலம் நடாத்தப்படும்.

4. தகுதித்தன்மை தகவுத்திறன்:

அ) செல்லுபடியாகும் தன்மையிலுள்ள உரித்தான வியாபார பதிவு.

ஆ) பிசிஏ-3 படிவம் (1987 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரமானது)

இ) வழங்குநரானவர் 5 வருட காலப்பகுதிக்குள் அபகீர்த்தியானோர் பட்டியலில் சேர்க்கப்படாதவராகவிருத்தல் வேண்டும்.

5. 2023 ஒக்டோபர் 30 ஆம் திகதியன்று பி.ப. 2 மணி வரையும் அஞ்சல் மாஅதிபருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 25000 இ.ரூபாவை அஞ்சல் திணைக்கள வழங்கல் அலுவலகத்திற்காக அஞ்சல் பைகளை தயாரித்தல், அச்சடித்தல் மற்றும் வழங்கலுக்காக செலுத்திய பின்னர், கீழேயுள்ள முகவரிக்கு விலைமனுதாரரினாலேயே அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதிகளினால் எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம்.

6. 2023 ஒக்ரோபர் 31 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் விலைமனுக்கள் கீழேயுள்ள முகவரியில் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மூடும் நேரத்தின் பின்னர் உடனடியாகவே கீழேயுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

7. இது தொடர்பான விலைமனு முன்னோடிக் கூட்டமானது 2023 ஒக்ரோபர் 18 ஆம் திகதியன்று மு.ப. 11.30 மணிக்கு கொழும்பு-10, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை, 310 ஆம் இலக்கத்திலுள்ள அஞ்சல் திணைக்கள தலைமையலுவலகம், அஞ்சல் மா அதிபரின் மாநாட்டு அறையில் நடைபெறும்.

8. விலைமனுக்கள் அவைகளை மூடும் திகதியிலிருந்து 91 நாட்காட்டி நாட்கள் வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.

9. 2024 பெப்ரவரி 28 ஆம் திகதியன்று வரையும் செல்லுபடியாகும் தன்மையிலிருப்பதும் 1,730,000 இலங்கை ரூபா பெறுமதியானதும் அஞ்சல் திணைக்கள அஞ்சல் மா அதிபரின் பெயரில் வழங்கப்பட்டதும் இலங்கையில் செயற்படும் வங்கியொன்றினால் வழங்கப்பட்ட விலைமனுப்பிணையொன்றுடன் (நிபந்தனையற்ற கோரும்போது பெற்றுக் கொள்ளும் உத்தரவாதம்) அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

10. எந்தவொரு காரணத்தையும் முன்வைக்காமல் எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்குமான உரிமையையும் விலைமனுவின் எந்தவொரு பகுதியையும் ஏற்றுக் கொள்வதற்குமான உரிமையை அஞ்சல் திணைக்கள அஞ்சல் மாஅதிபர் கொண்டுள்ளார்.

11. ஆர்வமுள்ள விலைமனுதாரர் மேலதிக தகவலை பெறுகைக்கான கணக்காளரிடமிருந்து 011-5746194 மற்றும் 011-4927249 ஆகிய தொலைபேசி இலக்கங்களினூடாக வேலை நாட்களில் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 3 மணிக்குமிடையில் பெற்று கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

**கணக்காளர் (பெறுகை),**
**அஞ்சல் தலைமையலுவலகம், இல.: 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**அஞ்சல் திணைக்களம்,**
**இல. 310, டி.ஆர். விஜேவர்தன மாவத்தை,**
**கொழும்பு-10.**

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை**

## விலைமனுக்கோரல்

### வீதி அபிவிருத்தி அதிகார சபையின் கட்டுமானப் பணிக்காக

1. வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் (RDA) கம்பஹா பிரதம பொறியியலாளர் பிரிவின் கொள்வனவுக் குழுவின் தலைவரினால் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கம்பஹா நிறைவேற்றுப் பொறியியல் பிரிவிற்கான கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு தகுதியான மனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.

   i. **RDA/GAM/CE/TEN/2023/20** - கோனவல பெலென்கஹஹேன (மயான வீதியில்) (0+345 to 1+500 km) மீள்கட்டுமானப் பணி.

2. மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள பின்வரும் இணையதளங்களை பார்வையிடவும்.

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு - **www.mohsl.gov.lk**
வீதி அபிவிருத்தி அதிகாரசபை - **www.rda.gov.lk**

**தலைவர்,**
**பிரதேச கொள்முதல் குழு, தலைமை பொறியியலாளர் பிரிவு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை,**
**கம்பஹா.**

## தெஹிவளை – கல்கிசை மாநகர சபை

### 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் வருடத்தில் தெஹிவளை கல்கிசை மாநகர சபையில் பின்வரும் பொருட்கள் மற்றும் சேவைகளை வழங்குவதற்காக அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்கள், உற்பத்தியாளர்கள், நிறுவனங்கள் மற்றும் முகவர் நிறுவனங்களிடமிருந்தும் சேவைகளின் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்காக 2023-10-06ஆம் திகதி முதல் 2023-10-27ஆம் திகதி வரை விண்ணப்பப் படிவங்கள் விநியோகிக்கப்படும்.

பதிவு செய்து கொள்வதற்காக இயைபுடைய நிறுவனத்தின் கடிதத் தலைப்பில் விண்ணப்பங்களைக் கோரும் கடிதத்துடன் அலுவலக நேரங்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 03.00 மணி வரையான காலத்தில் தெஹிவளை கல்கிசை மாநகர சபையின் முதலாம் மாடியில் அமைந்துள்ள வழங்கல் பிரிவில் ஒரு அம்சத்தின் பொருட்டு 1500.00 ரூபா வீதம் செலுத்துவதன் பேரில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். (வரிகள் உள்ளடக்கப்படல் வேண்டும்)

மேலதிக விபரங்களை பிரதான மாநகர கணக்காளரிடமிருந்து 011-2721379 எனும் தொலைபேசி இலக்கத்தின் ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பதிவு செய்து கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பப் படிவங்கள் 2023-11-27ஆம் திகதிக்கு முன் மாநகர ஆணையாளர், தெஹிவளை கல்கிசை மாநகர சபை, தெஹிவளை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நேரில் கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்களைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வழங்குநர்களைப் பதிவு செய்தல் 2024" எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பதிவு செய்து கொள்வதற்காக கோரப்படும் அம்சங்கள் மற்றும் சேவைகள் பின்வருமாறாகும்.**

| A | வழங்க வேண்டிய பண்டங்கள் / உபகரணங்கள் / பொருட்கள் |
|---|---|
| 1 | காகிதாதிகள் மற்றும் அலுவலகத் தேவைப்பாடுகள் |
| 2 | அலுவலக உபகரணங்கள் (கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள், அச்சுப் பொறிகள் மற்றும் தொலைநகல் மற்றும் நேரப்பதிவு இயந்திரம், ஸ்கேன் இயந்திரம், தட்டச்சுப் பொறிகள், ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம்) |
| 3 | கணனிகளுக்கான டோனர், மை, கார்ட்ரிச், ரிபன் மற்றும் தொலைநகல் இயந்திரத்திற்குத் தேவையான டோனர் |
| 4 | கமரா, புரஜெக்டர்கள், பாதுகாப்பு கமராக்கள், வீடியோ உபகரணங்கள் வழங்குதல் தொலைக்காட்சி வீசீடி/டிவிடி சாதனங்கள் |
| 5 | கெனபி |
| 6 | அலுவலக மேசைகள், கதிரைகள் மற்றும் உபகரணங்கள் (இரும்பு, பிளாஸ்திக், மரம் கலந்தவை) தேநீர் கோப்பை மற்றும் மட்பாண்டப் பொருட்கள் |
| 7 | சிறுவர் பூங்காக்களுக்கான விளையாட்டு உபகரணங்கள் |
| 8 | உடற்பயிற்சி உபகரணங்கள் |
| 9 | விளையாட்டுப் பொருட்கள் |
| 10 | ஞாபகச் சின்னங்கள், பதக்கங்கள், விருதுகள், ஞாபக படிகங்கள் (கருங்கல் ஆக்கம் உட்பட) |
| 11 | கொடிகள், மூலைக் கொடிகள், அலங்காரங்கள் போன்றன |
| 12 | திரைச் சீலைகள், மேசை விரிப்புகள் |
| 13 | மழை அங்கிகள் மற்றும் நுளம்பு வலைகள் |
| 14 | காலணிகள் / பாதுகாப்புக் காலணிகள் |
| 15 | தைத்து முடிக்கப்பட்ட முன்பள்ளிச் சீருடைகள் |
| 16 | சீருடைக்கான துணிகள், தைக்கப்பட்ட சீருடைகள், ட சேர்ட் மற்றும் சீருடை இலச்சினைகள் |
| 17 | சுகாதார உபகரணங்கள், ஈர்க்கிள், துடைப்பம், வாளிகள், கூடைகள் |
| 18 | கிருமிநாசினிகள், களைநாசினிகள் மற்றும் பீடை நாசினிகள் |
| 19 | புல் பற்றைகள் மற்றும் தும்புச்சோறு, பசளை மற்றும் கொம்போஸ்ட் உரம், கிருமிநாசினி திரவங்கள், மரக்கறிக் கன்றுகள், பூக்கன்றுகள், சீமெந்து பூச்சாடிகள், ரூட் போல் கன்றுகள் |
| 20 | விசர்நாய்க்கடி தடுப்பூசி |
| 21 | நுளம்பு மருந்து தெளிக்கும் இயந்திரம், புகையடிக்கும் இயந்திரம் போன்றன |
| 22 | புல் வெட்டும் இயந்திரம் உட்பட தோட்ட அலங்காரத்திற்கான உபகரணங்கள் மற்றும் துணைப்பொருட்கள் |
| 23 | சவர்க்காரம், சுத்திகரிப்பு மற்றும் சுத்தம் செய்யும் உபகரணங்கள் |
| 24 | நீர் சுத்திகரித்தல் மற்றும் நீர் வடிகட்டி உபகரணங்கள் |
| 25 | குடிநீர் போத்தல்கள் |
| 26 | விசேட வேளைகளுக்கான காலை, பகல், இரவு உணவு வழங்குதல், சிற்றுண்டிகள் மற்றும் Desert என்பன வழங்குதல் |
| 27 | மின் உபகரணங்கள் |
| 28 | கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் குழந்தைகளுக்குத் தேவையான உபகரணங்கள் |
| 29 | முகம் பார்க்கும் கண்ணாடிகள் (Mirror) மற்றும் கண்ணாடிகள் (Glass Pad) |
| 30 | கால் துடைப்பங்கள் மற்றும் பொலிபேக் வழங்குதல் |
| 31 | தீயணைப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள், பாதுகாப்பு உபகரணங்கள், கண் கவசங்கள் (Goggles) இறப்பர் கையுறைகள் (Rubber Gloves) |
| 32 | சகல வகையான அரிந்த மரங்கள் |
| 33 | ஓடுகள், மூலை ஓடுகள், சரளைக் கற்கள், ஆற்று மணல், செங்கல், கடல் மணல் |
| 34 | ஆர்.சி.சி. குழாய்கள், கொங்கிறீட் செனல், சீமெந்துக் கற்கள், ஆர்.சி.சி. கொங்கிறீட் தூண்கள், கொங்கிறீட் ஸ்லப், இன்டர்லொக்கிங் |
| 35 | கருங்கல் |
| 36 | சீமெந்து |
| 37 | கொலாஸ் மற்றும் தார் |
| 38 | இரும்புப் பொருட்கள், கட்டிடப் பொருட்கள் |
| 39 | பீவீசீ முலாமிடப்பட்ட வலைகள் |
| 40 | நீர்க்குழாய் உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் |
| 41 | தரையோடுகள் |
| 42 | நிறப்பூச்சுகள் |
| 43 | மிதிவண்டிகள் |
| 44 | டிராக்டர் மற்றும் உதிரிப்பாகங்கள் |
| 45 | டயர்கள் மற்றும் டியூப்கள் |
| 46 | வாகன உதிரிப்பாகங்கள் |
| 47 | கை வண்டிகள் |
| 48 | மருத்துவ உபகரணங்கள |
| 49 | கிருமிநாசினித் திரவங்கள் / ஜெல் (Hand Sanitizer), சத்திரசிகிச்சை முகக்கவசங்கள் (Surgical Mask) மற்றும் கையுறைகள் (Surgical Gloves) |
| 50 | சாதாரண ஓவரோல் தொகுதிகள் (PPE Kit) மற்றும் பொலித்தீன் ஓவரோல் கிட் |
| 51 | உராய்வு நீக்கிகளைக் கொள்வனவு செய்தல் (என்ஜின் ஓயில், ஹைட்ரோலிக் ஓயில், கிறீஸ்) |
| 52 | ஆயுர்வேத மருந்துகள் |

| B | வழங்கல்கள் மற்றும் சேவைகள் |
|---|---|
| 1 | அச்சு வேலைகள் மற்றும் புத்தகம் கட்டுதல் |
| 2 | அலுவலக உபகரணங்களை (கணனிகள் மற்றும் துணைப்பாகங்கள், அச்சுப் பொறிகள் மற்றும் தொலைநகல் மற்றும் நேரப்பதிவு இயந்திரம், தட்டச்சுப் பொறிகள், ரோணியோ இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைக்காட்சி வீசீடி/டிவிடி சாதனங்கள்) பராமரித்தல் மற்றும் திருத்தவேலைகள் |
| 3 | கணனி மென்பொருள் அபிவிருத்தி, நிறுவுதல் மற்றும் ஆலோசனைச் சேவைகள் |
| 4 | புகைப்படமெடுத்தல் மற்றும் காணொளி பதிவு செய்தல் |
| 5 | டிஜிட்டல் பதாகை மற்றும் ஸ்டிக்கர் அச்சு வேலைகள் |
| 6 | ஒலிபெருக்கி சாதனங்களை வாடகைக்கு வழங்குதல் மற்றும் ஒளியமைப்புகளை வாடகைக்கு வழங்குதல் |
| 7 | வாடகை அடிப்படையில் வைபவப் பொருட்களை வழங்குதல் |
| 8 | விளையாட்டு உபகரணங்கள் மற்றும் முன்பள்ளி உபகரணங்களின் திருத்தவேலை மற்றும் பராமரிப்பு |
| 9 | உடற்பயிற்சி உபகரணங்களின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்புகள் |
| 10 | தீயணைப்பு முறைமை, தன்னியக்கம் மற்றும் கையால் இயக்கப்படும் தீ அபாய எச்சரிக்கை சமிக்ஞையை பராமரித்தல் |
| 11 | பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் தீயணைப்பு உபகரணங்களின் திருத்தவேலைகள் |
| 12 | வளிச்சீராக்கி இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| 13 | ஸ்பிலிட் மாதிரியிலான வளிச்சீராக்கி இயந்திரங்கள் மற்றும் குளிர்சாதனப் பெட்டிகளின் திருத்தவேலைகள் மற்றும் பராமரிப்பு |
| 14 | பழைய புதினப்பத்திரிகைகளைக் கொள்வனவு செய்தல் |
| 15 | நிறுவன உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளைத் தயாரித்தல் |
| 16 | சீருடைகளைத் தைத்தல் (ஓவரோல், பாதுகாப்புப் பிரிவின் சீருடைகள்) |
| 17 | இயந்திரத்தின் மூலம் செய்யப்படும் இயந்திரத் திருத்தவேலைகளைச் செய்தல் (ஸ்லிவ் பொருத்துதல், கிரேங்ஸ் வெட்டுதல், போர் செய்தல் மற்றும் ஏனைய திருத்தவேலைகள்) |
| 18 | வாகன குஷன் திருத்தவேலைகள் |
| 19 | வாகன மின் திருத்தவேலைகள் (Alternator/Stator Motor மற்றும் ஏனைய உபகரணங்கள்) |
| 20 | வாகன வளிச்சீராக்க திருத்தவேலைகள் |
| 21 | வாகன ரேடியேட்டர் திருத்தவேலைகள் |
| 22 | இன்ஜெக்டர் பம்பி திருத்தவேலைகள் |
| 23 | க்ளச் பிளேட், பிரேக் லைனர் ஒட்டும் வேலைகள் |
| 24 | அனைத்து வகையான வாகன டயர்களை மீள்நிரப்புதல் |
| 25 | ஸ்பீடோ மீட்டர் திருத்தவேலைகள் |
| 26 | வாகன கேபள் வகைகளின் திருத்தவேலைகள் |
| 27 | இரும்புத் தகடுகளை வளைத்தல் மற்றும் வெட்டும் வேலைகள் |
| 28 | மீள்சுழற்சி செய்யக்கூடிய பொருட்களைக் கொள்வனவு செய்தல் (காகிதம், கார்ட்போட், சிரட்டை, பிளாஸ்டிக், பிளாஸ்டிக் உற்பத்தி வகைகள், பேல் செய்யப்பட்ட பொலித்தீன், டெட்ரா பெகட், பிஸ்கட், பால் பெக்கட் வகைகள், டின்கள், பேல் செய்யப்பட்ட பியர் கேன்கள், அலுமினிய தாள்கள் மற்றும் உணவுப் பெட்டிகள், பழைய டயர், இறப்பர் உற்பத்திகள் |
| 29 | உடைந்த வாகன உதிரிப்பாகங்கள், சிதைந்த டயர்களைக் கொள்வனவு செய்தல் |
| 30 | பாதுகாப்பு கமரா முறையைப் பொருத்துதல் மற்றும் பராமரித்தல் |
| 31 | ஹைட்ரோலிக் ஹோஸ் திருத்தவேலைகள் |
| 32 | வாகன தகர நிறப்பூச்சு திருத்தவேலைகள் |
| 33. | புகையடிக்கும் இயந்திரம், புல் வெட்டும் இயந்திரம் மற்றும் மரம் வெட்டும் இயந்திரங்களின் திருத்தவேலைகள் |
| 34. | உணவுக் கழிவுகளைக் கொள்வனவு செய்யும் கொள்வனவாளர் |
| 35 | இறைச்சி, மீன் கழிவுப்பொருட்களைக் கொள்வனவு செய்யும் கொள்வனவாளர்கள் |
| 36 | அழுக்குத் துணிகளை சலவை செய்யும் வேலைகள் |
| 37 | வழக்குகளுக்கான சிரேஷ்ட சட்டத்தரணிகள் |
| 38 | உத்தரவுபெற்ற பதிவுபெற்ற நில அளவையாளர்கள் |

**மாநகர ஆணையாளர்,**
**தெஹிவளை - கல்கிசை மாநகர சபை,**
**தெஹிவளை.**
**2023-09-27**

## பதவி வெற்றிடங்கள்

## தேசிய கல்வி நிறுவனம்

தகைமையுள்ள விண்ணப்பதாரிகளிடமிருந்து பின்வரும் பதவிகளுக்காக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 2023 ஒக்ரோபர் 20 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னராக கீழேயுள்ள முகவரியில் கிடைக்கும் வகையில் உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை தயவு செய்து அனுப்பவும். விதித்துரைக்கப்பட்ட விண்ணப்ப படிவங்கள் மற்றும் மேலதிக விபரங்கள் ஆகியன www.nie.ac.lk என்ற இணையதளத்தின் 'News & Events' என்ற பிரிவின் கீழிருந்து பதிவிறக்கம் செய்யலாம்.

தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் பதவிப் பெயரை தயவு செய்து குறிந்துரைக்கவும்.

A. சேவை வகுதி :- சிரேஷ்ட முகாமையாளர் (ஏச்எம் 1-1)
பதவி :- பணிப்பாளர் (நிதி)

B. சேவை வகுதி :- இடைநிலை முகாமையாளர் (Middle Manager) (எம்எம் 1-3)
பதவி :- சட்ட அலுவலர்

**பொதுவான நிபந்தனைகள்:**

- பிறப்புச் சான்றிதழ், கல்விசார்/தொழில்சார் சான்றிதழ்கள் மற்றும் சேவைகள் சான்றிதழ்களின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதிகளுடன் விண்ணப்பங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- அரச துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட அமைப்புக்கள் மற்றும் அரசாங்க திணைக்களங்களின் விண்ணப்பதாரிகள் அவர்களின் விண்ணப்பங்களை அமைப்புக்களின் தலைமையூடாகவே சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
- இந்த பதவிகள் நிரந்தரமானவை என்பதுடன் தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள் அவர்களின் சம்பளத்தின் 8% ஐ ஊசேநி இற்கு பங்களிப்புச் செய்வதுடன் நிறுவனமானது 12% ஐ ஊசேநி இற்கும் 3% ஐ ஊநநி இற்கும் பங்களிப்புச் செய்யும்.
- அடிப்படைச் சம்பளத்திற்கு மேலதிகமாக, அங்கீகரிக்கப்பட்ட ஏனைய படிகளும் வழங்கப்படும்.
- அரச துறை, கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட அமைப்புக்கள், அரசாங்க திணைக்களங்கள் மற்றும் தேசிய கல்வி நிறுவனம் ஆகியவற்றின் அபேட்சகர்களுக்கு மேல் வயதெல்லை பிரயோகப்படுத்தப்பட மாட்டாது.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கல்வி நிறுவனம்.**

## திவுலப்பிட்டிய பிரதேச சபை

## படல்கம பொதுச் சந்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள கடை அறைகளை குத்தகைக்கு விடல்

திவுலப்பிட்டிய பிரதேச சபைக்குரித்தான படல்கம பொதுச்சந்தையில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள தரைமாடி கடை அறைகள் 2ஐ குத்தகைக்கு வழங்குவதற்காக கேள்விகள் என்னால் ஏற்கப்படும்.

**கேள்விப் படிவங்கள் வழங்கப்படுதல் - 2023.10.09 முதல் 2023.11.01 ஆம் திகதி வரை (மு.ப. 9.00 முதல் பி.ப.3.00 மணி வரை)**
**கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளல் - 2023.11.02 மு.ப. 9.30 மணி வரை**
**கேள்விகள் திறக்கப்படுதல் - 2023.11.02 மு.ப. 9.30 மணிக்கு.**

2. பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள வகையில் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் மற்றும் மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை என்பவற்றை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்குச் செலுத்தி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குறைந்தபட்ச கட்டணத்திற்கு குறைவாக சமர்ப்பிக்கப்படும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

4. முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விப்படிவங்கள் 2023.11.02ஆம் திகதி மு.ப. 9.30 மணி வரை என்னால் ஏற்கப்படும். குறித்த விண்ணப்பப்படிவக் கட்டணம் மற்றும் கேள்விப் பிணை வைப்புத் தொகையை திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு செலுத்தி 2023.11.01 ஆம் திகதி பி.ப. 3.00 மணி வரை பெற்றுக்கொள்ளலாம்.

5. கேள்வி மாதிரிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ளும் போது விண்ணப்பதாரர் தமது தேசிய அடையாள அட்டையை சமர்ப்பித்து தமது ஆளடையாளத்தை உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன் இதற்கு முன் பிரதேச சபைக்குச் சொந்தமான சொத்துக்களின் வர்த்தக உரிமையை குத்தகைக்கு பெற்று உடன்படிக்கைகளை மீறியுள்ள குத்தகைதாரர்களுக்கு விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படமாட்டாது.

6. கேள்வி விண்ணப்பங்களை வெவ்வேறாக பூர்த்தி செய்த பின்னர் "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரதி"யை வேறுவேறாக இரு உறைகளில் இட்டு அவ் உறைகளின் பின்பக்கம் "மூலப்பிரதி" மற்றும் "நகல் பிரதி" என்று குறிப்பிட்டு அவ்விரு உறைகளையும் இன்னுமொரு கடித உறையில் இட்டு முத்திரைக் குறியிட்டு அவ்வுறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த கேள்வியின் பெயரைக் குறிப்பிட்டு முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்விகளை "தலைவர், திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டிய" எனும் முகவரிக்கு 2023.11.02 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு முன் திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்திற்கு கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும் அல்லது அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

7. 2023.11.02 ஆம் திகதி மு.ப. 9.30 மணிக்கு திவுலப்பிட்டிய பிரதேச சபை தலைமையகத்தில் கேள்விகள் திறக்கப்படும் என்பதுடன் அந்நேரத்தில் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது எழுத்துமூல அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

8. கேள்விகள் அங்கீகரிக்கப்பட்டுள்ளதாக அறிவித்து 07 நாட்களுக்குள் விண்ணப்பிக்கும் குறைந்தபட்ச கேள்வித்தொகை போன்று மூன்றுமடங்கு விண்ணப்பதாரிகளால் திவுலப்பிட்டிய பிரதேச சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

9. உடன்படிக்கைக்கு தீர்மானிக்கப்பட்டுள்ள குத்தகை எல்லை 03 வருடமாகும்.

10. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபையின் தீர்மானம் என்பதுடன் சபையின் தீர்மானமே இறுதித்தீர்மானமாகும்.

11. மேலதிக விபரங்கள் தேவைப்பட்டால் திவுலப்பிட்டிய பிரதேச சபையின் பின்வரும் தொலைபேசி இலக்கங்களில் விசாரித்தறியலாம்.

| தொடர் இலக்கம் | கடை அறை இலக்கம் | நீள அகலம் (சதுர அடி | மாதாந் வாடகை (ரூ) | குறைந்தபட்ச கேள்வித் தொகை (ரூ) | கேள்விப் பிணை வைப்புக்கள் (மீளளிக்கப்படும்) | படிவக் கட்டணம் (மீளளிக்கப் படாதது) (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | கடைஅறை இலக்கம் 01 | 1049.12 | 25,000 | 25,000 | 2500/- | 1000/- |
| 2 | கடைஅறை இலக்கம் 02 | 203087 | 40,000 | 40,000 | 2500/- | 1000/- |

**ஆர்.எம்.எம்.டி.ரத்னாயக்க**
**திவுலப்பிட்டிய பிரதேச சபையின் செயலாளர் மற்றும்**
**அதிகாரங்கள், செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**திவுலப்பிட்டிய பிரதேச சபை, திவுலப்பிட்டியவில்.**
**2023.10.02**

**தொலைபேசி இல. : 031-2246275**
**பெக்ஸ் இல : 031-2243865**

# விலைமனுக் கோரல்

## மினுவாங்கொடை நகர சபை

பின்வரும் 01ஆம் இலக்க அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள மினுவாங்கொடை நகர சபைக்குச் சொந்தமான கடை அறைகளை மூன்று வருடங்களுக்கொருமுறை உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்ளும் அடிப்படையில் குத்தகைக்கு வழங்குவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் 2023-10-26ஆம் திகதி பி.ப. 2.00 மணி வரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2023-10-26ஆம் திகதி கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்பட்டு நிறைவடைந்த உடனடுத்து விலைமனுக்கள் திறக்கப்படும். பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள கட்டணத்தை ரொக்கப் பணமாகச் செலுத்தி ஒவ்வொரு விலைக்கோரலுக்கும் இயைபான விலைக்கோரல் படிவங்கள் மற்றும் விலைக்கோரல் நிபந்தனைகளை 2023-10-26ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை நகர சபையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட விலைமனுக்களை 02 பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதுடன் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதி எனக் குறிப்பிட்டு குறித்த விலைக்கோரல் இலக்கம் மற்றும் விண்ணப்பிக்கும் விலைக்கோரலின் பெயரை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டு செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம் வாய்ந்த வேலைகளைச் செயற்படுத்தும் அதிகாரி, மினுவாங்கொடை நகர சபை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம் அல்லது நகர சபையில் இதற்காக ஒதுக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். விலைமனுக்கள் திறக்கப்படும் நிகழ்வில் விலைமனுதாரர் அல்லது அவரது பிரதிநிதியொருவர் கலந்துகொள்ள அனுமதி உண்டு.

நிர்ணயிக்கப்பட்ட தினம் மற்றும் நேரத்தின் பின் கிடைக்கப்பெறும் விலைமனுக்கள் மற்றும் முழுமையற்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேலதிக விபரங்களை 011-2295275 எனும் தொலைபேசி இலக்கத்தில் சபையின் செயலாளரைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**அட்டவணை இல. 01**

மூன்று வருடங்களுக்கொருமுறை உடன்படிக்கையை புதுப்பித்துக் கொள்ளும் அடிப்படையில் மினுவாங்கொடை நகர சபைக்குச் சொந்தமான கடை அறைகளை குத்தகைக்கு வழங்குதல்

| தொ. இல. | குத்தகை உரிமையை வழங்குதல் / விற்பனை உரிமையை வழங்குதல் | மீளளிக்கப்படும் கேள்விப் பிணைத் தொகை ரூபா | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | வருடாந்த ஆகக் குறைந்த தொகை* |
|---|---|---|---|---|
| 1 | வாரச் சந்தைக்கு முன்னாலுள்ள சந்தைக் கட்டிடத்தொகுதியின் இரண்டாம் மாடி 16ஆம் இலக்க கடை அறை | 25,000.00 | 3,000.00 | 49,200.00 |

* ஆகக் குறைந்த மாதாந்த வாடகை 4,100.00 ரூபாவாகும் என்பதுடன், மாதாந்த வாடகையின் 12 மடங்கான 49,200.00 ரூபா தொகை வருடாந்த ஆகக் குறைந்த தொகையாக காட்டப்பட்டுள்ளது. மூன்று வருடங்களுக்கொருமுறை மாதாந்த கடை வாடகை அரசாங்க மதிப்பீட்டின் பிரகாரம் திருத்தப்படும்.

** வெற்றிகரமான விலைமனுதாரர் இந்த கடை அறைக்காக 200,000.00 ரூபா மீளளிக்கப்படாத முற்பணத்தைச் செலுத்துதல் வேண்டும்.

**கே.எச். கபில குமார,**
**செயலாளர் மற்றும் சபையின் அதிகாரம்**
**வாய்ந்த வேலைகளைச் செயற்படுத்தும் அதிகாரி,**
**மினுவாங்கொடை நகர சபை.**

**2023-09-27**
**மினுவாங்கொடை நகர சபையில்**

SRI LANKA

## இலங்கை சனநாயக சோசலிச குடியரசு
## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
## இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்

# விலைமனுக்கோரல்

## சர்வதேச போட்டி ஏல முறையிலான விலைமனுக்கோரல் (NCB)

**செயல்பாட்டு குத்தகை முறையின் கீழ் Double Cab வண்டியொன்றினை கொள்வனவு செய்தல்**

**Contract No: SLTPB/PROC/NCB/109**

1. SLTPB இன் திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால், இலங்கை சுற்றுலா ஊக்குவிப்பு பணியகத்திற்கான செயல்பாட்டு குத்தகை முறையின் கீழ் Double Cab வண்டியொன்றினை கொள்வனவு செய்வதற்காக அங்கீகாரம்பெற்ற நிறுவனங்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட மனு முன்மொழிவுகள் கோரப்படுகின்றன.

2. மனுதாரர்கள் பின்வரும் தகுதிகளையும் அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும்.

   தகுதியான வழங்குனர்கள், இலங்கையில் உள்ள உலகப் புகழ்பெற்ற வாகன பிராண்டுகளின் உரிமையாளரான வாகன முகவராக இருக்க வேண்டும், இலங்கை மத்திய வங்கியின் கீழ் உரிமம் பெற்ற நிதி நிறுவனம் அல்லது குறைந்தபட்சம் 10 வாகனங்களைக் கொண்ட கார் வாடகை சேவை (அதாவது கார் வாடகைக்கு விடும் நிறுவனமாக) இருத்தல் வேண்டும்.

3. தேசிய கொள்முதல் வழிகாட்டி 2006ன் கீழ் இரண்டு உறைகள் மூலமான தேசிய போட்டி ஏல முறையை பின்பற்றி ஏலம் நடத்தப்படும்.
   *https://www.treasury.gov.lk/web/procurement-guidelines-and-manuals/section/procurement%20guidelines*

4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **procurement@srilanka.travel** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு கோரிக்கை ஒன்றினை அனுப்பி மற்றும் அதன் பிரதியை **nithinip@srilanka.travel** என்ற முகவரிக்கு அனுப்புவதன் மூலம் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் முகாமைத்துவப் பணிப்பாளரிடமிருந்து மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.

5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **www.srilanka.travel** என்ற இணையதளத்திற்கு பிரவேசிப்பதன் மூலமாக மனு ஆவணத்தை இலவசமாகப் பார்வையிடலாம்.

02. தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாத கேள்விதாரர்கள் மீளளிக்கப்படாத கேள்விக் கட்டணத்தை வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கு ரொக்கப் பணமாகச் செலுத்தியதன் பின் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்டுள்ள கேள்வி கோரல் ஆவணத் தொகுதியொன்றை வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்கள அலுவலகத்திலிருந்து 2023-10-06ஆம் திகதி முதல் 2023-10-19ஆம் திகதி வரையான அலுவலக நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையில் பெற்றுக்கொள்ளலாம். மேலும் கேள்வி ஆவணங்களை இந்த அலுவலகத்திற்கு வருகை தந்து இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். (விசாரணை: 025-2050718)

03. கேள்வி நிபந்தனைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்பட்ட கேள்விப்பத்திரங்களை 2023-10-20ஆம் திகதி மு.ப. 11.00 மணிக்கு முன் கிடைக்கும் வகையில் ''செயலாளர்/ தலைவர், அமைச்சுப் பெறுகைக் குழு, சுகாதார அமைச்சு, வடமத்திய மாகாணம், மூன்றாம் மாடி, மாகாண சபை நிர்வாகக் கட்டிடத் தொகுதி, ஹரிஸ்சந்திர மாவத்தை, அனுராதபுரம்'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பியோ அல்லது இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டோ சமர்ப்பிக்கலாம்.

04. சகல கேள்விப் படிவங்களுடனும் இலங்கை மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட மேற்படி அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுமதி மற்றும் செல்லுபடியாகும் காலத்திற்கு அமைவாக நிபந்தனையற்ற, வடமத்திய மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பெயரில் பெற்ற கேள்விப் பிணை பாதுகாப்பு முறியொன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. கேள்விப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும்போது இரு பிரதிகளில் மூலப் பிரதி மற்றும் நகல் பிரதியை வெவ்வேறான இரு உறைகளிலிட்டு ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனக் குறிப்பிட்டு முத்திரை பொறித்து, அவ்விரு உறைகளையும் வேறொரு உறையில் இடல் வேண்டும். அவ்வுறையில் இடதுபக்க மேல் மூலையில் செயற்றிடத்தின் பெயரைக் குறிப்பிடல் வேண்டும்.

06. கேள்விகள் 119 நாட்கள் வரையில் செல்லுபடியாதல் வேண்டும்.

07. 2ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு கேள்விகள் ஏற்றுக்கொள்ளல் முடிவடைந்த உடனேயே அவை திறக்கப்படும். கேள்விதாரர் அல்லது அவரால் எழுத்து மூலம் அதிகாரம் வழங்கப்பட்ட பிரதிநிதியொருவர் இந்நிகழ்வில் கலந்துகொள்ளலாம்.

08. இக்கேள்வி தொடர்பில் வடமத்திய மாகாண சுகாதார அமைச்சின் பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதித் தீர்மானமாகும்.

**செயலாளர் / தலைவர்,**
**அமைச்சுப் பெறுகைக் குழு,**
**சுகாதார அமைச்சு,**
**வடமத்திய மாகாணம்.**
**2023-10-06.**

# விவசாயத் திணைக்களம் – பேராதனை

## கழிக்கப்பட்ட வாகனம் மற்றும் வேறு கழிக்கப்பட்ட பொருட்களின் விற்பனைக்கான கேள்வி கோரல்

விவசாயத் திணைக்களத்தின் நிதிப் பிரிவின் பிரதேச பெறுகைக் குழுவினால் இலங்கையெங்கும் அமைந்துள்ள 33 இடங்களில் இருக்கும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட கழிக்கப்பட்ட வாகனங்கள் 66, கண்ணாடிக் குழாய் 01 லொட் மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட ஒரு பொயிலர் விற்பனை செய்யும் முகமாக கேள்விகள் கோரப்படுகின்றன.

A மற்றும் B வகுதிகளாகிய - பெயர் குறிப்பிட்டுள்ள கழிக்கப்பட்ட வாகனங்கள், C வகுதியாக பெயர் குறிப்பிட்டுள்ள கழிவுகளாக இனங்காணப்பட்ட வாகனங்கள் மற்றும் D வகுதியாக பெயர் குறிப்பிட்டுள்ள கண்ணாடிக் குழாய் 1 லொட் மற்றும் பாவனையிலிருந்து அகற்றப்பட்ட, பொயிலர் பற்றிய விவரங்களுடனான கேள்வி ஆவணங்களை விவசாயத் திணைக்களத்தின் நிதிப்பிரிவில் சொத்துக்கள் முகாமைத்துவ கிளையில் இலவசமாக பரீட்சித்துப் பார்க்க முடிவதுடன் விவசாயத் திணைக்களத்தின் https://doa.gov.lk/si-fin-asset-downloads என்ற இணையதளத்தை பரிசீலித்து இந்த தகவல்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பதாரர்களுக்கு A வகுதி வாகனங்களுடன் சம்பந்தப்பட்ட, ஆவணங்கள் சார்பாக மீளளிக்கப்படாத ரூ.500/- உம் B,C மற்றும் D வகுதியுடன் சம்பந்தப்பட்ட ஆவணங்கள் சார்பாக மீளளிக்கப்படாத ரூ. 300/- படிவக் கட்டணத்தை விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் காசாக செலுத்திய பின்பு தலைமையகத்தின், நிதிப்பிரிவில் சொத்துக்கள் முகாமைத்துவக் கிளையில் 2023.10.09 முதல் 2023.11.03 வரை வாரத்தின் வேலை நாட்களில் மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை மற்றும் 2023.11.06 மு.ப 9.00 முதல் 9.30 வரை பெற்றுக் கொள்ளலாம். தபால் மூலம் விண்ணப்பங்கள் மற்றும் கேள்வி ஆவணங்களை பெற்றுக் கொள்வதற்கு எதிர்பார்ப்பின் அரச அங்கீகாரம் பெற்ற எந்த வங்கியிலிருந்தும் மக்கள் வங்கியின் பேராதனை கிளையில் நடத்திச் செல்லப்படும் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின், 057100139027201 என்ற கணக்கு இலக்கத்திற்கு காசு வைப்புச் செய்து மேற்படி பற்றுச் சீட்டுடன் ரூ. 200 பெறுமதியான முத்திரையிடப்பட்ட உங்களது முகவரி குறிப்பிடப்பட்ட கடித உறையுடன் வேண்டுதல் கடிதத்தை 2023.10.20 இற்கு முன் கிடைக்குமாறு கணக்காளர், சொத்து முகாமைத்துவ கிளை, விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு தபாலிட்டு அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

ஒன்லைன் வழியாக கேள்விப்படிவங்கள் மற்றும் விண்ணப்பங்களைப் பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிப்பதாயின் ஒன்லைன் முறை ஊடாக அல்லது அரச அங்கீகரிக்கப்பட்ட எந்த வங்கியிலிருந்தும் மக்கள் வங்கியின் பேராதனை கிளையில் நடத்திச் செல்லப்படும் விவசாயப் பணிப்பாளர் நாயகத்தின் 057100139027201 என்ற கணக்கு இலக்கத்துடன் சம்பந்தப்பட்ட தொகையை வைப்புச் செய்து அதன் பற்றுச் சீட்டை, தமது அடையாள அட்டை இலக்கம் மற்றும் பெற்றுக் கொள்வதற்கு உத்தேசிக்கும் வாகனத்தின் இலக்கத்தை 2023.11.03 இற்கு முன்பு 0718273900 என்ற தொ.பே. இலக்கத்திற்கு வட்ஸ்அப் (Whatsapp) செய்தியின் மூலம் அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

சகல கேள்விப் படிவங்களும் சீல் இடப்பட்ட உறைகளில் இட்டு தலைவர், பிரதேச பெறுகைக் குழு, பிரதான நிதிப் பிரிவு, விவசாயத் திணைக்களம், பேராதனை என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். இல்லையெனில் மேற்படி முகவரியில் அமைந்துள்ள பிரதான நிதிப்பிரிவில் இருக்கும் ஆவணத்தில் குறிப்பிடப்பட்டு அங்குள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம். கேள்விப் படிவங்கள் உள்ளிடும் உறையில் இடதுபக்க மேல் மூலையில் "கழிக்கப்பட்ட வாகன விற்பனை" மற்றும் வகுதியுடன் சம்பந்தப்பட்ட குறியீட்டு இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

A வகுதி உள்ளடங்கிய தேர்ந்தெடுக்கப்பட்ட வாகனங்கள் சார்பாக கேள்வி விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும் போது கேள்விப்பிணை வைப்புச் செய்தல் வங்கிப் பிணையின் மூலம் செலுத்துவதாயின் ஆவணங்களில் உருப்படிகளின் முன்னால் காட்டப்பட்டுள்ள கணக்கிற்கு சமமான தொகையை நிபந்தனையற்ற கோரும் போது செலுத்தப்படும் கேள்விப் பிணையொன்றை விவசாயப் பணிப்பாளர் நாடகத்தின் பெயரில் கட்டளையிடப்பட்டு 2024.01.31 வரை செல்லுபடியாகும் மத்திய வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து பெற்றுக்கொண்ட கேள்விப் படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். அதனை காசாக செலுத்துவதாயின் உருப்படியின் முன்னால் காட்டப்பட்டுள்ள விதத்தில் சமமான தொகையை விவசாயத் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டின் மூலப் பிரதி கேள்விப் படிவத்துடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

B,C மற்றும் D வகுதிக்காக கேள்விப் பிணையொன்று அவசியமில்லை.

கேள்வி ஏற்றுக் கொள்ளல் 2023.11.06 மு.ப 10.00 இற்கு முடிவடைவதுடன் உடனடியாக விவசாயத் திணைக்களத்தின் பிரதான மாநாட்டு மண்டபத்தில் கேள்விகள் திறக்கப்படும். இவ்வேளையில் கேள்விகள் சமர்ப்பிப்பவர்களுக்கு அல்லது அவரது எழுத்துமூல அதிகாரமளிக்கப்பட்ட ஒரு பிரதிநிதிக்கு சுகாதாரப் பாதுகாப்பு சட்ட திட்டங்களுக்கு இணங்கி அதற்கு சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பிரதேச பெறுகைக் குழு,**
**நிதிப் பிரிவு,**
**விவசாயத் திணைக்களம்,**
**2023.10.06ம் திகதி**

* Trusted Marketplace of Classified Advertisers...
SUNDAY OBSERVER adz it's what you want Classified
Call :- 077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343
077 7 270 067 E-mail - classified@lakehouse.lk
Green Light for Online Transfer
For 15 Words Rs. 800/-
(Additional each word Rs. 20/-)
Lake House Branch Acc. No. 000000377

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# களனி பல்கலைக்கழகம் – இலங்கை

## பதவி வெற்றிடங்கள்

2021/2022 ஆம் கல்வி ஆண்டிற்காக பின்வரும் பதவிக்காக 2023.10.25 ஆம் திகதியன்று வரையும் களனி பல்கலைக்கழகமானது விண்ணப்பங்களை பெற்றுக் கொள்ளும்.

- **தற்காலிக விரிவுரையாளர்**

**வர்த்தகம் மற்றும் முகாமைத்துவ கற்கைநெறிகள் பீடம்**

**நிதி திணைக்களம்**

**விண்ணப்பிக்கும் முறைமை:**
விதித்துரைக்கப்பட்ட விண்ணப்பங்கள் ஒன்-லையினூடாக மாத்திரமே அழைக்கப்படுகின்றன. ஒன்-லையின் விண்ணப்பம், விண்ணப்பப்படிவத்தை பூர்த்தி செய்வதற்கான வழிகாட்டி மற்றும் தகைமைகள் தொடர்பான தகவல். சம்பளம் மற்றும் அனுகூலங்கள் ஆகியவற்றை அணுகுவதற்காக https://www.kln.ac.lk/vacancies என்ற பல்கலைக்கழக இணையதளத்தை தயவு செய்து பார்வையிடவும்.

**பதிவாளர்,**
**களனி பல்கலைக்கழகம்,**

**06.10.2023**

# விலைமனு அழைத்தல்

## விவசாயத் திணைக்களம்

விவசாயத் திணைக்களத்தின் விதை மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி நிலையத்திற்கு உரித்தான கீழ்க் காணப்படும் அலகுகளிற்கு குறித்த கொள்வனவுகளிற்காக தேசிய விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| A | B | C | D | | | E | F |
|---|---|---|---|---|---|---|---|
| தொடர் இல. | கருமங்களின் விபரம் | ஒப்பந்த இலக்கம் | வைப்புச் செய்யப்பட வேண்டிய விலைமனுப் பிணையம் மற்றும் செல்லுபடிக் காலம் | | | விலைமனுப் படிவக் கட்டணம் | ICTAD தரம் |
| | | | காசாக எனின் | வங்கி வரைவு ஒன்றெனின் | பிணையம் செல்லுபடிக் காலம் | | |
| 01 | சீத்தாஎலிய விதை உருளைக் கிழங்குப் பண்ணையின் பாதையை கொங்கிறீட் செய்தல் | SPD/2/5/4/55 (2023) | 119,000/- | 238,000/- | 2024.02.09 | ரூ. 5,000.00 | C7, C6 & C5 |
| 02 | Solar Power அமைப்பு உதவியுடன் செயற்படும் நீர்ப்பம்பியை வழங்கிப் பொருத்துதல் | SPD/2/5/4/57 (2023) | 7,300/- | 14,500/- | 2024.01.13 | ரூ. 1,500.00 | - |

இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் இதற்காகப் பெற்றுக் கொள்ளும் விலைமனுப்படிவங்களில் விலைமனுக்களைச் சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் மீளளிக்கப்படாத மேற்படி E நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை இத்திணைக்களத்தின் சிறாப்பரிடம் செலுத்திப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டை விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையத்தின் நிருவாக அலுவலகரிடம் சமர்ப்பித்து 2023.10.09 முதல் 2023.10.26 வரை வார வேலை நாட்களில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை இதற்கான விலைமனுப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

தொடர் இல 01 இற்காக விலைமனு சமர்ப்பிக்கும், விலைமனுதாரர்கள் 1987 இல. 03 என்ற பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் பிரகாரம் பதிவாளரின் கீழ் பதிவு செய்யப் பெற்றிருத்தல் வேண்டுமென்பதுடன் அப்பதிவுச் சான்றிதழின் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்று விலைமனுப் படிவங்களுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

விலைமனு அறிவுறுத்தல்களின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு முத்திரையிடப்பட்ட அனைத்து விலைமனுக்களும் 'தலைவர், பிராந்தியப் பெறுகைக் குழு, விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம், விவசாயத் திணைக்களம், பேராதெனிய' என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். அல்லது மேற்படி முகவரியில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும்.

அனைத்து விலைமனுதாரர்களும் மேற்படி அட்டவணையில் D இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத் தொகையொன்றை வைப்புச் செய்தல் வேண்டுமென்பதுடன் வங்கி வரைவு ஒன்றாக பிணை வைப்புச் செய்வதாயின் அது இலங்கை மத்திய வங்கியினால் அனுமதிக்கப்பட்ட வங்கியொன்றிலிருந்து பெற்றுக் கொள்ளப்பட்டிருத்தல் வேண்டும்.

விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளல் 2023.10.27 அன்று பி.ப. 2.00 இற்கு முடிவுறுவதுடன் உடனடியாக அவை திறக்கப்படும். அவ்வேளையில் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் எழுத்துருவ அதிகாரம் பெற்ற பிரதிநிதியொருவர் சமுகமளித்திருக்கலாம்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**விதைகள் மற்றும் நடுகைப் பொருட்கள் அபிவிருத்தி மத்திய நிலையம்,**
**விவசாயத் திணைக்களம், பேராதெனிய**
**2023.10.06**
**081-2388106/122**

# விலைக்கோரலுக்கான அழைப்பு

## தெரணியகல பிரதேச சபை

## 2024ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு வழங்குதல்

01. தெரணியகல பிரதேச சபைக்குரித்தான 01ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள ஆதனங்களை 2024-01-01ஆம் திகதி முதல் 2024-12-31ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்காக என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**அட்டவணை 01**

| ஆதனத்தின் விபரம் | கேள்விப் படிவக் கட்டணம் | கேள்விப் பிணை வைப்பு (ரூபா) | ஆகக் குறைந்த கேள்வி (ரூபா) |
|---|---|---|---|
| தெரணியகல பொதுச் சந்தையின் 01ஆம் இலக்க மீன் கடை | 1000.00 | 10,000.00 | 533,400.00 |
| தெரணியகல பொதுச் சந்தையின் 02ஆம் இலக்க மீன் கடை | 1000.00 | 10,000.00 | 387,999.00 |
| தெரணியகல பொதுச் சந்தையின் 03ஆம் இலக்க மீன் கடை | 1000.00 | 10,000.00 | 349,400.00 |
| தெரணியகல பொதுச் சந்தையின் 04ஆம் இலக்க மீன் கடை | 1000.00 | 10,000.00 | 266,500.00 |
| தெரணியகல பொதுச் சந்தையின் 05ஆம் இலக்க மீன் கடை | 1000.00 | 10,000.00 | 202,260.00 |
| தெரணியகல பொதுச் சந்தையின் 06ஆம் இலக்க மீன் கடை | 1000.00 | 10,000.00 | 187,900.00 |
| தெரணியகல பொதுச் சந்தையின் 09ஆம் இலக்க மாட்டிறைச்சிக் கடை | 1000.00 | 50,000.00 | 360,744.00 |
| நகரத்தின் பொது மலசலகூடம் | 1000.00 | 10,000.00 | 165,500.00 |
| போதொட்ட படகு இறங்குதுறை | 100.00 | 1000.00 | 20,150.00 |
| பெஹெனெல்ல படகு இறங்குதுறை | 100.00 | 1000.00 | 31,260.00 |

1. கேள்விப் படிவங்கள் வழங்கப்படும் இறுதி நாள் 2023-10-24ஆம் திகதி பி.ப. 2.30 மணி வரை
2. கேள்விப் படிவங்களை ஏற்றுக்கொள்ளல் 2023-10-25ஆம் திகதி மு.ப. 10.00 மணி வரை
3. கேள்விப் படிவங்களைத் திறத்தல் 2023-10-25ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு

02. இந்த அலுவலகத்தில் கூடும் பெறுகைக் குழுவின் முன்னிலையில் கேள்விப் படிவங்கள் திறக்கப்படும். இந்நிகழ்வில் விண்ணப்பதாரர் அல்லது அவரது எழுத்து மூலமான அதிகாரம் உள்ள பிரதிநிதிகள் கலந்துகொள்ள இடமளிக்கப்படும்.
03. கேள்வி நிபந்தனைகள் மற்றும் மேலதிக விபரங்களை இந்த அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது 036-2249275 எனும் தொலைபேசி இலக்கத்தைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

**ஆர்.டி. நளின் புஷ்பகுமார,**
**செயலாளர் மற்றும் அதிகாரம் வாய்ந்த வேலைகளைச் செயற்படுத்தும் அதிகாரி,**
**தெரணியகல பிரதேச சபை.**

**2023-10-05**
**தெரணியகல பிரதேச சபை.**

# விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

## கல்வி அமைச்சு

**Procurement of Equipment for Primary Data Centre and e-Thaksalawa, Network cabling and Wifi Network for MOE**

**Bid No.: ED/07/101/04/2023/G-16**

1. கல்வி அமைச்சின் செயலாளரின் சார்பாக, அமைச்சு பெறுகைக் குழுத் தலைவர் கல்வி அமைச்சிற்காக **Procurement of Equipment for Primary Data Centre and e-Thaksalawa, Netwok cabling and wifi Network** என்பதற்காக தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை அழைக்கின்றார். முழுமையான விபரங்கள் விலைமனுக்கோரல் ஆவணத்தில் அடக்கப்பட்டுள்ளன. ஏற்றுக் கொள்ளும் கடிதம் வழங்கப்பட்ட திகதியிலிருந்து எதிர்பார்க்கப்படும் ஒப்படைத்தல் கால எல்லையானது 06 வாரங்களாகும். விலைமனுதாரர்கள் மொத்த பொதிக்காக விலைமனுக்கோரல்களை சமர்ப்பித்தல் வேண்டுமென்பதுடன் கீழேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விலைமனுப்பிணையொன்றுடன் அனைத்து விலைமனுக்களும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.

| தொகுதி | அம்சங்களின் விளக்கம் | விலைமனுப் பிணை (ரூபாவில்) |
|---|---|---|
| Lot A | High end Server host, SAN Storage 200TB, SAN Switches for Storage (Optional), Data Center Switch Cluster, Firewall for disaster recovery site, Disaster Recovery Replication Software, Server Rack | 2,100,000.00 |
| Lot B | 30KV UPS | 100,000.00 |
| Lot C | Network cabling & Wifi Network, Network access control solution | 400,000.00 |

2. விலைமனுக்கோரலானது தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறை மூலம் நடாத்தப்படும்.
3. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பத்தரமுல்ல, ''இசுருபாய'', கல்வி அமைச்சின், 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவிலிருந்து பெற்று (தொலைபேசி: 011-2785573 2023 ஒக்டோபர் 26 ஆம் திகதி வரையும் வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம்.
4. ஒவ்வொரு ஆவணத்திற்கும் 45,000 ரூபாவை மீளளிக்கப்படாத கட்டணமாக செலுத்திய பின்னர், எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம், ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கல்வி அமைச்சின் பெறுகைக் பிரிவிலிருந்து கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவு முறைமை ரொக்கப் பணத்திலேயே இருத்தல் வேண்டும்)
5. 2023 ஒக்டோபர் 13 ஆம் திகதியன்று 'இசுருபாய' கல்வி அமைச்சின் 5 ஆம் மாடியின் பெறுகைப் பிரிவில் மு.ப. 10.45 மணிக்கு விலைமனு முன்னோடிக் கூட்டமொன்று நடைபெறும். ஆர்வமுள்ள விலைமனுதாரர் ஒக்டோபர் 13 ஆம் திகதியன்று மு.ப. 9 மணியிலிருந்து மு.ப. 10.30 மணி வரையும் வேலைத்தளத்தை பரீட்சிக்கலாம்.
6. 2023 ஒக்டோபர் 27 ஆம் திகதியன்று மு.ப. 11 மணிக்கு அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, 'இசுறுபாய', கல்வி அமைச்சு, 5 ஆம் மாடி,பெறுகைப் பிரிவில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்களை மூடியபின்னர், மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

**செயலாளர்,**
**கல்விஅமைச்சு,**
**''இசுருபாய'', பத்தரமுல்ல.**

---

**இலங்கையின் தென் மாகாண சபை**

**விவசாய, கமநல அபிவிருத்தி, நீர்ப்பாசன, நீர் விநியோகம் மற்றும் வடிகாலமைப்பு, உணவு விநியோகம் மற்றும் பகிர்ந்தளித்தல், வியாபாரம் மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு - தென் மாகாணம்**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

**அங்குணகொலபெலஸ்ஸயில் உள்ள பழங்கள் பதப்படுத்தும் நிறுவனத்திற்கு இயந்திராதிகள் மற்றும் ஏனைய தொழில்நுட்ப உபகரணங்களை வழங்குதல், நிறுவுதல் மற்றும் நடைமுறைப்படுத்துதல்**

ஒப்பந்த இல. **MOA (தெ/3/1/13)2023 /NCB/01**

1. இலங்கையின் விவசாய அமைச்சு (நேரடி அமைச்சு) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் பெக் ஹவுஸ் பழங்கள் பதப்படுத்தும் பிரிவை ஸ்தாபிக்கும் திட்டத்திற்காக இலங்கை அரசாங்கத்திடமிருந்து (GOSL) மானியமொன்றைப் பெற்றுள்ளது.
2. பின்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள ஒப்பந்தத்திற்காக தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை விவசாய அமைச்சின் (நேரடி அமைச்சு) சார்பாக தென் மாகாண விவசாய அமைச்சின் செயலாளர் அழைக்கின்றார்.

| லொட் இல. | பொருட்களின் பெயர் | உருப்படிகளின் எண்ணிக்கை | விலைக்கோரல் பிணை முறி (இல. ரூபா) |
|---|---|---|---|
| 01 | **Processing Machinery** | | 380,000.00 (முடிவுறுத்தப்படும் நாள் முதல் 105 நாட்கள் செல்லுபடியாகும் காலத்திற்கு) |
| | • Weighing and Packing Conveyer | **01 01** | |
| | • Drain Conveyer | | |
| | • Air Drying Conveyer | **01** | |
| | • Dispatch Roller Conveyer | **02** | |
| | • Piliminary Washing Unit | **01** | |
| | • Chemical Treatment Tank | **01** | |
| | • Weighing and Packing Tables | **10** | |
| | • Manual Pallet Trucks | **01** | |
| 02 | **Smart weighing System** | **01** | |
| 03 | **Plastic Pallets and Crates** | | |
| | • Plastic Pallets - Units | **15** | |
| | • Plastic Crates- Units(Green-1000, yellow-1000, Red -1000) | **3000** | |
| 04 | **Manually Operated Box Macking Machine** | **01** | |

3. பெறுகை வழிகாட்டியில் குறித்துரைக்கப்பட்டுள்ள நடைமுறையின் பிரகாரம் தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் ஊடாக விலைமனுக்கள் கோரப்படும்.
4 2023-10-06ஆம் திகதி முதல் 2023-10-26ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.00 மணி வரையான காலத்தில் மீளளிக்கப்படாத 12,500.00 இல. ரூபா கொடுப்பனவு சகிதம் காலி, லபுதுவ, தக்ஷனபாய, 4ஆம் மாடி, தென் மாகாண விவசாயம், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சின் செயலாளருக்கு வியாபாரக் கடிதத் தலைப்பில் எழுத்து மூலமான வேண்டுகோள் செய்வதன் பேரில் நீங்கள் விலைமனுக்களுக்காக விண்ணப்பிக்கலாம். கொடுப்பனவை ரொக்கப் பணமாக அல்லது வங்கி வரைவாக செலுத்தலாம். விலைக்கோரல் ஆவணங்களை பதிவுத் தபாலில், கூரியர் சேவை மூலமாக அல்லது நேரடியாக பெறுகைக் குழுத் தலைவருக்கு அனுப்பலாம். எவ்வாறாயினும் தபாலில் ஏற்படும் தாமதம் தொடர்பில் பெறுகைக் குழு பொறுப்பு கூறாது.
5. விலைக்கோரல் ஆவணங்களை பின்வரும் அலுவலகத்தின் கணக்கிடல் பிரிவில் வேலை நாட்களில் மு.ப. 9.30 மணி முதல் பி.ப. 3.30 மணி வரையில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம். விலைக்கோரல் ஆவணங்களைப் பரீட்சிக்க ஆர்வமுள்ள எவரும், அமைச்சின் இணைதளமான www.agrimin.sp.gov.lk எனும் இணையதளத்தில் அவற்றை பார்வையிடலாம்.
6. முடிவுறுத்தல் நாளிலிருந்து 10 நாட்களுக்கு முன் மேற்கொள்ளப்படும் வேண்டுகோளின் பேரில் விலைக்கோரல் முன்னோடிக் கூட்டம் இடம்பெறும்.
7. விலைமனுக்கள் திறக்கப்படும் நாள் முதல் 91 நாட்களுக்கு விலைமனுக்கள் செல்லுபடியாதல் வேண்டும் என்பதுடன் மேற்படி 2ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள தொகைக்கான தனியான விலைக்கோரல் பிணை முறியொன்று இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். அது விலைக்கோரல் ஆவணத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களின் பிரகாரம் மற்றும் வடிவத்தில் வங்கி உத்தரவாதமாகவிருத்தல் வேண்டும்.
8. விலைமனுக்களை பின்வரும் முகவரிக்கு 2023-10-06ஆம் திகதி முதல் 2023-10-30ஆம் திகதி பி.ப. 2.00 மணிக்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.
9. சமுகம் தந்துள்ள விலைக்கோரலில் கலந்துகொள்ள தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளின் முன்னிலையில் உடன் திறக்கப்படும். பிந்திய விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

**செயலாளர்,**
**விவசாயம், கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சு, தென் மாகாணம்,**
**4ஆம் மாடி, தக்ஷினாபாய, லபுதுவ, காலி.**
**தொலைபேசி: 091 4943088, 091- 2234604**
**தொலைநகல்: 091 2247835**

---

## நிந்தவூர் பிரதேச சபை

# 2024 ஆம் ஆண்டிற்கான வழங்குநர்களைப் பதிவு செய்தல்

2024ஆம் ஆண்டிற்காக நிந்தவூர் பிரதேச சபைக்கு பண்டங்கள் மற்றும் சேவைகள் வழங்குதல் மற்றும் புதுப்பித்தல் நடவடிக்கைகள் செய்தல், பராமரிப்பு வேலைகள் செய்தல், மற்றும் ஒப்பந்த வேலைகளுக்கு நிந்தவூர் பிரதேச சபையில் பதிவு செய்துக்கொள்ள விரும்பும் வழங்குநர்கள்/ ஒப்பந்த காரர்கள் உற்பத்தியாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

பதிவு செய்வதற்காக ரூபா 1000/= செலுத்துதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்களை 2023.10.06 ம் திகதி முதல் 2023.11.06 ம் திகதி வரை மு.ப. 8.30 தொடக்கம் பி.ப.3.00 வரை பிரதேச சபையின் நிதிப் பிரிவில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

விண்ணப்பங்கள் 2023.11.06 ம் திகதி பதிவு செய்யும் இறுதித்தினமாகும் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**நிந்தவூர்.**
**தொலைபேசி இலக்கம் : 067-2250035**

---

**ஊவா மாகாண விளையாட்டுத்துறை நிறுவனம் – கிராந்துருகோட்டே**

**"விளையாட்டு பயிற்சியாளர் டிப்ளோமா கற்கை நெறி – வார இறுதி" இரண்டாம் குழுவைச் சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன**

மேற்கூறிய கற்கை நெறியின் இரண்டாம் குழுவைச் (2024/26) சேர்த்துக் கொள்வதற்கான விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப் படிவங்களை ஊவா மாகாண விளையாட்டுத்துறை அமைச்சின் sportsmin.up.gov.lk எனும் இணைய தளத்திலிருந்து மற்றும் facebook.com/profile.php?id=100091801118110 எனும் திணைக்களத்தின் கணக்கிலிருந்து பதிவிறக்கம் செய்துகொள்ளலாம். மேலும் இந்த விண்ணப்பப் படிவத்தை இல. 11, மெதிரிய வீதி, பதுளை எனும் முகவரியில் அமைந்துள்ள ஊவா மாகாண விளையாட்டுத்துறைத் திணைக்களம் மற்றும் கிராந்துருகோட்டே விளையாட்டுத்துறை நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

கவனிக்கவும்: இந்த கற்கைநெறி கல்வி அமைச்சிற்கு ஆட்சேர்க்கப்படும் விளையாட்டுத்துறை பயிற்சியாளர்களுக்காக தயாரிக்கப்பட்ட கற்கை நெறியாகும்.

1. சகல விண்ணப்பங்களையும் ''பிரதிப் பணிப்பாளர், ஊவா மாகாண விளையாட்டுத்துறை நிறுவனம், கிராந்துருகோட்டே'' எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
2. விண்ணப்பதாரர்களைத் தெரிவு செய்வதற்கு பரீட்சையொன்று நடாத்தப்படும்.
3. கற்கைநெறிக் கட்டணம் 75,000.00 ரூபாவாகும். இதை 25,000.00 ரூபா சமனான மூன்று தவணைகளில் செலுத்தலாம் அல்லது ஒரு தடவையில் செலுத்தலாம்.
4. விசாரணைகளை வார நாட்களில் மு.ப. 8.30 மணி முதல் பி.ப. 4.00 மணி வரை மேற்கொள்ளலாம்.

**தொலைபேசி இலக்கம்: 027-2254488**

**மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர்,**
**ஊவா மாகாண விளையாட்டுத்துறை திணைக்களம்.**
**2023-10-04.**

---

## நிந்தவூர் பிரதேச சபை

# கேள்விப்பத்திர அழைப்பு – 2024

நிந்தவூர் பிரதேச சபையின் 2024ஆம் ஆண்டுக்கான பொதுச்சந்தை திறந்த வெளி, வெளவாலோடை பூ பந்து உள்ளக அரங்கு, பொதுச்சந்தை கடையறைகள், மாட்டிறைச்சி, கோழி இறைச்சி, ஆட்டிறைச்சிக் கடைகளை குத்தகைக்கு உரிமம் வழங்குதல் போன்றவற்றுக்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

நிந்தவூர் பிரதேச சபைக்குரிய மேற்குறிப்பிட்ட கேள்விகளை 2024.01.01 முதல் 2024.12.31ஆம் திகதி வரை குத்தகைக்கு வழங்குவதற்கான "சீல்" வைத்த கேள்விகள் இத்தால் அழைக்கப்படுகின்றன.

➢ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் முதல் திகதி 06.10..2023

➢ கேள்விப்பத்திரங்கள் விநியோகிக்கப்படும் இறுதித் திகதி 24.10.2023 நண்பகல் 12.00 மணி வரை

➢ கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி 25.10.2023 பிற்பகல் 2.00 மணி வரை

➢ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் திகதியும் நேரமும் 25.10.2023 பி.ப. 2.30 மணி

மேலதிக விபரங்களுக்கு அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள விளம்பர அறிவித்தலை பார்க்கவும்.

**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**நிந்தவூர்.**
**தொலைபேசி இலக்கம் : 067-2250035**






---

**இலங்கை முதலீட்டுச் சபை**

# பெறுகை அறிவித்தல்

2023 ஒக்ரோபர் 6 ஆம் திகதியிடப்பட்ட ''டெயிலி நியுஸ்'' பத்திரிகையிலும் **www.investisrilanka.com** என்ற இமுச இன் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் பிரசுரிக்கப்பட்ட ''**2024/2025** ஆம் ஆண்டிற்கான இலங்கை முதலீட்டுச் சபையின் நிரந்தர ஊழியர்களுக்கான சுகாதார காப்புறுதி திட்ட வழங்கலுக்காக சேவை வழங்குனரொருவரை தெரிவு செய்தல் என்ற அழைத்தல்''. (குறிப்பீட்டு இல.: OI/S&S/Q/96/2023).

ஆர்வமுள்ள சேவை வழங்குனர்கள் ''டெயிலி நியுஸ்'' பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்திற்கமைவாக அல்லது இமுச இன் உத்தியோகபூர்வ இணையதளத்திற்கேற்றவாறு (**www.investisrilanka.com**) செயற்படலாம்.

மேலதிக தகவலை 011 2543041/0741531432 ஆகிய இலக்கங்கள் வழியாக நிருவாகத்திற்கான சிரேஷ்ட பிரதி பணிப்பாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

---

## மத்திய சுற்றாடல் அதிகாரசபை

# இறுதித் தீர்மான பொது அறிவித்தல்

**கேகாலை மாவட்டத்தில், மாபிடிகம தோட்ட, அமிதிரிகல, ருவன்வெல்ல பிரதேசத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ள தொழில்நுட்ப அகழ்வு (ஆ) தொகுதியில் கருங்கல் அகழ்வு செயற்றிட்டம் தொடர்பான**

**ஆரம்ப சூழல் அறிக்கை (ஆசூஅ)**

**தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரிவு 23வ (4) இன் கீழான அறிவித்தல்**

மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையை ஆய்வு செய்ததன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையானது 22 நவம்பர் 2000 திகதியன்று வெளியிடப்பட்ட 1159/22 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் மூலம் திருத்தியமைக்கப்பட்ட 1993 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்ட (கருத்திட்டங்களை அங்கீகரிப்பதற்கான அறிவித்தல் முறை) 9(i) இற்கமைவாக இலக்கம் 35, மாபிடிகம தோட்டம், அமிதிரிகல, ருவன்வெல்ல ஜே அன்ட் எஸ் மெடல் கிரசர்ஸ் தனியார் கம்பனிக்கு மேற்கூறப்பட்ட திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கான அங்கீகாரத்தை குறித்துரைக்கப்பட்ட நிபந்தனைகள், விசேட விதிகளுக்கமைய வழங்க தீர்மானித்துள்ளது என்பதை இத்தால் பொதுமக்கள் யாவருக்கும் அறியத்தருகின்றேன். 2000 ஆம் ஆண்டின் 53வது இலக்க (திருத்தியமைக்கப்பட்ட) தேசிய சுற்றாடல் சட்டத்தின் பொது ஆவணமான மேற்கூறப்பட்ட ஆரம்ப சுற்றாடல் பரிசோதனை அறிக்கையானது மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் தேசிய சுற்றாடல் தகவல் மையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

**பணிப்பாளர் நாயகம்**
**மத்திய சுற்றாடல் அதிகாரசபை**
**"பரிசர பியச"**
**இல.104, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,**
**பத்தரமுல்ல.**

---

**சிவில் வழக்கு விதிமுறைக் கோவையின் 16 ஆம் பிரிவின் கீழான அறிவித்தல்**

**கொழும்பு மாவட்ட நீதிமன்றம்**

வழக்கு இலக்கம் - 2183/2022/**DMR**
தன்மை - நிதி
செயற்பாடு - பொது
பெறுமதி - ரூ 1,210,379.15

ரொக்லன்ட டிஸ்டில்லரிஸ் (தனியார்) நிறுவனம் 160,24, கிரிமண்டல மாவத்த கொழும்பு - 05

**முறைப்பாட்டாளர்**

**எதிராக**

பாயிக் வ.்.பா (Fayek Wafa)
25, நிதஹஸ் மாவத்தை
கொழும்பு- 07
'80 Club of Colombo' இன் அங்கத்துவத்திற்காக மற்றும் அதன் சார்பாக

**பிரதிவாதி**

'80 Club of Colombo' பெயரின் கீழ் கொழும்பு 07, நிதஹஸ் மாவத்தை, இல 25 எனுமிடத்தில் நடத்திச் செல்லப்படும் சமூக மண்டபத்தின் அங்கத்தவர்கள் அறிந்து கொள்ளும் முகமாக,

2022 ஆகஸ்ட் 24ம் திகதி அல்லது அதற்குக் கிட்டிய தினத்தில் மேற்படி பெயர் குறிப்பிடப்படும் முறைப்பாட்டுக் கம்பனியினால் கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தில் மேற்படி பெயர் குறிப்பிடப்படும் பிரதிவாதிக்கு எதிராக மேற்படி இலக்கம் கொண்ட வழக்குத் தொடுக்கப்பட்டு முறையீட்டின் ஏனைய விடயங்களுக்கிடையில் கீழ்க்காணும் சலுகைகளும் கிடைத்துள்ளதால்

அ) **ரூ. 1,210,379.15** தொகை மற்றும் இத்தினத்தில் இருந்து தீர்ப்பு வழங்கல் தினம் வரை மேற்படி தொகையின் மேல் சட்டரீதியிலான வட்டியும், அதன் பின்னர் அதனை முழுமையாக செலுத்தி பூர்த்தி செய்யும் தினம் வரை தீர்ப்பில் குறிப்பிடப்படும் முழுத் தொகையின் அடிப்படையில் அறவிடப்பட வேண்டிய சட்டரீதியான வட்டியையும் முறைப்பாட்டாளருக்கு செலுத்துமாறு பிரதிவாதிக்கு '80 Club' அங்கத்துவத்திற்கு எதிராக தீர்ப்பு மற்றும் தீர்ப்பு அளித்தலை விநியோகிக்குமாறும்

ஆ) வழக்குக் கட்டணம் மற்றும்:

இ) கௌரவ நீதிமன்றத்திற்கு கருதக்கூடியதான வேறு மற்றும் மேலதிக சலுகைகளை வழங்குப் படியாகவும் ஆகும். மேற்படி முறைப்பாடுக் கம்பனியினால் பெயர் குறிப்பிடப்படும் பிரதிவாதிக்கு எதிராக '80 Club of Colombo' இன் அங்கத்தவர்கள் அறிந்து கொள்வதற்காக இவ்வழக்கு பற்றிய பகிரங்க அறிவித்தலை பிரசுரிப்பதற்கு கௌரவ நீதிமன்றம் கட்டளையிட்டுள்ளது. மேற்படி கட்டளையின் பிரகாரம் ' 80 Club of Colombo' இன் அங்கத்தவர்கள் அறிந்து கொள்வதற்காக இவ் அறிவித்தல் இவ்வாறு பிரசுரிக்கப்படும்.

அடுத்த வழக்குத் திகதி 2023 ஒக்டோபர் மாதம் 25 என்ற திகதியாகும் என மேலும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகிறது.

**நீதிமன்றத்தின் கட்டளைப் பிரகாரம்**
**பதிவாளர்**
**மாவட்ட நீதிமன்றம் - கொழும்பு**

**2023 ஜனவரி 13ம் திகதி**
**தயாரித்தவர்**
**முறைப்பாட்டாளரின் பதிவு செய்யப்பட்ட சட்டத்தரணி**

## கம்பனியின் பெயர் மாற்றல் பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 7ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) பிரிவின் பிரகாரம்.

**கம்பனியின் முந்தைய பெயர்:**
மெல்சன்தி கெனி பீச் (பிரைவட்) லிமிட்டட்

**இல: PV 961**

**விலாசம்:**
அகலவத்த தோட்ட பங்களா, மொரகொல்ல, தலாத்துஓய, கண்டி.

**புதிய பெயர்:**
யஸ்மின் ஹில் ரிசோர்ட்ஸ் (பிரைவட்) லிமிட்டட்

செக்ரடேரியஸ் (பிறைவட்) லிமிடட்
PV 5958

## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59 (2) இன் கீழான பகிரங்க அறிவித்தல்

2007 ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு 59(2) இன் பிரகாரம், ஸ்ரேர்லிங் மினெரல்ஸ் (பிரைவேட்) லிமிடெட் (Sterling Mineral (Private) Limited) நிறுவனத்தின் கூறப்பட்ட உத்தேச மூலதனக் குறைப்பை ரூபா 110,264,640.57 இல் இருந்து ரூபா 41,480,895.42 ஆக மேற்கொள்வதற்காக பகிரங்க அறிவித்தல் இத்தால் வழ ங்கப்படுகின்றது.

**சபையின் கட்டளைப்படி,**

**ஏ.ஓ. செல்லஹேவா**
**கம்பனி செயலாளர்**
**04 ஒக்டோபர் 2023**

**1964 இலக்கம் 28 ஐக் கொண்ட காணி எடுத்தற் சட்டத்தின் (திருத்தப்பட்ட) கட்டளைச் சட்டத்தின் திருத்தப்பட்டவாறு, காணி எடுத்தற் சட்டத்தின் (460 ஆம் அத்தியாயம்) 7(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

எனது குறிப்பிலக்கம் :
(KDS/KUN/04/07/16/04/101

**சுற்றுலா மற்றும் காணி அமைச்சின் குறிப்பிலக்கம் 4-3/18/2020/WS5/20**

இங்கு கீழ் குறிப்பிடப்பட்ட உப அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ள காணிப் பரப்பளவின் பயன்பாட்டு உரிமையை அரசாங்கத்திற்கு எடுத்துக் கொள்ள எதிர்பார்க்கப்படுகிறது, மேலதிக விபரங்களுக்கு 2023 ஜீலை 25 ஆம் திகதி இலக்கம் 2342/17 இலக்கம் கொண்ட ஸ்ரீ லங்கா ஜனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் (111 ஆம் பகுதியைப் பார்க்கவும்.

| | |
|---|---|
| மாகாணம் | - மத்திய மாகாணம் |
| மாவட்டம் | - கண்டி |
| பிரதேச செயலாளர் பிரிவு | - குண்டசாலை |
| கிராம உத்தியோகத்தர் பிரிவு | - இலக்கம் 659, தீகிரிமடவல |
| கிராமத்தின் பெயர் | - யக்கஹபிடிய |
| காணியின் பெயர் | - அதிகாரம் வத்த |
| வரைபட இலக்கம் | - CM 320812 |
| வலய இலக்கம் | - 01 |
| படிவ இலக்கம் | - 1 |
| காணித்துண்டின் இலக்கம் | - 1 மற்றும் 3 |

**சமந்தி டீ நாகஹாதென்ன**
**பிரதேச செயலாளர்,**
**குண்டாசாலை**

**2023. செப்டெம்பர் மாதம் 3ஆம் திகதி**
**குண்டசாலை பிரதேச செயலகம்**
**மெணிக்ஹின்ன**

SUNDAY OBSERVER adz
தினகரன் வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements (Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,000/- (Except Thinakaran Varamanjari) | Rs. 1,330/- |

- ISLANDWIDE -

MONARAGALA
MONARAGALA ........ 077 6 565 653
SRI RAMYA STORES., NO 19., 20, MONARAGALA.

MATARA
MATARA ........ 047 2 230 093
NILMINI STORSE - NO 69., DHARMAPALA MAWATHA, MATARA

ANURADAPURA
THABUTTEGAMA ........ 025 2 276 431
MUTHUKUDA PAPER CORNER - No 86, Thambuttegama

ANURADHAPURA ........ 025 2 221 411
MAHAJANA BOOK SHOP - Anuradhapura

ANURADHAPURA ........ 025 2 222 806
SATHSARA BOOK SHOP - 40, KADAPANAHA, ANURADHAPURA

ANURADHAPURA ........ 025 2 222 575

RATHNAPURA
RATHNAPURA ........ 071 2 900 35
NO 15, CHURCH ROAD, RATNAPURA

RATHNAPURA ........ 045 2 223 883
LAKE HOUSE ADVERTISING CENTER - NO 88, MAIN STREET, RATNAPURA

HAMBANTHOTA
MIDDENIYA ........ 047 2 27 245
SOMASIRI STORES - HUNGAMA ROAD, MIDDENIYA.

TANGALLE ........ 047 2 240 402
D.W.TRADERS - NO 158, MATARA ROAD, TANGALLE

classified@lakehouse.lk
011 2 429 342 | 011 2 429 343
Fax - 011 2 429 375 / 011 2 429 380

இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசாங்கம்

போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு

## வீதி அபிவிருத்தி அதிகார சபை

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

| ஒப்பந்தப் பெயர் |
|---|
| மட்டக்களப்பு கல்லறுத்தமடு பாலம் - Single cell Box (2.5 x 2.0) மதகு |
| மட்டக்களப்பு மாவடியோடை பாலம் - Single cell Box (3.0 x 2.0) மதகு |
| மட்டக்களப்பு பெருமாவெளி பாலம் - Single cell Box (2.5 x 1.0) மதகு |
| மட்டக்களப்பு நாவலடி பிள்ளையார் கோவில் வீதி பாலம் - Single cell Box (3.0 x 2.0) மதகு |

தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் மேலேயுள்ள வேலைகளுக்காக விலைமனுக்கள் இத்தால் அழைக்கப்படுகின்றன. ஆர்வமுள்ள விலைமனுதாரர் 2023.10.06 ஆம் திகதியிலிருந்து 2023.10.11 ஆம் திகதி வரையும் **www.rda.gov.lk** என்ற வீஅஅ மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சின் இணைய பக்கத்தை பார்வையிடுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

## வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சு உணவு ஆணையாளர் திணைக்களம்

### உணவு ஆணையாளர் திணைக்களத்தின் தலைமையகம் அமைந்துள்ள கொழும்பு – 02 யூனியன் பிளேஸ், இல 330 எனுமிடத்தில் உள்ள உணவகத்தில் உணவு பான சேவையை வழங்குவதற்கான கேள்வி கோரல்

உணவுத் திணைக்களத்தின் தலைமையக கட்டிடத் தொகுதியில், அமைந்துள்ள உணவகத்திற்கான உணவகத்தை நடத்திச் செல்வதற்கு திறமை மற்றும் அனுபவமுள்ள சேவை வழங்குநர்களிடமிருந்து உணவு பானங்களை வழங்கல் சேவையை பெற்றுக் கொள்வதற்காக திணைக்கள பெறுகைக் குழுவினால் பொறியிடப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

02. இதற்காக ஆர்வம் காட்டுகின்ற கேள்விதாரர்களுக்கு மீளளிக்கப்படாத ரூ. 2500.00 ஆகிய கேள்விக் கட்டணத்தை உணவு ஆணையாளர் திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டை சமர்ப்பித்து கேள்வி ஆவணங்களை 2023.10.06 முதல் 2023.10.20 முற்பகல் 9.00 முதல் பிற்பகல் 2.00 வரை கடமை நாட்களில் உணவு ஆணையாளர் திணைக்களத்தின் கணக்குப் பிரிவின் பிரதம கணக்காளரிடம் பெற்றுக் கொள்ள முடிவதுடன், கேள்வி ஆவணங்களை பரீட்சிப்பதற்கு தேவையெனில் மேலே குறிப்பிடப்படும் தினம் மற்றும் காலத்திற்குள் காசு செலுத்தாமலேயே கேள்வி ஆவணங்களை பரீட்சித்துப் பார்க்கலாம்.

03. உங்களது விலைமனுக்களை 2023.10.20 பிற்பகல் 2.00 அல்லது அதற்கு முன் உணவு ஆணையாளர் திணைக்களம், இல 330 யூனியன் பிளேஸ், கொழும்பு - 02 என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அனுப்புவதன் பேரில் அல்லது உணவு ஆணையாளர் திணைக்களத்தில் உள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும்.

04. கேள்விகளை சமர்ப்பிக்கும் போது கேள்வி உள்ளிடும் உறையின இடது பக்க மேல் மூலையில் “உணவகத்திற்கான விலைமனுக்கோரல்” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

05. தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் ஏற்கப்படமாட்டாது அத்துடன், அத்சேவைகள் நிராகரிக்கப்படும். கேள்வியுடன் கேள்வி ஆவணத்தில் குறிப்பிடப்படுமாறு இலங்கை மத்திய வங்கியில் அனுமதிக்கப்பட்ட வர்த்தக வங்கியிலிருந்து விநியோகிக்கப்படும் 90 நாட்களுக்கு செல்லுபடியாகும் ரூ. 50.000/- பெறுமதியான கேள்விப் பிணையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

06. 2023.10.20 பிற்பகல் 2.15 இற்கு திறக்கப்படுவதுடன் கேள்விதாரர்கள் அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகளுக்கு சமுகமளிக்கலாம்.

07. இது பற்றிய மேலதிக விபரங்களை அறிந்து கொள்வதற்கு தேவையாயின் திணைக்களத்தின் பிரதம கணக்காளரிடம் (தொ.பே. இலக்கம் - **0112322916** அல்லது மின்னஞ்சல் **fcdacc@gmail.com**) ஊடாகப் பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**உணவு ஆணையாளர் திணைக்களம்,**
**இல. 330, யூனியன் பிளேஸ், கொழும்பு - 02**

## கடுவளை மாநகர சபை

பெறுகை அறிவித்தல்

### 2023/2024ம் ஆண்டிற்காக பாதுகாப்பு சேவை வழங்கல்கள் சார்பாக கேள்வி கோரல்

கடுவளை மாநகர சபையின் தலைமையகம், அத்துருகிரிய மாவட்ட அலுவலகம், பத்தரமுல்ல மாவட்ட அலுவலகம், ரன்பெலெஸ்ஸ கழிவு நிலையம், பத்தரமுல்ல கழிவு வாகன களஞ்சியம், பெலவத்த புத்ததாச விளையாட்டரங்கு, போரே தகனசாலை, அத்துருகிரிய கல்பொத்த வீதி வாகன களஞ்சியம், கடுவளை வாரசந்தை வளாகம், மெகாசிட்டி வர்த்தக கட்டிடத்தொகுதி மற்றும் கடுவளை பஸ் நிலையத்திற்கான பாதுகாப்பு சேவையை வழங்குவதற்காக தகுதி கொண்ட மற்றும் தகைமையுடைய கேள்விதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட கேள்விகள் கடுவளை மாநகர சபையின் பெறுகைப் பிரிவிலிருந்து கோரப்படுகின்றன.
தேவைப்படும் போது விவரமான விபரங்கள் கேள்வி ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளன.

02. 2023.10.06 முதல் 2023.10.26 வரை மு.ப 9.00 முதல் பி.ப 3.00 வரை மீளளிக்கப்படாத ரூ - 3500.00 + VAT 15 % கட்டணத்தை கடுவளை மாநகர சபையின் தலைமையக முதலாம் மாடியில் மாநகர நிதித் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டுடன் கடுவளை மாநகர சபையின் மாநகர ஆணையாளரின் பெயரில் எழுத்துமூல வேண்டுதலை சமர்ப்பித்த பின்னர் பெறுகை பிரிவின் மூலம் கேள்வி ஆவணங்களைப் பெற்றுக்கொள்ள முடிவதுடன் கேள்விகளை சமர்ப்பிக்கும் போது ரூ. 50,000.00 கேள்விப் பிணையொன்றை (Bid Security) மாநகர நிதித் திணைக்களத்தின் காசாளரிடம் செலுத்துதல் வேண்டும்.

03. பொறியிடப்பட்ட கேள்விகள் “மூலப்பிரதி” மற்றும் “நகல்பிரதி” என இரு பிரதிகளுடன் வேறுவேறாக முத்திரையிட்டு பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி ஆவணங்கள் உள்ளிடும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “பாதுகாப்பு சேவையை வழங்குவதற்கான கேள்வி கோரல் 2023/2024” என்று குறிப்பிட்டு 2023.10.27 மு.ப 10.00 இற்கு முன் கிடைக்குமாறு பதிவுத்தபாலில் அல்லது கடுவளை மாநகர சபையின் மாநகர கணக்காளரின் உத்தியோகபூர்வ அறையில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு கேள்விகளை சமர்ப்பிக்கலாம். பதிவுத்தபாலில் கேள்விகளை சமர்ப்பிப்பதாயின் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும்.
(தாமதமாக கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்)

**தில்ருக்ஷி கமகே**
**மாநகர ஆணையாளர் மற்றும் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**கடுவளை மாநகர சபை**
**கடுவளை**

04. கேள்விகள் ஏற்றுக் கொள்ளல் முடிவடைந்தவுடன் கடுவளை மாநகர சபையின் மாநகர நிதித் திணைக்களத்தில் மு.ப 10.00 இற்கு கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் வேளையில் கேள்விதாரர்களுக்கு அல்லது அவர்களால் எழுத்துமூலம் அதிகாரம் ஒப்படைக்கப்படும் ஒருவருக்கு சமுகமளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு தொலைபேசி இலக்கம்: **0112571200/0112539562**

**தில்ருக்ஷி கமகே**
**மாநகர ஆணையாளர் மற்றும் அதிகாரம்,**
**செயற்பாடுகளை அமுல்படுத்தும் அதிகாரி**
**கடுவளை மாநகர சபை**
**கடுவளை**
**2023.10.06**

## கேள்வி அறிவித்தல்

### நுவரெலியா மாநகர சபை

இங்கு அட்டவணையில் குறிப்பிடப்படும் நுவரெலியா மாநகர சபைக்குச் சொந்தமான சொத்துக்களை 2024.01.01 முதல் 2024.12.31 வரையான காலத்திற்கு குத்தகைக்கு விடுவதற்காக 02 பிரதிகளுடன் பொறியிட்டு அனுப்பப்படும் கேள்வி விண்ணப்பங்கள் 2023.10.27 முற்பகல் 10.00 வரை என்னால் ஏற்கப்படும்.

கேள்விப் படிவம் மற்றும் அதனோடு சம்பந்தப்பட்ட நிபந்தனைப் பத்திரத்தை 2023.10.09 முற்பகல் 9.00 முதல் 2023.10.26 பிற்பகல் 4.00 வரை அலுவலக நேரங்களில் தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதற்காக தேசிய அடையாள அட்டை அல்லது கடவுச் சீட்டை சமர்ப்பித்து, நுவரெலியா மாநகர சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளல் 2023.10.27 முற்பகல் 10.00 இற்கு முடிவடையும் கேள்விப்பத்திரங்கள் திறத்தல் 2023.10.27 முற்பகல் 10.30 இற்கு இடம்பெறும். அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது எழுத்த மூல அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு மாத்திரம் சமுகமளிக்கலாம்.

பூர்த்தி செய்யப்பட்ட கேள்வி விண்ணப்பங்கள் பதிவுத் தபாலில் அல்லது மாநகர ஆணையாளர் பணிமனையில் வைக்கப்பட்டுள்ள கணக்குப் பிரிவில் கேள்விப் பெட்டியில் உள்ளிட்டு சமர்ப்பிக்கலாம்.

கேள்வி விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் கேள்வியுடன் சம்பந்தப்பட்ட தலைப்பை தெளிவாகக் குறிப்பிடுவதுடன், மூலப்பிரதி மற்றும் நகல் பிரதியென வேறுவேறாக இரு உறைகளை சமர்ப்பித்தல் வேண்டும்.

தமது ஆளடையாளத்தை உறுதி செய்வதன் மூலம் இங்கு அட்டவணையில் குறிப்பிடுமாறு கேள்விப் படிவக் கட்டணம், மீளளிக்கப்படும் பிணை வைப்பு மற்றும் மீளளிக்கப்படாத பிணை வைப்புக் கட்டணத்தை செலுத்திய பின்பு கேள்வி படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி படிவக் கட்டணம் மற்றும் விண்ணப்பிக்கும் கேள்வித் தொகைக்காக அரசினால் விதிக்கப்படும் குத்தகைத் தொகையை செலுத்துதல் வேண்டும்.

குறைந்த பட்ச கேள்விக்கும் குறைவாக விண்ணப்பிக்கும் கேள்விதாரர்களின் மற்றும் கேள்வி விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டு கேள்விகளை சமர்ப்பிக்கின்ற கேள்விதாரர்களின் மீளளிக்கப்படும் பிணைவைப்புத் தொகை சபைக்கு உரியதாக்கப்படும்.

கேள்வியை ஏற்றுக் கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமை நுவரெலியா மாநகர சபையின் பெறுகைக் குழுவிற்கு உரியது.

கேள்விகள் திறக்கப்பட்ட பின்பு தேர்ந்தெடுக்கப்படும் சித்திகரமான கேள்விதாரரால் வருட முடிவில் மீளளிக்கப்படும் பாதுகாப்பு பிணை வைப்புத் தொகையை சபையில் வைப்புச் செய்தல் வேண்டும்.

(கேள்வி பெற்றுக் கொள்ளும் கேள்விதாரரால் சமர்ப்பிக்கப்படும் கேள்வியின் 25% தொகை)

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நுவரெலியா மாநகர சபையின் வழங்கல்கள் பிரிவில் பெற்றுக் கொள்ளலாம்.

**(தொ.பே - 052-2222275/052-2223673)**

**எஸ்.பீ.கே.போடிமான்ன,**
**மாநகர ஆணையாளர், (பதில்)**
**மாநகர சபை - நுவரெலியா**
**2023.10.02**

## மக்கள் வங்கி

### பதுளை பிரதேச பிரதான அலுவலகம் மற்றும் கிளை அலுவலகத் தொகுதிகள் சுத்தப்படுத்தும் மற்றும் பராமரிப்புச் செயல்கள் செய்வதற்காக விலைமனுக்கள் கோரல் 2024/2025

கீழே குறிப்பிடப்பட்டுள்ள மக்கள் வங்கியின் கிளைகள், சேவை நிலையங்கள் மற்றும் பிரதேச பிரதான அலுவலகம் சுத்தப்படுத்தல் மற்றும் பராமரிப்புச் செயல்களுக்காக வெவ்வேறாக விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

**கிளைகள் :-**

பதுளை / வெளிமடை / பண்டாரவளை / மஹியங்கனை / பசறை / தியத்தலாவை / ஊவா பரணகம / ஹல்தும்முல்லை / பொரலந்தை / ஹப்புத்தளை / ஹாலிஎல / கெப்பெட்டிபொல/ கந்தகெட்டிய / லுணுகலை / கொஸ்லந்தை / கிராந்துருகோட்டை 1 பதுளை - முதியங்கனை.

**சேவை நிலையங்கள்**

வெலேகடை / பசார் வீதி / வெளிமடை நகரம் / பண்டாரவளை நகரம் / பண்டாரவளை சிங்ஹகிரி/ பல்லகெட்டுவ / பெரஹெட்டிய / எல்ல / மடுல்சீமை / லூணுவத்தை / மெதவெல/போகஹகும்புர/ அட்டம்பிட்டிய / தெமோதர / மீகஹகிவுல / நவமெதகம / லோவர் வீதி / ஊவா மாகாண சபை அலுவலகத் தொகுதி / மாவட்ட செயலக அலுவலகத் தொகுதி.

**அலுவலகங்கள்**

**பதுளைப் பிரதேச பிரதான அலுவலகத் தொகுதி**

01. விலைமனுகோரல் விண்ணப்பப் படிவங்கள் 2023.10.09 ஆம் திகதியிலிருந்து மீள் செலுத்தப் படாத ரூபா. 1000/- கட்டணம் செலுத்தி மக்கள் வங்கியின் பதுளைப பிரதேச அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளலாம். 2023.10.18 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் பிரதேச முகாமையாளர், மக்கள் வங்கியின் பிரதேச பிரதான அலுவலகம் இலக்கம் 24, R.H. குணவர்தன மாவத்தை பதுளை எனும் பெயருடைய விலாசத்துக்குப் பதிவுத் தபால் மூலம் விலைமனுக்கள் அனுப்பப் படல் வேண்டும். இல்லாவிட்டால் அலுவலகத்துக்கு பிரத்தியேகமாகச் சமுகமளித்து இவ் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைமனுக்கோரல் பெட்டியில் விலைமனுக்கள் இட முடியும்
02. விலை மனுக்கள் குறிப்பிட்டு அனுப்பும் கடிதத்திற்குப் பதவி முத்திரை வைத்திருக்க வேண்டியதுடன் அக்கடித உறையின் மேல் இடது மூலையில் “வங்கிக் கிளைத் தொகுதிகள் சுத்தம் செய்தல் மற்றும் பராமரித்தல் சம்பந்தப்பட்ட விலைமனுக்கள்” என குறிப்பிட வேண்டும்.
03. விலைமனு கோரல் விண்ணப்பக் கடிதம் முன்வைக்கும் போது அதனுடன் (i) வியாபாரப் பெயர் பதிவாளரினால் வழங்கப்பட்டுள்ள வியாபாரப் பதிவுச் சான்றிதழ் (ii) தற்போது தொடர்புடைய மற்றும் இதற்கு முன் செய்துள்ள இதற்குச் சமமான ஒப்பந்தச் செயல்கள் பற்றிய சான்றிதழ்கள் (iii) தனது பணம் நிலைமை உறுதிப்படுத்தும் வங்கிக் கணக்குகள் பற்றிய விபரங்கள் கணக்காளர்களுடைய மிகுதிப் பத்திரங்கள் மற்றும் வருமான வரி விபரம், (iv) சேமலாப நிதி செலுத்தல் பற்றிய உறுதிப்படுத்தும் கடிதங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
04. விலைமனுக்கள் கவனிக்கப்படும் அடிப்படையாவது, ஓர் சேவையாளருக்காக, வரி இல்லாமல் ஒரு மாதத்திற்கு அறவிடப்படும் பணத்தொகை (மேலதிகக் கொடுப்பனவு, வங்கி விடுமுறை தின சேவைகள் மற்றும் கிழமை நாட்கள் 5 க்கு மேலதிகமாக சேவை பெற்றுக் கொண்டால் அதற்காக கொடுக்கப்படும் கொடுப்பனவுகள் இல்லாமல் ஆகும். இப்பணத் தொகை ஒரு மாதத்திற்குரிய வேலை செய்யும் நாட்களின் எண்ணிக்கை மாற்ற முடியாது.
05. தேவைப்படுமென கருதப்படும் மதிப்பீட்டுத் தொகையான சேவையாளர் எண்ணிக்கை 26 ஆகும். சேவை கொள்ளளவு மற்றும் இணைந்த சேவை நிலையங்களிலிருந்து பிரதான கிளைக்கு உள்ள தூரத்தின் அடிப்படையில் இத்தொகை கூடவோ குறையவோ ஆகலாம். கிளைகளுக்காக வெவ்வேறாக அல்லது ஒரு சிலதுக்கு அல்லது அனைத்துக் கிளைகளுக்காகவும் விலைமனுக்கள் சமர்ப்பிக்கலாம். அதற்காக ஒரு விண்ணப்பம் சமர்ப்பிப்பது போதுமாகும்.
06. ஒப்பந்தக் காலம் ஒரு வருடமாகும். அத்துடன் அக்காலம் தொடர்பாக வங்கியுடன் ஒப்பந்தமொன்றுக்கு வர நேரிடும்.
07. சுத்தம் செய்யும் செயலுக்குத் தேவைப்படும் இயந்திர மற்றும் ஏனைய உபகரணங்கள், இரசாயனப் பொருட்கள் (கிருமிநாசினிகள், பொலிஸ் வெக்ஸ், கழுவும் பொருட்கள், சவர்க்காரங்கள்) மற்றும் கழிவுப் பொருட்கள் போடும் பைகள் போன்றவைகளை ஒப்பந்தக்காரர்களால் வழங்கப்படல் வேண்டும். நாளாந்தம், வாராந்தம் மற்றும் மாதாந்தம் செய்ய வேண்டுமென வங்கியால் கோரப்படும் சுத்தப்படுத்தல்கள் கால அட்டவணை ஒன்றுக்கமைய செயலாற்றவும் ஒப்பந்தம் செய்யும் போது அறிவூட்டப்படும் வங்கிக்குரிய விஷே சட்டப் படியான நிலைமைகளுக்கும், அனுபவங்களுக்கமைய செயலாற்றவும் ஒப்பந்தக்காரர் இணைய வேண்டும். இச்செயற்பாடுகளுக்காக வேறேதும் மேலதிக கொடுப்பனவுகள் செலுத்தப்படமாட்டாது.
08. அனைத்து அல்லது ஏதேனும் விலைமனுவை ஏற்றுக் கொள்வது அல்லது நிராகரிப்பது மற்றும் எவ்வித காரணமும் காட்டாமல் ஓர் விலைமனுவின் எந்தப் பகுதியையும் ஏற்றுக் கொள்ளும் உரிமை மக்கள் வங்கி வசமாகும்.
09. தெரிவு செய்யப்படும் நிறுவனத்தால் இலங்கை மத்திய வங்கியினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட வணிக வங்கி ஒன்றால் பெற்றுக் கொண்ட ஒப்பந்தத்தின் வருடாந்த பெறுமதியின் 5% வீத பெறுமதிக்கொப்ப வினை அடைவு பிணை, ஒப்பந்தம் இடம்பெறும் போது சமர்ப்பிக்கபடல் வேண்டும்.
10. சமர்ப்பிக்கப்படும் விலைமனு மற்றும் சேவை தராதரம் பற்றி கவனம் செலுத்தி தகுதியுள்ள சேவை வழங்குபவர் ஒருவர் தெரிவு செய்தல் வங்கியின் விருப்பப்படி நடைபெறும். தெரிவு செய்யப்பட்ட சேவை வழங்குபவருடன் உடன்படும் ஒப்பந்தம் எந்த சந்தர்ப்பத்திலும் இரத்துச் செய்யும் உரிமை வங்கிக்குண்டு.

**பிரதேச முகாமையாளர்**
**மக்கள் வங்கி பிரதேச பிரதான அலுவலகம்**
**இல. 24, R.H. குணவர்தன மாவத்தை, பதுளை. 055-2222165 / 055-2222342**

PEOPLE'S BANK
Pride of the Nation

The Housewives' companion
Classifieds on
Daily News

# நாட்களை நீடித்தல்

## மாவட்ட செயலகம் – பதுளை

## கெப்பெட்டிபொல விசேட பொருளாதார நிலையத்தின் கூரையை நிர்மாணித்தல்

கெப்பெட்டிபொல விசேட பொருளாதார நிலையத்தின் கூரையை நிர்மாணிப்பதற்காக தகைமையான ஒப்பந்தக்காரர் ஒருவரை தேர்ந்தெடுத்தல் சார்பாக 2023.09.18ம் திகதி தினமின, தினகரன், டெய்லி நியூஸ் ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின் 05ஆம் பந்தியில் குறிப்பிடப்படும் கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் திகதி 2023.10.30ம் திகதி வரை நீடிக்கப்படுகின்றது.

**பண்டுக்க ஶ்ரீ பிரபாத் அபேவர்தன**
**மாவட்ட செயலாளர்/ தலைவர், பெறுகைக்குழு,**
**மாவட்ட செயலகம் - பதுளை.**

2023.10.04

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

# பெறுகை அறிவித்தல்

## ஊவா மாகாண சபை

ஊவா மாகாண சபையின் பிரதி தலைமைச் செயலாளர் (பொறியியல் சேவை) அலுவலக பெறுகைக் குழுவின் தலைவரினால் கீழே குறிப்பிடப்படுகின்ற வேலைகளை நிறைவேற்றுவதற்காக தகுதி வாய்ந்த ஒப்பந்தக்காரர்கள் மற்றும் நிர்மாண நிறுவனங்களிடமிருந்து முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விகள் கோரப்படுகின்றன.

| தொடர் இலக்கம் | ஒப்பந்த இலக்கம் | வேலையின் பெயர் | சிவில் வேலைகளின் பெறுமதி (ரூ. மில்.) (வெட் இன்றி) | இயைபுடைய துறைக்கான ஆகக் குறைந்த CIDA தரம் | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை முறி (பணமாகச் செலுத்துவ தானால்) (ரூபா மில்.) | நிர்மாணக் காலப் பகுதி (நாட்கள்) | கேள்வி ஆவணக் கட்டணம் (ரூபா) |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | DSC/AYU/PSDG/ 2023/02-01 | பல்லகட்டுவ ஆயுர்வேத வைத்தியசாலையின் சமையலறை மற்றும் மருந்தகத்தை நிர்மாணித்தல் - மிகுதி வேலைகளை நிறைவு செய்தல் | 16.93 | C7, C6 மற்றும் C5 | 85,000.00 | 180 | 5,000.00 |
| 2 | DSC/OTT/HR/ PSDG/ 2023/02-02 | ஊவா மாகாண சபையின் கழிவு நீர் முறைமையை பக்கச் சுவரொன்றினால் தூர இடமொன்றில் மீள் நிறுவுதல் | 13.68 | C7, C6 மற்றும் C5 | 68,500.00 | 90 | 5,000.00 |

விலைமனுப் படிவங்கள் வழங்குதல் : 2023-10-09ஆம் திகதி முதல் 2023-10-30ஆம் திகதி 15.00 வரை
விலைமனுக்களை ஏற்றுக்கொள்ளும் இறுதி நாள் மற்றும் நேரம் : 2023-10-31ஆம் திகதி 14.00 மணித்தியாலத்தில்
விலைமனுக்கள் திறக்கப்படுதல் : 2023-10-31ஆம் திகதி 14.00 மணித்தியாலத்தில்

இதில் ஆர்வம் காட்டும் விலைமனுதாரர்கள் இயைபுடைய நிபந்தனைகள் மற்றும் அறிவுறுத்தல்களை பின்வரும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு மற்றும் E mail ஊடாகப் பெற்றுக்கொள்ளலாம்.

பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம் - 0552222217
மாகாண கட்டிடப் பணிப்பாளர் அலுவலகம் - 0552229629
bdplanningunit@gmail.com

**தலைவர்,**
**பெறுகைக் குழு,**
**பிரதிப் பிரதான செயலாளர் (பொறியியல் சேவைகள்) அலுவலகம்,**
**பிங்அராவ, பதுளை.**
**தொலைநகல் இல. 055-2222218**
**2023-10-05ஆம் திகதி.**

# பெறுகை அறிவித்தல்

## மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)

**(மாகாண வீதி, போக்குவரத்து, கூட்டுறவு அபிவிருத்தி மற்றும் வர்த்தக, வீடமைப்பு நிர்மாணத்துறை, தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள், கைத்தொழில் கிராமிய அபிவிருத்தி அமைச்சு - மேல் மாகாணம்)**

## கம்பஹா ஆதார வைத்தியசாலையின் on call கட்டிடத்திற்கான டைல் கொள்வனவு செய்தல்

## கேள்வி இலக்கம் : PRDA/WP/PRO/2023/86

இவ் அதிகார சபையின் கீழ்க்காணும் கொள்வனவுகளை மேற்கொள்வதற்கு இவ்வாறான வழங்களை மேற்கொள்ளும் அங்கீகரிக்கப்பட்ட வழங்குநர்களிடமிருந்து திறந்த கேள்விகள் கோரப்படுகின்றன.

| உருப்படி இல | விபரம் | அலகு | அளவு | வகை | கேள்விப் பிணைமுறி | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | காசாக (ரூ) அல்லது | வங்கி அல்லது காப்புறுதி |
| 01 | URB 001f (600x600) - Lobby Area | Nos | 443 | Lanka Tile/ Rocell | 14, 500.00 | 29, 000.00 |
| 02 | BLS 007B (600x600) Rooms | Nos | 1139 | | | |
| 03 | 742A - Timber Look Tile (300x 900) - Staircase | Nos | 76 | | | |
| 04 | Bathrooms Floor Tile - 083A MOS (600x600) | Nos | 264 | | | |
| 05 | Bathrooms Wall Tile -PG 01- Mustadd Colored Tile From Lanka Tile (600x 300) | Nos | 2123 | | | |

02. இதற்கான கேள்வி ஆவணத்தொகுதியை 2023.10.06 முதல் 2023.10.19 வரை மு.ப.9.00 முதல் பி.ப.2.30 வரை இவ் அதிகார சபையின் பெறுகைப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம். இதற்கான கேள்விப் பிணைமுறியை காசாக பெறுகை ஆவணங்களில் குறிப்பிடப்படும் நிபந்தனைகளுக்கு அமைவாக மேற்படி பெறுமதிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

03. கேள்விப் படிவக் கட்டணங்களை ரூ.1150.00 இற்கு (அதிகார சபையில் பதிவு செய்த வழங்குநர்கள் தவிர்த்து) உட்பட்டு, கேள்வி ஆவணத்தொகுதியைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.

04. கேள்விகளை ஏற்றுக்கொள்ளல் மற்றும் திறத்தல் 2023.10.20 மு.ப.11.00 இற்கு இவ் அலுவலகத்தில் இடம்பெறுவதுடன், அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது அவரது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவர் சமுகமளிக்கலாம்.

**தலைவர்,**
**பெறுகைக்குழு,**
**மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபை (மே.மா)**
**இல.59, சென் செபஸ்தியன் மேடு,**
**கொழும்பு - 12**

**தொ.பே.இலக்கம் - 0114849825, 0114849845**

# குளியாப்பிட்டிய நகர சபை

## 2024ஆம் வருடத்திற்கான வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்தல்

01. குளியாப்பிட்டிய நகர சபைக்குத் தேவையான பண்டங்கள் / பொருட்கள் / உபகரணங்கள் மற்றும் சேவைகளை வழங்க உத்தேசிக்கும் வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்களைப் பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் பின்வரும் நிபந்தனைகளின் கீழ் பெற்றுக்கொள்வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

I. பதிவு செய்து கொள்வதற்கான விண்ணப்பங்கள் 2023-10-09ஆம் திகதி முதல் 2023-11-10ஆம் திகதி வரை வார நாட்களில் மு.ப. 9.00 மணி முதல் பி.ப. 3.00 மணி வரை ஏற்றுக்கொள்ளப்படும் அல்லது செயலாளர், நகர சபை, குளியாப்பிட்டிய எனும் முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் ஏற்றுக்கொள்ளப்படும்.

II. பதிவிற்காக அறவிடப்படும் கட்டணம் - அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பதிவுக் கட்டணத்தை நகர சபையின் காசாளருக்கு செலுத்துதல் வேண்டும். (காசோலை அல்லது காசுக் கட்டளை மூலம் கொடுப்பனவுகளைச் செய்வதானால் செயலாளர், நகர சபை, குளியாப்பிட்டிய எனும் பெயருக்கு அனுப்புதல் வேண்டும்).

III. பதிவிற்காக சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் - வியாபாரப் பதிவுச் சான்றிதழின் பிரதி.

IV. பதிவு செய்தல் தொடர்பான விபரங்கள் - அலுவலக நேரத்தினுள் வழங்கல் விடயத்திற்குப் பொறுப்பான அதிகாரியிடமிருந்து அல்லது www.kuliyapitiya.uc.gov.lk எனும் இணையதளத்தின் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

V. பதிவு செய்யும் சகல வழங்குநர்கள் மற்றும் ஒப்பந்தக்காரர்கள் 30 நாள் கடன் அடிப்பபடையில் பொருடகள் மற்றும் சேவைகளை வழங்குதல் வேண்டும்.

VI. விலைமனுக்களை கோரும் போது சமர்ப்பிக்கப்படும் நிபந்தனைகள் மற்றும் மாதிரிகளுக்கு அமைவாக விலமனுக்களை சமர்ப்பித்தல் வழங்குநர்களின் மற்றும் ஒப்பந்தக்காரர்களின் பொறுப்பாகும்.

VII. பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களிடம் மற்றும் ஒப்பந்தக்காரர்களிடம் விலைமனுக்கள் கோரப்படுவதுடன் போதுமான போட்டி நிலை இல்லாத வேளையில் பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்கு அப்பாலும் பொருட்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளும் உரிமை சபைக்குரியது.

VIII. பொருட்கள் மற்றும் சேவை ஒப்பந்தங்களை வழங்கும்போது அரசு அனுமதித்த வரி வகைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு மற்றும் சபையின் சட்டதிட்டத்திற்கு இணங்குதல் வேண்டும்.

IX. விலைமனுக்கள்ச் சமர்ப்பிக்கும் திகதி முதல் பெறுவதற்கு குறைந்தபட்ச ஒரு மாத அளவிலான காலத்திற்குள் விலைமனுக்களை மாற்றமின்றி நிலையாக வைத்திருத்தல் வேண்டும்.

X. முறையான விலைமனுக்களை சமர்ப்பித்தல் மற்றும் சரியாக பேணுகையில் பொருட்கள் வழங்குவதற்கு தவறும் மற்றும் ஓடர்களில் குறிப்பிடப்படும் விபரங்கள் மற்றும் மாதிரிகளுக்கு அமைவாக சிறந்த நிலையிலா பொருட்களை வழங்குதலை மீறியுள்ள வழங்குநர்களின் பெயர்கள் பதிவுப்பட்டியலில் இருந்து நீக்குவதற்கு நடவடிக்கையெடுக்கப்படும்.

XI. விலைக்கோரும் போது பெயர் குறிப்பிடப்படும் பொருட்களுடன் சம்பந்தப்பட்ட இடங்களுக்கு போக்குவரத்து செய்து ஒப்படைக்கும் வரையில் பொறுப்பை ஏற்றல் வேண்டும்.

02. பதிவு செய்தல் தொடர்பிலான இறுதித் தீர்மானம் எடுத்தலை குளியாப்பிட்டிய நகர சபையின் முகாமைத்துவ குழு மற்றும் செயலாளர் கொண்டிருப்பார்.

**எச்.ஏ.எஸ்டி சௌரத்,**
**செயலாளர்,**
**குளியாப்பிட்டிய நகர சபை.**
**2023.10.06**
**அலுவலகம்: 037-2281275 / 037-4947850**
**மின்னஞ்சல்: kuliyauc@gmail.com**
**தொலைநகல் இலக்கம்: 037-2281114**
**இணையதளம்:** www.kuliyapitiya.uc.gov.lk

**அட்டவணை**

| தொ. இல. | வழங்கல்கள் மற்றும் சேவைகள் | பதிவுக் கட்டணம் |
|---|---|---|
| 01 | காகிதாதிகள் வழங்கல் | 1500.00 |
| 02 | மின்சார துணைப்பொருட்கள் வழங்கல் (மின் கம்பியிணைப்பு முறைமைக்காக) | 1500.00 |
| 03 | உருக்கு மற்றும் மரத்தாலான அலுவலக உபகரணங்கள் வழங்குதல் | 1500.00 |
| 04 | அச்சு வேலைகள் (அலுவலக ஆவணங்கள் மற்றும் உப படிவங்கள்) - குருநாகல் மாவட்டத்தினுள் மட்டும். | 1500.00 |
| 05 | துப்புரவேற்பாட்டு உபகரணங்களை வழங்குதல் (கையுறைகள், கம்பூட்ஸ், சவர்க்காரம், கிருமிநாசினிகள்) | 1500.00 |
| 06 | கட்டிடப் பொருட்கள் வழங்குதல் (கருங்கல் சார்ந்த உற்பத்திகள், செங்கல், மணல், கிரவல்) வடமேல் மாகாணத்தினுள் மட்டும். | 1500.00 |
| 07 | மின்சாரம் மற்றும் இலத்திரனியல் துணைப்பாகங்களை வழங்குதல் | 1500.00 |
| 08 | வாகன உதிரிப்பாகங்களை வழங்குதல் | 1500.00 |
| 09 | இயந்திரோபகரணங்கள் வழங்குதல் (புல் வெட்டும் இயந்திரம், மின்பிறப்பாக்கி போன்றன) | 1500.00 |
| 10 | வாகனங்களை சர்விஸ் செய்தல் மற்றும் திருத்தவேலைகள் செய்தல் - வடமேல் மாகாணத்தினுள் மட்டும் | 1500.00 |
| 11 | பெயர்ப் பலகைகள், அறிவித்தல் பலகைகள் மற்றும் டிஜிட்டல் பதாகைகளை அச்சிடல் - வடமேல் மாகாணத்தினுள் மட்டும் | 1500.00 |
| 12 | கணனி, கணனி துணைப்பாகங்களை வழங்குதல் | 1500.00 |
| 13 | கணனி திருத்தவேலைகள் மற்றும் சேவைகளை வழங்குதல் - வடமேல் மாகாணத்தினுள் மட்டும் | 1500.00 |
| 14 | நீர்க்குழாய் வேலைகளுக்குத் தேவையான உபகரணங்கள் மற்றும் துணைப்பாகங்கள் வழங்குதல் (PVC உபகரணங்கள் உட்பட) | 1500.00 |
| 15 | டயர்கள் மற்றும் டியூப்கள் வழங்குதல், மீள்நிரப்புதல் மற்றும் வாகன பெற்றரி மற்றும் உதிரிப்பாகங்களை வழங்குதல் | 1500.00 |
| 16 | நீர் சுத்திகரிப்புக்குத் தேவையான இரசாயனப் பொருட்களை வழங்குதல் | 1500.00 |
| 17 | கொங்கிறீட் பொருட்களை வழங்குதல் (ஹியூம் குழாய்கள், கொங்கிறீட் தூண்கள், முன்வார்ப்பு அச்சுக் கற்கள்) - வடமேல் மாகாணத்தினுள் மட்டும் | 1500.00 |
| 18 | கோலாஸ் மற்றும் தார் வழங்குதல் | 1500.00 |
| 19 | சீமெந்து உட்பட கனரகப் பொருட்களை வழங்குதல் - குருநாகல் மாவட்டத்திற்குள் மட்டும் | 1500.00 |
| 20 | நிறப்பூச்சுகளை வழங்குதல் (பூசக்கூடியவை) | 1500.00 |
| 21 | சீருடைக்கான துணிகளை வழங்குதல் மற்றும் சப்பாத்துகள் வழங்குதல் | 1500.00 |
| 22 | நீர்ப் பம்பிகள் மற்றும் மின்சார உபகரணத் திருத்தவேலைகள் | 1500.00 |
| 23 | தகனச்சாலை உபயோகத்திற்கான எரிவாயு வழங்குதல் | 1500.00 |
| 24 | விளையாட்டுப் பொருட்கள் வழங்குதல் | 1500.00 |
| 25 | டோனர் வகைகள் மற்றும் டுப்ளோ மை வழங்குதல் | 1500.00 |
| 26 | புகைப்படப் பிரதி இயந்திரங்கள் மற்றும் டுப்ளோ இயந்திரங்கள் வழங்குதல் | 1500.00 |
| 27 | பசளை உறைகளை வழங்குதல் (உட்புற உறை உட்பட) | 1500.00 |
| 28 | கணனி பற்றுச்சீட்டுகளை அச்சிடல் | 1500.00 |
| 29 | கடைசல் பற்றறை வேலைகள் (லேத் மெஷின்) - வடமேல் மாகாணத்தினுள் மட்டும் | 1500.00 |
| 30 | பாதுகாப்பு கெமரா பொருத்துதல் மற்றும் பழுதுபார்த்தல். | 1500.00 |
| 31 | கழிக்கப்பட்ட பொருட்கள் (பழைய இரும்பு, பத்திரிகை, சஞ்சிகை, போத்தல்) கொள்வனவாளர்கள் | 1500.00 |
| 32 | தீயணைப்பு உபகரணங்கள் வழங்குதல், சேர்விஸ் செய்தல், மீள்நிரப்புதல் | 1500.00 |
| 33 | நகர சபைக்கு உரித்தான பகுதிகளுக்கு பாதுகாப்பு சேவையை வழங்குதல். (Security Service) | 1500.00 |

**ஒப்பந்தக்காரர்கள் (வேலையின் மதிப்பீடு மற்றும் பெறுமதிக்கமைவாக)**

| | | |
|---|---|---|
| 01 | 0 - 2,000,000 ரூபா வரை (C9, ICTAD பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்) | 2000.00 |
| 02 | 2,000,000 - 5,000,000 ரூபா வரை பெறுமதியான வேலைகள் (C8, ICTAD பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்) | 3000.00 |
| 03 | 5,000,000 ரூபாவிற்கு மேல் (C7, ICTAD பதிவுச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்) | 3500.00 |

www.adz.lk
it's what you want

The largest Job Market in Sri Lanka
www.observerjobs.lk


Widest reach for your employment advertisement
Email : info@observerjobs.lk Hotline: 1949
For more information
0777270012 / 0777270000 / 0112429314

# தலைமுறையின் பெருமை



ශ්‍රී ලංකා විශ්‍රාම
இலங்கை ஓய்வு
Sri Lanka Pensions


தினகரன்
THINAKARAN
තිනකරන්

2023 ஒக்டோபர் 6 வெள்ளிக்கிழமை


## தேசிய ஓய்வூதிய தினம் ஒக்டோபர் 8ஆம் திகதியாகும்

பல தசாப்த கால அரச சேவைக்காக சிறந்த சேவையை மேற்கொண்டு பணிக்கு விடைகொடுத்த சிரேஷ்ட ஓய்வுபெற்ற பிரஜைகளுக்கு நன்றி தெரிவிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் ஒக்டோபர் 8ஆம் திகதி "தேசிய ஓய்வூதிய தினம்" என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களில் இருந்த சவால்மிக்க சூழலுக்கு பொருந்துகின்ற வகையில் ஓய்வூதியம் வழங்கும் செயற்பாடுகளை நவீனப்படுத்தல் ஓய்வூதிய திணைக்கத்தினால் மேற்கொள்ளப்பட்டது. அதற்காக முக்கிய கொள்கை ரீதியான முடிவுகள் பலதையும் செயற்படுத்துவதற்கு ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுத்தது.

ஓய்வூதியம் பெறுபவர்களை பதிவு செய்தல் மற்றும் ஓய்வு வழங்கப்படும் மாதத்திற்கு அடுத்து வரும் மாதத்தில் ஓய்வூதிய நன்மைகளை பெற்றுக் கொடுப்பதற்கு ஓய்வூதிய திணைக்களம் தற்போது சாதகமான மாற்றங்கள் பலதையும் மேற்கொண்டுள்ளது. ஓய்வூதியம் உட்பட அனைத்து நன்மைகளை வழங்கும் கட்டமைப்பை எளிமைப்படுத்தல் அதன்படி தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகிறது. பல நூற்றாண்டுகள் பழமையான ஓய்வூதிய முறை தற்காலத்திற்கு பொருந்தும் வகையில் தேவையான மாற்றங்களை மேற்கொள்வதற்கு எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.


பக்கம் 03 — தாமதமின்றி ஓய்வூதியத்தை பெறுவது எவ்வாறு

பக்கம் 04 - 05 — ஓய்வூதியம் வழங்கல் முறையின் நவீனமயப்படுத்தல் மற்றும் முன்னேற்றம்

பக்கம் 06 — டிஜிட்டல் உயிர்வாழும் சான்றை வழங்குவதற்கு நாடு முழுவதும் 500 நிலையங்கள்

பக்கம் 07 — விதவை அனாதைகள் ஓய்வூதிய முறை



அனுசரணை : பான் ஏஷியா வங்கி
உன்னதமான உள்நாட்டு வங்கி


அவசர அழைப்பு 1970 ஓய்வூதிய திணைக்களம்

# இலங்கையின் கௌரவ பிரதமர் மற்றும் அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் தினேஷ் குணவர்தன அவர்களின் "தேசிய ஓய்வூதிய தின" செய்தி



தமது வாழ்வின் பெறுமதி மிக்க காலத்தை நாட்டை கட்டியெழுப்பும் பணிக்காக அர்ப்பணித்து ஓய்வு பெற்றுள்ள சிரேஷ்ட பிரஜைகளை கௌரவத்துடன் ஞாபகமூட்டும் தினம் ஒவ்வொரு வருடமும் ஒக்டோபர் 08ஆம் திகதி இடம்பெறுகிறது.

நன்றி கொண்ட மக்கள் என்ற வகையில் அவர்களின் பங்களிப்பு எமது மனதில் எப்போதும் மறையாமல் இருக்கும் என்பது நிச்சயம்.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றிருக்கும் 695,000க்கும் அதிகமான நேரடி ஓய்வூதியர்களின் சமூக, பொருளாதார நன்மைக்காக அரசு வருடத்திற்கு 418 பில்லியன் ரூபாவுக்கு மேல் நிதியை ஒதுக்குகிறது. கடந்த ஐந்து ஆண்டுகளுக்குள் அரச செலவில் 10% க்கும் 12% க்கும் இடையான அளவை அரசாங்கம் ஒதுக்குவது அரச சேவை ஓய்வூதியத்தை நிர்ணயிக்கப்பட்ட வகையில் வழங்குவதற்காகும்.

அண்மைக் காலத்தில் உலகளாவிய ரீதியில் முகம்கொடுத்த சவால்கள் மற்றும் பொருளாதார நெருக்கடிக்கு முன்னரும் கூட இலங்கை அரசாங்கம் அந்த சவாலை கையாண்டு சிரேஷ்ட பிரஜைகளுக்கு முதலிடம் கொடுத்தது எல்லோருக்கும் தெரிந்த விடயமாகும்.

அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில் நான் மேற்கொண்ட தலையீட்டின் மூலம் தாமதித்த ஓய்வூதிய பணிக்கொடையை செலுத்துவது முறையான வகையில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதற்கும் "சத்கார பியச" மாவட்ட அளவில் பரவலாக்கம் செய்யும் ஆரம்ப அடியை எடுத்து வைப்பதற்கும் முடியுமானது மகிழ்ச்சியான காரணியாகும்.

இலங்கை அரசாங்கத்தின் ஓய்வூதிய கொள்கையும் கூட சமகால உலகப் போக்குடன் முன்னோக்கி செல்ல வேண்டும் என்பது எமது மதிப்பீடாகும். அதன்படி அரச துறைக்கு புதிய ஓய்வூதிய முறை ஒன்றை அறிமுகப்படுத்துவது தொடர்பிலான செயற்பாட்டை வலுவுடன் முன்னோக்கி எடுத்துச் செல்வது தொடர்பில் அரசின் அவதானம் சென்றுள்ளது.

அரச சேவை ஓய்வூதியர்கள் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் ஓய்வூதிய முறையின் பேண்தகு நிலையை மேம்படுத்துவதற்கு தேவையான கொள்கை ரீதியான முடிவுகளை எடுத்து இந்நாட்டு ஓய்வூதியம் பெறும் மக்களை பொருளாதார மற்றும் சமூக அடிப்படையில் எதிர்காலத்தில் பாதுகாப்பது எமது நோக்கமாகும்.

உங்கள் அனைவருக்கும் ஆரோக்கியம் நிறைந்த நீண்ட ஆயுளை பிரார்த்திக்கின்றேன்.

**தினேஷ் குணவர்தன**
**அமைச்சர், இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு**
**அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்**

# அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு செயலாளரின் தேசிய ஓய்வூதிய தின ஆசிச் செய்தி



நாட்டின் பொதுமக்களுக்காக சுமார் மூன்று தசாப்தங்களாக அர்ப்பணிக்கின்ற ஓய்வூதிய வாழ்வில் பிரவேசித்திருக்கும் அனைத்து அரச பணியாளர்களும் கௌரவத்திற்குரிய பிரஜைகளாவர். அவர்களின் அந்த பணியை கௌரவத்துடன் நினைவுகூர்கின்ற தேசிய ஓய்வூதிய தினம் இடம்பெற்றிருக்கும் இன்றைய தினத்தில் உள்நாடு, வெளிநாட்டில் வாழ்கின்ற அனைத்து இலங்கை ஓய்வூதியம் பெறுபவர்களுக்கும் எனது வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறேன்.

நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சிக்காக தமது அறிவு, காலம் மற்றும் உழைப்பை அர்ப்பணித்த கௌரவத்திற்குரிய சிரேஷ்ட பிரஜைகளின் எதிர்கால வாழ்வை கௌரவத்துடன் செலவிடுவதற்கு தேவையான பின்னணியை அமைத்துக் கொடுப்பது எமது அமைச்சின் நோக்கமாகும்.

நாளுக்கு நாள் மாறுகின்ற சமூக, பொருளாதார மற்றும் பூகோள அரசியல் யதார்த்தத்தின் முன் சிரேஷ்ட பிரஜைகளின் கடைசி காலத்தின் சுதந்திரம், பாதுகாப்பு சவாலுக்கு உட்படுத்தப்படக்கூடாது.

இலங்கையின் ஓய்வூதிய முறை உண்மையிலேயே பாடுபடுவது ஓய்வூதியத்தை ஓய்வூதியர்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கு அப்பால் பொருளாதாரம், சமூக அடிப்படையில் நிலையான உடல் மற்றும் உள ஓய்வூதியர் ஒருவரை உருவாக்குவதற்காகும். அதனை இலக்காகக் கொண்டு ஓய்வூதிய நன்மைகள் மேலும் மேலதிக சேவைகள் பலதையும் மற்றும் ஒன்றிணைந்து ஓய்வூதியர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அந்த இலக்கை நிறைவேற்றுவதற்காக ஓய்வூதிய திணைக்களம் ஓய்வூதியம் வழங்கும் செயற்பாட்டை நவீன டிஜிட்டல் தொழில்நுட்பம், ஸ்மார்ட் மாற்றங்கள் மற்றும் திறன்மிக்க பணிக் குழு ஒன்றின் ஊடாக மேம்பட்டு வருவதோடு ஓய்வூதிய வசதிகளை உச்ச அளவில் அனுபவிக்க முடியுமான வகையில் இலங்கையின் சிரேஷ்ட பிரஜையும் தொழில்நுட்ப அறிவை கொண்ட புதிய உலகத்துடன் முன்னோக்கி செல்ல வேண்டும் என்பது எமது எதிர்பார்ப்பாகும்.

நன்றிகளைச் சேர்க்கும் வகையில் தேசிய ஓய்வூதிய தினத்தில் உங்கள் அனைவருக்கும் மகிழ்ச்சி மிக்க ஆரோக்கியமான மற்றும் சுபீட்சமுடைய எதிர்காலத்திற்கு வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறோம்.

**கே.டி.என் ரஞ்ஜித் அசோக**
**செயலாளர்**
**அரச நிருவாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு**

# ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் தேசிய ஓய்வூதிய தின ஆசிச் செய்தி



இலங்கையின் அரச துறையில் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு சமூக பாதுகாப்பு நன்மைகள் உரித்தாக்கப்படுகின்ற முதன்மையான நிறுவனம் ஓய்வூதிய திணைக்களமாகும். 1970 ஆம் ஆண்டு "ஏ" தர திணைக்களம் ஒன்றாக ஆரம்பிக்கப்பட்ட அது சேவையில் இருந்து ஓய்வு பெற்ற சிரேஷ்ட பிரஜைகளின் நெருக்கமான மற்றும் நம்பகமான அரச நிறுவனமாக அரை நூற்றாண்டு காலத்திற்கு மேற்பட்ட வரலாற்றை கொண்டுள்ளது.

அதன் நிழலின் கீழ் இருக்கும் ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை நாளுக்கு நாள் தொடர்ச்சியாக அதிகரித்து வருவதோடு தற்போது அதன் நேரடி எண்ணிக்கை 695,000ஐ தாண்டியுள்ளது. இலங்கை போன்று வெளிநாட்டில் வசிக்கின்ற அந்த அனைத்து ஓய்வூதியம் பெறுவோருக்கும் இன்று இடம்பெறும் தேசிய ஓய்வூதியம் பெறுவோரின் தினத்திற்காக எனது மனமார்ந்த வாழ்த்துகளை கூறிக்கொள்கிறேன்.

கடந்த ஒரு தசாப்தத்திற்குள் தகவல் தொழில்நுட்ப மற்றும் பேண்தகு பயன்பாட்டின் ஊடாக ஓய்வூதிய பதிவு தொடக்கம் ஒட்டுமொத்த கொடுப்பனவு செயற்பாட்டின் பல கட்டங்களும் கணினியை அடிப்படையாகக் கொண்ட ஒன்லைன் (Online) தளம் ஒன்றுக்கு எடுத்து வந்துள்ளது. மக்கள் நிதி ஒன்றை சிறந்த முறையில் முகாமைத்துவம் செய்து மிகத் துல்லியமான மற்றும் வெளிப்படைத் தன்மையுடன் எமது சேவைகளை மேற்கொள்வதற்கு முடியுமாகியுள்ளது. அதன் பிரதிபலனாக தலைநகர் போன்று அதற்கு அப்பால் தூரப் பகுதிகளில் இருக்கின்ற ஓய்வூதியம் பெறுவோருக்கு ஓய்வூதிய நன்மைகளை நோக்கி விரைவாக மற்றும் இலகுவாக பிரவேசிப்பதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

ஓய்வூதிய நன்மைகளுடன் தொடர்புடைய மேலதிக வசதிகள் மற்றும் சேவைகள் பலதையும் அரச மற்றும் தனியார் துறையின் வங்கிக் கட்டமைப்பு, தொடர்பாடல் நிறுவனம் உட்பட பல நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து ஓய்வூதியம் பெறுவோருக்கு தற்போது உரித்தாக்கப்பட்டுள்ளது.

தேசத்தின் அபிவிருத்திக்காக பல்வேறுபட்ட அர்ப்பணிப்புகளையும் மேற்கொண்ட அரச பணியாளர்களின் கடைசிக் காலத்தை அனைத்து வகையிலும் பாதுகாக்கின்றதோடு எதிர்காலத்தில் அரச சேவையில் இருந்து விடைபெறுகின்ற அதிகாரிகளுக்கும் இந்த நன்மைகளை மேலும் அதிகரித்து உண்மையான வகையில் உரித்தாக்குவது எமது நோக்கமாகும்.

ஓய்வூதிய காலத்தை அனுபவிக்கும் அதேநேரம் மாறுகின்ற உலகின் சிந்தனை புரட்சியின் பங்குதாரராகி சிரேஷ்ட பிரஜைகளாக தமது அறிவு, அனுபவம் மற்றும் திறமைகளை நாட்டின் முன்னேற்றம் மற்றும் மேம்பாட்டுக்காக தொடர்ந்தும் ஈடுபடுத்த முடியும் என்ற எதிர்பார்ப்பை முன்னிறுத்தி உங்கள் அனைவருக்கும் அமைதியான, ஆரோக்கியமான மற்றும் வளமான சிறந்த ஓய்வூதிய வாழ்வொன்றுக்கு பிரார்த்திக்கின்றேன்.

**ஏ. ஜகத் டி. டயஸ்**
**ஓய்வூதிய பணிப்பாளர் நாயகம்**

# தாமதமின்றி ஓய்வூதியத்தை பெறுவது எவ்வாறு?

ஓய்வூதியம் தொடர்பில் நடைமுறையில் உள்ள சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய மத்திய அரசு, மாகாண அரச சேவை, ஆயுதப் படைகள் போன்று நீதித் துறை அதிகாரிகள் தமது சேவை நிறைவில் ஓய்வூதியம் ஒன்றுக்கு உரிமை உடையவர்களாவர். ஓர் ஆண்டுக்கு 30,000 அரச ஊழியர்கள் வரை ஓய்வு பெறுவதோடு அந்த அனைவருக்கும் தாமதம் இன்றி ஓய்வூதியத்தை பெற்றுக் கொடுப்பது ஓய்வூதியத் திணைக்களத்தின் நோக்கமாகும்.

### ஓய்வூதியத்தை பெறுவதற்கு பூர்த்தி செய்ய வேண்டிய தேவைகள்

ஓய்வூதியம் பெறும் பதவி ஒன்றை வகிக்கும் அரச ஊழியர் ஒருவராக இருந்தால் மாத்திரம் ஓய்வூதியம் கிடைக்காது. ஓய்வூதிய உரிமையை பெற வேண்டி உள்ளதோடு அதற்காக சேவைக் காலத்தில் கடமைகளை பொறுப்புடன் முறையான வகையில் மற்றும் சிறந்த முறையில் நாட்டின் அனைவருக்கும் நன்மை தரக்கூடிய வகையில் செய்தல் வேண்டும். யாரேனும் அரச சேவையில் ஊழல் அல்லது மோசடிகளில் ஈடுபட்டு குற்றவாளியானால் அவருக்கு ஓய்வூதியம் கிடைக்கப்பெறாது. அதன்படி அரச ஊழியர் ஒருவர் ஓய்வூதியம் ஒன்றை பெறுவதற்கு அடிப்படையான 4 தேவைகளை பூர்த்தி செய்தல் வேண்டும்.

1. அரச சேவையில் நிலையான ஓய்வூதியத்தைக் கொண்ட பதவி ஒன்றில் முறையாக நியமிக்கப்படுதல்.
2. அந்த பதவியில் முறையான வகையில் நிரந்தரமாகி இருத்தல்.
3. குறைந்தபட்சம் 10 ஆண்டுகள் மொத்த சேவை காலத்தை பூர்த்தி செய்திருத்தல்.
4. ஓய்வூதியத்திற்கான உரிமையை உறுதி செய்து முறையாக ஓய்வு பெறுதல்.

### ஓய்வூதிய உரிமைக்காக அரச ஊழியர் ஒருவருக்கு வழங்கப்படும் பொறுப்பு

ஓய்வூதியத்திற்காக அரச ஊழியர்களுக்கு மாத்திரமன்றி அவர்களின் துணைவர், பிள்ளைகள் மற்றும் ஊனமுற்ற பிள்ளைகளுக்கும் உரிமை உள்ளது. அதனால் தடைகள் இன்றி உரிமையை பெற்றுக்கொள்வதற்காக ஓய்வூதிய உரிமையைக் கொண்ட அரச ஊழியர்கள் தமது சேவைக் காலத்தில் தனிப்பட்ட ஆவணக் கோப்பில் கீழுள்ள விபரங்களை பூர்த்தி செய்தல் வேண்டும்.

1. அரச சேவைக்கு இணைந்து மூன்று மாதங்கள் தாண்டும் முன்னர் விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்தில் பதிவு செய்வது தொடர்பில் பங்களிப்புத் தொகையை முழு சேவைக் காலத்திற்குள்ளேயே தொடர்ச்சியாக செலுத்த வேண்டும்.
2. உத்தியோகத்தரின் திருமணம் தொடர்பில் விபரம், குழந்தைகள் தொடர்பான விபரம் போன்றவற்றையும் உள்ளடக்கி தனிப்பட்ட ஆவணக் கோப்பை இற்றைப்படுத்தல் வேண்டும்.
3. முதல் நியமனம் தொடக்கம் விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பங்களிப்பு தொகை அறவிடல் தொடர்பில் அறிக்கையை தனிப்பட்ட ஆவணக் கோப்பில் உள்ளடக்கி இருப்பது என்பது பற்றி அவதானத்துடன் இருத்தல் வேண்டும். ஓய்வூதியம் பெறுவதற்குத் தேவையான செயற்பாடுகளை நேரத்திற்கு மேற்கொள்வது ஓய்வு பெறவுள்ள உத்தியோகத்தருக்கு மற்றும் பணியாற்றும் நிறுவனத்திற்கும் வசதியானதாகும்.

07/2018 ஓய்வூதிய சுற்றுநிருபத்திற்கு அமைய ஓய்வு பெறுகின்ற தினத்திற்கு முன்னர் 90 நாட்கள் தொடக்கம் ஓய்வூதிய விண்ணப்பத்தை ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு முடியுமாகும். ஓய்வு பெறுவதற்கு 06 மாதங்களுக்கு முன்னர் ஓய்வு பெறும் விண்ணப்பத்தை தமது நிறுவனத்தின் தலைவருக்கு சமர்ப்பித்தல் மற்றும் தாமதிக்காது அரசாங்கத்திற்கு இருக்கின்ற கடப்பாட்டை நிறைவு செய்வது உத்தியோகத்தரால் மேற்கொள்ளல் வேண்டும்.



### ஓய்வூதிய விண்ணப்பத்தை ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்புதல்

தற்போது ஓய்வூதிய விண்ணப்பப் படிவத்தை முழுமையாக ஒன்லைன் முறையில் பெறுவது மற்றும் பரீட்சிப்பது மேற்கொள்ளப்படுகிறது. அதனால் தாமதிக்காது ஓய்வூதிய விண்ணப்பப் படிவத்தை ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்புவதற்கு நிறுவனங்களுக்கு வாய்ப்பு உள்ளது. குறிப்பிட்ட காலத்திற்குள் குறைகள் இன்றி முன்வைக்கப்படும் ஓய்வூதிய விண்ணப்பங்களுக்காக ஒரு மாத காலத்திற்குள் ஓய்வூதியம் வழங்குவதை ஆரம்பிப்பதற்கு ஓய்வூதிய திணைக்களத்திற்கு முடியுமாகும். அதனால் ஓய்வூதிய விண்ணப்பத்தை குறிப்பிட்ட காலத்திற்குள் குறைகள் இன்றி அனுப்புவதன் மூலம் தாமதம் ஏற்படுவதை தவிர்க்க முடியும்.





### ஒன்லைன் ஓய்வூதிய விண்ணப்பப் படிவத்துடன் வலையமைப்பு மூலம் சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்

1. PD 03 விண்ணப்பம்.
2. நியமனக் கடிதம்.
3. ஓய்வு பெறும் கடிதம்.
4. சம்பள மாற்றக் கடிதம்.
5. தேசிய அடையாள அட்டை பிரதி.
6. கடைசி மாதத்தில் செலுத்தப்பட்ட சம்பள அட்டை.
7. வங்கிக் கணக்குப் புத்தகத்தின் பிரதி.
8. பெயரில் மாற்றம் இருந்தால் அதற்காக சத்தியவோலை.
9. விதவை மற்றும் அனாதைகள் பங்களிப்புத் தொகை அறவிடப்பட்டதற்கான உறுதிப்படுத்தல்.

### சத்கார பியச

ஓய்வூதிய விண்ணப்பம் சரியானது என உறுதி செய்யப்பட்ட பின் அதனை செயற்படுத்தல் மேற்கொள்ளப்படும். அதற்காக ஒவ்வொரு ஓய்வூதியரும் ஓய்வூதியத் திணைக்களத்தின் சத்கார பியசவுக்கு அழைக்கப்படுவார்கள். இது தொடர்பிலான விபரங்கள் ஓய்வூதியர்களுக்கு தொலைபேசி குறுஞ்செய்தி மூலம் அறிவிக்கப்படும்.

சத்கார பியச என்பது அனைத்துச் சேவைகளையும் ஒரே இடத்தில் வழங்குகின்ற ஓய்வூதியத் திணைக்களத்தின் சேவைப் பிரிவாகும். அதன் ஊடாக அனைத்து புதிய ஓய்வூதியருக்கும் அவருக்கே உரிய பிரத்தியேகமான உயர் தரமான சேவை ஒன்றை ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் வழங்கப்படுகிறது. சத்கார பியசவுக்கு ஒரு முறை வரும் ஓய்வூதியம் பெறுபவர் மீண்டும் தமது வாழ்நாளில் ஒருபோதும் ஓய்வூதியத் திணைக்களத்திற்கு வர வேண்டியதில்லை.

"சத்கார பியச" தற்போது ஓய்வூதியத் திணைக்கள தலைமை அலுவலகம் மற்றும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் மாவட்ட செயலாளர் அலுவலகங்களில் செயற்படுகிறது.

- கண்டி
- மாத்தறை
- பதுளை
- குருநாகல்
- அநுராதபுரம்

ஓய்வூதிய விண்ணப்பத்தை சமர்ப்பிக்கும் சந்தர்ப்பத்தில் தமக்கு வசதியான சத்கார பியச நிலையத்தை தேர்வு செய்வதற்கு ஓய்வூதியர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதோடு ஓய்வூதியத்தை செயற்படுத்துவதற்கு அவ்வாறு தேர்வு செய்யப்பட்ட நிலையத்திற்கு அழைப்பு விடுக்கப்படும்.

### சத்கார பியச மூலம் வழங்கப்படும் சேவைகள்

1. ஓய்வூதியத்தை செயற்படுத்தல்.
2. ஓய்வூதிய அடையாள அட்டையை வழங்கல்.
3. ஓய்வூதியர் கைரேகை அடையாளத்தை பதிவு செய்து டிஜிட்டல் உயிர்வாழ்வதை உறுதி செய்யும் முறையை செயற்படுத்தல்.
4. ஓய்வூதியம் பெறுபவரின் குடும்ப விபரங்களை உறுதி செய்து விதவை அனாதைகள் உரிமையை உறுதி செய்தல் மற்றும் உரிமை சான்றிதழை வழங்கல்.

# தாமதமின்றி ஓய்வூதியத்தை...

**ஓய்வூதியத்தை செயற்படுத்தும்போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள்**

1. ஓய்வூதியரின் தேசிய அடையாள அட்டை, அதன் பிரதி மற்றும் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி.
2. துணைவரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி மற்றும் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி.
3. விதவை அனாதைகள் அட்டை.
4. செல்லுபடியான திருமணச் சான்றிதழின் மூலப் பிரதி அல்லது துணைவரிடம் இருந்து விவாகரத்து பெற்றிருந்தால் விவாகரத்தின் இறுதித் தீர்ப்பு.
5. துணைவர் உயிரிழந்திருந்தால் மரணச் சான்றிதழின் மூலப் பிரதி.
6. உத்தியோகத்தரின் அல்லது துணைவரின் முந்தைய திருமணம் இருந்தால் அது சட்டபூர்வமாக முடித்துக் கொள்ளப்பட்டது என்பதை உறுதி செய்வதற்கு விவாகரத்தின் இறுதித் தீர்ப்பின் மூலப் பிரதி அல்லது துணைவர் மரணித்திருந்தால் துணைவரின் மரணச் சான்றிதழின் மூலப் பிரதி.
7. 26 வயதுக்கு குறைவான பிள்ளைகளின் பிறப்புச் சான்றிதழ்களின் மூலப் பிரதி.
8. பெயர்களில் மாற்றம் இருந்தால் அது பற்றி உறுதி செய்வதற்கு குறித்த சட்டபூர்வ ஆவணங்கள்.
9. ஊனமுற்ற பிள்ளைகள் இருந்தால் அவர்களின் ஊனம் பிறப்பில் அல்லது 26 வயதுக்கு முன்னர் ஏற்பட்டது என்பதை சான்றுப்படுத்தும் மருத்துவ அறிக்கை, சிகிச்சை விபரம் மற்றும் நோய் மூலம் தொடர்பான அறிக்கை, அஞ்சல் அட்டை அளவான (முழுமையான) வர்ண புகைப்படம், சுகாதாரம் 307 அறிக்கை மற்றும் பிறப்புச் சான்றிதழின் மூலப் பிரதி.
10. துணைவரின் பாஸ்போட் அளவான 1 வர்ண புகைப்படம்.

**நன்மைகள் வழங்கல்**

திறைசேரியுடன் இணங்கி உள்ளவாறு ஒவ்வொரு மாதமும் ஓய்வூதியம் வழங்கும் திகதியாக அறிவிக்கப்பட்ட தினத்தில் ஓய்வூதியமானது ஓய்வூதியம் பெறுபவரின் விருப்பத்திற்கு அமைய வங்கி அல்லது தபால் அலுவலகம் அல்லது கூட்டுறவு சங்கம் ஒன்றின் மூலம் பெற்றுக்கொள்வதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

ஓய்வூதியம் பெறுபவர்கள் தாம் உயிர்வாழ்வதாக வருடாந்தம் உயிர்வாழும் சான்றை வழங்குவதை உறுதி செய்தல் வேண்டும். இந்த உயிர் வாழும் சான்றை பெற்றுக் கொடுப்பது தமது பிரதேசத்தின் கிராம உத்தியோகத்தர் மூலம் மேற்கொள்ள வேண்டும் என்பதோடு 2016ஆம் ஆண்டு தொடக்கம் ஓய்வூதியம் பெற்றுக்கொண்ட, டிஜிட்டல் உயிர் வாழும் சான்றை பெற்றுக்கொடுக்கும் முறை பதிவு செய்யப்பட்ட ஓய்வூதியம் பெறுவோருக்கு வசதி அளிக்கப்பட்டிருக்கும் சுமார் 500 வங்கிக் கிளைகள் மூலம் கைரேகை அடையாளத்தை வழங்குவதன் மூலமும் உயிர் வாழும் சான்றிதழை உறுதி செய்வதற்கு வாய்ப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அரச சேவையில் இருந்து ஓய்வு பெற்றபோதும் உடல் மற்றும் உள்ளத்தால் தொடர்ந்தும் நீங்கள் வலுவாக மூத்த சந்ததியின் சமூக பொறுப்பை மேற்கொண்டு நாட்டின் பொருளாதாரம் மற்றும் சமூக அபிவிருத்திக்காக பங்களிப்பை பெற்றுக்கொடுத்து பெருமை மிக்க ஓய்வூதியர் ஒருவராக வாழ்வதற்கு உதவுவது எமது நோக்கமாகும்.

# ஓய்வூதிய திணைக்களத்தை நவீனமயப்படுத்தல் மற்றும் முன்னேற்றம்

**ஓய்வூதியம் வழங்கல் முறையின் நவீனப்படுத்தல் மற்றும் முன்னேற்றம்**

ஓய்வூதிய திணைக்களம் ஓய்வூதியம் வழங்கும் சிக்கலான செயற்பாட்டில் தற்போது கணிசமான படிகளை புதிய தொழில்நுட்பத்துடன் சேர்த்து ஒன்லைன் (Online) முறையுடன் இணைத்துள்ளது. ஓய்வு காலத்தை கழிக்கின்ற ஓய்வூதியம் பெறுவோர் தொடர்ந்தும் அரச நிறுவனத்தில் களைப்புக்கு உட்படுத்தாது கொடுப்பனவு முறையின் அனைத்து நடவடிக்கைகளையும் எளிமையாக்குவது எமது நோக்கமாகும்.

இருக்கின்ற முறையில் ஏற்பட்ட பல்வேறு துல்லியமான தன்மை மற்றும் வெளிப்படைத் தன்மையை பேணி விரைவான சேவை ஒன்றை வழங்குவதற்கு அதன்மூலம் முடியுமாகியுள்ளது.

அதேபோன்று நாட்டுக்குள் இருக்கின்ற அவசர மற்றும் பிரச்சினைக்குரிய நிலைக்கு முன் ஓய்வூதிய முறையை முன்னெடுத்துச் செல்வதற்கு ஓய்வூதியர்களுக்காக முக்கியமான கொள்கை ரீதியான முடிவுகள் பலதையும் செயற்படுத்துவதற்கும் கடந்த காலப் பகுதியில் நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த தீர்க்கமான வருடங்களில் ஓய்வூதிய முறையில் மேற்கொள்ளப்பட்ட மாற்றங்கள் பின்வருமாறு.

**ஓய்வூதியத்தை செயற்படுத்தும் "சத்காரக பியச" நேர்முகப் பரீட்சைகளை பரவலாக்கல்**

ஓய்வூதிய திணைக்களத்தின் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டிருந்த "சத்காரக பியச நேர்முகப்பரீட்சை" கண்டி, மாத்தறை, பதுளை, அநுராதபுரம், குருநாகல் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கு பரவலாக்கப்பட்டது. அதன்படி அனைத்து ஓய்வூதியம் பெறுவோருக்கும் ஓய்வூதிய விண்ணப்பத்தை அனுப்பும் சந்தர்ப்பத்தில் தமக்கு வசதியான சத்கார பியச நிலையம் ஒன்றை தேர்வு செய்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டிருப்பதோடு ஓய்வூதியத்தை செயற்படுத்துவதற்கு அந்த தேர்வு செய்யப்பட்ட நிலையத்திற்கு அழைப்பு விடுக்கப்படும்.

**உயிர்வாழும் சான்றை டிஜிட்டல் முறைக்கு பெற்றுக்கொடுக்கும் 500 நிலையங்கள் நாடு முழுவதும் செயற்படுத்தல்**

உயிர் வாழும் சான்றை கைரேகை அடையாள (Bio Metric) முறைக்கு பெற்றுக் கொடுக்கும் புதிய செயற்திட்டம் திணைக்களத்தின் தொழில்நுட்ப பயன்பாட்டின் அண்மைக் கால புரட்சியாக கருத முடியும். 2016.01.01 ஆம் திகதிக்கு பின்னர் ஓய்வு பெற்று திணைக்கள தரவுக் கட்டமைப்புக்கு கைரேகை அடையளத்தை சமர்ப்பித்திருக்கும் ஓய்வூதியர்களுக்கு நாடு முழுவதும் உள்ள 26 பிரதேச செயலாளர் அலுவலத்தில் மற்றும் ஆறு அரச மற்றும் தனியார் வங்கிகளின் 476 கிளைகளில் தமது உயிர்வாழும் சான்றை கைரேகை அடையாளம் மூலம் பெற்றுக்கொடுக்கும் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்தை அங்கீகரிக்கும் அதிகாரம் பிரதேச செயலாளர்களுக்கு பரவலாக்கல்**

3/2020 ஆம் இலக்கம் கொண்ட ஓய்வூதிய சுற்றுநிருபத்தின் மூலம் ஓய்வூதியர் ஒருவர் மரணித்த பின் விதவை அனாதைகள் ஓய்வூதியத்தை செயற்படுத்தும் திணைக்களத்திற்கு இருக்கின்ற அதிகாரம் பரவலாக்கம் செய்து விதவை அனாதைகள் ஓய்வூதியத்தை செயற்படுத்தும் அதிகாரம் பிரதேச செயலாளருக்கு வழக்கப்பட்டது. புதிய தகவல் தொழில்நுட்ப செயலி ஒன்றை அறிமுகம் செய்து மேற்கொள்ளப்பட்ட அதிகாரம் வழங்கல் ஊடாக விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதியம் வழங்குவது மேலும் செயல்திறன் கொண்டதாக்க முடிந்துள்ளது. மேலும் சேவையில் ஈடுபட்டிருக்கும்போது மரணிக்கும் பணியாளர்களுக்காக விதவை, தபுதாரர், அநாதைகள் ஓய்வூதிய விண்ணப்ப முறையில் செயற்பாட்டை முகாமைத்துவம் செய்வதற்காக ஒன்லைன் கட்டமைப்பு அறிமுகப்படுத்தப்பட்டதோடு அதன்மூலம் அனாதை விதவைகள் ஓய்வூதியம் செலுத்தும் செயற்பாடு மேலும் பரவலாக்கப்பட்டு மற்றும் எளிமையாக்க முடிந்துள்ளது.

**அரச பணியாளரின் கட்டாய ஓய்வு வயதில் திருத்தம் செய்தல்**

அரசியலமைப்பின் மூலம் அல்லது வேறு சட்டத்தின் மூலம் அல்லது தீர்மானிக்கப்பட்ட பணியாளர்களின் கட்டாயம் ஓய்வு வழங்கப்படும் வயது தவிர்த்து மற்ற அனைத்து அரச பணியாளர்களினதும் கட்டாயம் ஓய்வு வழங்கப்படும் வயது 2022.01.01ஆம் திகதி தொடக்கம் அமுல்படுத்தப்படும் வகையில் 65 வரை நீடிக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், மீண்டும் 22/1403/605/014 மற்றும் 2022.09.12ஆம் திகதிய அமைச்சரவை முடிவுக்கு அமைய கட்டாயம் ஓய்வு அளிக்கப்படும் வயது 60 வயது வரை கொண்டுவரப்பட்டதோடு அது 2023.01.01 ஆம் திகதி தொடக்கம் செயற்படுத்தப்படுகிறது.

**ஓய்வூதிய அடையாள அட்டையை நவீன முறையில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்தல்.**

ஓய்வூதிய திணைக்களம் மூலம் அரச சேவையில் இருந்து ஓய்வு அளிக்கப்படுகின்ற பணியாளர்களை அடையாளம் காண்பதற்காக வழங்கப்படுகின்ற ஓய்வூதியர் அடையாள அட்டை நவீன முறையை



கொண்டதாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அது ஓய்வூதியத்தை செயற்படுத்தும் சந்தர்ப்பத்திலேயே பெற்றுக்கொடுப்பதற்கு 2023.04.10 ஆம் திகதி தொடக்கம் ஆரம்பிக்கப்பட்டது. ஓய்வூதியர்களின் முதல் ஓய்வூதியத்தை செயற்படுத்தப்படுகின்ற சத்கார பியச நேர்முகப் பரீட்சையில் ஓய்வூதிய திணைக்களத்தின் தரவுக் கட்டமைப்பில் உள்ள ஒன்லைனில் (Online) உள்ளடக்கப்படும் தகவல்களுடன் அவர்களின் தனித்துவத்தை உறுதி செய்து மற்றும் கைரேகை அடையாளத்தை பெற்றுக் கொடுத்த பின்னர் புதிய ஓய்வூதிய அடையாள அட்டை வழங்கப்படும்.

**போர்ச் சூழல் நீடித்த காலப்பகுதியில் உயிரிழந்த முப்படையினர் மற்றும் சிறப்பு அதிரடிப் படை உட்பட இலங்கை பொலிஸ் அங்கத்தவர்களிடம் தங்கியுள்ளவர்களுக்கு நிவாரணங்களை உரித்தாக்கல்**

30 ஆண்டுகளுக்கு மேல் நீடித்த போரை முடிவுக்குக் கொண்டுவரும்போது உயிர்த் தியாகத்துடன் பெரும் பங்களிப்புச் செய்த போரின்போது உயிரிழந்த இராணுவத்தினருக்காக அவர்களிடம் தங்கியுள்ளவர்களுக்கு இழப்பீடு மற்றும் கொடுப்பனவுகளை வழங்குவது உயிரிழந்த இராணுவ வீரருக்கு 55 வயது பூர்த்தியாகும் வரையே இடம்பெற்றது. 55 வயது பூர்த்தியான உடன் அது நிறுத்தப்பட்டதோடு அதுவரை வழங்கப்பட்ட விதவை அனாதைகள் ஓய்வூதியம் மற்றும் சேவை ஓய்வூதியம் 85% என திருத்தம் செய்யப்பட்டு எஞ்சிய 15% இராணுவ பாதுகாப்பு கொடுப்பனவாக உரித்தாக்கப்பட்டது. பாதுகாப்பு அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றுநிருபத்திற்கு அமைய செயல்பணியின்போது பயங்கரவாத செயற்பாடு காரணமாக உயிரிழந்த மற்றும் ஊனமுற்ற இராணுவத்தினருக்கு மற்றும் அவர்களிடம் தங்கி இருப்பவர்களுக்கு 55 வயது வரை கிடைக்கும் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகளை குறைப்பதற்கு இணையாக நிலையான மாதாந்த கொடுப்பனவு ஒன்றை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அந்த கொடுப்பனவை செலுத்துவது 2021 ஓகஸ்ட் மாதத்தில் ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

**கடற்படை சேவையில் ஈடுபட்ட ஓய்வூதியர்களின் உயிர்வாழும் சான்றை பெற்றுக்கொள்ளல்**

கடல் பாதுகாப்பு சேவை அல்லது கடற்படை படகுகளில் சேவையாற்றிய அரசின் ஓய்வூதியர்களுக்காக இந்நாட்டில் இருந்து வெளியேறுவதற்கு முன்னர் தமது உயிர்வாழும் சான்றை பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு பெற்றுக்கொடுக்க முடியும் என்பதோடு அவ்வாறு இல்லாவிட்டால் தரையிறங்கும் நாட்டில் அமைந்துள்ள இலங்கை தூதரக அலுவலகம் அல்லது வர்த்தக கடல்சார் செயலக அலுவலகம் ஊடாக அல்லது உறுதி செய்யப்பட்டு பெற்றுக்கொள்ளப்பட்ட உயிர்வாழும் சான்றை பிரதேச செயலாளருக்கு சமர்ப்பிப்பதற்கு வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**அனைத்து ஓய்வூதியர்களையும் அக்ரஹார காப்புறுதித் திட்டத்திற்கு உட்படுத்தல்**

2016.01.01ஆம் திகதிக்குப் பின்னர் ஓய்வு பெற்ற அரச பணியாளர்களுக்கு மாத்திரம் உரித்தாக இருந்த அக்ரஹார காப்புறுதித் திட்ட நன்மைகள் 2016.01.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வு பெறும் அனைத்து அரச பணியாளர்களுக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் தற்போது வழங்கப்பட்டுள்ளது.

**ஓய்வூதியத்தை மேலதிகமாக செலுத்துவதை முகாமைத்துவம் செய்தல்**

2022.06.10 ஆம் திகதி ஓய்வூதிய சுற்றுநிருபம் 03/2022 இற்கு அமைய ஓய்வூதியம் செலுத்தல் முகாமைத்துவத்திற்கு புதிய தகவல் தொழில்நுட்ப கட்டமைப்பு ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

**முதலாவது ஓய்வூதியத்தை செயற்படுத்தல்**

2022 ஆம் ஆண்டில் வயது பூர்த்தியானதன் காரணமாக ஓய்வு வழங்கப்பட்ட 16,346 பேருக்கு 2023 ஒக்டோபர் மாதமாகும்போது ஓய்வூதியம் செயற்படுத்தப்பட்டுள்ளது. இதில் சிவில் ஓய்வூதியர்கள் 14389 பேரும் ஆயுதப் படைகளின் ஓய்வூதியர்கள் 1957 பேரும் இடம்பெறுகின்றனர். அதேபோன்று 2023 ஜனவரி 1 ஆம் திகதி



தொடக்கம் ஓய்வு வழங்கப்பட்ட 13405 பேருக்கு 2023 ஒக்டோபர் மாதமாகும்போது ஓய்வூதிய நன்மைகள் வழங்கப்பட்டு ஓய்வூதியம் செயற்படுத்தப்பட்டுள்ளது. அதற்கு சிவில் ஓய்வூதியர்கள் 9023 பேரும் ஆயுதப் படைகளின் ஓய்வூதியர்கள் 4382 பேரும் உள்ளடங்குகின்றனர். இது தவிர 2023 ஒக்டோபர் மாதமாகும்போது விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய நன்மைகள் செயற்படுத்தப்பட்ட எண்ணிக்கை 9,397 ஆகும்.

**பரிமாற்றப்பட்ட பணிக்கொடை கொடுப்பனவு**

நாட்டில் நிதி நெருக்கடி ஒன்று இருந்தபோதும், அரசாங்கத்தினால் சமூக பாதுகாப்பு நன்மை கட்டமைப்பு மற்றும் ஓய்வூதியம் பெறுவோரை பாதுகாத்து ஓய்வூதியம் தொடர்ந்து வழங்கப்படுவதோடு, ஓய்வூதியர்களின் முதன்மையான எதிர்பார்ப்பான ஓய்வூதிய பணிக் கொடையாக இந்த மாதம் 9 இற்குள் 32,000க்கும் அதிகமான ஓய்வூதியர்களுக்கு 37,000 மில்லியன் ரூபாவுக்கு மேற்பட்ட தொகை செலுத்தப்பட்டுள்ளது.

**பயிற்சி திட்டங்களை நடத்தல்**

ஓய்வூதிய திணைக்களத்தின் ஓய்வூதிய முகாமைத்துவ தரவுக் கட்டமைப்புடன் தொடர்புபட்டு செயற்படுகின்ற பல்வேறு அரச நிறுவனங்களினதும் துறைசார் அதிகாரிகள், வலய பணிப்பாளர் அலுவலக அதிகாரிகளுக்காக ஒன்லைன் முறையின் ஊடாக பயிற்சி திட்டங்கள் மற்றும் ஓய்வூதிய திணைக்கள அதிகாரிகளுக்காக பயிற்சி நிகழ்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டு அரச நிறுவனங்களில் துறைசார் அதிகாரிகளை அறிவூட்டுவதற்கு தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

www.pensions.gov.lk என்ற திணைக்களத்தின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் Training Resources ஊடாக அந்த நிகழ்ச்சிகளின் ஒளிப்பதிவு செய்யப்பட்டு செம்மைப்படுத்தப்பட்ட வீடியோக்களை காண்பதற்கும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

**அரச சேவை சேமலாக நிதியத்தின் நன்மைகளை உரித்தாக்கல்**

அரச சேவையில் ஓய்வூதியம் அற்ற நியமனம் பெறுவோருக்கு நன்மைகளை உரித்தாக்குவது இதன்மூலம் மேற்கொள்ளப்படுவதோடு, 2023 செப்டெம்பர் வரை அரச சேவை சேமலாப நிதிய பெறுதல் 587 மில்லியன் ரூபா என்பதோடு அரச சேவை சேமலாக நிதிய கொடுப்பனவு 561 மில்லியன் ரூபாவாகும். அதேபோன்று 2023 செப்டெம்பர் 30 ஆம் திகதியாகும்போது இந்த நிதியத்திற்கு 8,824 அங்கத்தவர்கள் புதிதாக இணைந்திருப்பதோடு, 4,137 அங்கத்தவர்கள் விலகியுள்ளனர்.

## ஓய்வூதிய திணைக்களம் 2023 ஆம் ஆண்டில் பெற்ற முன்னேற்றம்

**2023 ஆம் ஆண்டு ஒக்டோபரில் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை 695,726**

**செலவு – 253 பில்லியன் ரூபா**

**செயற்படுத்தப்பட்ட ஓய்வூதியர்களின் எண்ணிக்கை (2023 ஜனவரி - ஒக்டோபர்)**

| மாதம் | சிவில் | வி.அ.ஓ.ஊ | முப்படைகள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| ஜனவரி | 1172 | 391 | 458 | 2021 |
| பெப்ரவரி | 1469 | 1249 | 573 | 3291 |
| மார்ச் | 2138 | 1074 | 639 | 3851 |
| ஏப்ரல் | 3847 | 1100 | 1076 | 6023 |
| மே | 1100 | 724 | 332 | 2156 |
| ஜூன் | 2955 | 985 | 674 | 4614 |
| ஜூலை | 2480 | 934 | 605 | 4019 |
| ஓகஸ்ட் | 2717 | 1066 | 682 | 4465 |
| செப்டெம்பர் | 2738 | 968 | 583 | 4289 |
| ஒக்டோபர் | 2796 | 906 | 717 | 4419 |
| மொத்தம் | 23412 | 9397 | 6339 | 39148 |

**மொத்த ஓய்வூதிய செலவு**

| மாதம் | சிவில் (மில்லியன் ரூபா) | வி.அ.ஓ.ஊ (மில்லியன் ரூபா) | முப்படைகள் (மில்லியன் ரூபா) | மொத்தம் (மில்லியன் ரூபா) |
|---|---|---|---|---|
| ஜனவரி | 13,573 | 5,030 | 5,476 | 24079 |
| பெப்ரவரி | 13,740 | 5,182 | 5,529 | 24451 |
| மார்ச் | 14,032 | 5,215 | 5,609 | 24856 |
| ஏப்ரல் | 14,605 | 5,251 | 5,775 | 25631 |
| மே | 14,069 | 5,161 | 5,602 | 24832 |
| ஜூன் | 14,783 | 5,228 | 5,770 | 25781 |
| ஜூலை | 14,670 | 5,226 | 5,748 | 25644 |
| ஓகஸ்ட் | 14,890 | 5,278 | 5,817 | 25985 |
| செப்டெம்பர் | 15,035 | 5,258 | 5,874 | 26167 |
| ஒக்டோபர் | 15,158 | 5,278 | 5,926 | 26362 |
| மொத்தம் | 144,555 | 52,107 | 57,126 | 253,788 |

**2024 ஆம் ஆண்டில் ஓய்வூதியம் வழங்குவதற்காக மதிப்பிடப்பட்டிருக்கும்**




**2023 ஒக்டோபர் வரை செயற்படுத்தப்பட்ட புதிய ஓய்வூதியர்களின் எண்ணிக்கை (சிவில் மற்றும் இராணுவம்)**

| ஆண்டு | மாதம் | 2022.12.31 அன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்ற திகதியைக் கொண்ட பணியாளர்கள் எண்ணிக்கை | | 2023.01.01 அன்று அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற்ற திகதியைக் கொண்ட பணியாளர்கள் எண்ணிக்கை | | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|
| | | சிவில் | முப்படைகள் | சிவில் | இராணுவம் | |
| 2023 | ஜனவரி | 1,172 | 458 | 0 | 0 | 1,630 |
| | பெப்ரவரி | 1,341 | 315 | 128 | 258 | 2,042 |
| | மார்ச் | 1,900 | 236 | 238 | 403 | 2,777 |
| | ஏப்ரல் | 3,094 | 366 | 753 | 710 | 4,923 |
| | மே | 750 | 86 | 350 | 246 | 1,432 |
| | ஜூன் | 2,004 | 181 | 951 | 493 | 3,629 |
| | ஜூலை | 1,380 | 125 | 1,100 | 480 | 3,085 |
| | ஓகஸ்ட் | 1,250 | 87 | 1,467 | 595 | 3,399 |
| | செப்டெம்பர் | 803 | 65 | 1,935 | 518 | 3,321 |
| | ஒக்டோபர் | 695 | 38 | 2,101 | 679 | 3,513 |
| மொத்தம் | | 14,389 | 1,957 | 9,023 | 4,382 | 29,751 |

**முப்படைகள் மற்றும் பொலிஸ் அதிகாரிகளுக்கான நிலையான மாதக் கொடுப்பனவு**

| மாதம் | ஆட்களின் எண்ணிக்கை | பணம் மில்லியன் ரூபா |
|---|---|---|
| 2023 ஜனவரி | 1,997 | 94 |
| 2023 பெப்ரவரி | 2,026 | 77 |
| 2023 மார்ச் | 2,098 | 87 |
| 2023 ஏப்ரல் | 2,213 | 104 |
| 2023 மே | 2,294 | 89 |
| 2023 ஜூன் | 2,418 | 108 |
| 2023 ஜூலை | 2,536 | 123 |
| 2023 ஓகஸ்ட் | 2,580 | 95 |
| 2023 செப்டெம்பர் | 2,645 | 115 |

**நேரடி சேவையில் ஈடுபட்டிருக்கும்போது மரணம் அல்லது சக்தியற்ற நிலைக்கு உள்ளான முப்படையினர் மற்றும் பொலிஸ் சேவை அங்கத்தவர்களுக்கு இழப்பீடு மற்றும் கொடுப்பனவு செலுத்தல் (2023 செப்டெம்பர் வரை)**

| நிறுவனம் | எண்ணிக்கை | 2023 ஜனவரி தொடக்கம் ஓகஸ்ட் வரை |
|---|---|---|
| | | செலுத்திய தொகை மில்லியன் ரூபா |
| இராணுவம் | 34,903 | 26,542 |
| கடற்படை | 1,397 | 1119 |
| விமானப்படை | 494 | 333 |
| பொலிஸ் | 1,712 | 1,492 |
| நிலையான கொடுப்பனவு வழங்கல் | 2,645 | 893 |
| 5000 ரூபா கொடுப்பனவு வழங்கல் | 36,970 | 1,592 |
| மொத்தம் | 41,151 | 31,971 |

**பணிக்கொடை கொடுப்பனவு (2019 - 2023)**





# டிஜிட்டல் உயிர்வாழும் சான்றை வழங்குவதற்கு நாடு முழுவதும் 500 நிலையங்கள்

ஓய்வூதியம் வழங்கும் முகாமைத்துவ செயற்பாட்டின் சரியான தன்மையை உறுதி செய்வது, ஓய்வூதிய முறைகேட்டை குறைப்பது மற்றும் மேலதிய கொடுப்பனவுகளை மேற்கொள்வதை குறைக்கும் நோக்கில் ஒவ்வொரு ஆண்டும் ஓய்வூதியம் பெறுவோரினால் உயிர்வாழ்தல் / வசிப்பிடத்தை உறுதி செய்வது தொடர்பில் சான்றுகளை பூர்த்தி செய்து கிராம உத்தியோகத்தர் ஊடாக பிராந்திய செயலாளர் அலுவலகத்திற்கு அனுப்புவது அவசியமாகும்.

ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி மாதம் 1ஆம் திகதி தொடக்கம் மார்ச் மாதம் 31ஆம் திகதி வரையான காலத்தில் ஓய்வூதிய திணைக்களம் ஓய்வூதியம் பெறுவோரின் உயிர்வாழும் சான்றிதழை பெற்றுக்கொள்வதோடு அது தொடர்பில் இருக்கும் பழைய முறையில் ஒவ்வொரு ஓய்வூதியருக்கும் தபால் மூலம் அனுப்பப்படும் உயிர் வாழும் சான்றுப் படிவத்தை நிரப்பிய பின் கிராம உத்தியோகத்தர்கள் மூலம் உறுதி செய்து பிரதேச செயலாளர் அலுவலகத்திற்கு ஒப்படைக்கப்படுகிறது. அந்தத் தகவல்கள் ஓய்வூதியம் வழங்கும் முகாமைத்துவ கட்டமைப்பில் இற்றைப்படுத்தும் செயற்பாடு பிரதேச செயலாளர் அலுவலகத்தினால் மேற்கொள்ளப்படுகிறது. அது அதிக காலம் மற்றும் பணம் செலவாகும் முறையாக இருந்ததோடு ஓய்வூதியர்களுக்கும் இலகுவான முறையாக இருக்கவில்லை.

இந்த செயற்பாட்டை மேலும் எளிமையாக்கி மற்றும் மேம்படுத்தி டிஜிட்டல் தொழில்நுட்ப முறையொன்றின் கீழ் கொண்டு வருவதற்கு ஓய்வூதிய திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது. அதன்படி 2020ஆம் ஆண்டு தொடக்கம் உயிர் வாழும் சான்றை இற்றைப்படுத்தும் முறைக்காக கைரேகை அடையாளத்தை (Finger Print) வழங்கும் முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த வசதி 2016.01.01 ஆம் திகதிக்கு பின் ஓய்வு பெற்று ஓய்வூதிய திணைக்கத்தின் தரவுக் கட்டமைப்புக்கு தமது கைரேகை அடையாளம் உள்ளடக்கப்பட்ட எந்த ஒரு ஓய்வூதியம் பெறுவோருக்கு பயன்படுத்த முடியும்.

கைரேகை அடையாளம் மூலம் உயிர் வாழும் சான்றிதழை பெற்றுக்கொள்ளும் வசதி அடையாளம் காணப்பட்ட பிரதேச செயலாளர் அலுவலகம் மற்றும் ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் அங்கீகாரத்தை பெற்றிருக்கும் தனியார் மற்றும் அரச வங்கிகள் மூலம் செயற்படுகிறது. அதன்படி ஓய்வூதியர்களுக்கு இந்த புதிய முறைக்கு வசதிகள் வழங்கப்பட்ட 26 பிரதேச செயலாளர் அலுவலகங்கள் மூலம் உயிர்வாழும் சான்றிதழை வழங்க முடியுமாகியுள்ளது. மேலும் பேன் ஏசியா வங்கி, மக்கள் வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, பிராந்திய அபிவிருத்தி வங்கி மற்றும் சேலான் வங்கி ஆகிய ஆறு அரச மற்றும் தனியார் வங்கிகளில் நாடு முழுவதும் 476 கிளைகளில் ஓய்வூதியர்களின் கைரேகை அடையாளம் பெற்றுக்கொள்ளும் இயந்திரம் நிறுவப்பட்டு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

நவீன தகவல் தொழில்நுட்ப செயற்பாட்டின் மூலம் உயிரியளவியல் (Bio Metric) முறை ஒன்றான இந்த முறைமை ஊடாக மிகப் பயன்மிக்க சேவை ஒன்றை இந்நாட்டின் ஓய்வூதியர்களுக்கு வழங்குவதற்கு ஓய்வூதிய திணைக்களத்திற்கு முடிந்துள்ளது.

2023ஆம் ஆண்டு தொடக்கம் இந்த முறையை எளிமையாக்கி ஒரு ஓய்வூதியருக்கு ஒரு படிவத்துக்காக, கிராம சேவகர் பிரிவு அடிப்படையில் ஒரு படிவம் மாத்திரம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. புதிய முறை மூலம் ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு எந்த ஒரு விண்ணப்பத்தையும் நிரப்பத் தேவையில்லை என்பதோடு கைரேகை அடையாளத்தை வைப்பது அல்லது தாம் வசிக்கும் பகுதியின் கிராம உத்தியோகத்தரிடம் சென்று தமது கையொப்பத்தை வைப்பதன் மூலம் மாத்திரம் உயிர் வாழும் சான்றை இற்றைப்படுத்த முடியுமாகியுள்ளது.

**ஓய்வூதியம் பெறுவோர் கைரேகை அடையாளத்தின் மூலம் சான்றிதழை இற்றைப்படுத்துவதற்காக பதிவு செய்துள்ளீரா என்பதை கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இணைப்பை பயன்படுத்தி "Digital Life Certificate Details" மீது கிளிக் செய்வதன் மூலம் பரீட்சிக்க முடியும்.**

https://service.pensions.gov.lk/pensionerservices/#/login

**அனைத்து ஓய்வூதியர்களும் மேலுள்ள முறைகளை பயன்படுத்தி குறித்த காலத்திற்குள் தமது உயிர்வாழும் சான்றை இற்றைப்படுத்தி ஓய்வூதியம் வழங்கும் செயற்பாட்டை முறையாக மற்றும் செயல்திறனுடன் மேற்கொள்வதற்கு தேவையான ஒத்துழைப்பை பெற்றுத்தருவார்கள் என்பது திணைக்களத்தின் எதிர்பார்ப்பாகும்.**

www.pensions.gov.lk→Resources →Downloads→Renewal of Pensioners' Life Certificate

## அரச நிர்வாக சுற்றுநிருபம் 14/2022 இற்கு அமைய விடுப்பு பெறுகின்ற அதிகாரிகளின் விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு தொகையை அறவிடுதல்

அரச நிர்வாக சுற்றுநிருபம் 14/2022, 14/2022 (I) 14/2022 (II), 14/2022 (III) மூலம் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சம்பளம் இன்றி ஓய்வை பெற்றுக்கொள்வதற்கு அரச அதிகாரிகளுக்காக வாய்ப்பு வழங்கப்பட்டதோடு, அதன்படி விடுப்பு பெறுகின்ற அதிகாரிகளின் விடுப்பு காலத்திற்கு தொடர்புடைய விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு தொகையை அறவிடுவது தொடர்பில் 2022.09.20 ஆம் திகதி ஓய்வூதிய சுற்றுநிருப இலக்கம் 06/2022 மூலம் ஆலோசானை வழங்கப்பட்டது.

அதன்மூலம் அதிகாரிகளின் விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு தொகையை சேகரிப்பதற்கு மற்றும் கணக்கில் இடுவதற்கு தொடர்புடைய ஒன்லைன் கட்டமைப்பு ஒன்றை அறிமுகப்படுத்தப்பட்டதோடு, விடுப்பு பெறுகின்ற அதிகாரிகள் விடுப்பு பெறுவதற்கு முன் அந்த பணி இடத்தின்மூலம் அந்த கட்டமைப்பில் பதிவு செய்தல் அவசியமாகும். விடுப்பு பெறுகின்ற அதிகாரிகள் விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு தொகையை மாதாந்தம் அல்லது மூன்று மாதங்களுக்கு அனுப்புவதற்கு முடியுமான வகையில் வங்கி கணக்கு ஒன்றை ஆரம்பிக்க வேண்டும் என்பதோடு, ஒன்லைன் கட்டமைப்பில் பதிவு செய்யும்போது அந்த வங்கிக் கணக்கின் விபரத்தை தமது நிறுவனத்தின் ஊடாக உள்ளடக்கப்படுதல் வேண்டும். பின்னர் மாதாந்தம் அல்லது மூன்று மாத நிலையியல் கட்டளையின் கீழ் மக்கள் வங்கியின் தலைமை கிளையின் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்தின் பெயரில் உள்ள 204100119026661 என்ற கணக்கு இலக்கத்திற்கு பணத்தை வைப்பிட வேண்டும்.

2023 ஓகஸ்ட் மாதமாகும்போது அவ்வாறு விடுப்பு பெறுகின்ற அதிகாரிகளின் விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு தொகையாக அறவிடப்பட்ட 41 மில்லியன் அளவு கணக்கிற்கு சேர்க்கப்பட்டுள்ளது.

# விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறை

அரச பணியாளர் ஒருவர் மரணித்த பின் அவர் சார்பில் அவரிடம் தங்கி உள்ளவர்களுக்கு நன்மைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள ஓய்வூதிய முறை, விதவை அனாதைகள் ஓய்வூதிய முறை என அடையாளப்படுத்தப்படுகிறது. இந்நாட்டின் வரலாற்றில் முதல் முறையாக இவ்வாறான ஓய்வூதிய முறை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டது 1898ஆம் ஆண்டு ஜூன் மாதம் 23ஆம் திகதியாகும். அது 1898 ஆம் இலக்கம் கொண்ட விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதி கட்டளைச் சட்டத்தை செயற்படுத்துவதன் மூலமாகும்.

### விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறையின் நன்மைகள்

- துணைவர் மரணிக்கும் வரை விதவை/ தபுதாரர் ஓய்வூதியத்தை வழங்கல்
- வேலையற்ற அனாதைகளுக்கு 26 வயது வரை அனாதைகள் ஓய்வூதியத்தை பெற்றுக்கொடுத்தல்.
- ஊனமுற்ற பிள்ளைகளுக்காக அவர்கள் உயிர் வாழும் வரை ஓய்வூதியம் வழங்கல்.
- விதவை/ தபுதாரர் மீண்டும் திருமண பந்தத்தில் இணைந்தால் சம்பளத்தில் 50% ஐ பெற்றுக்கொடுத்தல்.

உயிரிழந்த பணியாளர் ஒருவருக்காக 55 வயது வரை சம்பளம் மற்றும் கொடுப்பனவு வழங்கும்போது 55 வயதில் வழங்கிய சம்பளம் அடிப்படையில் ஓய்வூதியத்தில் திருத்தம் மேற்கொள்ளல்.

### விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய பிரிவில் மேற்கொள்ளப்படுகின்ற பணிகள்

அரச சேவையில் ஈடுபட்டுள்ள சிவில் அதிகாரிகள், விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறையில் பதிவு செய்தல், சேவையில் ஈடுபட்டிருக்கும்போது உயிரிழந்த சிவில் பணியாளர்களுக்காக மரண பணிக்கொடை வழங்கல், சேவையில் ஈடுபட்டிருக்கும்போது மற்றும் ஓய்வு பெற்ற நிலையில் உயிரிழந்த சிவில் பணியாளர்களுக்காக விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய கொடுப்பனவு மற்றும் உயிரிழந்த ஆயுதப் படை அங்கத்தவர்களுக்காக விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறையின் நன்மைகளை உரித்தாக்கல், இந்த பிரிவின் மூலம் இடம்பெறும்.

### விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறையில் பதிவு செய்தல்

அரச சேவையில் ஓய்வூதியம் உரித்தாகும் அனைத்து பணியாளர்களும் நியமனம் கிடைத்த திகதியில் இருந்து அவர்களின் மாதச் சம்பளத்தில் விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறைக்கு பங்களிப்புத் தொகை அறவிடப்படுவதன் அடிப்படையில் விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய முறைக்காக அவசியம் பங்களிப்பு கிடைக்கும். இதற்காக பணியாளர் நியமனம் பெற்று 03 மாதங்களுக்குள் தமது நிறுவன தலைவர் ஊடாக ஒன்லைன் முறையில் விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்தில் பதிவு செய்து அங்கத்துவ இலக்கம் ஒன்றை பெற்றுக்கொள்வது அவசியமாகும்.

### விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதிய திட்டத்தின் நன்மைகளுக்காக முன்வர வேண்டிய முறை

சேவையில் ஈடுபட்டிருக்கும்போது உயிரிழந்த பணியாளரின் பெயர் அவர் இறுதியாக பணியாற்றிய நிறுவனத்தின் மூலம் விதவை மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்துக்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

ஓய்வு பெற்றிருக்கும் நிலையில் உயிரிழந்தவர்களுக்காக நன்மைகளை உரித்தாக்குவதற்கு குறித்த விண்ணப்பங்களை குறித்த பிரதேச செயலாளர் அலுவலகம் ஊடாக ஒன்லைன் முறை ஊடே ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

### ஊனமுற்ற அனாதைகளுக்காக ஓய்வூதியம் உரித்தாவதை உறுதி செய்தல்

2011 ஒகஸ்ட் 15ஆம் திகதிய 1719/3 ஆம் இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் உடல் மற்றும் உள ரீதியான பாதிப்பை உடைய அனாதைகளுக்காக ஓய்வூதியம் வழங்குவதற்கு தேவையான சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

உடல் அல்லது உள பாதிப்பு பிறப்பில் அல்லது அனாதைகள் வயது வரம்பான 26 வயது பூர்த்தியாவதற்கு முன்னர் ஏற்பட்டிருந்தால் அந்தப் பிள்ளைகளுக்கு தாய் மற்றும் தந்தையின் மூலம் வாழ்நாள் முழுவதும் ஓய்வூதியம் ஒன்றுக்கான உரிமை கிடைக்கும். அதேபோன்று பிறப்பில் அல்லாத ஆனால் அனாதைகள் வயதில் ஏற்படுகின்ற பாதிப்பு நிலையின்போது பிள்ளைக்கு 05 வருடங்களுக்கு ஒருமுறை என மருத்துவக் குழு ஒன்றினால் மீளாய்வுகள் முன்வைக்கப்பட்டு ஓய்வூதியம் பெறுவதற்கு உரிமை உள்ளது.

### விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் பங்களிப்பு தொகையை மீளச் செலுத்தல்

அரச பணியாளர் ஒருவர் சேவையை பூர்த்தி செய்த திகதி விதவை/ தபுதாரர் மற்றும் அனாதைகள் ஓய்வூதியத்திற்கான உரிமையை பெற முடியுமான நன்மை பெறுவோர் இல்லாதபோது அல்லது நன்மை பெறுவோருக்காக உரிமை இல்லாதபோது அரச பணியாளரிடம் இருந்து அறவிடப்பட்ட பங்களிப்புத் தொகை அரச பணியாளர் அல்லது அவர் உயிரிழந்திருந்தால் அவரது உரிமையாளருக்கு மீளளிக்க சட்ட ரீதியான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

### மரண பணிக்கொடை வழங்கும் முறை

ஓய்வூதியம் உரித்தாகும் பதவி ஒன்றில் சேவையை உறுதி செய்துள்ள, 60 மாதங்கள் மொத்த சேவைக் காலத்தை பூர்த்தி செய்துள்ள அரச பணியாளர் ஒருவர் சேவையில் ஈடுபட்டிருக்கும்போது உயிரிழக்கும்போது உயிரிழந்த அதிகாரி, திருமணம் புரிந்தவர் என்றால் சட்டரீதியான துணைவர் மற்றும் திருமணம் புரிந்த வேலையற்ற பிள்ளைகளுக்கும், திருமணம் முடிக்காமல் இருந்தால் தாய் மற்றும் தந்தை அல்லது பெற்றோர்கள் உயிருடன் இல்லாவிட்டால் திருமணம் புரியாத மற்றும் வேலையற்ற சகோதரர்களுக்கும் குறைக்கப்படாத வருடாந்த ஓய்வூதியம் போன்று இரட்டிப்பான அல்லது வருடாந்த சம்பளம் ஆகிய இரண்டில் அதிக பெறுமதியானது மரண பணிக்கொடையாக செலுத்தப்படும்.

மரண பணிக்கொடை விண்ணப்பம் (PD5) உயிரிழந்த அதிகாரி கடைசியாக சேவையாற்றிய நிறுவனத்தினால் ஒன்லைன் முறை மூலம் அனுப்ப வேண்டும் என்பதோடு விண்ணப்பத்தின் வன் பிரதிகளை குறித்த ஆவணங்களுடன் ஓய்வூதிய திணைக்களத்திற்கு அனுப்ப வேண்டும்.

### ஓய்வூதியம் பெறும் ஒருவருக்கு ஓய்வூதியத்தை பெற்றுக்கொள்வதற்கு வர முடியாத சந்தர்ப்பத்தில் பொறுப்பாளர் ஒருவரை நியமித்தல்

ஓய்வூதியர் ஒருவர் அல்லது அரச பணியாளர் ஒருவர் கடுமையான நோயுற்றிருத்தல், உணர்ச்சியற்றிருத்தல், பலவீனமுற்றிருத்தல் அல்லது வயது முதிர்ச்சி காரணமாக ஓய்வூதிய திணைக்களத்தால் வழங்கப்படும் நன்மைகளை பெறுவதற்கு வருகை தர முடியாத சந்தர்ப்பத்தில் பொறுப்பாளர் ஒருவருக்கு அல்லது வேறு ஒருவருக்கு ஓய்வூதியம் அல்லது அதில் பகுதியை ஒப்படைப்பதற்கு முடியுமான வகையில் ஓய்வூதிய சுற்றுநிருபம் 07/2020 மூலம் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது.

# ஒன்லைன் பொதுச் சேவை (Online Public Service)

நாளுக்கு நாள் தகவல் தொழில்நுட்பம் மூலம் இற்றைப்படுத்தப்பட்டு தகவல் தொழில்நுட்பத்தின் புதிய பாதைகள் திறக்கப்பட்டு முன்னோக்கிச் செல்லும் ஓய்வூதிய திணைக்களம் மூலம் குறிப்பிட்ட காலமாக வழங்குகின்ற, ஆனால் பலருக்கு முறையான அறிவு இல்லாத, ஒன்லைன் முறை மூலம் தகவல்கள் அறியும் சேவை ஒன்று அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒன்லைன் மக்கள் சேவை ஊடாக வழங்கப்படும் சேவைகள் தற்காலத்தில் மென்மேலும் விரிவடைந்து வருவதோடு, அரச சேவையில் ஈடுபட்டுள்ள அதிகாரி அல்லது ஓய்வூதியர்களாகிய நீங்கள் ஓய்வூதிய திணைக்களத்திற்கு வந்து அல்லது தொலைபேசி மூலம் திணைக்களத்துடன் தொடர்புகொள்ளாது கீழுள்ள தகவல்களை அந்த சேவை ஊடாக இணையதளத்தின் மூலம் எந்த ஒரு இடத்தில் இருந்தும் இலகுவாக பெற்றுக்கொள்ள முடியும்.

1. விதவை அனாதைகள் இலக்க விண்ணப்பம் அல்லது விதவை அனாதைகள் இலக்கம் மற்றும் விபரம்
2. பரவலாக்கப்பட்ட ஓய்வூதிய விண்ணப்பப் படிவம் (PD03 விண்ணப்பப் படிவம்)
3. ஒன்லைன் மையப்படுத்தப்பட்ட ஓய்வூதிய விண்ணப்பப் படிவம்
4. மரணித்த பணியாளர் ஒருவரின் மரண பணிக்கொடை விண்ணப்பப் படிவம் (PD05 விண்ணப்பப் படிவம்)
5. அ.நி.சு. 14/2022 இன் கீழ் விடுமுறை பெறுகின்ற பணியாளரின் விதவை அனாதைகள் பங்களிப்புத் தொகை அனுப்பும் விண்ணப்பப் படிவம்.
6. விதவை அனாதைகள் பங்களிப்புத் தொகையை மீளப் பெறும் விண்ணப்பப் படிவம்.
7. பணி புரிந்த அலுவலகத்தின் மூலம் அனுப்பப்பட்ட ஓய்வூதிய திருத்த விண்ணப்பப் படிவம் (PD06 விண்ணப்பப் படிவம்)
8. மாதாந்த ஓய்வூதியம் செலுத்தும் விபரம்
9. ஓ.ஊ.சு. 02/2020 இன் கீழ் டிஜிட்டல் உயிர்வாழும் சான்று தொடர்பிலான விபரம்
10. ஆயுதப் படை சேவை அதிகாரிகளுக்கு வழங்கப்படும் ரூபா 5000.:- கொடுப்பனவு (Interim Allowance) தொடர்பில்
11. ஆயுதப்படை சேவை நிரந்தர கொடுப்பனவு விண்ணப்பப் படிவம்.

**இந்த விபரங்களை பெற்றுக்கொள்வதற்கு கீழுள்ளவாறு பிரவேசித்தல் வேண்டும்**

I. https://www.pensions.gov.lk/index.php?lang=en மூலம் ஓய்வூதிய திணைக்கள இணையதளத்திற்கு பிரவேசித்த பின் Public Service மீது Click செய்யவும்.



II. அதன் பின்னர் கிடைக்கும் இந்த முகப்பு மீது தேசிய அடையாள அட்டை இலக்கத்தை உள்ளடக்கி நுழைவு (Login) மீது Click செய்யவும்.



III. அதன் பின் கிடைக்கின்ற உப முகப்பில் இடது பக்கம் உங்களுக்கு தேவையான சேவைக்கு தொடர்புடைய விண்ணப்பத்தின் மீது Click செய்யவும்.



IV. திறக்கப்பட்ட முகப்பில் Application State/ Status இன் கீழ் விண்ணப்பத்தின் தற்போதைய நிலையை உங்களுக்கு பரீட்சிக்க முடியும்.



அரச டிஜிட்டல் மயமாக்கலுடன் முன்னோக்கிச் செல்லும், சேவைகள் கிடைக்கின்ற மக்கள் மீது தேவையான சேவையை வழங்குவதற்கு நவீன தொழில்நுட்பத்தின் பயன்பாட்டுடன் செயல்திறன் மிக்க சேவைகளை வழங்குகின்ற நிறுவனம் ஒன்றாக முன்னிலையில் இருக்கும் ஓய்வூதிய திணைக்களத்தின் மூலம் கிடைக்கின்ற இந்த சேவையின் வசதியை பெறும்படி நாம் அழைப்பு விடுக்கிறோம்.

An Invitation to join

# OUR DIGITAL JOURNEY

Over a decade, we have undergone a profound digital transformation, harnessing cutting-edge technology. This evolution has brought about pivotal milestones, equipping the department to serve citizens better and with greater precision.

## NUMERICAL INSIGHTS

- E-Document management: 2.5 million
- Monthly payouts: 695,000+
- Monthly Disbursments: 30 Billion (approx.)
- Growing user base: 13,000+
- Critical pension points: 3300+
- Public servants records: 750000+

## *Our Strengths*

- Progressive leadership towards digtal transformation
- Enriched data pool of public servants
- Passion for technological advancement
- Proficient group of technical experts
- Dedicated staff with sound IT literacy

The department's embrace of digitalization reflects a broader governmental trend. Now we are technically capable and ready to open up our digital platforms to be integrated for the betterment of our nation. This initiative will be rewarded for both citizens and service administrators.

**With that, we proudly announce that the Department of Pensions is stepping towards the next generation of our IT journey.**

## iPMS *Intergrated Pension Management System*




In this concept, pension management processes will be integrated internally and externally to form a inclusive solution. Internal integration will ensure minimal complexities and enhanced service delivery to pension beneficiaries. Externally, collaboration with other institutions will promise synergies and improved citizen services which will anticipate improved outcomes across the board.

Collaboration is the linchpin of future success, promising streamlined, citizen-centric services.

**The Department of Pensions stands ready, digitally equipped, and eager to embark on this collective journey.**

We are excitedly inviting interested institutions to join hands with us.

Let's liberate ourselves from closed data environments and embark a digital voyage which won't merely a leap forward; it's an open door for collective progress with cutting-edge technology and collaborative spirit.

**Share your ideas: ipms@pensions.gov.lk**

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2023 ஒக்டோபர் மாதம் 6ம் திகதி வெள்ளிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.